# ஈழத்து செட்டிபாளையம்
# கணபதிப்பிள்ளைப் புலவரின்
# நூற்திரட்டு தொகுதி .1



ஈழத்துப்பூராடனாரின் உரைநடை.

நிழல் வெளியீடு கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No. 894.81108 Acc. No. 427596

**UNIVERSITY OF PERADENIYA LIBRARY**
PERADENIYA

## NOTICE TO BORROWERS

This book is the property of the University Library, and any unauthorised possession of it outside the regulations governing borrowing facilities is a serious offence Borrowers are requested to adhere strictly to the rules and regulations relating to borrowing detailed in the Library Handbook.

Borrowers are kindly requested to keep the books clean, and to refrain from turning down leaves or making pencil or other marks upon them. They will be held responsible for the condition of any book returned by them and they should, therefore, report any damage or other injury to the books to the Library Assistant at the Counter before borrowing them.

(20345) 1/87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA,
LIBRARY

Class No. 894.81108

Acc. No. 427596

This book should be returned on or before the last date stamped below.

427596

கனடா தொரன்றோ
றிப்ளக்ஸ் அச்சகத்தாரின்
நன்கொடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
9-1-1992
LIBRARY

ஈழத்து மட்டக்களப்பு செட்டிபாளையம்

# இ.வ. கணபதிப்பிள்ளைப் புலவர்

## நூற்றிரட்டு தொகுதி ஒன்று

ஈழத்துப்பூராடனாரின் உரைநடையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்கணனித் தமிழ் அச்சமைப்பில்
## எங்களினால் 1985 - 1990ம் ஆண்டுக் காலத்தில்
## கனடாவில் வெளியிடப்பட்டுள்ள
# தமிழ் ஏடுகள்

இயேசு புராணம்
பெத்தலேகங் கலம்பகம்
தமிழ்அச்சுக்கலையில் கொம்பியூட்டரின் பிரவேசம்
மின்கணனித் தமிழும் எழுத்துச் சீர்திருத்தமும்
உலகளாவிய தமிழ் - தமிழ்ப் பண்பாட்டியக்கவியல்
புது அகப்பொருள் 102
புதுப் புறப்பொருள் 101
ஈழத்துப் போர்ப் பரணி
கூத்தர் வெண்பா
கூத்தர் விருத்தம்
மதங்கசூழாமணி ஆய்வு
சீமந்தனி புராணம் மூலமும் உரையும்
முதுமைப் பெயர்ச்சி நான்மணி மாலை
வாழவைக்கும் நினைவுகள் - இளமைப் பருவச் சிந்தனைகள்
வெற்றிலை - இசைப்பாடல்கள்
தமிழ் அழகி 12 காண்டங்களுள் முதல் மூன்று காண்டங்கள்
ஈழத்துப் பூராடனாரின் நூற்றிரட்டு I- 4 தொகுதிகள்
ஹோமர் மகாகவியின் கிரேக்க காவியங்களின் தமிழாக்கம்
ஓடிஸ்சி
இலியட்
கிரேக்க நாடகங்கள்ளின் தமிழாக்கம்
சொபிகொலோசின் நாடகங்கள் இரண்டு தொகுதிகள்
மல்லிகைப் பந்தல்
பேறுமுனையிலிருந்து
பேச்சுத் தமிழ்
மண்ணின் குரல்
கனடாவில் நிதி வளர நெறி இதுவே

விபரங்களுக்கு

| | |
|---|---|
| REFLEX PRINTING or | REFLEX LITHO PRINTING |
| 1108 Bay Street | 1365 Midway BLDV Unit #24 |
| Toronto M5S 2W9 | Mississauga |
| Ont Canada | Ont Canada |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துச் செட்டிபாளையம்

I. VA KANAPATIPPILLAIP PULAVAR

# இ. வ. கணபதிப்பிள்ளைப் புலவரின்

# நூற்திரட்டு முதலாம் பகுதி

கதிர்காம சதகம்

மாணிக்க கங்கைக் காவியம்

ஸ்ரீ சங்கமன் கண்டிப்பிள்ளையார் பதிகம்

உரைநடை எழுதியவர்:

ஈழத்துப் பூராடனார்

427596

பதிப்பாசிரியர்:

இரா. நாகலிங்கம் ( அன்புமணி )

இது ஒரு நிழல் வெளியீடு

பதிப்பகம்

ஜீவா பதிப்பகம்

தேற்றாத்தீவு இலங்கை · தொரன்ரோ கனடா

REFLEX PRINTING

1108 Bay Street Toronto M5S 2W9 Ont Canada

427596

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புத் தகவல்கள்:

செய்யுள் நடை: இவ.கணபதிப்பிள்ளைப் புலவர்
உரைநடை: ஈழத்துப் பூராடனூர் என்னும்
க.தா.செல்வராசகோபால்
(இலக்கியமணி தமிழ்நெறிப்பாவலர்) 1928

1. நூற்பெயர்: இ.வ.கணபதிப்பிள்ளைப் புலவரின் நூற்றிரட்டு 1
2. பகுதி :பிரபந்த இலக்கியம்
3 தொகுதி: சதகம் பதிகம்
4. பக்கங்களும் அளவும்: 48 + 112. 8" X 5"
5. விலை: 10 கனடிய டாலர்கள்
6. வெளியிட்ட தினம்: ஆடித் திங்கள் இருபதாம் நாள் 1990
7 பதிப்பாசிரியர்
இலங்கை: அன்புமணி.இராநாகலிங்கம்
8. பதிப்பகம்: ஜீவா பதிப்பகம் கனடா - இலங்கை
9. வெளியீடு: நிழல்.
11. மின்கணனி தமிழ் அச்சமைப்பும் அச்சிடலும் இதயம் சகோதரர்கள்
12.அச்சகம்: றிப்ளக்ஸ் அச்சகம் தொரன்ரோ - கனடா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
9-1-1992
LIBRARY



# பதிப்பாசிரியரைப் பற்றி பதிப்பகத்தாரின்

# அறிமுகம்



எங்கள் பதிபபகத்தின் மூலமாக அநேக நூல் களைப் பதிப்பித்துவரும் அன்புமணி அவர்களை அறிமுகஞ் செய்வதிற் பெருமைப்படுகிறோம்.. திரு. இரா. நாகலிங்கம் எனும் அன்புமணி 06. 03. 1935ம் ஆண்டில் இராசையா எனும் கட்டுமானத்தொழிலா ளிக்கும் பொ. தங்கப் பிள்ளை என்பவருக்கும் மகனுகப் பிறந்தார். இவரது தாயகம் இலங்கையின்கிழக்குப் பகுதி மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஆரையம்பதி எனுமிடமாகும் தனது ஆரம்பக் கல்வியை தான் பிறந்த அதே கிராமத்தில் உள்ள இராமக் கிருஷ்ண மிசன் பாடசாலையிலும் மேற்படிப்பை காத்தான்குடி மத்திய மகாவித்தியாலயத்திலும் கற்று அரசினர் லிகிதர் சேவையில் கல்விப் பிரிவிற் சேர்ந்தார் பின்பு அதே காரியாலயத்தில் பிரதம லிகிதராகி பின்பு நிர்வாக உதவியாளராய் இறுதியில் நிதி உதவியாளர் பதவி உயர்வு பெற்முர். இப்பதவி உயர்வை அடுத்து இலங்கை நிருவாக சேவையிற் தேறி அரசாங்க உதவி அதிபரானுர்.

உழைப்பால் உயர்ந்த இவர் தனது இளம் வயதிலே எழுத்தாளராகி அநேக பரிசுகளைப் பெற்முர். பத்திரிகைகளுக்குக் கதை கட்டுரை எழுதுவதுடன் நில்லாது வானெலி நாடகங்களை எழுதி வந்தார். ஓவியத்தில் அதிக விருப்புக் கொண்ட இவர் சிரிப்புச் சித்திரங்கள் வரைவதில் வல்லவர். மலர் என்ற சஞ்சிகையின் ஆரம்ப ஆசிரியரும் இவரே. இவரின் இலக்கிய சேவை சொல்லிற்கடங்காதது .

பதிப்பகத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிழக்கு ஈழம் மட்டுக்களப்பு மாநிலம் செட்டிபாளையம்
இ. வ. கணபதிப்பிள்ளைப் புலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
9-1-1992
LIBRARY



# பதிப்பகத்தாருரை.

பழைய நூல்களுக்கும் இலக்கியத்துக்கும் ஆதரவு தந்து மரபுக் கவிதைகளை வளர்ப்பதும் எங்களது தமிழ்ப் பணிகளில் ஒன்றாகும். இந்த நோக்குடன் இதுவரை இரணிய சம்ஹார அம்மானை கபோத காதை என்ற இரண்டு பனையோலைச் சுவடிகளை இலங்கையில் அச்சுருவாக்கினோம்.

அடுத்து நீண்ட காலமாக மறுபதிப்புகள் இல்லா-தபடியால் கிடைத்தற்கரிய நூல்களான விபுலானந்த அடிகளின் மதங்க சூளாமணியை ஒரு ஆய்வுரையுடனும் வித்துவான் பூபாலபிள்ளை அவர்களின் சீமந்தனி புராணத்தை அழகிய உரைநடையுடனும் வெளியிட்டோம். அதனைத் தொடர்ந்து இப்பொழுது ஈழத்து செட்டிபாளையம் கணபதிப்பிள்ளைப் புலவரின் கதிர்காம சதகமாகிய மாணிக்ககங்கைக் காவியம் ஸ்ரீ சங்கமன் கண்டிப் பிள்ளையார் பதிகம் முதலான மூன்று நூல்களை உரைநடை செய்து வெளியிடுகின்றோம். இவையாவும் நாங்கள் கனடாவில் இருந்து செய்யுந் தமிழ்ப் பணிகளாகும்

விசேடமாக ஈழத்தில் தலை சிறந்த புலவர்களும் அவர்களின் படைப்புகளும் கணிசமான அளவு காலத்துக்குக் காலம் தோன்றிக் கொண்டிருந்தாலும் அவை யாவும் தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம்பெறாது விடுபட்டுப்போவது ஒரு துர்ப்பாக்கியமான நிகழ்வே. காரணம் அத்தகைய படைப்புகள் தனது சுழற்சியை ஈழத்தில் அதுவும் அந்தப் படைப்பாளியின் சுற்றாடலுக்குள்ளே வைத்துக் கொள்வதாகும். இக்குறையைப் போக்கி உலகமெங்கும் உள்ள எல்லாத் தமிழ் பல்கலைக் கழக நூலகங்களுக்கும் ஆய்வு நிறுவனத்திற்கும் பத்திரிகைத் தாபனங்களுக்குப் மற்றுந் தமிழ் அறிஞர்களுக்கும் அத்தகைய பண்டைய நூல்கள் தாராளமாகச் சேரக்கூடிய முயற்சியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டு வருகின்றோம்.

இத்தகைய பணியில் தங்களிடம் உள்ள கிடைத்தற்கரிய நூல்களையும் பழைய பனம் ஓலைச் சுவடிகளையும் நூலுருவாக்க விரும்புந் தமிழன்பர்களுடைய தமிழ் ஆர்வத்திற்கு எங்களால் இயன்ற ஆதரவுகள் தரமுடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகின்றோம்.

இத்னை வெளியிடத் தக்கதாக தனது தந்தையாரின் நூல்களை மனமுவந்து வெளியிடு உரிமையை எங்களுக்குத் தந்த திரு..க..செல்வநாயகம் இளைப்பாறிய அதிபர் அவர்கட்கும் அதற்கு குறுகிய காலத்துள் உரைநடை எழுதித்தந்த உரைநடை ஆசிரியருக்கும் மற்றும் இதனை பதிப்பிக்க முன்வந்து 15000 மைலுக்கப்பால் இருந்து கொண்டே பதிப்பித்தற்கான தபால்வழி முயற்சிகளில் ஈடுபட்ட பதிப்பாசிரியர் அன்புமணி அவர்களுக்கும் எங்கள் உளங் கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

மேலும் இந்த நூலை சீர்திருத்தப்படாத தமிழ் பழைய எழுத்துருவத்திலேயே மின்கணனித் தமிழ் அச்சமைப்புச் செய்து தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் ஒரு அநாவசியமான முயற்சி என்பதை நிருபித்து வரும் கனடா தொரன்ரோவில் உள்ள றிப்ளக்ஸ் அச்சகத்தாருக்கும் நன்றிகள் உரித்தாகுக.

உங்களின் தமிழன்பு எங்களை ஊக்கப்படுத்துவதாகுக.

வாழ்க தமிழ்.
நன்றி

**எட்வேட் இதயச் சந்திரா**
( நிழல் ஆசிரியர்) கனடா 15 90

கனடா தொரன்றோ
**றிப்ளக்ஸ் அச்சகத்தாரின்**
நன்கொடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரைநடை ஆசிரியரின் உரை.

இந்த நூற்திரட்டுக்கு உரைநடை எழுதுவதற்கு நான் மூன்று விதங்களில் அருகதையும் பாத்தியமும் உள்ளவன் என்று நினைக்கின்றேன்.

முதலாவது இத்திரட்டில் எடுத்தாளப்பட்டுள்ள இரண்டு நூல்களுக்குரிய திருத்தலமான கதிர்காம மெனும்பதியில் 1953ம் ஆண்டில் அமைந்திருந்த தமிழ்ப் பாடசாலையிற் கல்வி கற்பித்து வந்ததால் அங்குள்ள மூர்த்தி தலந் தீர்த்த வரலாறுகளையும் நிகழ்வுகளையும் ஓரளவு நேரிற் கண்டு அறிந்தவன் என்பதாகும்.

இரண்டாவது இவற்றின் ஆசிரியரான கருவிலே உருவான இ.வ.கணபதிப்பிள்ளைப் புலவர் அவர்கள் எனது மிக நெருங்கிய உறவினரும் பாட்டன் முறையானவருமாவர். அவருடைய வாழ்வு நலன் கவிநலன் குணநலன் என்பவற்றையும் ஓரளவு நேரிற் கண்டு தெளிந்தவன் என்பதாகும்

மூன்றுவது இதில் உள்ள கதிர்காமச் சதகத்தைப் அவர் இயற்றும் போது சொல்ல எழுதுவோன் என்னும் ஒரு மாணவ நிலையில் இருந்து அதனைக் கேட்டெழுதிய அனுபவமாகும்.

இத்தகைய பாத்தியங்களுடனும் அனுபவத்துடனும் இதற்கு உரைநடை எழுதுவது என்பது எனக்கு மிக எழிதாயிற்று என்று சொல்வதே சாலப் பொருந்தும். ஏனெனில் 1942ம் ஆண்டளவில் அவற்றை அவர் சொல்லிவர நான் எழுதி முடிந்தவுடன் அதை பாடிக் காட்டுவேன். அவர் அதிலுள்ள கருத்தை எனக்கு ஒரு கதையாகச் சொல்வார். அதன் பின்னர் ஒருசில திருத்தங்களைச் செய்வார். இவ்வாறு ஆறுதலாகச் சிந்தித்து ஒரு தினத்தில் ஓரிரு பாடல்களையே பாடுவார். ஏறக்குறைய ஐம்பது வருடங்கள் கழிந்தாலும் அவர் அன்றுசொன்ன விபரங்கள் இப்புத்தகத்தைக் கண்டதும் நினைவிற்கு வரத் தவறுவதில்லை..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருடைய வாழ்க்கை வரலாற்றை ஈழத்து இரட்டையர் இரட்டைமணிமாலை எனும் பிரபந்த வரலாற்று நூலாக இயற்றி அச்சிட்டுப் புத்தக உருவாய் அமைத்துள்ளேன். ஆங்கு இவரது விரிவான வரலாற்றைக் காணலாம்.

இலங்கையிற்தான் இவர் பிறந்தார். ஆனால் அதை ஈழத் திருநாடு என்று சொல்வதிற் பெருமையுற்றிருந்தார். கதிர்காம சதகம் பாடிய காலம் 1942-1943ம் ஆண்டுகள். மட்டுக்களப்பு சென் செபஸ்தியார் அச்சகத்தில் அச்சிட்டுப் புத்தக வடிவுற்றது 1947ம் ஆண்டு. இக்காலத்திலேயே இலங்கையை ஈழமென்று சொல்வதில் இவர் பெருமிதம் உற்றார் என்பதைக் கதிர்காம சதகத்தில் பல இடங்களில் பொறித்துள்ளார்.

இதே கால கட்டத்திற்தான் புலமைபடைத்த புலவர்மணி பண்டிதர் பெரியதம்பிப்பிள்ளை அவர்களும் 'ஈழம்' என்ற ஆதிச் சொல்லைத் தமது பாக்களிற் பாடிப் இலங்கையிற் புகழுற்றார். இவ்விருவரில் ஒருவர் செட்டிபாளைய தென்புறத்து எல்லையிலும் மற்றொருவர் வடபுறத்து எல்லையிலுமாக கால் மைல் தூரத்து இடைவெளியில் வாழ்ந்து வந்தனர்.. இவர்களிடந்தான் நான் தமிழறிவையும் செய்யுள் செய்யும் வழிகளையுங் கற்றறிந்தேன். இலங்கையை ஈழமென்று சொல்வதின் பொருளை இவர்கள் உவந்தேற்றுக் கொள்ள ஈழ மண்டல சதகம் ஈழத்து "உணவும் காழகத்தாக்கமும்" என்ற சங்கநூற் பாடல் ஈழத்துப் பூதந்தேவனார் என்ற சங்ககாலப் புலவர் வரலாறு ஈழகேசரி என்ற இலக்கியப் பத்திரிகை ஈழநாட்டுப் புலவர்களின் சரித்திரம் முதலியவற்றின் பெயர்கள் உதவின என்றுதான் நான் நினைக்கின்றேன். இதிற் பற்றுவைத்த நானும் எனது எழுத்துலகப் புனைபெயரை 1952ம் ஆண்டிலிருந்தே ஈழத்துப்பூராடனார் என்று புனைந்து கொண்டேன்

இந்த இருவரின் தமிழ் மேதாவிலாசமும் அவர்களின் ஈழத் தாகமும் எனக்கு இவ்வித மனப் பதிவையுந் தாக்கத்தையுந் தரலாயிற்று. என்று சொல்வதில் மிகையின்று .ஈழத் தமிழ்ப் புரட்சி தலைவிரிக்கத் தொடங்கிய காலத்தில் ஈழம் என்ற பெயர் ஒரு இராசத் துரோகக் கும்பலின பயங்கரவாத மந்திரம் என்று இலங்கை அரசு 1956ம் ஆண்டிலிருந்து எண்ணத் தொடங்கிற்று. இவ்வெண்ணம் வளர்ந்து 79ம் ஆண்டளவிற் பூதாகாரமாயிற்று. அக்கால கட்டத்திற்தான் எனது நூல்கள் பல ஈழத்துப்பூராடனார் என்றபெயரில் வெளியாயின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் எனது மனோகரா எனும் அச்சகத்தில் 1980 -84ம் ஆண்டுகளில் ஈழ விடுதலைப் போராளிககளின் பல துண்டுப் பிரசுரங்கள் அரசுக்கு எதிராக மறைமுகமாக அச்சிடப்பட்டன. இவற்றில் ஒரு பிரசுரத்தை வெளியிட்ட ஒரு போராளி 1984ல் பொலிசாரின் கரத்திற் சிக்கியபோது எனது அச்சகப் பெயரைக் காட்டிக்கொடுத்து விட்டார். இதனால் இலங்கை இராணுவம் பொலிஸ் பகுதியார் என்பவர்களின் கொடிய தாக்குதல்களுக்கும் துன்பங்களுக்கும் கண்காணிப்புக்கும் உள்ளாகிய நான் எனது அச்சகத்தை ஒரு நண்பரிடம் ஒப்படைத்து விட்டு இலங்கையை விட்டு அவசர அவசரமாய் வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாயிற்று இடைக்கிடை.இனிமேல் எனது நூல்களை ஈழத்துப் பூராடனார் என்ற பெயரால் பதிப்பிக்கக்கூடாது என்றும் எனது சொந்தப் பெயரில் அல்லது வேறு புனைபெயரில் வெளியிட வேண்டும் என்றும் இலங்கை அரசினாற் பணிக்கப்பட்டேன்.

இவ்வாறான தமிழ் உணர்வுகளைத் தந்தவர்களுள் எங்கள் பாட்டனார் அமரர். இ.வ. கணபதிப்பிள்ளை புலவரின் பங்கு மகத்தானது. பாடசாலை இல்லாத தருணங்களில் இவரது வீட்டிலிருந்த அநேக புத்தகங்களையும் பனையோலைச் சுவடிகளையும் இவருடைய உதவியாற் படித்து அறிந்ததுண்டு. அல்லது இவர் ஓய்வெடுக்கச் செல்லுமிடத்திற்குப் பின்தொடர்ந்து சென்று வாய்வழியாக பல அறிவுகளைப் பெற்றதுண்டு.

மந்திரம் வைத்தியம் சர்ப்பசாத்திரம் சோதிடம் நாடகம் ஆதிய பல கலைகளிற் தேர்ந்த இவர் தனது வீட்டில் இரவு வேளையில் ஒரு காவிய வகுப்பை வைத்து. நடத்தி வந்தார். அதிற் கற்றவர்கள் வாலிபப் பராயமுடையவர்கள். எனவே அதில் நான் கலந்து கொள்ள முடியாவிட்டாலும். பாரதம் இராமாயணம் கந்தப் புராணம் நன்னூல் நிகண்டு என்னும் நூல்களைக் கற்பிக்கும்போது கேட்போனாக இருந்து கற்றதுண்டு.

இதைவிட இந்த நூல் அச்சிடப்படும்போது அதனின் பிழை திருத்தம் ஆதிய பொறுப்புகள் இவரது மகன் திரு செல்வநாயகம் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தது. அவ்வச்சகம் அவரது வசிப்பிடத்திலிருந்து வெகுதூரத்துக்கு அப்பால் அமைந்து இருந்த படியாலும் அந்த அச்சகத்திற் போதிய வசதிகள் இல்லாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்ட நிலையில் இந்த வேலையைச் செய்யவேண்டி இருந்த தாலும்தமிழ் அறிவு பெரிதும் இல்லாத பரங்கிக்காரர் ஒருவர் தனித்து அச்சுவேலைகளைச் தானேசெய்து வந்ததாலும் நூலாக்கம் மிகவும் மெதுவாக நடைபெறலாயிற்று. இதனுல் அவரால் இடைக்கிடை வந்து அப்பணியை மேற்பார்வையிடுவது என்பது கஷ்டமாக இருந்தது. 1947 - 1948ம் ஆண்டளவில் அந்த அச்சகத் திற்கு அருகாமையில் இருந்த ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் கற்றுக்கொண்டிருந்த அவரது மகனுக்கு இடைக்கிடை சென்று பிழைதிருத்தஞ் செய்வது முடிவதாயிற்று. இதே காலகட்டத்தில் அவரது உடன் மாணுக்கனுகப் பயின்று கொண்டிருந்த நானும் அவருக்கு உதவியாகச் செயலாற்றி வந்தேன்.

இத்தகைய பலநேரடி அனுபவங்களைக் கொண்டு இந்த நூற்களுக்கு உரைநடை எழுதுவதை நான் ஒரு பாக்கியமாக மட்டுமல்ல எனது தமிழ் ஆசான் ஒருவருக்குச் செய்யும் நன்றிக்கடனுகவுஞ்சிரமேற்கொள்கின்றேன்.

உரைநடை எழுதும்போது செய்யுளில் இல்லாத செய்திகளை ஒவ்வொரு செய்யுளின் உரைநடையின் முற்பகுதியிலும் எடுத்துக் கூறியுள்ளேன் என்று நான் எண்ணவில்லை. அவை யாவுங் 'கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ் கந்தருறை கதிர்காமமே' என்பதன் விரிவாகவே ஆண்டுள்ளேன் வாசகர் களும் அவ்வாறே கொள்வது நலம்.

வணக்கம்.

**ஈழத்துப் பூராடனுர்**
கனடா.27.06.1990.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரைநடை எழுதியவர்:

இலக்கியமணி தமிழ் நெறிப்பாவலர்

க.தா.செல்வராசகோபால் (ஈழத்துப்பூராடனார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துச் செட்டிபாளையம்

# இ.வகணபதிப்பிள்ளைப்புலவரின் வரலாறு.

இலங்கை சிலோன் இரத்தினதுவிபம் தாமிரபர்ணி சேரன்தீவு நித்திலம் ஸ்ரீலங்கா என்ற பல பெருமைக்குரியதாக வழங்கப்படும் ஈழநாட்டின் கிழக்குப் பகுதியாய் அமைந்துள்ள மட்டக்களப்புத் தமிழகத்தில் செட்டிபாளையம் என்றொரு கிராமம் உண்டு. ஒரே காலத்தில் இதன் எல்லைக்குள் மூன்று பெரும் புலவர்கள் வாழ்ந்து வந்தார்கள் என்ற பெருமைக்குரியதாக இப்பதி விளங்கிற்று.

பகவத்கீதை வெண்பா இயற்றிய தமிழ்மகன் புலவர்மணி திரு. ஏ. பெரியதம்பிப்பிள்ளைப் பண்டிதர் (குருக்கள்மடம்) மற்றுந் திரு இ. வ. கணபதிப்பிள்ளைப் புலவர். வரகவி சின்னவப்புலவர் என்பன அவர்களின் பெயர்கள். இந்த மூவருந் தமிழை உயிராய் மதித்தார்கள் தமிழுக்காகவே வாழ்ந்தார்கள். இவர்களுடைய உயரிய நோக்கெல்லாம் தமிழின் உயர்வே அன்றித் தமது உயர்வல்ல. இதனுல் இவர்களிடையே வித்துவக் காய்ச்சல் இருக்கவில்லை.. அதற்குப் பதிலாகத் தமிழ்ப் பணி ஒற்றுமைப் பாய்ச்சல்தான் இருந்தது.

கால்மைற் தூர இடைவெளிக்குள் இவர்கள் வாழ்ந்து வந்தார்கள். வடக்குத் தெற்காகச் செல்லும் ஒரு பிரதான வீதி உண்டு. அதன் தென்னெல்லையில் கிழக்கிலும் மேற்கிலும் இருந்து வந்து இரண்டு தெருக்கள் சந்தித்தன. வீதியின் கிழக்கில் உள்ள தெருவின் 100 யாருக்கப்பால் வலது புறத்தில் இ.வ. கணபதிப்பிள்ளைப் புலவர் வாழ்ந்தார். அவ்வாறே மேற்கில் உள்ள தெருவில் 100 யாருக்கு அப்பால் அதே பக்கம் வரகவி சின்னவப்புலவர் வாழ்ந்தார்.

வட எல்லையில் கிழக்கு கோக்கிச் செல்லுங் கடற்கரைப் பாதையின் இடது பக்கமாக 100 யார் தொலைவில் புலவர்மணி அவர்கள் வாழ்ந்து வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்விடுவதால் இவற்றின் இலக்கிய நோக்கும் போக்கும் பிற் சந்ததியினருக்கு பயன்தரத்தக்க வகையிற் கிடைக்காமற் போய் விடுவது என்பதாகும்.

ஒரு இலக்கியப் படைப்புக்கு எக்காலத்திலும் ஏற்படக் கூடாதென்ற இழிநிலைகள் இவை. இந்தநிலை தமிழ்பேசும் உலகின் பல பெருந் தமிழ் இலக்கியங்களுக்கு இன்று ஏற்பட்டுள்ளன. இதற்குக் காரணமாக இருப்பவர்கள். அத்தகைய நூல்களின் பழைய பிரதிகளை வைத்திருப்ப வர்களும். அதனை மறுபிரசுரஞ் செய்யத் தடையாக இருக்கும் தொடர் பதிப்புரிமை பெற்ற வாரிசுகளுமாவர். ..இவர்களே இந்த இழிநிலைக்கான பழிநிலைக்காரர்கள்.

ஒரு கிடைத்தற்கரிய பழைய சுவடி அதன் மறுபதிப்புப் பெறும் போது பழைய மதிப்பில் அருமை மதிப்பை இழந்துவிடுகின்றது என்பது உண்மையே. அவ்வாறு நேர்ந்தபிறகு அதற்கு வரலாற்றுப் பெருமை என்னும் மதிப்பு இருக்குமே தவிர மற்றெந்த மதிப்பும் அழிந்து ஒரு சாதாரண நூலின் முந்திய பதிப்பு நிலையை எட்டி விடுகின்றது என்பதும் முற்றும் உண்மைதான். அதற்காக இலக்கியத் தனியுடமை ஒரு சமூகத் துரோகமான செயல் என்பதை மறுத்துவிட முடியாது..

மேல் நாடுகளில் பிரசுரம் சம்பந்தமான நீதிச் சட்டக் கோவையில் ஒரு நூலின் மறுபதிப்பு அதன் முதற் பதிப்பிலிருந்து 26 வருடங்களுள் பதிப்பிக்கப்படாவிடின் அதன் பதிப்புரிமை வலுவற்றதாகிவிடும். அக்காலத்தின் பின்னர் அந்த நூலின் பகுதிகளை எவ்வித அனுமதியும் இன்றி மறு பிரசுரம் செய்யலாம். அதுபோலவே ஒரு குறிப்பிட்ட காலத்துடன் அதன் பதிப்புரிமை தனியாரிடம் இருந்து பொதுவுடமையாகி விடுவதுண்டு. இக்கால வரையறை இடத்துக்கு இடம் மாறுபடுகின்றது. இதனை காலாகாலத்திற்கு நிலைநிறுத்திச் சந்ததி சந்ததியாக வைத்திருக்க வேண்டுமானால் அதன் உரிமைபெற்ற சந்ததியினர் அவற்றைப் புதிதாகப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு புதுப்பித்து மறு பதிப்புச் செய்ய முடியாவிடத்து நூற்பிரசுரத் திட்டச் சட்டத்தின்படி ஏற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் யாவரும் நன்கு அறிந்துகொள்ளத் தக்கதான பகிரங்க விளம்பரங்களைச் செய்துகொள்ள வேண்டும்.

இந்தவிதப் பிரமாணங்களும் நடபடிக்கைகளும் நமது நாட்டிற்கும் பொருந்துமெனவே நம்புகின்றேன். அதுவும் அத்தகைய படைப்பு ஒன்று பொது மக்களுக்கு அவசியமானதெனக் கருதினல் அரசாங்கமோ அல்லது சமுதாயத் தாபனங்களோ தனியுடமையாகவோ பொது உடமையாகவோ ஆக்கிக்கொள்ளலாம்.

வைக்கோற் பட்டறை நாய்போன்ற பக்குவத்தால் பூதங் காக்கும் புதையல்போலப் பயனற்றுக் கிடக்கும் அழிநிலையில் இருந்து நல்ல படைப்புகளை மறுபதிப்புச் செய்பவர்கள் இரு வித புதிய வழிகளைக் கையாண்டு வாசகர்களுக்கு அவற்றை விருந்தளிக்கின்ருர்கள். ஒன்று மதிப்பாய்வு செய்தல் எனும் போர்வையில் இதனை மறுபதிப்புச் செய்வது. இத்தகைய நூல்களில் மதிப்புச் செய்பவருக்கு பழைய பிரதி உசாத்துணை நூலாகி விடுகின்றது. இரண்டாவது செய்யுள் நூல்களாஞல் உரைநடை எழுதி மறுபதிப்புச் செய்வது. இதிலும் மூலப் படைப்பு ஒரு உசாத் துணை நூலின் உருவத்திற்குத் தனது வலுவை இழந்து விடுகின்றது. வேறு ஒரு வழியும் இப்போது கையாளப்பட்டு கிடைத்தற்கரிய பல நூல்கள் வெளிவருகின்றன. தொகுதிகள் திரட்டுகள் என்பவற்றின் வடிவில் வேறு அத்தகைய வேறு நூல்களுடன் இணைத்து வெளியிடுவது உண்டு.

இதைவிட பழைய தமிழ் இலக்கியகளைக் காப்பதற்கு வேறு வழிகள் இருப்பதாகவே தெரியவில்லை. ஈழம் எனும் இலங்கையின் மண்ணிற் தோன்றிய தரமிக்க தமிழ்ப்படைப்புகள் அநேகமுள்ளன. அவற்றையெலாம் மறுபதிப்புச் செய்து வெளியிடுவதின் மூலம் இலக்கிய வரலாற்றின் கனதியைக் கூட்டுவது மட்டுமன்று பல தமிழ்ப் பிரதேசங்களின் தரம் மிகுந்த தமிழ் இலக்கியப் பங்களிப்பையும் நிலைநாட்டக் கூடியதாக இருக்கும். என்பது எனது எண்ணமாகும். இதன்விளைவே இந்த நூலின் பதிப்புமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை விபுலானந்த அடிகளின் மதங்க சூழாமணி வித்துவான் பூபாலபிள்ளையவர்களின் சீமந்தனி புராணம் எனும் இரண்டு நுல்களையும் பதிப்பித்து இப்போது மூன்றாவது நூலுள் அடி எடுத்து வைக்கிறேன். இதற்கு உறுதுணையாக இருந்து ஊக்கிவிப்பவர்கள் பலர். அவர்களுள் அமரர் மகா வித்துவான் வி. சீ கந்தையாப் பண்டிதர். மகா வித்துவான் . எப். எக்ஸ். நடராசா. மற்று திரு. ம. சிவனேசராசா. கலாச்சார உத்தியோகத்தர் திரு. எதிர்மன்னசிங்கம், மட்டக்களப்பு மாவட்டக் கலாச்சாரப் பேரவை உறுப்பினர்கள். நண்பர் திரு .ரீ.பாக்கயநாயகம் என்பவர்களுக்கு எனது இதயம் நிறைந்த நன்றிகள்.

மேலும் பல ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் கடல்கடந்து கனடாவில் வாழ்ந்துகொண்டு இத்தகைய முயற்சிகளில் ஆக்கபூர்வமாக என்னை ஊக்குவித்துவரும் ஈழத்துப்பூராடனார் அவர்கட்கும் அவரது துணைவியார் மக்கள் என்பவர்களுக்கும் நான் மிகவும் நன்றிக் கடன் உள்ளவனாக இருக்கின்றேன்.

தனது மதப்பற்றில் தளம்பாத உறுதி விசுவாசம் உள்ள கிறித்தவராக இருந்தாலும் தமிழ்ப்பற்றில் மதங்களுக்கு அப்பாற்பட்ட இலக்கியப் பற்றுளள ஈழத்துப் பூராடனார் கிடைத்தற்கரிய பண்டைய நூல்களுக்கு ஆய்வுரை துணைநூல்கள். உரைநடை ஆதியன உடனுக்குடன் எழுத்தித் தந்து வருகின்றார். இவைகளால் தனது மதத்தைப்போலப் பிறமதங்களுக்கு மதிப்புக்கொடுக்கும் பெருந்தன்மையை மட்டுமல்ல சைவமத நூல்களுக்கு நன்கு தெளிவான உரை நடையையும் எழுதத்தக்க வல்லபத்தை உடையவர் என்பதையும் எடுத்துச் செயல ளவிற் காட்ட வருகின்றார்.

கணபதிப்பிள்ளைப் புலவர் பற்றிய விபரங்களையும் இத்திரட்டில் உள்ள நூற்களைப் பற்றிய விபரங்களையும் அங்காங்கு தந்துள்ளேன். இவைகளை அறிவதற்கு புலவரது மகன் திரு க. செல்வநாயகம் அவர்களும் பேரனார் ஈழத்துப்பூராடனார் அவர்களும் மகாவித்துவான் எவ்.எக்ஸ். நடராசா அவர்களும் அமரர் .மகாவித்துவான் வி.சீ.கந்தையாப் பண்டிதர் அவர்களும் பல தகவல்களைத் தந்துள்ளனர். அதைவிட மற்றும் பலரிடம் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற நேரடித் தகவல்களைக் கொண்டும் தேவையான உண்மையான வரலாற்றுக் குறிப்புகளை ஒன்று திரட்டி ஆங்காங்கு தந்துள்ளேன். மேலும் புலவரின் வாழ்க்கை வரலாற்றினைப் படைப்பதற்கு ஈழத்துச் சுடர்மணிகள். மட்டக்களப்புத் தமிழகம். ஈழத்து இரட்டையர் இரட்டை மணி மாலை என்ற நூல்கள் பெரிதும் உதவின.

பொருள் வருவாயோ அல்லது புகழ் நோக்கோ இல்லாமல் அரிய நூல்கள் என்றும் கிடைத்தற்கரிய நூல்களாக இருந்து விடக் கூடாது, அவை என்றும் இளமையுடன் சந்ததி சந்ததியாகத் தமிழுலகில் வாழும் மக்களுக்கு இலக்கிய வளமுஞ் சுவையுந் தந்து அழியாத காவியங்களாக வாழ வேண்டுமென்பதே எனது அவா. அதன் தூய ஆக்க வெளிப்பாடுதான் இந்த நூல்களின் வெளியீடுகள்.

பதிப்பிக்க வேண்டிய இன்னும் பல நூல்கள் உள்ளன. அவற்றை உங்கள் முன்னர் படைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். தமிழன்னையின் தயை இருப்பதாக. இப்பணிக்கு தம்மாலான ஒத்தாசை செய்ய விரும்புபவர்கள் என்னுடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டிக்கொள்கின்றேன்.

தன்னிடம் இருந்த தனது தந்தையின் நினைவுச் சின்னம் போன்ற பல நூற்களின் அச்சுப் பிரதிகளை மனமுவந்து எவ்விதப் பொருள் நோக்கோ வருவாய் நோக்கோ இன்றித் தந்துதவிய புலவரின் செல்வ மகன். திரு. க.செல்வநாயகம் ஆசிரியர் அவர்களுக்கு எனது அளவிடமுடியாத அன்பு கலந்த நன்றிகள் உரித்தாகுக.

வணக்கம்.

அன்புமணி இரா.நாகலிங்கம்.

*பார்வதியகம். ஆரையம்பதி . காத்தான்குடி. (த.நி)*

இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ. கணபதிப்பிள்ளைப் புலவரின்

# வாரிசின் அணிந்துரை

(அமரர்.இவ.கணபதிப்பிள்ளைஅவர்களின் ஏக புதல்வனும் இளைப்பாறிய அதிபர் திரு.க.செல்வநாயகம் அவர்களின் அணிந்துரை இங்கே தரப்படுகின்றது



கதிர்காமச் சதகம் .அம்மானை ஆதிய நூல்களும் இன்னும் பதினைந்துக்கு மேற் பட்ட ஏனைய நூல்களும் எனது தந்தையாரால் இயற்றப்பட்டவைகளாகும். இவற்றில் பல 1979ம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட பெரும் புயலழிவால் சிதைந்தும் அழிந்தும் விட்டன. ஒருசில நூல்களே எஞ்சின. அவற்றைத் திரட்டி இரண்டு பாகங்களாகத் தக்க உரைநடையுடன் கனடாவில் உள்ள ஜீவா பதிப்பகத்தாரும் நிழற் பத்திரிகை நிறுவனத்தாரும் இணைந்து அங்குள்ள றிப்ளக்ஸ் அச்சகத்தாரின் உதவியுடன் மின் கணனி அச்சு மூலமாக வெளியிடுகின்றனர். இதனையிட்டு நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். இத்தாபனத்தின் உடமையாளர்கள் யாவரும் எனது நெருங்கிய உறவினர் என்பதில் மட்டற்ற பெருமிதங் கொள்கின்றேன்.

---

அணிந்துரை ஆசிரியரும் உரைநடை ஆசிரியரும் 1947ம் ஆண்டு உடன் மாணாக்கராகப் பயிற்சி பெற்றபொழுது எடுக்கப்பட்ட புகைப்படம்

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது தந்தையாரையிட்டு நேரிற் பல விசயங்களை அவரது மரணம் வரையும் உடன் வாழ்ந்த நான் இங்கு தருவது நலமெனை இதன் உரைநடையாசிரியர் கேட்டுக்கொண்டார் அதற்கிணங்க ஒருசில விபரங்களை இங்கு தருகின்றேன்.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்படாத காலத்தில் தனது கல்விப் பருவத்தை இவர் கழிக்க வேண்டியிருந்தது. நூற்றுக்கு ஒரு வீதமான மாணவர்களே அக்காலத்தில் கல்வி கற்பது வழக்கம். அதுவும் திண்ணைப் பள்ளிக்கூடங்களிற்தான் படிப்பு நிகழும். இவரது தந்தையாரும் எனது பாட்டனுமான இளையதம்பி வைத்தியர் என்பவர் மந்திரம் கல்வி வைத்தியஞ் சோதிடம் நாடகம் மாந்திரிகம் ஆதியவற்றில் சிறந்திருந் தபடியால் இவருக்கு கல்வி இருவிதங்களில் புகட்டப்பட்டன. அவற்றிலொன்று தன் தந்தையார் அளித்த கல்வி. மற்றது அக்காலத்தில் திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்தி வந்த கூழன் உபாத்தியாயர் எனப்படும் கணபதிப்பிள்ளை என்பவர் அளித்த கல்வி.

இந்தக் கணபதிப்பிள்ளை (கூழன்) உபாத்தியாயர் எனது தந்தையின் சம காலத்தவரும் புலமைத் தோழமையும் பூண்ட செட்டிபாளையம் வரகவி சின்னவப் புலவரின் தந்தையார் என்பது குறிப்பிடத் தக்கது. இப்புலவர் கோமான்களை அறிந்த எவரும் அவர்களின் ஆசிரியரான கணபதிப்பிள்ளை எனும் கூழன் உபாத்தியாரின் திறமையைப் பாராட்டாது இருக்க முடியாது.

இத்தகைய கல்வி அறிவு மட்டுமல்ல நான் பாடசாலையிற் படித்த வகுப்புப் பாடங்களையும் அதற்குரிய புத்தகங்களையும் அவதானித்து எனக்கே அவைகளை விளக்கிக் கற்பிக்குமளவுக்கு தனது அறிவை நன்கு வளர்த்திருந்தார். இதனுல் பண்டைய காவியங்களிலும் புராணங்களிலும் அறிவியல் தத்துவ நூல்களிலும் வைத்திய சோதிட நூல்களிலும் மட்டுமன்று புவியியல் கணிதவியல் வரலாற்றியல் தமிழியல் சுகவியல் இயற்கையியல் முதலிய அக்காலத்திற்குரிய பாடசாலைக் கல்வியையும் தற்படிப்பாகப் படித்து அறிந்திருந்தார். இந்தப் படிப்பு தமிழில் அவருக்கு ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டத்திற்குச் சமமான தகுதிகளை அளித்திருந்தது. இலக்கண இலக்கியப் புதுப்போக்குகளும் அவருக்கு நன்கு புரிந்திருந்தது. இத்தகைய சகலகலா விற்பன்னராக அவர் விளங்கினூர். இவரிடம் இருந்த அபூர்வமான ஞாபக சக்தி இவரது புலமைக்கு வலுவூட்டியது..எனலாம். சந்தர்ப்பத்திற்கு ஏற்ற எடுகோள்களை இராமாயணம் கந்தப் புராணம் பாரதம் பாகவதம் ஆதிய நூல்களில் உள்ள பாக்களை எடுத்துத் தவறுகளின்றிப் பாடிக்காட்டி விளக்குவார். அத்தனை அதீத ஞாபக சக்தியுடையவராக அவர் விளங்கினூர்.

பல பாடல்களை அவர் சொல்ல நான் எழுதி வருவேன். பாடல்கள் இலக்கண அச்சர சுத்தியாக வெளிவரும். முன்னரே மனப்பாடஞ் செய்து வைத்திருந்த கவிதைகளைப் பிறருக்கு ஒப்புவிப்பதுபோல வேகமாகப் பாடும் வல்லபம் அவரிடம் இருந்தது.. அவர்சொல்வதை எழுதுவதற்கு நான் இடர்பட்ட தருணங்கள் அதிகம். அத்தனை வேகமாக கவிகளைப் பாடுவார்

சமய சமூக சேவைகளில் ஈடுபட்டு வந்த இவர் பல தருணங்களில் பலவித இன்னல்களுக்குள்ளானதும் உண்டு. 1944ம் ஆண்டளவில் இலங்கையிலே முதன்முதலாக யுத்த காலத்தில் ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்துச் சொற்பொழிவு செய்ததற்காக ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில் எனது தந்தையார் மூன்ருவது எதிரியாகவும் ஈழத்துப்பூராடனூர் ஆருவது எதிரியகவும் நான் ஐந்தாவது எதிரியாகவும் மட்டக்களப்பு மாவட்ட நீதித்தலத்தில் நிறுத்தப்பட்டதும் குற்றங்கள் உறுதிப்படுத்தப்படாததால் விடுதலை செய்யப்பட்டதும் இன்றும் நன்கு நினைவிருக்கின்றது. இது அவரது சுதந்தர தாகத்தை எடுத்துக் காட்டும் என நம்புகின்றேன் . இடைக்கிடை இந்தியாவிற்குச் சென்று அங்குள்ள தலங்களைத் தரிசித்தும் அறிஞர்களைக் கண்டு அளவளாவியும் வருவதுண்டு. இதன் தாக்கத்தால் சுதந்தர உணர்வு கொண்டிருந்தார்.

எனது தந்தையார் பழகுவதற்கு இனிமையான சுபாவம் உள்ளவர். தவறுகளைச் சுட்டிக் காட்டுவதில் நக்கீரரின் வழிவந்தவர். இவரது புலமைக்கு அநேக கல்விமான்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர்களும் பாராட்டுதல்கள் அளித்துள்ளனர். புராணப் படனம் செய்வதில் வல்லவர். இவற்றையெலாம் விட நாடகத் துறையில் பொம்மலாட்டம் கூத்துகள் எனப்படும் பலவகை நாடகங்கள் புதிய டிராமாக்கள் என்பனவற்றில் மிகவும் நாட்டமுள்ளவர். தானே பல நாடகங்களை இயற்றிப் பயிற்றி அரங்கேற்றியுள்ளார். பொம்மலாட்டம் எனும் பாவைக் கூத்துகளை விசேட தினங்களில் களியாட்ட நிகழ்ச்சிகளாக நடத்துப்போது பல குரல்களில் பாடியும் பேசியும் வருவார். இவற்றையெலாம் ஒரு ஓய்வு நேர உபயோகமாக எதுவிதப் பொருள் வருவாய் அற்ற கலைச் சேவையாகவே செய்துவந்தார்.

.மற்றவர்களின் வித்துவத்திற்கு மதிப்புக் கொடுத்து கற்றவர்களுக்குத் தோழனாகவும் கல்வி கற்பவர்களுக்கு ஆசிரியனாகவும் கல்லாதவர்களுக்கு உபதேசிப்பவராகவும் வாழ்ந்து தனது புலமையைப் பயன்படுத்தினார். அத்தகைய ஒருவருடைய மகன் என்பதில் நான் பெருமைப் படுகின்றேன்.

ஏறக்குறைய அறுபது எழுபது வருடங்களுக்கு முன்னர் அச்சிடப்பட்ட எந்தையின் நூல்களை மீண்டும் அச்சுருவிற் காண்பதையும் அதுவும் அவைகள் புதிய மின் அச்சமைப்பு வடிவில் அச்சிடபபட்டுள்ளதையும் எண்ணும்போதெலாம் அளவிலா உவகை அடைகின்றேன்.

அதுபோலவே தனது தாயகத்தின் பழைய கல்விப் பெருமையை எடுத்துக் காட்டும் பல பழைய நூல்களைத் தேடி எடுத்து உரையெழுதிப் பதிப்பித்து வரும் எனது மருகராகிய ஈழத்துப் பூராடனாருக்கும் அத்துறையில் உறுதுணையாக நிற்கும் அவரது துணைவியார் மற்றும் மக்களுக்கும் எனது இதய பூர்வமான நன்றிகளையும் பாராட்டுகளையுஞ் வாழ்த்து ஆதியவற்றையுஞ் சமர்ப்பிக்கின்றேன். இவர்களது தமிழ்ப்பணி நீடு வாழ இறைவன் திருவருள் தருவானாக.

இவ்வண்ணம்
**க. செல்வநாயகம்**
பாண்டிருப்பு 1. கல்முனை - .இலங்கை
11.6.1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பாசிரியர் உரை.

எழுத்தாளர்களின் படைப்புகளே மற்று புலவர்களின் புலமைக் கனிகளோ என்றுமவற்றின் வாசகர்களுக்குக் கிடைத்தற்கு அரிதாவதோ அல்லது பழைய பிரதியாய் ஆகிவிடுவதோ கிடையாது. ஒருவேளை படைக்கப்பட்ட காலத்தால் முந்தியதாகலாம் அதனைப் புதிதாகப் பிரதி செய்துபடி எடுத்துப் பரப்பாது விட்டபடியால் அரியதாக இருக்கலாமே தவிர எந்தவொரு நூலும் என்றுந் தனது இளமையைத் தாண்டிப் போவதில்லை. அவை மார்க்கண் டேயனைப் போல அழியாத யவ்வனம் உடையவைகளே.

இன்று பல அரிய நூல்கள் கிடைத்தற்கரியனவாக இருக்கின்றன என்ற ஆதங்கம் மக்களிடம் பரவலாக நிலவி வருகின்றது. எனது சொந்த அனுபவத்திற்கூட இத்தகையவாய நூல்கள் பலவற்றைக் கண்ணுற் காண வேண்டுமென்ற தவிப்பு இன்னுந் தீர்ந்தபாடில்லை.. சிலரிடம் இத்தகைய ஒருசில நூல்களின் பண்டைப் பிரதிகள் இருப்பதைப் பார்க்கக் கிடைத்தாலும் படிக்கக் கிடைப்பதில்லை. இந்த நிலையால் இருவித பேரபாயங்கள் தமிழ் இலக்கியத்துக்கு ஏற்படுகின்றன.

அவைகளில் ஒன்று இந்த நூல்களும் இவற்றைப் படைத்த படைப்பாளிகளின் பெயரும் அவர்கள் வாழ்ந்த பிரதேசங்களும் படைத்த காலமும் தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பெறுவதில்லை. இரண்டாவது ஒரு இலக்கியத்தின் அழியாத நிலை என்ற வரப்பிரசாதம் இவைகளுக்குக் நாளடைவிற் கிடைத்தற்கு அரிதாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு அக்கிராமம் தமிழ் மணத்தாலும் அந்த மூன்று புலவர்களின் சிறப்பாலும் பெருமிதமுற்றது. அதே கிராமந்தான் இந்த நூலின் உரைநடை ஆசிரியர் திரு கதிர்காமத்தம்பி செல்வராசகோபால் (ஈழத்துப்பூராடனார்) அவர்களின் பிறந்த தாயகமுமாகியது.

புலவர் இ. வ .கணபதிப்பிள்ளை தமிழ் அறிவும் வைத்தியத் தேர்வும் சோதிட ஞானமும் நாடகக் கலை வல்லுனருமாக விளங்கினார். பலவித வைத்தியத் துறைகளுடன் பாம்புக்கடிப் பரிகாரத்திலும் முறிவு வைத்தியத்திலும் சிறப்புற்றிருந்தார். ஆயினும் இவற்றால் எவ்வித ஊதியமும் பெறாது இலவசமாகவே பிறருக்கு சிகிச்சை காலபலன் கூறுதல் என்பவற்றை வழங்கி வந்தார் அதற்குத் துணையாகக் கமச்செய்கையில் ஈடுபட்டு வாழ்க்கைக்குப் போதிய செல்வுங் கொண்டு வளமாகவாழ்ந்தார். வாழ்க்கைக்கான தொழிலாக வைத்தியஞ் சோதிடத்தைத் தன்வயமாக்கக் கூடாதென்பது இவரின் குறிகோள். விலையேறப் பெற்ற மருந்துகள் தயாரிப்பதாயின் அதற்குரிய பட்டோலையை நோயர்களுக்கு எழுதிக்கொடுத்து மூலிகைகளை வாங்குவித்து இலவசமாகத் தயாரித்துக் கொடுப்பார்.

இத்தகைய குணநலன்களால் இவருக்கு தனது சூழலில் மட்டுமன்று இலங்கையின் எல்லாத் திசைகளிலும் வாழ்ந்த கல்விமான்களதும் அரச ஊழியர்களினதும் தலைவர்களினதும் நட்புறவுஞ் சகாயமுங் கிட்டிற்று. இதனால் சில பெரியவர்களின் ஆஸ்தானக் கவிஞராகவும் மதிக்கப்பட்டார். விசேடமாக மண்முனை எனும் பற்றின் அரச நிர்வாகியாக இருந்த முதலியார் பொன்னுச்சாமி வன்னியனார் என்பவருடைய அத்தியந்த தோழரானார். இவருடைய எல்லாப் படைப்புகளையும் அத்தகைய ஆதரவாளர்களே நிதியுதவி செய்து வெளியிட்டுள்ளனர் . இதனை இவரது கதிர்காமத்தம்மானை கதிர்காம சதகம் முதலான நூல்களின் மூலம் அறியலாகும்.

இவர் பலநூல்களைத் தானகக் கற்றுத் தேர்ந்தவர். ஐந்திலக்கண அறிவு மிக்கவர். அக்காலத்தில் வழக்கிலிருந்த இராமாயணம் பாரதமாதிய காவியங்களையும் புராணங்களையும் பிறருக்குப் பாடஞ் சொல்லிக் கொடுக்குமளவுக்குப் பரிச்சிய முடையவர் .கையறுநிலைக் கவிதைகள் பாடுவதில் வல்லுனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் எவ்வளவுதான் பரிசு கொடுத்தாலும் தனக்கு அறிமுகம் பழக்கமற்றவர்களுக்குக் கையுறுநிலைக் கவிதை பாடுவதற்கு என்றுமே விரும்பார். இதுபோலவே தெரியாத நபர் எவர்க்கும் வாழ்த்துப்பா பாடியதில்லை. பாக்கள் கற்பனையோடு பாடுவதாயினும் பாடப்படும் பொருளின் தன்மையை நாம் ஓரளவாவது நேரிற் கண்டு அனுபவித்திருக்க வேண்டுமென்பது இவரது கோட்பாடாகும்.

காலத்துக்குக் காலம் இவர் பாடிய பாக்களால் இலங்கையின் அக்கால வரலாற்றை ஓரளவு அறியலாம். இவரையிட்டு ஈழத்து இரட்டையர் இரட்டைமணி மாலை என்ற நூலில் விபரமாகத் தரப்பட்டுள்ளது..

பொம்மலாட்டம் எனும் பாவைப்பிள்ளைக் கூத்திலும் வல்லவர். தானே கூத்துப்பொம்மைகளைத் தயாரித்ததுடன் மயானகாண்டம் சத்தியவான் சாவித்திரி சித்திர புத்திரன் கோவலன் கதை நளச்சக்கரவர்த்தி கதை நல்லதங்காள் இவைபோற் பல கூத்துகளையும் நடத்தியது இப்போதுள்ள முதிய சந்ததியினருக்கு நன்கு ஞாபகத்திலுண்டு. அவர்கள் இப்போதும் அடிக்கடி அவற்றை விதந்து பேசுவார்கள். அதுபோலவே தென்மோடி வடமோடி நாடகங்களையும் டிராமா என்னும் நவீன நாடகங்களையும் இயற்றிப் பயிற்றுவதில் தேர்ந்தவர். இவையெல்லாம் இவரது ஓய்வுநேர உபயோகமாகவே இருந்தன

கமத்தொழிலில் இவர் புதிதாக கமத்தொழிற் பகுதியார் அறிமுகப்படுத்தும் ஆலோசனைகளைப் பின்பற்றி வந்ததால் தொழில் என்றுமே பாதிக்கப்பட்டதில்லை. கடன் என்றால் அஞ்சும் இவருக்கு இத்தகைய கமத்தொழில் பெரும் வருவாயைத் தந்து வந்தது

1884ம் ஆண்டிற் பிறந்த இவரின் உலக மறைவுபற்றி இவரது மகன் திரு.க.செல்வநாயகம் இளைப்பாறிய அதிபர் அவர்கள்:

ஆயுஞ் சுபகிருது ஆவணி முப்பத்தொன்று
தோயுந் திரிதியை சேர்பருதி · வாரமதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயன் கணபதிப் பிள்ளை நிமலனடி
காயம்விட் டேகினன் காண்

எனும் வெண்பா மூலம் கூறியுள்ளார். (சுபகிருது - 1962)

இவர் சரிதத்தை மகாவித்துவான் வீ.சி.கந்தையாப் பண்டிதர் எழுதிய (1962) மட்டக்களப்புத் தமிழகத்தில் 325-327ம் பக்கங்கள் வரையுள்ள நூற் பகுதியிலும் பேரறிஞர் திரு.மு.கணபதிப்பிள்ளை அவர்களின் (1967) ஈழநாட்டின் தமிழ்ச் சுடர்மணிகள் எனும் நூலில் 57ம் பக்கத்திலும் விரிவாகக் காணலாம்.

ஆஸ்திக்கொரு பெண்ணும அறிவுக்கொரு ஆணுமாக இரண்டு பிள்ளைகளைப் பெற்றுர். அவர்களுள் மகனின் பெயர் திரு செல்வநாயகம் என்பதாகும். இவருந் தனது தந்தையின் அடிச்சுவட்டில் கவியியற்றல் வைத்தியம் சோதிடம் என்பவற்றில் சிறந்து வல்லுனராக வாழ்கின்முர். ஆசிரியப் பணியிற் மணியாய் விளங்கி அதிபராகக் கடமைபுரிந்து இளைப்பாறி மட்டக்களப்புப் பாண்டிருப்பு எனும் இடத்தில் மனையறம் நடத்தி வருகின்முர்.

புலவர் அவர்கள் பாடிய பாடல்கள அநேகம்அவற்றில் அச்சுருவேறிய பல அவற்றிலும் கதிர்காமத்தம்மானை கதிர் காமச் சதகம் மாணிக்க கங்கைக் காவியம் மற்றும் கதிர்காமத் தரிசன நுட்பம் என்பன நூலுருவாகியுள்ளன. இத்திரட்டில் அவரது கதிர்காம சதகம் மாணிக்க கங்கைக் காவியம் ஸ்ரீ சங்கமன்கண்டிப் பிள்ளையார் பதிகம் என்னும் மூன்று நூல்களும். இரண்டாவது தொகுதியிலே கதிர்காமத்தம்மானையும் மற்றும் பாமாலை ஆதியனவும் வெளியிடப்படும்.

இவரும் இவரது தோழர் வரகவி சின்னவப்புலவரும் சேர்ந்து கவியியற்றுவதில் வல்லவர்கள். ஒருவர் எடுக்க மற்றவர் முடிப்பார். இத்தகைய பாடல்கள் அநேகம் உள்ளன. ஒரு சில பாடல்கள் ஈழத்து இரட்டையர் இரட்டை மணிமாலை என்ற நூலிற் தரப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் இருவரும் இணைந்து பாடிய இனிய வெண்பாப் பாடலை எடுத்துக் காட்டாகக் கீழே தருகின்ருேம்

சிறைச்சாலையின் சிறப்பு

கரந்து பிறர்பொருளைக் கவர்ந்துசெலு மலுப்பை
மறந்து இருப்பதற்கோ மறியல் -

என்ருர் கணபதிப்பிள்ளைப் புலவர். அதற்கு:

- -துரந்துவரும்
பாவத்திற் கஞ்சிப் பதுங்கி யிருப்பதற்கு
ஆபத்துக் குதவும் இடம்

என்ருர் சின்னவப் புலவர்

—0—

## புலவர் அவர்கள் வீட்டில் ஒரு இல்ல நூலகம்

நான் அடிக்கடி இ. வ. கணபதிப்பிள்ளைப் புலவர் அவர்களின் இல்லத்திற்குச் செல்வது வழக்கம். அப்பொழுதெல்லாம் அவர் ஏதோ ஒரு பனையோலைச் சுவடியை அல்லது புத்தகத்தை வாசித்துக் கொண்டே இருப்பார். அவரின் இருக்கையைச் சுற்றிப் பல விதமான நூல்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். கண்டது கற்கப் பண்டிதனுவான் என்பதற்கு இணங்க அக்காலத்தில் கிடைக்கக் கூடியதாகவிருந்த நூல்களை வாங்கி வைத்திருப்பதுடன் பனையோலை ஏட்டுச் சுவடிகளையும் பிரதி செய்தும் வைத்திருந்தார்.

மகாவித்துவான் எப். எக்ஸ் நடராசா அவர்களுக்குச் சாகித்திய மண்டலப் பரிசை ஈட்டிக்கொடுத்த மட்டக்களப்பு மான்மியம் எனும் படைப்பிற்கு மூல நூலாக விருந்த மட்டக்களப்பு மான்மிய ஓலைச் சுவடியை இவரே வழங்கிஞர். அத்தகைய பழைய நூல்களை எல்லாம் இவர் திரட்டி வைத்திருந்தார். அவரது இல்லம் ஒரு சிறு நூலகமாகவே இருந்தது.

- உரைநடை ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றிரட்டு உரை ஒன்று

தமிழில் சதக இலக்கியங்களின் தொகுப்பு ஒரு பரந்த இடத்தைப் பெற்றுள்ளது. ஆதலால் இதனை எந்த இலக்கிய வகுப்பில் அடக்குவது என்பதில் ஒரு உறுதியான முடிவு எடுப்பது முடியாத காரியம். எனினும் இவ்விலக்கியப் பெருக்கைப் பிரபந்த இயலுக்குள் பாயவிடுவதே நலமென எண்ணுகின்றேன்.

சென்னை வி.இரத்தினநாயகர் அன்ட் சன்ஸ் என்னும் பதிப்பு நிறுவனம் 1947ம் ஆண்டில் தமிழில் உள்ள சதக நூல்களைத் திரட்டி இரு பகுதிகளாக வெளியிட்டுள்ளது அதன் முதலாவது தொகுதியில் பனிரெண்டு சதகங்களும் இரண்டாந் தொகுதியில் பதினொரு சதகங்களுமாக இருபத்து மூன்று சதகங்கள் இருப்பதாகத் தெரிகின்றது. இவற்றுள் ஈழமண்டில சதகம் அடங்கவில்லை.

இவற்றிற் பல சதகங்கள் உரையுடன் தனித் தனியான நூல்களாக உருவாகியுள்ளன. பல சதகங்களிலிர்ந்து சில பாடல்கள் பாடசாலையின் பாடநூல்களில் அவ்வவ்போது சேர்க்கப்பட்டுள்ளன.

வடமொழியில் யாத்த பார்த்தருஹரி சதகம் என்று ஒன்றுண்டு. இதன் வழியிற் தமிழ்ச் சதகங்கள் தோற்றின வென்றால் தமிழ் மொழிக்கு அதுவொரு பெரிய இழுக்காகி விடாது. ஏனெனில் இத்தகைய இலக்கியப் போக்குள்ள நூல்கள் முச்சங்க காலத்திலோ அல்லது சங்கம் மருவிய காலத்திலோ ஏற்பட்டதிற்கு எந்தவிதமான சான்றுகளும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தாட்சிகளும் இல்லை. ஆயினும் மாணிக்க வாசக சுவாமியின் திருவாசகத்தில் நூறு பாடல்களைக் கொண்ட திருச்சதகம் என்றொரு பகுதி உண்டு.

ஏனைய சதகங்களின் பொருளுடனும் அமைப்புடனும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது முற்றும் வேறுபாடுள்ள அமைப்புடையது. ஆயினும் சதக இலக்கியத்தின் காலம் மிகவும் பிந்திய காலத்தோற்றம் என்பதில் தவறின்று.

இன்னும் ஆழமாக சதகங்களின் கருது கோள்களைக் கொண்டு ஆராயின் ஆத்திசூடி உலகநீதி வெற்றிவேற்கை எனும் நறுந்தொகை வாக்குண்டாம் நல்வழி மற்றும் நீதி வெண்பா சாணக்கிய நீதிவெண்பா சதகம் ஆதிய ஆக்கங்களில் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களின் சாயல் படிந்திருப்பதைக் காணலாம். எனவே இவைகளை அதன் கிளைகள் என்று கூறுவதும் பொருந்தும்.

தமிழ்ப் பாவலர்களால் மற்றுமின்றி இசுலாமியத் தமிழ்ப் புலவர்களாலும் சதக இலக்கணத்துக்கு நெருங்கிய யாப்பு அமைந்த பல செய்யுள் நூல்கள் பாடப்பட்டுள்ளன. அவற்றை முனாஜாத்து என்று அழைப்பர்.

சதகங்களின் பொதுவான இலக்கணமாக அவை எண்ணிக்கையில் நூறு பாடல்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். விருத்த ஈற்றடி இரண்டும் எல்லாப் பாடல்களிலுந் தொடர்ந்து வரவேண்டும். பின்வரும் யாதேனும் ஒரு பொருளைப் பற்றி எடுத்துக் கூறுவதாக அமைய வேண்டும்.

முதலாவதாகக் கவி தனது வழிபடு தெய்வத்தை முன்னிலைப்படுத்தி உலக நீதி அறம் ஒழுங்குகளை எடுத்துக் கூறுவது. இவ்வகுதியில் சதகங்களுட் சிறந்த குமரேசசதகம் எனும் பிரபலியமான நூல் அடங்கும்.

இரண்டாவது புலவர்களுக்கு புரவலர்களாக இருந்து ஆதரித்து உதவிய பெருமக்களைச் சிறப்பித்துப் பாடுவது. உதாரணமாக சதகம் திருவேங்கடசதகம் எனும் மணவாள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாராயண சதகம் அறப்பளீசுர சதகம் அண்ணுமலைச் சதகம் என்பவற்றைக் கொள்ளலாம்.

மூன்ருவது அறநெறிகளை மாத்திரமன்றி இந்த உலக வாழ்க்கைக்கு உபயோகமான சோதிடம் வைத்தியம் மணவாழ்க்கை முதலிய கருமங்களையும் இட்டுப் பாடுவது. கயிலாச நாதர் சதகத்தில் இத்தகைய அமைப்புண்டு.

நான்காவது தனது வழிபடு தெய்வத்தின் சிறப்புகளை வரலாற்று முறையிற் தொகுத்துப் பாடுவது. இவ்வித அமைப்புடைய சதக நூல்களாக அவையாம்பிகை சதகம் அருணுசல சதகம் எம்பிரான் சதகம் மற்றும் வடவேங்கட நாராயண சதகம் என்பவற்றைக் கொள்ளலாம்.

ஐந்தாவது: உலகத்தில் பண்டு தொட்டு மக்களின் பாவனையில் இருந்து வரும் பல பழமொழிகளை வைத்து அதற்குரிய விளக்கத்தை எடுத்துக்காட்டும் முகமாகத் தொடுத்துப்பாடல். தண்டலையார் சதகம் கோவிந்த சதகம் சயங்கொண்டார் சதகம் என்பன இத்தொடரின.

ஆருவதாக ஒரு நாட்டைச் சிறப்பித்து அதன் வளம் வரலாறு மாண்பு என்பவற்றை பாடுவது. ஈழமண்டல சதகம். தொண்டை மண்டில சதகம். கொங்கு மண்டலச் சதகம் .பாண்டி மண்டலச் சதகம் என்பன இந்தத் தொகுதியில் அடங்குவன.

இவ்வழியில் ஈழநாட்டைச் சேர்ந்த செட்டிபாளையம் கணபதிப்பிள்ளைப் புலவர் இயற்றிய கதிர்காமச் சதகமுஞ் சேர்கின்றது. இந்தக் கதிர்காமச் சதகத்தை இங்கு ஈழத்துப் பூராடனரின் உரைநடையுடன் எடுத்துத் தருகின்ரேம். முன்னர் சொன்ன பல சதகங்களையுங் கற்றவர்களுக்கு இச்சதகத்தின் பொதுவியல்புகள் ஒன்ருக யிருந்தாலும் முக்கியமாக பாவத்திற்கு அஞ்சி நடத்தல் என்பதனையே பெரும்பாலான பாடல்களிற் கைக்கொண்டுள்ளார்.

இதன் பாட்டுடைத் தலமாகத் தனது வழிபடுந் தெய்வமான முருகக் கடவுள் எழுந்திருக்கும் ஈழ நாட்டின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்கிழக்குப் பகுதியில் ஊவா மாகாணப் பிரதேசத்தில் அமைந்திருக்கும் பண்டைப் பெருமைமிக்க கதிரமலை என்று அழைக்கப்படும் கதிர்காமத் தலத்தையே எடுத்துக் கொண்டுள்ளார்.

இதனைப் புலவர் பாடி முடித்த காலம் 1942ம் 1943ம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலாகும். இந்த இருவருட காலத்துள் தனது ஓய்வு நேரங்களில் இதனை இயற்றினார் என்பதை இவரை நன்கு அறிந்தவர்கள் கூறுகிறார்கள். ஆயினும் 1947ம் ஆண்டிற்தான் நூலுருவாகிற்று. புலவர் பாவச்செயல்களை ஒதுக்கி வாழ்வதற்கான அறிவுரைகளை நான்கு முக்கிய தலைப்புகளின் கீழ் எடுத்து உரைக்கின்றார்

முதலாவது. பாவச் செயல்கள் அதனைச் செய்வோரின் இம்மை மறுமை வாழ்வும் நரகத்திற்குச் செல்வோரின் தகுதிகளுமாகும். இரண்டாவது புண்ணியச் செயல்களின் அட்டவணை. அவற்றைச் செய்வோர் அடையும் இருமைப் பயன்கள். மூன்றாவது கடவுளுக்கு உகந்த செயல்களைச் செய்து அவரின் பதியிற் செல்லுந் தகுதிவாய்ந்தவர்கள், நான்காவது வறுமைக்கு ஏதுவான பல காரியங்களைச் செய்து மூதேவியின் ஆட்சிக்கு உட்படுபவர்கள். அத்துடன் பாக்கியத்திற்கேதுவான காரியங்களைச் செய்து சீதேவியின் அருளைப் பெறுபவர்கள். இவ்வாறாக நூலின் எண்பது பாடல்களை இவற்றிற்கென ஒதுக்கி உள்ளார். எனவே ஏனைய சதகத்தின் பொருளடக்கத்திலும் பார்க்க இது ஒரு தனிப்பட்ட போக்கை உடையதென்பது புலனாகின்றது.

=====000=====

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காமச் சதகம் பொருளடக்கம்

(முன் இலக்கம் பாட்டையும் பின் இலக்கம் பக்கத்தையுங் குறிப்பன)


காப்பு 1
அவையடக்கம் 1
நூல் 2
01 காதற்ற ஊசிபோற் பயனற்றவை 2
02 கடுநரகில் வீழ்பவர்கள் 3
03 கடைகெட்ட பிறவி எடுத்தோர். 4
04 உலகத்துக்கு உதவாத பயனற்றவர்கள் 5
05 கொடிய காட்டிலும் மோசமான இடங்கள் 6
06 செந்நெல் விளைவு குன்றினல் சீர்கெடும் 7
07 முத்திபெற அருகதையற்றோர். 8
08 மறுபிறவியில் விலங்குகளாகப் பிறப்போர் 9
09 கற்புக்கு எதிர்நிற்போர் யார் 10
10 இல்லாதவைகள் 11
11 மேன்மக்கள் மேன்மக்களே 12
12 புலால் விலக்கல் 13
13 கற்பு மங்கையர்க்கிவை ஒரு துரும்பு 14
14 கற்புள்ள மாதரின் கடமைகள் 15
15 கற்புடைய மாதர்களின் காசினி வாழ்க்கை 16
16 முற்பிறவியிற் செய்த விணைக்கேற்ற பிற்பிறவி 17
17 பரமபதம் பெறுபவர்கள் 18
18 கடவுள் பதியை அடைபவர்கள் 19
19 உலக வாழ்வில் உய்யாதவர்கள் 20
20 உலகில் உயர்ந்து சிறந்தவைகள் 21
21 வேசித்தனம் தூசிக்கும் நிகரில்லே 21
22 நலமான தேவ கொடைகள் 22
23 கருத்தரிக்கும் நாட்களுக்கேற்ற மனித குணகுணம் 23
24 இம்மையிலும் மறுமையிலும் நிம்மதியில்லா வாழ்வு 25
25 கொடிய நரகத்தில் வீழ்ந்து உழல்பவர்கள் 26
26 போலி வாழ்க்கை நன்மை தராது 27
27 வறுமையின் கோலம் 28
28 புவியில் முன்மாதிரி காட்டி வாழ்ந்தோர் 29
29 கலிகால நன்மைகள் 30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30 அழகுக்கு அழகு செய்வன 31
31 செய்யாதது செயக்கெடும் 32
32 உரிய அம்சமில்லாவிடில் எதுவும் உதவாது 33
33 செயலுக்கேற்பவே பயன்கள் விளையும் 34
34 கடைகெட்ட நரகத்திற்கு உரியோர் 35
35 கடவுளுக்கு உகந்தவர்கள் 36
36 வட்டியெனும் ஈட்டியால் வருத்துவோர்கள் 37
37 கொடுமை என்றுமே வாழ்ந்ததில்லை 38
38 மாதர்தம் மனவாழும் மண்ணில் அறிந்ததார் 39
39 வேல்முருகனின் வீரச் செயல்கள் 40
40 வள்ளி திருமண வரலாறு 41
41 கந்தனின் கருணையே கருணை 42
42 ஆணவம் அவர்தம் உற்றாரினால் அழியும் 43
44. தொழிலாளியின் வெயர்வை வற்ற முதல் ஊதியம் 44
44 பணமின்றேற் பிணம் 45
45 கடவுளருகிற் செல்லுந் தகைத்தோர்கள் 46
46 பிறவிக் குணத்தை மாற்ற முடியாது 47
47 பேயாகப் பிறப்பவர்கள் 48
48 உயிரைக் கொடுத்தாவது அடைக்கலந் தந்தவர்களைக் காப்பாற்றும் உத்தமர்கள் 49
49 வேண்டாதனவற்றால் விளையும் பயனென்ன 50
50 பிறவுயிரின்மேல் அன்பில்லாத கல்நெஞ்சர் 51
51 அருமை பெருமை அறியாதவர்கள் 52
52 சுடுகாட்டிற் கொண்டு நிறுத்துங் கர்வம் 53
53 வலிமைக்கு நிகர் வலிமைதான் 54
55 அதர்மத்தின் இறுதிப்பயன் அழிவுதான் 57
56 கருவிலுருவான குணத்தை மாற்றமுடியாது 58
57 காசிக்குப் போக முத்தி 59
58 மாணிக்க கங்கையின் பெருமை 60
59 விலைமாதரின் சாகசம் 61
60 திருமகள்வாழுந் திறல் நகரம் 62
61 கல்வியெனும் அழியாச் செல்வம் 63
62 நல்ல வைத்தியர்கள் 64
63 பாவையரிற் சிறந்த பத்மினிப் பெண் 66
64 சித்தினிப் பெண்ணின் சிறப்பு 67
65 சங்கினிச் சாதிப் பெண்ணிலக்கணம் 68
66 அத்தினிப் பெண்ணின் இயல்புகள் 68
67 ஆடவரின் அங்க இலக்கணங்கள் 69
68 காசேதான் கடவுள் 70
69 பணமற்றவன் ஒரு நடைப்பிணம் 71அ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70 நன்னிமித்தங்களும் தீய நிமித்தங்களும் 72
71 வாழ்நாளைப் பெருக்கும் வழி 73
72 குணத்திலும் பண்பிலும் முன்மாதிரியானோர் 74
73 உலக வாழ்வின் பேறடைதல் 75
74 உலகில் நடவாத காரியங்கள் 76
75 நமது உள்ளத்தே உள்ளான் இறைவன் 77
76 உடலும் உயிரும்பற்றிய தத்துவம் 78
77 பகைக்கு விலகி நடத்தல் 79
78 மூதேவி வந்துறையும் இடங்கள் 80
79 இலட்சுமி வாசஞ் செய்யும் இடங்கள் 81
80 கதிரையம்பதிச் சிறப்பு 82
81 எல்லாம் ஆகிய ஏகனே முருகா 83
82 கலைமகள் கடாட்சம் 85
83 வாலையைப் பூசை செய்தல் 86
84 தேவர்களின் திருவிளையாடற் திறமை 87
85 கற்றவர்க்கு வள்ளல் தரும் மதிப்பு 88
86 நல்லவர்களின் பிறப்பின்போது கிரகநிலை 89
87 புலவரைமதியாத மன்னனின் நிலை 90
88 பிரபஞ்ச உற்பத்தியின் விபரம் 91
89 முருகனை நம்பினோர் முத்திப் பேறடைவர் 92
90 ஒவ்வாதனவற்றை ஒறுத்தல் நன்று 93
91 இட்டுண்டு வாழ்வோர் 94
92 கதிரமலையின் உற்பத்தி 95
93 தேவர்கணத்து மனிதப் பிறவி 96
94 மனிதக்கணத்து மனிதப் பிறவி 98
95 விலங்குக் கணத்து மனிதப் பிறவி 99
96 பறவைக் கணத்து மனிதப் பிறவி 100
97 மச்சகணத்து மனிதப் பிறவிகள் 101
98 ஊருங் கணத்து மனிதப் பிறவிகள் 102
99 தாபர கணப் பறவிகள் 103
100 கந்தனே கண்கண்ட தெய்வம் 104

----0)(0----

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1947ம் ஆண்டில் அச்சடிக்கப்பட்ட கதிர்காம சதகத்தின் ஒருபக்கத்தின் புகைப்படப் பிரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து மட்டக்களப்பு செட்டிபாளையம்
இ. வ. கணபதிப்பிள்ளைப் புலவர்
அவர்கள் யாத்த

# கதிர்காமச் சதகம்

## காப்பு

கங்கை புடைசூழ் கதிர்காம நற்பதிமேல்
மங்களஞ்சேர் சதகமாலை செப்ப - பொங்கும்
அரவணி வோன் தன்மகனுய் அங்குசங்கள் தாங்குங்
கரமைந் துடையவனே காப்பு

***உரைநடை:*** இலங்கை என்னும் ஈழத்தின் உறுகுணைப்பகுதியாம் தென்கிழக்குப் பகுதியில் கதிர்காமம் எனும் சைவத்திருத்தலம் உண்டு. அதனைச் சூழ்ந்து பாயும் மாணிக்கை கங்கை என்னும் புண்ணிய நதி தலத்தீர்த்தம் அளிக்கின்றது. அங்கு வள்ளி தெய்வானை சமேதராய் திருமுருகப் பெருமான் எழுந்தருளி இருக்கின்றார்.. அத்திருப்பதியின் பேரில் பிரபந்த வகையைச் சேர்ந்த சதக இலக்கியமாக இதனைப் பாடுவதற்கு பாம்பணியும் பரமனின் மகனும் அங்குசப் படைக்கலனைத் தாங்குகின்றவரும் ஐந்து கரங்களை உடையவருமான விநாயகக் கடவுளை வாழ்த்திக் காப்பாகக் கொள்வோமாக.

## அவையடக்கம்

அரிக்குநிகர் என்றிடும் பூனையது போலவும்
அன்றில் நடைகண்டு காகம்
அகமகிழ்ந் திட்டுநடை கொண்டதது போலவும்
அம்புலிக் கிணைய தென்று
சிரித்திடும் மின்மினிப் பூச்சியது போலவுஞ்
சிப்பி முத்துக்கு நிகராய்
திவ்விய பளிங்கதைச் சேர்த்துவைத் ததுபோலவும்
செவ்வி யோர்நிக ரென்றிடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிவற்ற பித்தனைப் போலவும் மயில்நடம் வான்கோழி
பார்த்து நின்றுடல் போலும்
பாரிலெழு காவேரிக் கிணையென்று சிற்றோடை
பாய்ந்தோ டலது போலவும்
கரிக்கு நிகர்நா னென்றசிற் றெறும்பது போலவும்
கலைவாணர் தங்கள் முன்னே
கதிர்காம சதகமது பாடினேன் வரு பிழைகள்
களைந்தென் னைஉவந் தேற்பரே

***உரைநடை:*** *சிங்கத்தைப் போன்றவன் நான் என்னும் பூனையும், அன்றிலின் அழகான நடையைக் கண்டு அதன்வசப்பட்டு தனது மனதிற்குள்ளே ஆனந்தமுற்று அதுபோல நளினநடை பயிலுங் காகமும் சந்திரனுக்கு நான் இணையாவேன் என்று மார்தட்டிப் பறக்கும் மினிமினிப் பூச்சியும் கடற் சிப்பியிலே விளையும் முத்துக்கு நிகராக எடுத்து வைத்த பளபளக்கும் பளிங்கும் கற்றவர்களுக்குச் சமதையுள்ளவன் நானென்று கூறும் மனப் பிறழ்வுடையவனும் கான மயிலாடக் கண்டு ஆடும் வான்கோழியும் பூவிரியும் காவிரியும் காவேரி நதிக்கு நிகரானவன் நானென்று ஓடும் சிறிய நதியும் யானையே உன்னைப் போன்றவன்தான் நானும் என்று கூறும் சிற்றெறும்பும் எப்படியான மதிப்புகளைப் பெறுமோ அப்படித்தான் நானும் பலகலை வல்லராகிய அறிஞர்களுக்கு முன்னால் வந்து இந்தக் கதிர்காம சதகத்தைப் பாடுகின்றேன். இதிலே ஏற்படும் பிழைகளை நீக்கி இந்த நூலை உள்ளங்கனிந்து உவப்புடன் ஏற்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.*

# நூல்.

## *1.காதற்ற ஊசிபோல் பயனற்றவை.*

வேதங்கள் ஆயிரமதாகப் பிரிந்தென்ன
விந்தைபல கற்று மென்ன
விழியற்ற உயிர்வாசி புவிதனில் இருந்தென்ன
விடமொழி பகர்ந்து மென்ன
வாதுற்ற சூதுமொழி ஓதித் திரிந்தென்ன
மமதைபல கொண்டு மென்ன
வரிசை தப்பியதேவ இல்லமது சென்றென்ன
வாடுமலர் சூடி யென்ன
ஓதுமறை தெரியாத வேதிய ரிருந்தென்ன
உரகம் வளர்த்து மென்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை யில்லாதசொல் நிருபர்க் குரைத் தென்ன
உளங்கபட மாகி யென்ன
காதற்ற ஊசிபோ லாகுமே இவையெல்லாம்
காசினியில் நிலைமை யுண்டோ
கனக நவரெத் தினமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

***உரைநடை:*** சுடரும் பொன் நவரெத்தினங்கள் பளிங்குக்கல் என்பவைகள் விளையும் மாணிக்கை கங்கை வளைந்து ஓடுகின்ற கந்தப்பெருமாள் எழுந்தருளி இருக்கும் கதிர்காமப் பதியே. இறைவன் ஒருவனாயிருக்கும் போது மறைகளில் இருந்து இன்னும் பல மறைகள் பிரிந்து கிளைப்பதாலும் வாழ்க்கைக்கு ஆதார மற்ற வித்தைகளையும் நுட்பங்களையும் கற்பதாலும் உயிர் வாழ்வன கண்ணிழந்து வாழ்வதாலும் நஞ்சுபொருந்திய வஞ்சகமும் சூழ்ச்சியுமான வார்த்தைகளைப் பேசுவதாலும் தானென்ற அகங்காரங் கொண்டு வாழ்வதாலும் ஒழுங்கு நெறிகள் இல்லாத ஆலயத்திற்குப் போவதாலும் வாடிய பூக்களை அணிவதாலும் மறையறிவு இல்லாத அந்தணர்கள் வாழ்வதாலும் பாம்புகளைப் பாலூட்டிச் சீராட்டி வளர்ப்பதாலும் பொய்யான செய்திகளைத் மன்னர்களுக்குச் சொல்வதாலும் தூய்மை நிலவ வேண்டிய உள்ளத்தில் கபட எண்ணங்கள் இருப்பதாலும் ஏதாவது நல்ல பயன் உண்டாகுமோ என்று ஆராய்ந்து பார்த்தால் அவைகள் காதற்ற ஊசிபோலப் பயனற்றதாகவே கருதப்படும். ( கனகம் - பொன். உரகம் - பாம்பு. நிருபர் - மன்னர். உயிர்வாசி - உயிர்வாழ்வன. வரிசை - ஒழுங்குநெறி. நவரெத்தின மணிகள்: 1.மரகதம் 2. பவளம் 3.நீலம் 4. வச்சிரம் 5. பதுமராகம் 6. முத்து 7. கோமேதகம் 8. புருடராகம் 9. வயிடூரியம் என்பன)

## 2.கடுநரகில் வீழ்பவர்கள்.

அதிபரென ஊரிலே வாழ்ந்து சிலமூடரை
அணைத்து மதுவா சியாகி
அறமற்ற திறமையொடு பொய்களவு வஞ்சகம்
அதர்ம தொழில் தீய செயல்கள்
மதிகெட்டு வெறிகொண்டு விபசார மாடியே
மௌன முறுபெரி யோர்களை
மரியாதை செய்யாத தீரமும் பொதுநிதியம்
வைத்தபொருள் திருடி வாழ்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதிகள்செய் புத்தியும் தானென்ற கர்வமும்
சத்தியந் தவறு மொழியும்
தாழ்வுசோர் வெய்தாது என்றுமன தெண்ணியே
தரணியி லுழன்று மகிழ்வோர்
கதிகெட்டு உடல்வாடி ஊரற்று உழன்றுவெகு
கடுநரகில் வீழ்வா ரன்றோ
கனக நவரெத் தினமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

***உரைநடை:*** ( மதுவாசி - மதுப்பழக்கமுள்ளவர்கள்) ஈழநாட்டுப் புண்ணிய தலமான கதிர்காமப் பதியே நரகத்தில் வீழ்ந்து தஞ்செயற்கு அழுந்துபவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருப்பார்கள் என்று பார்த்தால் அவர்கள் பெரியவர்கள் என்று மற்றவர்களின் பார்வைக்குப் போலியாக நடித்துக் கொண்டு கேடு கெட்ட மதியீனர் சிலரைத் மதுப்பழக்கத்தால் தன்வயமாக்கிக்கொண்டு தரும நியாயமற்ற செயல்களைத் சாதுரியமாகச் செய்பவர்களாக இருப்பார்கள். பொய்யர்கள் திருடர்கள் வஞ்சகர்கள் தருமத்திற்குப் புறம்பான அதர்ம காரியங்களைச் செய்பவர்கள் கெட்ட செயல்களைப் புரிபவர்கள் மதிகெட்ட செயல் புரிபவர்கள் விபசாரிகள் சாந்தமுடைய பெரியவர்களுக்குத் தக்க மதிப்புக் கொடாதிருப்பதைக் கெட்டித்தனமென்று மெச்சுவோர்கள் பொதுச் சொத்தைக் கையாடி அதனுல் வயிறு வளர்ப்பவர்கள் மற்றவர் பொருளைத் திருடி வாழ்பவர்கள் சதி செய்பவர்கள் அகங்காரிகள் கொடுத்த வாக்குத் தவறுபவர்கள் தங்களுக்கு ஒருபோதும் தாழ்வு வராதென்று எண்ணி வாழ்பவர்கள் என்பவர்களாகவும் இருப்பார்கள். இத்தகையோர் இறுதியில் எந்தவிதமான வாழ்க்கை வசதிகளுமின்றி தேகம் இளைத்து இருப்பிடமின்றி அலைந்து வருந்தி வாழ்வை முடித்தபின்னர் மறுமையில் நரகத்தில் வீழ்ந்து பாவ தண்டனை அனுபவிப்பார்கள்.

## 3. கடைகெட்ட பிறவியெடுத்தோர்

திடசித்த மில்லாத மனுவாய் இருந்தென்ன
திருடுதொழில் கற்று மென்ன
சிவதவஞ் செய்யாத குருவாய்த் திரிந்தென்ன
தீதரொடு கூடி யென்ன
மடமற்ற புவிவாழ்வு காணு திருந்தென்ன
மன்னரை எதிர்த்து மென்ன
மணமங்கை விட்டயல் பரமாதை அணைந்தென்ன
மௌனமற விடுபட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைமுனையில் நின்றுசமர் செய்துபின் ஒழித்தென்ன
பக்தரை முனிந்து மென்ன
பசிகண்டும் அன்னமிட் டுண்ணுமல் உண்டென்ன
பழமொழி இகழ்ந்து மென்ன
கடைகெட்ட பிறவியிவர் பிற்செனன மாகியே
கவலையுற் றுழல்வா ரன்ருே
கனக நவரெத் தினமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

உரைநடை: (புகழ்வது போல இகழ்ந்து சொன்னவைகள்.) எல்லா மதத்தவர்களுக்கும் ஒரு பொது வணக்கத் தலமாகக் கருதப்படும் கதிர்காமப் பதியே. இந்த உலகத்தில் தாங்கள் செய்வதுவே புத்திசாலித்தனம் கெட்டித்தனம் என்று பலர் நினைத்து வாழ்கிருர்கள். அவர்கள் அப்படி செய்வது ஆரம்பத்தில் வாய்ப்பாக இருந்தாலும் ஈற்றில் தாம் செய்த வினைக்குத் தக்க தண்டனையாக கடைகெட்ட சென்மமெடுத்து உழல்வார்கள். அத்தகையோர்களின் விபரம் பின்வருமாறு உறுதியற்ற உள்ளம் உடைய மனிதர்கள் வஞ்சித்து திருடக் கற்றுக்கொண்டவர்கள் உலகை ஏமாற்றும் போலிச் சாமிமாரும் குருவானவர்களும் தீயவர்களோடு நட்புறவுள்ளவர்கள் ஞானமற்ற வாழ்வு வாழ்பவர்கள் நல்லாட்சி செய்பவர்களை விதண்டாவாதமாக எதிர்ப்பவர்கள் கைப்பிடித்தவள் இருக்கக் கணிகைபாற் செல்பவர்கள் போர்முனையில் இருந்து பயந்து தப்பியோடிவந்த கோழைகள் பரனடியார்களை சினந்து தூற்றியவர்கள் பசித்தவர்களின் பரிதாபத்தைக் கண்டும் ஈயாது உண்டவர்கள் பயனுள ஞானமான மொழிகளை இகழ்ந்தவர்கள் என்பவர்களாவர்.

## 4.உலகத்துக்கு உதவாது பயனற்றவர்கள்

தாய்தந்தை நோகமக னுலகத்தில் வாழ்வதும்
சத்தியம் தவறு நினைவும்
சந்ததிக ளலையவே தாய்நிதிகள் கவர்வதும்
தருமநினை வற்ற வாழ்வும்
பேய்கொண்ட பிரசாதம் தின்றுமது வுண்டுமே
பெரியோ ரைநிந் தித்தலும்
பிச்சை தாவென்ருேர்க் கடித்துத் துரத்தியே
பெண்போ கமதில் உழல்வதும்
வாயிலிழி தூசணம் பேசிப் புகழ்ந்துமன
மங்கைய ரைவிற் றுண்ணலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாதை தெரியாத துர்ச்செயலி லூடாடும்
வஞ்சகக் கொடிய நடையும்
காயிலைக ளற்றமர மதனைநிகர் செயலலாற்
காசினிக் காவ துண்டோ
கனக நவரெத் தினமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு ளுறைகதிர் காமமே

***உரைநடை:*** பௌத்தர்களால் சைவமத ஆராதனை நடத்தப்படும் கதிர்காமப் பதியே. இந்த உலகத்தில் இருந்தும் பிறருக்குப் பயனற்றவர்கள் பலருள்ளனர். அவர்கள் யாரென்று கூறுவேன் கேட்பாயாக. பெற்றவர்கள் மனம் வருந்த வாழ்கின்ற மகன் செய்த சத்தியத்தை மறந்திடும் எண்ணமுடையவர்கள் தமது உடன் பிறந்தார்கள் தெருவில் அலையத் தக்கதாக தாயடி முதுசத்தைக் வஞ்சித்துக் கையாடியவர்கள் தரும சிந்தனையற்று வாழ்பவர்கள் பிசாசுகளுக்கு வைத்து நிவேதனம் செய்த பொருட்களை உண்பவர்கள் கட்குடியர் மதிப்புக்குரிய மாந்தரை நிந்திப்பவர்கள் ஐயமிட்டுண்ணாதவர்கள் காமத்தின் ஆசையில் மயங்கி வாழ்பவர்கள் கெட்ட வார்த்தைகளைப் பேசுவோர் மற்றவர்களைப் புகழ்ந்து இச்சகத்தில் வாழ்பவர்கள் தமது மனைவியை விபசாரத்தில் ஈடுபடுத்துவோர் மதிப்பு மரியாதை அற்றவர்கள் கேடுகெட்ட செயல்களையே செய்யும் வஞ்சகமும் நடபடிக்கையும் உள்ளவர்கள் என்பவர்களாகும். இவர்கள் யாவரும் தளிர் இலை பூ காய் கனி இல்லாத மரங்களுக்குச் சமனுவார்கள்.

### 5. கொடிய காட்டிலும் மோசமான இடங்கள்

சங்குதவில் தீபமணி இல்லாத ஆலயம்
சாமரை இல்லாத அரசன்
தான்வாழ வென்றுபிற ருடமையாற் கட்டுமனை
தங்கி வாழாத சாலை
மங்கைய ரில்லாதவாழ் வில்லமுஞ் சாதுக்கள்
வந்து துயிலாத மடமும்
மதுவிற்று வருநிலையம் அதனிலுயர் கூடமும்
வண்டில்லாப் புஷ்ப வனமும்
பங்குபெறு கழனியும் நடனமில் லாதநகர்
பரிகரி யில்லாத ரதமும்
பத்தினி யில்லாதவூர் உத்தமரில் லாதசபை
பாவல ரில்லாத சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY ... 9-1-1992 LIBRARY

கங்குல்சூழ் கரிகரடி அரிவேங்கை வாழ்கின்ற
கானக மதாகு மன்றே
கனக நவரெத் தினமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

உரைநடை: பண்டைப் புகழ்பெற்ற சைவத் தலமான கதிர்காமப் பதியே. உலகிற் சில இடங்கள் கொடிய விலங்குகள் வாழும் காட்டிலும்பார்க்க மோசமான இடங்களாக இருக்கின்றன. அவற்றுள் சிலவற்றைச் சொல்வேன் கேட்பாயாக.. பக்திப் பரவசத்தை மூட்டும் ஒலி ஓதை ஒளி என்பவற்றைத் தருகின்ற பொருட்கள் அற்ற வணக்கத் தலம் தன்னுயிரைப் போலக் காக்கும் மன்னனைத் தன்னுயிர் போலக் காக்கும் மக்களின் அன்பும் அனுசரணையும் இல்லாத மன்னனின் அரசசபை. மற்றவர்களின் பொருளை அபகரித்துக் கட்டிய வீடு மக்கள் வாழாத மண்டபம் இல்லத்தரசி இல்லாத இல்லம் சாது சற்சனர் வந்து ஆறுதல் அடையாத பொதுமண்டபங்கள் மதுபானம் விற்கும் இடங்கள் அதன்வருவாயாற் கட்டிய கோபுரம் வண்டின் நாட்டத்தை ஈர்க்கமுடியாத மணமற்ற மலர் நிறைந்த பூஞ்சோலை பலருக்குப் பாகப் பிரிவினையுள்ள வயல் ஆடல்பாடல் இல்லாத பட்டினம் திண்மைக் கற்புடைய மாதரில்லாத ஊர் சான்றோரில்லாத சபை புலவர்கள் இடம்பெறாத சங்கம் என்பன சிலவாகும். இவைகள் யாவும் இருள் நிறைந்து யானை கரடி புலி சிங்கம் வாழ்கின்ற காடுகளாகவே கருதப்படும்.

## 6,. செந்நெல் விளைவு குன்றினால் சீர்கெடும்

கொற்றவர்செய் நிருபத்தில் செங்கோல் தழைப்பதும்
குரவர் நல்மொழி கூறலும்
கூசாமலே தரும மீதலும் பெரியோர்கள்
கூட்டமிட் டகம கிழ்தலும்
பற்றோடு தேவாலயத் திலெழும் பூசையும்
பாவா ணர்கவி பாடலும்
பக்தரொடு சித்தருஞ் சிவதவம் புரிதலும்
பரிவினொடு கொடியு யர்வதும்
உற்றமறை வேதியர்கள் யாகாதி செய்வதும்
உயர்வாழ்வில் வீரர் செயலும்
உண்மைபொய் கூடியே ஒருவழி நடப்பதும்
உலக நாகரீக முற்றுய
கற்றோர்களே செந்நெல் விளைவற்ற போதிலே
காண வரிதாகு மன்றே
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***உரைநடை:*** ( நிருபம் - ஆட்சி) இசுலாமிய மதப் பள்ளிவாசல் ஒருபால் அமைந்த சமரசப் பதியான கதிர்காமத்தில் உள்ள உலக நடபடிக்கைகள் கற்றறிந்த அறிஞர்களே. வரம்புயர நீருயரும் நீருயர நெல்லுயரும் பின்பு நெல்லுயரக் கோனுயுரும் என்று அவ்வை மூதாட்டி சொன்னார், அவ்வாறு இல்லாவிட்டால் என்ன நடக்குமென்று தெரியுமா. இதோ ஒரு பட்டியல் போட்டு அவற்றைக் காட்டுகின்றேன். சமய சன்மார்க்கக் குருமார் நல்வழி காட்டும் வார்த்தைகளைப் பேசமாட்டார்கள். மன்னர்களாற் செங்கோல் ஆட்சி செய்ய முடியாது. தருமம் அழிந்துவிடும். சான்றோர்கள் சங்கம் வைத்து தமிழாய்ந்து மனக்களிப்புற மாட்டார்கள். கோயில்களில் வணக்க வழிபாடு நின்றுவிடும். புலவர்கள் தமது கற்பனைச் சிறகையடித்து கவிவானிற் பறக்கமாட்டார்கள். பக்தர்கள் பக்தி மார்க்கத்தை விட்டு விடுவார்கள். சித்தர்கள் சிவதவம் செய்யமாட்டார்கள். அன்னக்கொடி தொட்டு வெற்றிக் கொடி வரையுள்ள கொடிகள் உயர்ந்தெழ மாட்டாது. அந்தணர்கள் செய்யும் யாகத்தீ அவிந்துவிடும். போர் வீரர்கள் செயலற்று விடுவார்கள். உண்மையும் பொய்யும் ஒரே வழியில் ஒன்றுபட்டு செல்லமாட்டாது. பசிவந்திடில் பத்தும் பறந்து போமென்ற நியதிப்படி இவையெலாம் நடக்கும்.

## 7.முத்திபெற அருகதை யற்றோர்

நன்மையில் லாவேந்தர் நாடாண் டிருந்தென்ன
நச்சுமலர் பூத்து மென்ன
நாட்டியக் கூத்தாடி ஊருந் திரிந்தென்ன
நளினநடை கொண்டு மென்ன
புன்முறுவல் கொண்டுநரி சிங்கமென வாழ்ந்தென்ன
பூனை புலியாகி என்ன
புராணமுறை யறியாத மறையோர் இருந்தென்ன
புறங்காட்டி ஓதி யென்ன
வன்மமுள் வைத்துவெளி நன்மொழி பகர்ந்தென்ன
வாதுபல பேசி யென்ன
வாடுவோர் தமதுயர் தீரா திருந்தென்ன
வசைபட்டு வாழ்ந்து மென்ன
கன்மவினை இவையெலாம் முத்தி வீடதனையே
காண இவரரு கரன்றோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** பல பவுத்த விகாரைகளுக்கு இடையே கந்தப் பெருமானை வணங்கும் பதியாக அமைந்துள்ள கதிர்காமமே. கன்மவினை என்று ஒன்றுண்டு. அதன்படி இந்த உலகத்தில் பிறந்தவர்கள் தமது போக்கின்படி அறிவுடனும் அறிவிழந்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கிறார்கள். அவற்றுள் சிலருடைய வாழ்க்கை தன்னலம் மிக்கதாக அமைந்து விடுகின்றது. அப்படிப்பட்டவர்களுட் சிலரைப் பற்றிச் சொல்கின்றேன். முதலாவது மக்களுடைய நன்மையே தனது நன்மையென எண்ணாது ஆளும் மன்னனின் ஆட்சியால் என்ன பயன். அதுபோல அடுத்து நஞ்சுத் தன்மையுள்ள அழகிய மலர். ஊரூராக கூத்தாடித் திரிபவர்கள். அலங்கார நடை நடப்பவர்கள். அகத்து உள்ளொன்று வைத்து புன்சிரிப்பால் அதை மறைத்து நரிபோலவும் வீரமாக அடித்துக் கொல்லும் சிங்கம் போலவும் வாழ்பவர்கள். பூனைபோன்ற சுபாவம் இருந்தும் புலிப்போல வேட மிடுபவர்கள். சரிவர வேதசாத்திரங்களைக் கற்காத பிராமணர்கள். போகவிட்டுப் புறஞ் சொல்பவர்கள். வஞ்சக மனத்தினராக வாய்ப்பந்தல் போடுபவர்கள். எதற்கும் வாதிப்போர். இன்னலுறுபவர்களின் இடர் தீராதவர்கள். உலகில் மானமிழந்து வாழ்பவர்கள், என்பவர்களாலும் என்ன பயனுண்டு. இவர்கள் இவ்வாறு பயனற்ற வாழ்க்கை வாழ்வதால் சுவர்க்கபதியை அடைவதற்கு பாத்திரராக இருக்க மாட்டார்கள்.

## 8. மறுபிறவியில் விலங்குகளாகப் பிறப்போர்

தானங் கொடுப்பவர்கள் தன்னைத் தடுப்பவர்கள்
சதிசெய்ய ஏவி விடுவோர்
சாந்தகுண முள்ளோர்க்கு வஞ்சகம் செய்வோர்கள்
சாதிமான தன்னை இகழ்வோர்
மானமழியக் கற்பு மாதைப் புணர்ந்தவர்கள்
வளர்சிசுக் கருவ ழிப்போர்
வானவ ருகந்தபூ வனமதை அழிப்பவர்கள்
மணமங் கைஅழ வாழுவோர்
ஈனமெழவே திருடி வாழ்மனை இயற்றுவோர்
ஈசர் நெறியில் லாதவர்
ஏழைகள் வருந்தவே தீவினை புரிந்தோர்கள்
எச்சில் மாமிச முண்ணுவோர்
கானகம் வாழ்கரடி புலியாக மறுபிறவி
கடிதிற் பிறப்பா ரன்றே
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** வள்ளி குறமாதை மணம் முடித்த தலமென்று பலராரும் பாடப்படும் கதிர்காமமே. மாந்தர்கள் இந்தப் பிறவியில் வாழ்ந்து வரும் நன்மை தீமைக்கேற்பவே அடுத்த பிறவி அமையும் என்பது சமய சாத்திரங் கண்ட உண்மை. அடுத்த பிறவியில் சிலர் காடுகளிலே வாழும் கொடிய பயங்கர விலங்குகளாகப் பிறவி எடுத்துப் பிறப்பார்கள். அப்படிப்பட்டவர்களின் விபரங்களைக் கேட்பாயாக. தருமஞ் செய்பவர்களைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுப்பவர்கள் மற்றவர்களை ஏவிவிட்டுச் சதிகள் செய்பவர்கள். அமைதியான நற்குணவான்களை வஞ்சித்து தீமை புரிபவர்கள். இட்டார் பெரியோர் என்று வாழும் நல்ல சாதிமக்களை இக-ழ்பவர்கள். கற்புள்ள மாதின் மானத்தைக் கெடுத்து அவளுடன் கலவி செய்தவர்கள். கருவில் வளரும் முதிராச் சிசுவை அழிப்பவர்கள். தேவர்களுக்கு விருப்பமான மலர் வனங்களை அழிப்பவர்கள். கட்டிய மனைவி கண்ணீர் விடத்தக்கதாகத் தவறிழைத்து வாழ்பவர்கள், மற்றவர் பொருட்களைக் கவர்ந்து தமக்கென ஒரு வீட்டைக் கட்டிக் கொள்வோர்கள். கடவுள் பக்தியில்லாதவர்கள். ஏழைகளை மேலும் வருத்தி அவர்களுக்குத் தேடிப் பொல்லாத கேடுகள் விளைவித்தவர்கள். வெறுக்கத் தக்க முறையில் ஊன் புலால் உண்ணுபவர்கள் என்பவர்களாவர். இப்படிப்பட்டவர்கள் அல்லாதோர் நற்பிறவி எடுப்பார்கள். ஆகவே மேற்கூறிய தீய செயல்களை மனிதப் பிறவி எடுத்த ஒவ்வொருவரும் விலக்கியும் விலகியும் வாழ வேண்டியது அவசிய மாகும்.

## 9. கற்புக்கு எதிர்நிற்போர் யார்

சீதையின் கற்புநிலை யறியா திராவணண்
　　சேய்பந் துவோட ழிந்தான்
சீர்துரி யோதனரும் அருகரும் பாஞ்சாலி
　　கற்பிற் சிதைந்த ழிந்தார்
மாதிற் சிறந்தபோ நளாயினி கற்பினால்
　　மவுற்கல்யர் கிருபை பெற்றாள்
வசையற்ற சாவித்திரி நங்கையா லந்தகன்
　　வாங்குமுயிர் பெற்று மீண்டு
கோதகற்ற சத்திய வானுடன் வாழ்ந்துபின்
　　குவலயம் போற்ற லுற்றாள்
குணமங்கை கற்புக்கு எதிரில் நிற்பா ரொருவர்
　　கூறவரி தாகு மன்றே
காதல்கொண் டிடுமூடர் கற்புடைய மங்கையைக்
　　காண்பதும் அரித ரிதுகாண்
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
　　கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** ( அருகர் - தம்பிமார்) கப்புறாளைகள் எனும் சிங்கள இனத்து பூசகர்களால் நைவேத்தியம் செய்யப்படும் பெருமை உடைய கதிர்காமப்பதியே, என்றும் கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை என்பதற்கு இலக்கணமாக வாழ்பவர்கள் பெண்கள். கற்புடைய மாதர்களால் பலபல படிப்பினைகள் உலகத்தில் நடந்தேறி உள்ளன. அவற்றிற் சிலதை எடுத்துச் சொல்லி கற்பின் பொற்பை மற்றவர்களும் அறிந்து கொள்ளச் சொல்கிறேன். இராவணன் சீதையைக் கெடுக்க நினைத்தான் இறுதியில் அவன் மாத்திரமல்ல அவனது முழுக் குடும்பமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிந்துபோனது. இது இராமாயணச் செய்தி. பாரதத்தில் திரௌபதையைக் கெடுக்க நினைத்த துரியோதனனும் அவன் தம்பிமார் துச்சாதனன் முதலிய நூறுபேர்களும் அழிந்தனர். இப்படி அழிந்தவர்கள் பலபேர் உள்ளனர். அதேவேளை நளாயினியின் கற்பின் மகிமையை அறிந்த அவளது கணவன் மவுற்கல்ய முனிவர்பற்றிய வரலாறும் இயமனிடம் தனது கணவன் சத்தியவானின் உயிரை மீட்டெடுத்த சாவித்திரியின் வரலாறும் பெண்களின் கற்பின் வலுவை வெளிப்படுத்துகின்றன. இப்படி நற்குண நன்னெறி உள்ள கற்புடைய மாதர்களால் உலகில் ஆகாததெது அப்படிப்பட்ட நன்மாதரைக் காம இச்சை கொண்ட எவராலும் கண்டடைய முடியாது.

## 10 இல்லாதவைகள்

ஆசைக்கு நெறியில்லை அரசருக் கறிவில்லை
அடிமைக்கு நன்றி யில்லை
ஆதவர்க் களவில்லை நீதிக்கு வாதில்லை
அண்டத்துக் கந்த மில்லை
மாசுக்கு ஒளியில்லை வேசைக்கு முறையில்லை
வறுமைக்கு அழகு மில்லை
மதிகெட்ட திருடருக கிருளில்லை மறையோர்க்கு
மாயை பொயதானு மில்லை
ஓசைக்கு உருவில்லை அருளுக்கு நிறையில்லை
உண்மைக்குத் தீமை யில்லை
உயிருக்கு அழிவில்லை துயிலுக்கு நிலையில்லை
உம்பர்க்குத் துன்ப மில்லை
காசு நிதியத்துக்கு நிலையில்லை இவையெலாம்
காணு திருப்ப தன்றோ
கனகநவ ரெதனமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** ஒளியூர் எனும் பொருள் உள்ள கதிர்கம என்பதன் மருவு மொழியான கதிர்காமப் பதியே. இந்த உலகத்தில் சில குணங்கள் மாந்தரிடையே தலையெடுத்தால் சில நற்பண்புகள் இழந்து போக நேரிடும். உதாரணமாகச் சிலதை உரைப்பேன் கேட்பாயாக. மனத்தில் ஆசை உண்டாகி அதை அடைய முயலும்போது ஒழுக்கம் சிதைந்து விடுகின்றது. ஆட்சிக்கு வந்ததும் அதிகாரத்தால் அறிவு இல்லாமல் போய்விடுகின்றது. ஒருவனை அடிமைப் படுத்திவைத்திருந்தால் அவனிடம் நன்றி என்பதே இல்லாமல் போய்விடுகின்றது. சூரியன் ஒளிவிடத் தொடங்கினுல் அவனுடைய காலை வேளைத் தண்மை கெட்டு வெம்மை மிஞ்சி விடுகின்றது. நீதி தலையெடுக்குமானுல் அதற்கு எதிர்வாதம் செய்யமுடியாது. பிரபஞ்சத்திற்கு எல்லை இல்லை. இருளுக்கு ஒளிருந் தன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடையாது. விபசாரிக்கு என்றும் உறவுமுறையில்லை. வறுமை வந்துவிட்டால் எவ்விதமான அழகும் இருக்கவே மாட்டாது. திருடச் செல்லும் புத்திகெட்ட கள்வர்களுக்கு இருள் என்பதே கிடையாது. கற்றறிந்தவர்களுடைய மனத்தில் மாயை எனும் மயக்கமும் பொய்மையும் இருக்கமாட்டாது. ஒலிக்கு உருவமும் நித்திரை வந்துவிட்டால் தக்கதோர் படுக்கையும் கிடையாது. இவற்றையெல்லாவற்றையுங் கடந்த தேவர்களுக்குத் துன்பமே கிடையாது. செல்வம் ஒரு இடத்திற் தரித்திருக்க மாட்டாது, என்பனவாகும் இவற்றுள் சில இல்லாமைகள் எதிர்மறையிற் கவிநயத்திற்காகச் சொல்லப் பட்டிருந்தாலும் அவைகளை அறிந்து தேர்ந்து கொள்ளுங்கள்.

## 11.மேன்மக்கள் மேன்மக்களே

பருதியொடு சந்திரன் மேருமலை வாயுவும்
பாங்குபெறு முலக மீரேழ்
படமேறு சேடனும் நட்சேத்திர கூட்டமும்
பாரொடு மறைகள் நான்கும்
சுருதியே யரியயன் சிவனுமுமை இந்திரன்
சுவர்க்க மும்முனி வர்ரிஷீ
சுடர்நவக் கிரகமொடு சரசோதி லெட்சுமி
தும்பிமுகன் ஆறு முகனும்
விருதுபெற்றிடு வள்ளி தெய்வானை சுரர்கணம்
விறலட்ட சத்தி வீரன்
விண்ணேறு வயிரவன் எண்ணூழி யாயினும்
மேலோர் கள்மே லோர்களே
கருதியிதை ஆராய்ந்து அறியாத நிர்மூடர்
கானிலுறு மரம தனரே
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** வருடா வருடம் ஆடி மாதந்தோறும் முழுமதி நாளில் பல இலட்சக் கணக்கான ஈழத்து மக்கள் ஒன்றுகூடித் தரிசிக்கின்ற ஈழத்துப் புண்ணிய தலமான கதிர்காமப்பதியே. கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்கள்தான் பொன்னைச் சுட்டாலும் மேன்மைதரும் என்பதுபோல உலக ஊழி பலகடந்தும் நிலையான மேன்மை பெறுவன சிலவற்றை இங்கு எடுத்துச் சொல்கிறேன் செவி மடுப்பாயாக. சூரியன் சந்திரன் மேருமலை காற்றுத்தேவன் பதினான்கு உலகங்கள் ( பூலோகம் புவர்லோகம் சுவர்லோகம் மகாலோகம் சனலோகம் சனலோகம் தவலோகம் சத்தியலோகம் ஆதிய மேலோகங்கள் ஏழும் - அதல விதல சுதல தராதல இரசாதல மகாதல பாதலம் எனும் கீழ்லோகங்கள் ஏழும்) ஆதிசேடன் நட்சேத்திரக் கூட்டங்கள் - பூமி - நான்கு வேதங்கள் ( இருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யசுர் சாமம் அதர்வணம்) சக்தி சிவன் இந்திரன் சுவர்க்கபதி முனிவர்கள் ரிஷிகள் சூரியன் கோனன் செவ்வாய் சொற்புதன் வியாழன் வெள்ளி காரியன் இராகு கேது ஆகிய ஒன்பது கிரகங்கள் திருமகள் கலைமகள் யானைமுகன் விட்ணு அறுமுகன் அவனின் மனைவிகளான வள்ளியும் தெய்வானையும் முப்பத்து முக்கோடி தேவகணங்கள் சிவகணத்து வீரபத்திரன் வயிரவன் என்பவர்களின் மேன்மை எண்ணற்ற ஊழிகள் கடந்தாலும் குறைவதில்லை. இதை யறியாதவர்கள் மனிதரே அல்ல. அடர்ந்த காட்டிலுள்ள மரங்கள்தான்.

## 12 புலால் விலக்கல்

மாடுமான் மரைபன்றி பட்சிகயல் மூசிகம்
வரிமுய லணிலு டும்பு
மட்டிகொ ளட்டைபுழு வானரம் வெள்ளாடு
மதுபான மிவைக ளெல்லாம்
தேடரிய சைவமத வாசியுண் நலமென்று
தின்றுடல் வளர்த்து லகிலே
சிவயோக யாகமும் தருமமுந் தானமும்
செப்பரிய திதிவி ரதமும்
பாடுபட் டிவைசெய்து முத்தபெற லாகுமோ
பாரிலும் வாழ்வ தரிதே
பந்தவினை கண்டுஎம தூதருயிர் கவர்கையில்
பற்றியுடல் கதறி யழுவார்
காடுவாழ் கரிகள் மதுமாமிசத் தூணுண்டு
கடிதுடல் வளர்ப்ப துண்டோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருரை கதிர்காமமே

**உரைநடை:** (கயல் - மச்சம்) முருகப்பெருமான் குறமகள் வள்ளியை கைப்பிடித்த தலமென்னுஞ் சிறப்பைப் பெற்ற கதிர்காமப் பதியே கேட்பாயாக. மிருகங்களுள் பெரியது யானை. அது தாவர ஊணையே உண்டு உடல் வளர்க்கின்றது. அதில் பத்திலொரு அளவான மனிதர்களோ மாடு மான் மரை பன்றி பறவைகள் மச்சங்கள் எலி முயல் அணில் உடும்பு மட்டி அட்டை குரங்கு வெள்ளாடு என்பன உண்டும் மதுபானம் அருந்தியும் அழிந்துபோகும் இந்த உடலை வளர்க்கின்றார்கள். இதைச் சிலர் சுவைத்து உண்ணும்போது சுவையான சைவமத உணவு என்று தமக்குள் எள்ளிக் கேலி செய்துகொள்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமல்ல இவற்றை உண்டுகொண்டே வருடத்தில் ஒரு சில நாட்களுக்கு மாத்திரம் சிவயோகம் யாகம் தருமம் தானம் விசேடமான தினங்களில் நோன்பிருத்தல் ஆதியன செய்கிறார்கள். இப்படிச் செய்வதால் முத்தி பெறலாமென்று ஒரு தப்பான எண்ணத்தைத் தமக்குள்ளே வளர்த்துக் கொள்கிறார்கள். ஆனால் தமது கருமவினைக் கேற்ப காலன் வந்து உயிரைப் பறிக்கையில் செய்த தவற்றை நினைத்து பரிதவித்து அழுவார்கள்.

## 13. கற்பு மங்கையர்க்கிவை ஒரு துரும்பு

வெள்ளானை மீதேறி மேதினியை யாளினும்
மேலோர் களாயி ருந்தும்
வேந்தரெல்லாஞ் சேர்ந்து சூழ்ந்துதுதி செய்யினும்
விண்ணோர்கள் கிருபை பெறினும்
தள்ளாத பாவாணர் கவிபாடி வாழ்த்தினும்
சலகங் கைநதி யாடினும்
தானமேழ் செய்யினும் தவமிகுதி புரியினும்
தருமமே செய்து வரினும்
விள்ளரிய ரெத்தினம் மலைபோலக் குவியினும்
விறல்வீரர் திறமை யுறினும்
விருதுபெறு நாட்டியப் பெண்ணுட மகிழினும்
வீமெத் தைமேற் துயிலினும்
கள்ள மற்றிடு கற்பு மங்கையர்க் கிவர்மகிமை
காட்டத் துரும்ப தன்றோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருரை கதிர்காமமே

***உரைநடை:*** (வீமெத்தை -பூமெத்தை) சலசலத்து ஓடும் மாணிக்க கங்கை. சாயாத மருதமரங்களின் நிழல். பக்தர்களின் பரவசம் சிங்களமுந் தமிழுஞ் சேர்ந்தொலிக்கும் குளிர்காற்று இத்தனை சிறப்புகளுடன் சீர்பெற்ற கதிர்காமப் பதியே கற்புடைய மாதர்களின் பெருமையைச் சற்றுக் கேட்பாயாக. அவர்களுக்கு உலகத்தில் பதிசேவையே அன்றி மற்றவைகள் யாவையுமே தூசிக்கு நிகராகும். கற்புத்தான் அவர்களின் கண்ணாகும். அவர்கள் முன்னால் வெள்ளானை மீது பவனி வந்து பாருலகை ஆளும் மன்னர்களாக இருந்தாலும் மற்று கற்றறிந்த மேலோர்களாக இருந்தாலும் பல அரசர்கள் பாராட்டிப் போற்றுகின்ற மன்னாதி மன்னனாக இருந்தாலும் மற்றுந் தேவர்களின் அழியாத வரம் பெற்றவர்கள் பாட்டுக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடிப் போற்றும் புலவர்கள் பல புண்ணியத் தலங்களில் மூர்த்தி தலம் தீர்த்தம் முறையே ஆடிவந்த புண்ணியர்கள் அன்னதானம் சொர்ணதானம் வஸ்திராதானம் கன்னிகாதானம் மாதானம் கோதானம் பூதானம் முதலிய ஏழு தானங்களையும் முறையாகச் செய்பவர்கள் சங்கநிதி பதுமநிதி கொண்ட செல்வந்தர் வெற்றி வீரர்கள் ஆதியவர்களாக இருந்தாலும் நாட்டியப பெண்கள் ஆட இசை மங்கையர் பாட உல்லாசமாக பூமெத்தையிலே துயில் காணும் வசதிகள் இருந்தாலும் கற்புடைய மாதர்கள் இவற்றையெலாம் அற்பமாகக்கூடக் கருதமாட்டார்கள்

## 14. கற்புள்ள மாதரின் கடமைகள்

அரிவைதன் கற்புநிலை கணவனைத் தெய்வமாய்
ஆசாரஞ் செய்து பணிதல்
ஆடவர்கள் எவரையும் நினையாத கிரியையும்
அஞ்ஞான மகல நெறியும்
உரிமையுறு மணமகன் மனநினைவு தானறிதல்
உற்ற ரைநே சித்தலும்
உண்மைமொழி யன்றியே பொய்யுரை புகன்றிடா
உத்தம கால மணைதல்
பரிவுபெறு நாணமட மச்சம் பயிர்ப்புமுறை
பாதுகாத் திட்டு வருதல்
பர்த்தாவை உண்ணவைத் தேபின் உண்ணுதல்
பஞ்சணை அலங்க ரித்தல்
கருதலுறு நாயகன் துயில்கொண்ட பின்துயிலல்
கணவன்முன் எழுதல் அன்றோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருரை கதிர்காமமே

***உரைநடை:*** பண்டைக் காலந்தொட்டே ஈழத்தீவின் எல்லாத் திசைகளிலுமிருந்தும் முருக பக்தர்கள் தமது நேர்த்திகளைப் பூர்த்தி செய்யப் பலமைல்கள் கால்நடையாக வந்து தரிசித்துச் செல்லும் சிறப்புடைய கதிர்காமப்பதியே. ஒரு கற்புடைய மாது எப்படி இருப்பாள் அவளின் இலக்கணமென்ன என்பதை இப்பாடல் கூறுகின்றது. இதனைக் கேட்பாயாக. கற்புள்ள பெண் கணவனைத் தெய்வமாக மதிப்பாள். அவனுக்கு வேண்டிய நல்ல காரியங்களை உரியஉரிய முறைப்படி செய்வாள். அவனின் மதிப்புள்ள சொற்களுக்குக் கீழ்ப்படிவாள். கணவனைத் தவிரப் பிற ஆடவர்களை கனவிலும் நினையாள். அதற்கேற்ப வாழுவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவீனத்தை நீக்கும் ஒழுக்கமுடையவளாக இருப்பாள். தனது கணவனின் ஒழுக்கமான திருப்தியை அறிந்து அதற்கேற்பச் செயற்படுவாள். தனது உறவினரை நேசிப்பாள். பொய்சொல்ல மாட்டாள். தகுதியான கலவிகொள்வாள். நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு ஆகிய நான்கு குணங்களும் உடையவளாக இருப்பாள். தன்கணவன் உண்டபின்னரே உண்ணுவாள். படுக்கையை அலங்கரிப்பாள். கணவனுக்குப் பின் துயின்று முன்னெழுவாள். இத்தகையக் குணமுடையவளே ஒரு கற்புள்ள பெண்ணுவாள். இவைகள்தான் சொற்றிறம்பாமைக் கற்புத் திண்மை என்றும் சொல்லலாம்.

## 15. கற்புடைய மாதர்களின் காசினி வாழ்க்கை

பழமை யகலாதவிள உத்தமப் பத்தினிகள்
பரமதவ மகிமை யதனுல்
பண்ணவர்க ளம்சமாய் கருவிலுரு வாகியே
பாரதனில் வந்து தித்து
இளமைபெற் றுலகிலே குறைவற்ற வாழ்வுடன்
இடையூ றகற்றி வாழ்ந்து
எண்ணரிய தேவர்துதி புண்ணிய நீராடுதல்
என்றுமே யீசர் பாதம்
அளவிலாப் பூந்தோப்பு மூவரில் லங்களும்
அவனியிற் செய்தி யற்றி
அறுகால பூசைமுறை குறையாமல் வைப்பவர்கள்
அண்டர்கரு வான மரபர்
களபகஸ் தூரியொடு வெண்ணீறு சந்தனம்
களிகொண்டு அணிவா ரன்றே
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருரை கதிர்காமமே

***உரைநடை:*** பக்தர்கள் தமது பாழுமுடலை வருத்தும் பறவைக் காவடி எடுத்தல் முட்பாதரட்சை அணிதல் தீச்சட்டி ஏந்தல் முட்காவடி எடுத்தல் அலகுபாய்ச்சுதல் ஆதிய பணிகளைச் செய்துகொண்டு தமது பக்தியை அதிகரிக்க வளர்க்கும் தலமான கதிர்காமப்பதியே. மேற்கூறிய கற்புடைய மாதர்களின் பிறப்பின் சிறப்பையும் கூறுவேன் கேட்பாயாக. காலம் மாறினும் தமது கற்பை மாற்ருத மனவலியுடைய இவர்கள் முற்பிறப்பிற் செய்த தவத்தின் அருளால் நற்பண்புடையவர்களின் இலக்கணங்களின் கருவாக கருவிலேயே உருவாகி உலகத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறக்கின்றார்கள். பின்பு என்றும் மாறாத இளமை வளமும் கல்வி செல்வமும் துன்பமற்ற வாழ்வும் பெற்று வாழ்கின்றார்கள். தமது உலக வாழ்க்கையின்போது தேவர்களைத் துதித்தல் புண்ணிய தலங்களைத் தரிசித்து அதன் தீர்த்தங்களை ஆடல் எந்த வேளையும் இறைவனிற் பக்திகொண்டிருத்தல் தேவ காரியங்களுக்கான மலர்வனம் மும்மூர்த்திகளுக்கான ஆலயங்கள் என்பனவற்றை அமைத்தல் தினமும் தவறாது அந்தி சந்தி உச்சி காலை மாலை உதயம் ஆதிய ஆறுவேளையும் கடவுளை ஆராதித்தல் ஆதிய கருமங்களைச் செய்து வாழ்வார்கள். இவர்களுடைய உள்ளத் தூய்மையைப் பிரதிபலிக்கும் தேவ சின்னங்களான விபூதி சந்தனம் குங்குமம் ஆதியவற்றையும் அணிவார்கள்.

## 16 முற்பிறவியிற் செய்த வினைக்கேற்ற பிற்பிறவி

வஞ்சகம் பொய்களவு கட்காம பாதகம்
வருவித்த தீமை வயமாய்
மனுவாக அவனியிற் றாய்தந்தை கருவதில்
வந்துதித் திட்ட முறமை
துஞ்சாத ஆனந்தம் அன்னம் மனோவிக்கி
யானந்தம் பிராண மயமும்
துரிதமொடு ஐந்துமொரு வுருவாய்த் திரண்டபின்
தூல சூக்குமக் கருவதாய்
பஞ்சகோ சத்தினால் சுக்கில சுரோணிதம்
பையதிற் பிராண வாயு
பாசவினை தருமமுறை கருவினிலே அமைந்தவுரு
பாரினிலே தள்ளி விடவே
கஞ்சமது இரவியாற் பூத்தழிதல் போலுமிவை
காணவரி தாகு மன்றோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருரை கதிர்காமமே

உரைநடை: வஞ்சகம் பொய் பேசுதல் களவு காமச் சிந்தனை மற்றவர்களைப் பாதிக்கக்கூடிய செயல்களைச் செய்தல் முதலிய கெட்ட குணங்கள் கருவிலேயே அமைந்து விடுவதுண்டு. இதற்குக் காரணம் என்னவெனின் முற்பிறவியிற் செய்த பாவச் செயல்களேயாகும். இதற்கேற்ப மனிதரில் ஏற்படும் மனக்களிப்பு வலிமை மனவெழுச்சி சுவாசம் கழிவு என்னும் ஐந்து சக்திகளும் ஒருங்குற இயல்வதால் ஆணிடத்துள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுக்கிலம் என்னும் ஆணுயிர் அணுவும் பெண்ணிடத்தில் உள்ள சுரோணிதம் என்னும் பெண்ணுயிர் அணுவும் இணைந்து கருவாகி பின்பு கருப்பையில் கருப்பிண்டமாக உருவாகி உரிய காலம் அங்கே முதிர்ச்சி பெற்றபின் பிராணவாயுவின் சக்தியால் சிசுவாக வெளிவருகிறது. இந்த செயற்பாடுகள் சூரியனைக் கண்ட தாமரை மலர்வதுபோலவும் பின்பு சூரியனைக் காணுதவிடத்து அது குவிவதுபோலவும் எங்களின் கண்ணுக்குத் தெரியாதவாறு நிகழ்கின்றது.

## 17.பரமபதம் பெறுபவர்கள்

மன்றலது இருநான்கு பூவிலெழு மணமக்கள்
மணமாலை சூடி வாழ்கில்
மறையோதி வருபிரம கலியாண மானபின்
மருவிக் கலந்த கருவும்
சண்டாள ராகாத தருமதல விரதமும்
சாந்த குணவேந்தல் நடையும்
தரணிதனிலே பொறுமை முப்பத்தி ரெண்டறம்
தவரு தியற்றி வருவர்
பண்டுதொட் டிரண்டுபத் தொன்றுசேர் தலைமுறைசெய்
பாவவினை மீட்சி பெற்று
பரமபதமே பெறுவ ரிவர்கள்செய் கிரியையால்
பாரிலுங் கீர்த்தி பெறுவர்
கண்டோரகள் உண்டென்று இம்மணம்
புரிவோர்கள் கதிபெற்று உய்வ ரன்றோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருரை கதிர்காமமே

உரைநடை: பக்தர்கள் தமது மிகுந்த பக்தி வைராக்கியத்தைக் காட்டுவதற்காக அனலெழுப்பும் அக்கினித் தழல்மீது நடந்து வருங் கதிர்காமப்பதியே. உலகிலே ஆணும் பெண்ணும் இல்லற வாழ்வில் இணைவதற்கான நிகழ்வைத் திருமணம் என்று கூறுவார்கள். இவை எட்டுவகைப்படும். அவற்றை அறநிலை ஒப்பு பொருள்கோள் தெய்வம் யாழோர்கூட்டம் ஆமாற்று வலிதிற்கொள்ளல் மயங்குநிலை என்று கூறலாம். இவற்றில் அறநிலைப்படி மாங்கலியம் அணிந்து இணையுந் தம்பதிகளின் ஒருமித்த உள்ளத்தாலும் உடல்சேர்க்கையாலும் உண்டாகின்ற கருவில் உருவாகும் குழந்தை சண்டாளனுகாது தருமம் தவம் விரதம் சாந்தகுணம் ஒழுங்கான வாழ்க்கை வாழ்ந்து வரும். அப்படி வாழுங் காலத்தில் பொறுமையாகவும் . வறியவர்களுக்கு வாழிடம் வழங்குதல் இரப்போர்க்கு ஈதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவளித்தல் தேவ துதி பாராயணங்களை ஓதுபவர்களுக்கு ஆதரவளித்தல் ஆடையளித்தல் .என்பன போன்ற முப்பத்து இரண்டு கொடைகளை தவறாது இயற்றியும் வருவதால் தம்முள் இருபத்தொரு தலைமுறையாக நின்று அறுக்கும் பாவவினைகளை அகற்றி அதிலிருந்து ஊழ்வினை மீட்சிபெற்று சுவர்க்க வாழ்வை அடைவார்கள். அத்துடன் இச்செயல்களால் உலகத்தில் புகழும் பெறுவர் என்பதை உனது பக்தர்களுக்கு எடுத்துக் கூறுவாயாக.

## 18 கடவுள்பதியை அடைபவர்கள்

தஞ்மென் றவர்களைத் தாபரித் திடுவோர்கள்
சாத்திர விதிதவ றுதபேர்
தான்செய்த குறைகுறற மொப்பிட்டு நிற்போர்கள்
சரிநீதி சாற்றி வாழ்வோர்
பஞ்சவினை கண்டன்ன மீந்துண்டு வருபவர்கள்
பாவலரை நேசித் தபேர்
படைமுகம் பின்காட்டி ஓடாமல் நின்றுசமர்
பண்ணியே வென்ற பேர்கள்
கொஞ்சுமனை விக்கினிய குணமாய் நடந்தவர்கள்
குள்ள மொழிகூ றுதபேர்
கொலைகார ரோடுவுற வாடாதிருப் போர்கள்
குமரி கற்பழி யாதபேர்
கஞ்சாமதுக் குடிப்போர் களையிகழ்ந் தவர்கள்
கடவுள்பதி அடைவர் திண்ணம்
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

***உரைநடை:*** தியவதன நிலாமை என்னும் சிங்களப் பரம்பரைப் பரிபாலகர்களால் நிர்வகிக்கப்படும் சைவ சமயத் திருப்பதியான கதிர்காமமே. கடவுளின் சுவர்க்க பதியை அடையத் தக்கவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டுமென்பதைச் சற்று எடுத்துச் சொல்கிறேன் கேட்பாயாக. தம்மிடம் அடைக்கலந் தேடிவந்தவர்க்கு இரங்கி அபயந் தருபவர்கள். ஆகமநூல்கள் சொல்லுவதை அப்படியே கைக்கொள்பவர்கள். தான் செய்த காரியங்களில் உள்ளதவறுகளை ஆய்ந்தறிந்து அதற்குத் தக்க பரிகாரந் தேடுபவர்கள். பக்கஞ் சாராத நீதி வழங்குவோர். பஞ்ச பட்டினி காலத்திலும் மற்றவர்களுக்குக் கொடுத்து தானும் உண்பவர்கள். கற்றிந்த வாணர்களை ஆதரிப்பவர்கள். எதிர்த்து நின்று போரிட்டு வென்றிகொண்ட வீரர்கள். மற்றும் கட்டிய மனைவியுடன் கனிவாக வாழ்ந்தவர்கள். வஞ்சகம் நிறைந்த கபட வார்த்தைகள் பேசாதவர்கள். கொலைபாதகருடன் உறவு கொள்ளாமலும் கன்னியர்தங் கற்பை வலிந்து சூறையாடாதும் இருப்பவர்கள். மதுபானம் போதைப் பொருள் போன்றவற்றை மற்றவர்க்கு விற்றும் பயிற்றியும் தாங்களும் பாவிப்பவர்களை இழிந்துரைத்தவர்கள் போன்ற நற்செய்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்சிந்தனை உடையவர்களாக இருக்க வேண்டும்.

## 19 உலக வாழ்வில் உய்யாதவர்கள்

பேயோடு ஆடுவோர் பலிபூசை செய்வார்சமர்
பின்காட்டி ஓடி மறைவோர்
பெரியோர்கள் தந்தைதாய் குருவை நிந்தித்தவர்கள்
பிச்சை தாவென் ஹ்ரோகளை
வாயா லதட்டியே ஏசித் துரத்துவோர்
மனைவிக்குத் தீமை புரிவோர்
வஞ்சனைகள் சூதுபழி மூட்டியே திரிவோர்கள்
மன்றழியத் தீயை இடுவோர்
ஆயத் தலத்தவர்கள் பொய்களவு செய்வோர்கள்
அருந்த வர்களைப் பழிப்போர்
ஆதிபர ஞலயத் துற்றபொருள் திருடுவோர்
அடுத்த வர்களைக் கெடுப்போர்
காய்கொண்ட தாபரந்தனை அழித்திடு வோர்கள்
காசினியி லுய்வ துண்டோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

**உரைநடை:** ( முந்திய பாடலுக்கும் இதற்கும் ஒரு முக்கிய தொடர்புண்டு. இப்பாடல்களிற் சொல்லப்பட்டவர்களுக்கு எதிர்மறையானோர் அடுத்த பாடலிற் கூறப்பட்டவர்களுடன் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியவர்கள் ஆவர். உதாரணமாக முதலாவது பாடலில் உள்ள அடைக்கலந் தேடி வந்தவர்க்கு அபயந் தந்தவர்கள் என்பதின் எதிர்மறையான அபயந் தராதவர்கள் இரண்டாவது பாடலில்கண் உள்ள உலகத்தில் உய்யாதவர்களின் வரிசையிலே சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். இவ்வாறே ஏனையவைகளும் மாற்றி அமைத்தால் வரிசை முழுமையுறும்.) ஆடி மாதத்தில் நடைபெறும் கதிர்காம உற்சவம் திருவேட்டை தண்ணீர்வெட்டு எனும் இரண்டு இறுதி நிகழ்வுடன் முடிவடையும் சீர்பொருந்திய கதிர்காமப்பதியே. இந்த உலகத்தில் பெறற்கரிய மானுடப் பிறவி எடுத்தும் வாழ்க்கையின் பேற்றை அடையாதவர்களையிட்டுக் கூறுவேன் தெரிந்து கொள்வாயாக. அவர்கள் ஆவேசமுற்றுப் பேயாடிக் கட்டுரைப்பவர்களாக இருப்பார்கள். அதற்காக உயிர்ப்பலி கொடுப்பார்கள். போரில புறமுதுகு காட்டி ஓடித்தப்பும் கோழையர்களாக இருப்பார்கள். கனங் கௌரவம் பண்ண வேண்டியவர்களை நிந்திப்பார்கள். இரப்பவர்களை ஏசித் துரத்துவார்கள். தாலிகட்டிய மனைவிக்கு தீமை செய்வார்கள் கோள் சொல்வார்கள். பொது மன்றங்களை எரியூட்டி அழிப்பார்கள். வணக்கத் தலங்களில் பொய் களவு செய்வார்கள். அவற்றிற்குச் சொந்தமான சொத்துக்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையாடுவார்கள். தவமுனிவர்களையும் சாதுக்களையும் அவதூறு செய்வார்கள். தம்மை நம்பினவர்களுக்கு மோசம் செய்வார்கள். கனிகாய் தரும் தருக்களை வெட்டி அழிப்பார்கள்.

## 20. உலகில் உயர்ந்து சிறந்தவைகள்

தாவரந் தன்னிலே சந்தனத் தருவுயர்வு
தக்கநதி ஓத வேண்டில்
தணகங்கை தானுயர்வு தலமதிற் சிதம்பரம்
தக்க விரதம் சோமநாள்
தேவர் தவமதனிலே சிவதவம் உயர்வுபெண்
தேவி பதுமினி உயர்வு
செப்பரிய பசுவிலே காமதே னிருசிகளில்
சீர்பெறு வசிட்ட ருயர்வு
நாவலர்சொல் முனிவரில் நாரதப் பிரபுயர்வு
நவமணியிற் பதுமராகம்
நவமுறுங் கற்பினில் அருந்ததி யானையில்
நன்மை சேரயி ராவதம்
காவல்சூழ் கரிகளில் மேருகிரி வாரியிற்
பாற்சமுத் திரமு யாவுகாண்
கனகநவ ரெதனமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

***உரைநடை:*** இராமாயண காலத்தில் சீதா பிராட்டியாரைத் தேடிக் கண்டடைய இலங்காபுரம் வந்த தூதனாகிய அனுமன் தரிசிக்கப்பெற்ற புராணப் பெருமைமிக்க கதிர்காமப்பதியே. மண்ணிலும் விண்ணிலும் அதிக உயர்வான சிறப்புகளுடைய வைகளின் விபரங்களைச் சாற்றுவேன் கேட்பாயாக. மரங்களுள் சந்தணமரம் உயர்ந்தது. நதிகளுட்ள் கங்கைநதி மாண்புடையது. சிதம்பரம் வழிபாட்டுத்தலத்திற் உன்னதமானது. நோன்பு நாட்களுள் ஞாயிறு விரதமும் தவத்திற் சிவபெருமானை முன்னிட்டுச் செய்யும் தவமும் நான்குவகைப் பெண்களுள் பதுமினி இனத்துப் நற்குணப் பெண்ணும் பசு இனக்களில் காமதேனுவும் முனிவர்களுள் வசிட்டரும் சொல்வன்மையில் நாரதரும் ஒன்பது இரத்தினங்களுள் பதுமராக மணியும் சிறப்பான இடத்தை வகிப்பன. அதுமட்டுமல்ல முனிவர்களுள் வசிட்டர் சிறந்தவர். கற்புள்ளமாதர்களில் தமிழகத்தில் கண்ணகியும் வடநாட்டில் அருந்ததியும் மேலானவர்களாக மதிக்கப்பட்டு பெண்குலத்திற்கு வழிகாட்டுந் தெய்வமான வர்கள் . யானைகளுள் அயிராவதம் சிறந்தது. மலைகளில் மேரு மலையும் சமுத்திரங்களில் பாற்கடலும் உயர்ந்தவை.

## 21 வேசித்தனம் தூசிக்கும் நிகரில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டிலது தீபத்தில் கனியென்று வீழ்வதால்
வேகியுடல் சாம்ப லாகி
வேசையர்கள் பணவாசை கொள்வதாற் பின்னவர்கள்
வெட்க முற்றா ரூரதாய்
துட்டரொடு கூடியே கலவியால் ஊணுடைகள்
அற்றவர்கள் துன்ப முற்று
தூசிபடு தோலாகி முன்மமதை எண்ணியே
துயருற் றிருந்து ழலுவார்
மட்டிகாள் காமவெறி கொள்ளா திருந்திடில்
மான மதுவீண் போகுமோ
வசைபெறுதா லுலகு முடிவடையு மளவாக
மாருது மாரு துகாண்
கட்டிமுக முத்தமிடும் ஆடவர்கள் கண்டிடில்
கழுதை யென்றே இகழுவர்
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

***உரைநடை:*** அருணகிரிநாதரின் திருப்புகழ்ப் பாடல்பெற்ற கதிரையம்பதியே. தாய்மையுள்ள பெண்களாற்தான் இந்த உலகமே வாழ்கின்றது என்று பெரியோர்கள் சொல்வார்கள். அப்படிப்பட்ட பெருமைமிக்க பெண்கள் எழிய உடலாசையே உலகத்திற் பெரிதென்று சுடரைப் பழமென்று நினைத்து விட்டிற் பூச்சி விளக்கில் வீழ்வதுபோல காமக்களியாட்டத்தில் தம்மை ஈடுபடுத்தி பாவச்சேற்றில் விழுந்து வெந்து சாம்பராகி அழிந்து விடுகின்றார்கள். அத்துடன் மதிப்பான மானத்திலும் பணமே உயர்வானதென்று எண்ணி உடலை விலைக்கு விற்பதால் கெட்ட சகவாசங்கொண்டு வெட்கம் நாணமற்று இடமிடமாக அலைந்து தீராத போகஞ் செய்து ஆடம்பரமாக வாழ்வார்கள். ஈற்றில் உண்ணவும் உடுக்கவும் உறையவும் ஏதுமின்றி அழுக்குப் பிடித்த தோலுடைய அழகிழந்த பெண்பேய்களாகுவார்கள். அப்பொது தாங்கள் இளமையாயிருந்த காலத்தின் செருக்கை நினைத்து தம்மிற் தாமே பச்சாதாபப்படுவார்கள். ஒருகாலத்திற் ஆசையுடன் கட்டித் தழுவி முத்தம் ஈந்தவர்கள் கண்டால் கழுதை என்று வசை பாடுவதைக் கேட்டுத் தாங்காத் துயரால் மாழுவார்கள். இவ்வாறு அவர்கள் துன்புற வேண்டிய காரணம் காமவெறிதான் என்று சொல்லலாம். இந்த இழுக்கு உலகுல வாழுமட்டும் ஒருபோதும் மாறுவதில்லை. மறுமையிலும் கொடிய நரகத்திற்தான் தள்ளி வீழ்த்தும்.

## 22. நலமான தேவகொடைகள்

ஏரிநீர் பாய்கின்ற கழனியும் விறல்வேந்தர்
இரக்க முற்றிடுங் குடிகளும்
இரதிகுண முடையமண மங்கையும் அவளுக்கு
ஏற்ற மணவா ழனுந்தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரிலொரு தோழனும் ஓர்தலையு மில்லாத
உண்மை பெற்றிடு தாரமும்
ஒற்றுமைக ளோடுவாழ் பவர்களின் சுற்றமும்
சுகமான ஊணு டைகளும்
பாரிலுயர் புண்யநதி ஆடிவரு சென்னியும்
பரமகதி பெற்ற வுயிரும்
பழவினைகள் கிரகபகை இல்லாத தேகமும்
பக்தர் முனியாத குணமும்
காரியிரு ளற்றபுவி போற்றுமே இவர்செயல்கள்
காணவிவை நலம தன்றோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

***உரைநடை:*** (ஈழத்துச் செட்டிபாளையம் இ. வ.கணபதிப்பிள்ளை எனும் புலவரால் கதிர்காமச் சதகம் கதிர்காமத்தம்மானை கதிரைவேலன் கும்மி மாணிக்க கங்கைக் காவியம் கதிர்காமத் தரிசன நுட்பம் ) ஒரு புலவராலேயே பல பாடற் பிரபந்தங்கள் பாடப்பெற்ற கதிர்காமத்தலமே உலகத்தில் ஆண்டவனின் அருட் நற்கொடைகள் கிடைத்தால் எவ்வாறு அமையும் என்பதை விபரிப்பேன் கேட்டருள்வாயாக..1.போதிய நீர்ப்பாசன வசதியும் அவ்வசதியை ஆக்குவதற்கான வற்றாத குளமும் உள்ள வயல்நிலம் 2..ஆட்சியாளரின் இரக்கத்தைப் பெற்ற பொதுமக்கள் 3.மன்மதனுக்கு இரதி எப்படி இணையாக அமைந்துள்ளாளோ அத்தகையச் சிறப்புள்ள ஒரு மனைவி 4.தாம் வசிக்குமிடத்தில் ஒரு உற்ற நண்பன் 5.எவ்வித உற்றார் உறவினரில்லாத மனைவி 6. ஒற்றுமையாக வாழும் சுற்றத்தினர் 7 சுகத்தைத் தரும் ஊண் ஊடை உறையுள் 8.சகல புண்ணிய தீர்த்தங்களிலும் நீராடி வருபவர் 9.சுவர்க்கஞ் சென்ற ஆத்மா 10. பழவினைகளாலும் கிரகங்களின் ஆதிக்கத்தாலும் பாதிப்பு எதுவும் இல்லாத சுகதேகம் 11 கடவுளடியார்கள் கோபிக்காத அளவுக்கு ஒருவரில் அமையப்-பெற்ற குணநடைகள் 12 சனிதோசம் அற்ற பூதல மாந்தர் ( இங்கு காரியிருளற்ற புவி என்பதை இடவாகு பெயராகக் கொள்க காரி - சனி ). முதலியனவும் அன்னபிறவுமாம்.

## 23. கருத்தரிக்கும் நாட்களுக்கேற்ப மனிதர்களின் குணகுணங்கள்

மாதர்பூத் திட்டமுதல் மூன்றுநாள் வரையிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமகன் கண்கா ணுமலே
மறைவா யிருந்துமறு நாளதிற் தலைமுழுகி
மருவிக் கலந்து வருகில்
ஒதரிய கர்ப்பமுறு நாள்நான்கி லாண்சூரி
ஒரைந்தில் சோர ஞறில்
யோகிதவ மகிபனும் ஏழிற்றயா ளகுணம்
எட்டதினில் மிடிய னென்பான்
கோதற்ற செல்வனும் பத்தினிற் காமிபன்
னொன்றி னிற்குல துட்டனும்
கூறரிய ஈராறிற் பண்டிதன் பதின்மூன்றில்
நோயன் பன்னுன்கி லீனன்
காதக மில்லாத பதினைந்திலே நிருபனும்
ஈரெட்டில் மன்ம தனுமாம்
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

**உரைநடை:** அன்றும் இன்றும் கால்நடையாக கந்தப் பெருமானை வணங்க வரும் பக்தர்கள் வழிநடைச் சிந்துகளைப் பாடி வந்து குழுமும் சிறப்புடைய கதிர்காமப் பதியே. கருவிலே மனிதனின் வேறுபடட்ட குணங்களும் இயல்புகளும் உருவாகி விடுகின்றது என்பது உலகறிந்த உண்மை.யாகும். பெற்ருரின் இயல்புக்கு மாருக இக்குணநடைகள் மக்களில் எவ்வாறு வேறுபடுகின்றன என்பதை அனுபவத்தின் மூலம் ஆய்ந்து அறிந்த சோதிட விற்பன்னர்கள் ஒரு முடிவுக்கு வந்துள்ளனர். இதன் விபரத்தைக் கூறுகிறேன் கேட்டருள்க. பெண்கள் தமது மாதவிடாய்க் காலமாகிய மூன்று தினங்களிலும் கணவனைக் காணுது தனித்து இருந்து நான்காம் நாள் நீராடிய பின்னர் கணவனுடன் கலவி செய்தால் கருக்கொண்டு பிறக்கும் குழந்தை புலமையுடையதாக இருக்கும். ( சூரி - புலவன்) அவ்வாறே ஐந்தாம் நாளில் திருடன் ஆறும் நாளில் தவசிரேட்டன் ஏழாந் தினத்தில் அன்புள்ளமுங் கருணையுமுள்ளவன் எட்டாம் நாளில் வறுமையும் ஒன்பதாம் நாளில் செல்வமும் பத்தாம் நாளில் அடங்கா காமசிந்தனையும் பதினொன்றும் நாளில் துட்டகுணமும் உள்ளவனுகப் பிறப்பார்கள். மற்றும் பனிரெண்டாந் தினத்தில் அறிஞன் பதின்மூன்ருந் தினத்தில் தீராப்பிணியன் பதினுன்காம் பதினைந்தாம் பதினுருந் தினங்களில் முறையே மிகக் கெட்டவனுயும் நல்லாட்சி புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னனையும் மன்மதனைப் போன்ற மாதரை மயக்கும் அழகாதிய அம்சங்களுடையவனையும் குழந்தைகள் பிறப்பார்கள் இவற்றை மனதிற்கொண்டு கலவி செய்வது சாலும்.

## 24 இம்மையிலும் மறுமையிலும் நிம்மதி இல்லாத வாழ்வுடையோர்

சற்குருவை நிந்தித்த பேர்களும் பெரியோரைச்
சார்ந்து நடவாத பேரும்
தனது பர்த்தாவை நிந்தித்து மாற்றானைத்
தாப ரித்திடு மாதரும்
துர்ச்சனரை அருகராய்க் கூடி யுறவாடியே
சூதாடி வாழ்ந்த பேரும்
துட்டரைத் தாசியைக் களவாடு வோர்களைத்
துணைகொண் டுவாழ்ந்த பேரும்
பொற்பணி யிலேகளவு வைத்தவர்களுந் திருடர்
பொருள்வாங்கி வாழ்ந்த பேரும்
புண்யநதி தன்னிலே எச்சிலைத் துப்புபவர்
பொதிஆவில் ஏற்றி வாழ்வோர்
கற்பக விருட்சநிழல் மலசலம் விடுபவர்கள்
காசினியில் வாழ்த வரிது
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

**உரைநடை:** நல்ல குருநாதனை அவமதித்தவர்கள் சான்றோரை அண்டி அவர்தம் நல்லுரை நற்செயல்களைப் பின்பற்றாதவர்கள் ஆதியோர் இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் நிம்மதி பெறவே மாட்டார்கள். அதேபோன்று கட்டிய கணவனைக் கல்லென்றாலுங் கணவன் புல்லென்றாலும் புருசன் என்று மதியாது வேறொருவனை காமத்தாற் கலப்பவளும் அன்புடன் ஆதரிப்பவளும் கெட்டவர்களைத் தனது உற்றார்களாகக் கருதி உறவுகொண்டு அவர்வழி சூதாடுதல் முதலான தீயவழியில் நடந்தவர்களும் துட்டர்களையும் அபசாரிகள் விபசாரிகளையும் திருடர்களையும் நட்பினராகக் கொண்டு தமது வாழ்க்கையை நடத்தினவர்களும் நற்பணிகளில் களவு செய்து பெரும் பணம் சம்பாதித்தவர்களும் திருட்டுப் பொருட்களை வாங்கியவர்களும் திருகோணமலை திருக்கேசுவரம் போன்ற ஈழத்துப் புண்ணிய தலங்களைப் போலப் பக்திமிக்க பாவலர்களின் நாவாரம் பெற்ற கதிர்காமத்தினை சூழ்ந்து ஓடிச் செல்லும் மாணிக்ககங்கை போன்ற பலரும் உபயோகிக்கும் பரிசுத்தமான புண்ணிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நதிகளிலே எச்சிலை உமிழ்பவர்களும் அளவுகடந்த பாரத்தை ஏற்றி பசுக்கள் கழுதைகள் ஆதிய வாய்பேசாத விலங்குகளைத் துன்புறுத்தியவர்களும் மனிதகுலத்திற்கு மிகப் பிரயோசனமான கற்பகத் தருபோன்ற முக்கியத் தருக்களின் கீழ் உள்ள இடங்களை அசுத்தப்படுத்தியவர்களும் இருமையிலும் சந்தோசம் நிம்மதி பெறமாட்டார்கள்.

## 25.கொடிய நரகத்தில்வீழ்ந்து உழல்பவர்கள்

நிருபரைச் சமரில்விட் டோடினோர் கொலைகாரர்
நின்றநிலை தவறி வாழ்வோர்
நீதிசரி செய்யாமல் ஓரமாய்த் தீர்ப்பெழுதி
நீசமுறு சிறையி லிடுவோர்
அருகராய் வாழ்பவ ரடைக்கலம் வைத்தபொருள்
அபகரித் திட்டு வாழ்வோர்
அன்னைதந் தையர்தம்மை வஞ்சகம் செய்துபர
தாசியை அணைந்த பேர்கள்
ஒருவருடனே ஒருவர் கூடிப் பிரிந்தவர்கள்
உண்மை யில்லாத பொய்யோர்
உத்தமிகள் கற்பழிய நஞ்சிட் டணைந்தவர்கள்
உளங்கபடு கொண்டு திரிவோர்
கருதரிய இவர்கள்சிவ பதமணுகி வாழ்வரோ
கடுநரகில் வீழ்வர் திண்ணம்
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** இப்பிறப்பிலே செய்த கொடிய பாவவினைகளை தான தருமங்களைச் செய்வதால் மட்டுமல்ல தம்முடலையும் ஆத்மாவையும் வருத்தி நிவாரணம் செய்தற்பொருட்டு மண் சட்டிகளில் தேனுடன் தினைமா மற்றும் தேங்காய்த் துண்டுகள் என்பவற்றை நிரப்பி அதின்மேற் கற்பூரத்தை வைத்து எரித்து தமது சிரத்திலும் கரத்திலும் மாவிளக்குத் தாங்கிவரும் பக்தர்கள் நிறைந்த கதிர்காமப் பதியே. எனது சிற்றுரையைக் கேட்பாயாக. இந்த உலக வாழ்க்கையின்போது சிலர் செய்யுங் காரியங்களின் பரிசாக மறுமையில் நரகமே கிட்டும். அப்படிப் பட்டவர்கள் யாரென அட்டவணைப் படுத்தினால் போரிடச் சென்று தமது அரசனைத் தனிக்கவிட்டு ஓடுபவர்களும் கொலை செய்பவர்களும் கட்சி மாறுபவர்களும் பக்கஞ் சார்ந்து தீர்ப்பு வழங்கித் துன்பம் மிக்க சிறைச்சாலைக்குள் தள்ளுபவர்களும் தம்முடன் உற்றவராக நேசத்துடன் வாழும் பிறர் நம்பிக்கைப் பொறுப்பாக தந்த பொருளையும் மிகு நிதியத்தையும் கபடமாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபகரிப்பவர்களும் பெற்றாரை வஞ்சிப்போரும்விபசாரியுடன் கலவி செய்தவர்களும் நட்பாக இருந்து பகையுற்றவர்களும் பொய்யர்களும் கற்புள்ள மாதரை மாயத்தால் மயக்கிப் புணர்ந்தவர்களும் கயவர்களும் கபடர்களும் அவ்வட்டவணையில் அடங்குவார்கள்.

## 26. போலி வாழ்க்கை நன்மை தராது

வான்கோழி கூவியே கொக்கரித் தாடினும்
மயிலாட்ட மாகு மாமோ
வானரங் கூடியே நாட்டியஞ் செய்யினும்
மானிடர்தம் ஆட்ட முறுமோ
கூன்கிழவி ஆபரண மிட்டாடை பூட்டினும்
குமர்மங்கை போலா வாளோ
கூழைநரி ஊளையிட் டோடியே யசையினும்
குஞ்சரந் தனைநி கர்க்குமோ
தேன்வண்டு மலர்கண்டு மதுவுண்டு பாடுகையில்
சில்லூ றதற்கு நிகரோ
சிந்தூரந் தன்னைநுதல் திலகமிட் டணியிலும்
தினக ரற்கெதிர் நிற்குமோ
கானடர்ந் திடுகதிரை சூழ்புவியில் வாழ்மனிதர்
கண்டு நடவாத தேனோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

**உரைநடை:** கந்தப் பெருமாளின் வாகனமாகிய மஞ்ஞையின் சின்னமாக மயில் இறகுகளைக் அழகாய்க்கட்டி காவடிகளாகவும் கரப்பிடிகளாகவும் ஏந்திப் பக்திப் பவனிவரும் சிறப்புடைய கதிர்காமப்பதியே. எவ்வளவுதான் இருந்தாலும் உன்னிடத்திற் காணும் அமைதியும் மன நிம்மதியும் வேறு தலத்திற் கிட்டுவது என்பது அரிய காரியமாகும். அதுபோல வான்கோழி தனது பொல்லாச் சிறகை விரித்தாடினால் மயிலாட்டமாகுமா. அல்லது குரங்குகள் ஒன்றுகூடிக் கூத்தடித்தால் அது கூத்துத் தமிழ் பயிலுங் கூத்தர்களாகி விடுமா. கூன்விழுந்த கிழவி பட்டாடை கட்டிப் பணிபல பூண்டு புன்முறுவலுடன் வந்தாலும் பருவப் பெண்ணாகி விடுவாளா. மற்று பெரிய கூழைவாலும் ஊளையிடுங் குணமுமுள்ள சம்பு அசைந்து அசைந்து வந்தாலும் யானையின் குட்டியாகி விடுமா. தேனி மலரின் மதுவை உண்டுகளித்து பாடுவதுபோற் சில்லூறூற் சற்றேனும் பாட முடியுமா. குங்குமப் பொட்டணிந்தாலும் ஒளிகாலுஞ் சூரியனுக்கு நிகராகுமோ. இவைகளில் எந்தவொரு கருமமும் ஒருபோதும் நடக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றையெலாம் அறியாது மக்கள் அளவுக்கு மிஞ்சிய பேராசை கொள்வது ஏனோ.

## 27. வறுமையின் கோலம்

வலிமைபெறு வறுமைவந் திடிலன்னை தந்தையர்
மன்னரொடு பந்து மித்திரர்
வாசலது சென்றிடிற் பேசா திருந்துபின்
வம்புவசை சொல்லி யிகழ்வார்
ஒலிகளுறு மாடையுடை யாபரண மில்லாத
உடல முமூண் குறைதலும்
உற்றுரை அண்டிடச் சென்றிட்ட போதிலும்
ஒடென் றகற்றி விடுவர்
நலியவே மற்றோர்கள் இகழ்வதுஞ் சற்சபையில்
நாடாமல் ஒடு மென்பார்
நல்லசுவை யோடுமொழி பேசினும் பொல்லாத
நச்சுரைக ளென்று பகர்வார்
கலியினுக் கிதுபுதுமை யாகுமோ வறுமையின்
காரண மதான தன்றோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** வேடனுய்ச் செட்டியாய் விருத்தனுகக் குமரவேள் வள்ளியை மயக்க வந்தும் அது முடியாது போனதும் அவனுக்கு ஈற்றில் தனது தமையன் கரிமுகன் கைகொடுத்து மணம் முடித்து வைத்ததுமான நிகழ்வை வணக்கமுறையாகச் சித்தரிக்கும் கதிர்காமப்பதியே. வறுமையென்பது மிகமிகக் கொடிது என்று அறிஞர்கள் சொல்வார்கள். அத்தகைய வறுமை ஏற்பட்டால் பெற்ருரும் உற்ருரும் மற்று ஆட்சிசெய்யும் ஆட்சியாளரும் மதிக்கமாட்டார்கள். அதற்குப் பதிலாக எதிரிலும் புறத்திலும் வசைசொல்லிப் பேசுவார்கள். உண்ண ஒரளவு உணவு உடுக்க நல்லாடை அணிய ஆபரணங்கள் இல்லாவிட்டால் மிகவும் வேண்டியவர்களிடம் சென்று தங்குறையைச் சொல்லலாம் என்றுற்கூட போ போய்விடு என்று விரட்டி விடுவார்கள். ; உள்ளம் உறழ்ந்து நோகும்படி கண்டவர்கள் பேசி நையாண்டி பண்ணுவார்கள். சங்கங்களில் வந்து முகத்தைக் காட்ட வேண்டாம் தூர அகன்றுபோ என்று சிலர் சொல்வார்கள். நயமான கருத்துமிக்க வாசகங்களை எடுத்து மொழிந்தாலும் அவையெலாம் தகாத வார்த்தைகள் என்று புறத்தே தள்ளிவிடுவார்கள். இத்தகைய கொடியதாக கலிகாலத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமைநிலை உள்ளது.

## 28. புவியில் முன்மாதிரி காட்டி வாழ்ந்தோர்.

பாண்டவரி லொருவனுந் தருமனின் பொறுமையும்
    பாரி லுயர்சரி நீதியும்
  பாஞ்சாலி ஐவர்சொற் றவருத வாழ்க்கையும்
    பற்குணண் சிலைவலி மையும்
நீண்டபுவி வாழ்சிபிச் சக்ராதி கீர்த்தியும்
    நிருபரில் வைவ சுதனும்
  நித்தியஞ் சத்யநெறி பக்திபெறு சீதையொடு
    நிலையரிச் சந்ர பூபன்
சான்றோரில் விதுரனும் கொடையினிற் கன்னனும்
    தம்பியிற் பரத ராசன்
  சரசத்தில் மன்மதன் குருவினில் வசிட்டன்
    தருமிரு சுகுல மதனிலே
காண்டா விலங்கினொடு மிவர்கள் செயல்புவியிலே
    காணவெகு காட்சி யன்றோ
  கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
    கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** கதிர்காமப்பதியே தலங்களுள் நீயோ மிகவும் மாறுபட்ட ஒரு முன்மாதிரியான அமைப்புடனே இருக்கின்றாய். காலங்கள் கடந்தாலும் மிகச் சிறியதோர் ஆதிகாலக் கோயிலை அழித்துப் புதியதொரு பெருங் கோயிலை அடையாத பெருமை உடையாய். அதன்மூலம் பரிசுத்த தலத்திற்கு ஆடம்பரங்கள் எதற்கு என்று ஒதுக்கித்தள்ளித் தலைநிமிர்ந்தாய் உனது முன்மாதிரிபோல இவ்வுலகிற் சிலருடைய வாழ்க்கையும் நன்கு அமைந்து நிலைத்து விடுவதுண்டு. அதற்கு உதாரணமாக ஐவரின் மூத்தவரான தருமரின் பொறுமையும் சரிநீதியும் திரபதி ஐவர்களுடன் இயற்றிய சொற்பிறழாக் கற்பு வாழ்க்கையும் அருச்சுனனின் வில்வித்தையும் சிபிச் சககரவர்த்தியின் அபயச் சிறப்பும் அரசு செய்வதில் பெயர்பெற்ற வைவசுதனும் பதிபக்தி மிக்க சீதா பிராட்டியாரும் சத்தியந் தவறாத அரிச்சந்தரனும் சான்றாண்மை மிக்க விதுரனும் ஆவியோ நிலையிற் கலங்கிய போதுந் தனது குண்டலத்தைக் கண்ணனுக்கு கொடையாக கொடுத்த கன்னனும் தமையனுக்கினிய தம்பி பரதராசனும் கலவியில் சிறந்த காமனும் குருத்துவத்தில் மேம்பட்ட வசிட்ட முனிவனும் விலங்குகளிற்கு முன்மாதிரியாக வாழும் காண்டா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருகமும் அப்படியாயன முன்மாதிரி வாழ்க்கையை வாழ்வனவாகும்.

## 29. கலிகால நிலைமைகள்

அன்னைதந்தை யர்புத்தி கேளாத காலமும்
அற்பருக் கேற்ற காலம்
அரசர்சரி நீதியது புரியாமல் வஞ்சனைசெய்
அறமற்ற நிருபர் காலம்
பன்னுபுகழ் தெய்வத்தை இகழ்கால மலகையைப்
பக்தியொடு பணியுங் காலம்
பரமசிவ னைத்துதிகள் புரியாது திருடுவோர்
பாட்டத்துக் கேற்ற காலம்
தன்னுய கன்சொற் தடுத்துமறு கணவனைச்
சார்ந்திணைந் திடுதல் காலம்
தரணியிற் பெரியோர்க ளைச்சற்று மெண்ணுது
தடிகொண் டதட்டு காலம்
கன்னமிடு கள்ளர்சபை ஏறிவாழ் காலமிவை
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

**உரைநடை:** கலியுக வரதனென்னுங் கந்தவேள் உவந்து எழுந்தருளியிருக்கும் குன்றுகளில் ஒன்றுன கதிரையம்பதியே. உன்பதியில் உறையும் தேவனுக்கு கலியுகவரதன் என்ற பெயர் எதற்காகக் கிடைத்தது தெரியுமா. கலியுகமாகிய இக்காலத்தில் பரவலாய் உலகில்நடக்குந் தகாச் செயல்களை அவனுற்தான் பரிபாலித்து அழிக்க முடியும் என்பதாற்தான் என்று நாம் கொள்ள வேண்டும். அக்கலிகாலக் கொடுமைகள் என்ன என்பதைச் சற்றுக் கேட்பாயாக. இப்போது பெற்றுரின் புத்திமதிகளைப் பிள்ளைகள் எப்போதுங் கேட்பதில்லை. அற்பர்கள் மிக ஆடம்பரத்துடன் மேம்பட்டு வாழ்கின்றுர்கள். ஆளும் ஆட்சியாளர்கள் அறம் பிறழ்ந்து ஓரவஞ்சனை செய்கின்றுர்கள். பலர் கடவுள் இல்லையென்று அச்சமற அவமதித்து சொல்லிலுஞ் செயலிலுங் காட்டுகிறுர்கள். அதேவேளை பொல்லாத பிசாசுகளை வணங்குகின்றுர்கள். வல்ல பரனைத் துதியாமல் திருடுவோரைப் போற்றுகிறுர்கள். கட்டிய கணவன் எதிரே இருக்கப் பரபுருசனை அணைத்து களித்து வாழ்கிறுர்கள். சான்றேர் முதியவர்கள் என்று மதியாமல் தடிகொண்டு அதட்டுகின்றுர்கள். கள்ளர்களும் கபடர்களும் தீயருஞ் சபையில் ஏறிப் புகழ்பெற்று மகிமையுடன் வாழ்கின்றுர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையும் இவைபோன்ற இழிவானகாரியங்கள் பலவும் இக்கலிகாலத்தின் சிறப்புகளாக இருக்கின்றன.

## 30 அழகுக்கு அழகு செய்வன

அன்றிற்கு நடையழகு அரசர்க்கு முடியழகு
அரிவைக்குக் கொங்கையழகு
ஆழிக்குத் திரையழகு மயிலுக்கு ஆட்டழகு
அன்னைக்குப் பிள்ளை யழகு
வண்டுக்கு மலரழகு மலருக்கு மணமழகு
மனிதர்க்குக் கல்வி யழகு
வாழ்கின்ற தாபர மதற்குமே இலையழகு
மன்றுக்குத் தீப மழகு
விண்டலம தற்குமே முகிலழகு வேடர்க்கு
வில்லம்பு தானு மழகு
வேந்தர்க்குக் குடியழகு வேசிக்குக் காசழகு
வித்தைக்குப் புத்தி யழகு
கண்டுகளி கொண்டிவைகள் தன்னழகு புவியதிற்
காணவெகு காட்சியன்றோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

***உரைநடை:*** குறமகள் வள்ளி திருமணம் நடந்தேறியது இப்பதியிற்தான் என்றொரு ஐதிகம் உண்டு. அதற்கேற்ப வள்ளியின் சந்ததியினர் என்று தம்மை அழைத்துக்கொண்டு திருவிழாக் காலத்தில் இன்றும் அவர்கள் பங்குபெறும் ஊர்வல நிகழ்ச்சியால் அழகு பெறும் கதிர்காமப்பதியே. சிலவற்றிற்குச் சிலவற்றால் அழகுஞ் சிறப்பும் உண்டாவது இயல்பு.அப்படிச் சிறப்புப் பெறுபவைகளுள் அன்றில் தனது நடையாலும் மங்கையர் தமது கொங்கையாலும் அரசர்கள் தங்கள் முடியாலும் கடல் தன்னிடம் எழும் அலைகளாலும் மயில் தான் ஆடும் ஆட்டத்தாலும் தாய் தானீன்ற சேயாலும் வண்டு தான் மதுவருந்தும் மலராலும் அம்மலர் தன்னிடத்தே உள்ள நறுமணத்தாலும் மனிதர் தாங் கற்றுக்கொண்ட கல்வியாலும் சிறப்பும் அழகும் உறுவர். மற்றும் மரங்களுக்கு இலையும் வீட்டிற்கு விளக்கும் விண்ணிற்கு மேகங்களும் மன்னர்களுக்கு அவராட்சியின் கீழ் உள்ள குடிமக்களும் தாசிக்குப் பணமும் வித்தைகளுக்குப் புத்தியும் மேலும் அழகு தருவனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31செய்யாதது செயக்கெடும்

வம்பர்க்கு ஆயிரம் புத்தமதிகூறினும்
மரியாதை யோடு நடவார்
வட்டிப் பணத்திற்கு மனைகட்டி வாழினும்
மூதேவி வாழ்ந்து வருவள்
செம்பதைப் பொன்னுக்கி நகைசெய்து விற்பவர்கள்
தேகநோய்ப் பட்டு மடிவர்
திருவிளக் கேற்றும லுண்டடோ ரிடத்திலே
சிதேவி அணுகி வாழாள்
தும்பிமுக னுலயந் துதியாத மானுடர்கள்
துன்பமே பட்டு மடிவர்
துட்டரொடு கூடியே உயிர்வதைகள் செய்வோர்கள்
தூலவுடல் அற்று அழிவார்
கம்பமதி லேறியே செபதபஞ் செய்தாலும்
காமநோய் விட்ட கலுமோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

***உரைநடை:*** தமிழ் சிங்களம் எனும் இரு பண்புகள் கலந்து சிறப்பூட்டும் விழா ஊர்வலத்தில் வள்ளி தெய்வானை சமேதராய் உலாவரும் கந்தப்பெருமானின் ஈழத்து உறைவிடமாக விளங்கும் கதிரையம்பதியே. இந்த உலகத்திற் சிலகாரியங்களைச் செய்வதால் அதற்கு எதிர் விளைவுதான் உண்டாகும். அதற்கு உதாரணமாக வம்பர் எனும் சொற்கேளாதவர்களுக்கு எவ்வளவுதான் நல்ல புத்திமதி புகட்டினுலும் மதிப்புத் தரமாட்டார்கள். ஆயமும் குத்தகையும் பெற்று அதன் வருவாயில் வீடு கட்டினுல் அங்கு மூதேவிதான் குடியிருப்பாள். செம்பைப் பொன்னெனச் சொல்லி ஏமாற்றிப் போலி ஆபரணங்களை விற்பவர்கள் உடற்பிணி கொண்டு உழல்வார்கள். மாலையானபின் தீபமேற்றுது உணவு உண்டால் அங்கு இலட்சுமி வாசஞ்செய்ய மாட்டாள். விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகனைத் தொழாதவர்களுக்கு அடுத்து அடுத்து பெரிய துன்பமே நேரும். கெட்டவர்களோடு சேர்ந்து வேட்டையாடி பல உயிர்களைத் துன்புறுத்துபவர்கள் தேகமே யில்லாத ஆவிகளாக வாழ்வார்கள். அதுமட்டுமல்ல கம்பத்தின் நுனியில் நின்று தவஞ்செய்தாலும் காம ஆசையை போக்குவது அரிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 32 உரிய அம்சமில்லாவிடில் எதுவும் உதவாது.

தீபமில் லாதமனே சேனையில் லாதவமர்
சேடி யில்லாத மங்கை
செல்வரில் லாதவூர் தேன்களில் லாதமலர்
சீடரில்லாத முனிவர்
மாமனில் லாதசேய் வாசமில் லாதமலர்
மன்னரில் லாத நகரம்
வாரியில் லாதபுவி மங்கையில் லாதவளம்
வள்ள லில்லாத கொடைகள்
கோபமில் லாதசமர் குன்றுக ளில்லாதவனம்
கொங்கை யில்லாத மங்கை
குரவரில் லாதசபை கூபமில் லாதவழி
கொடிக ளில்லாத நிருபம்
காவுகொள் ளலகைவாழ் சுடுகாடு போலிவைகள்
காண மெய்யாகு மன்றே
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

***உரைநடை:*** கார்த்திகை மாதத்தில் ஆயிரக்கணக்கான தீபங்களை ஏற்றி கந்தப்பெருமானை வழிபடும் முருக பக்தர்கள் நாட்டின் எத்திசையிலும் இருந்தும் பக்தியுடன் வந்து கூடி அழகு செய்யும் கதிர்காமப்பதியே. உலகத்தில் சிலவற்றிக்கு வேண்டிய அம்சங்கள் இல்லாவிடில்அவை எந்தவிதத்திலும் பயன்தராது என்பதற்குப் பின்வருங் காரியங்கள் எடுத்துக் காட்டாக இருக்கின்றன. விளக்கு ஏற்றாத வீடும் நாற்படைகள் இல்லாத போரும் தோழி இல்லாத மங்கையும் செல்வந்தர் வாழாத ஊரும் நறவற்ற பூக்களும் நல்ல சீடர்கள் இல்லாக் குருநாதனும் தாய்மாமன் உறவுமுறை இல்லாத குழந்தையும் மணமற்ற புஷ்பமும் அரசன் இல்லாத பட்டினமும் நல்ல விளைவற்ற வயலும் மங்கையில்லாத வாழ்வும் பெரிய வள்ளற் தன்மையோடு கொடுப்போர் இல்லாத கொடையும் சீற்றமுஞ் சினங்கோண்டு செய்யாத சண்டையும் தனமற்ற தையலும் மலையகளற்ற கானக வளமுங் கற்றோர் இல்லாத சங்கங்களும் இடையிடையே நீர்த் தேக்கங்கள் இல்லாத நெடும் பாதையும் கொடியில்லாத அரசும் எந்தவிதமான பயனையுந் தராது. இவையெலாம் பேய்வாழும் சுடுகாட்டிற்கு நேரென்று சொல்லப்படும்.

## 33 செயலுக்கேற்பவே பயன்கள் விளையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 33 செயலுக்கேற்பவே பயன்கள் விளையும்.

மாரியது குன்றிடில் சென்னலது விளையாமல்
வறுமையே வந்து சேரும்
மதிமந்திரி துர்ப்புத்தி கொண்டிடில் வேந்தர்தம்
மணிமுடிக ளற்று அலைவர்
பாரியர்கள் கணவரை நிந்தித்து வாழ்ந்திடில்
பழிகொலைகள் வந்து சேரும்
பசுவதைக் கொலைசெய்து உண்டுடல் வளர்த்திடில்
பாவமே கருதி வளரும்
ஊரிலே வஞ்சகர்கள் கூடிமது வுண்டிடில்
உண்மைவிட் டோடி யகலும்
உள்ளமதிற் கபடுவைத் துமொழி கூறிடில்
உண்மைவிட் டோடி அகலும்
காரியமதா யிவைகள் யாவையும் புவியதில்
கருதி ஆய்ந்திடுதல் வேண்டும்
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

***உரைநடை:*** கங்கையிற் குளிக்க மோட்சங் கதிரையைத் தரிசிக்க மோட்சம் என்று பக்தர்கள் உறுதியுடன் நம்பி வருடந்தொறும் ஆடி கார்த்திகை மாதங்களில் நடக்கும் உற்சவத்தில் பங்கெடுக்க மதுதேடுந் தேனிக்களைப் போலத் திரண்டு வரும் பேற்றையுடைய கதிர்காமமே. ஏற்ற காலத்தில் போதிய மழை யில்லாவிட்டால் பயிர்களின் நல்ல விளைவு குன்றும். அதனுல் பஞ்சமுண்டாகி வறுமைதான் தலைவிரித்தாடும். கெட்ட அமைச்சர்களின் மதியற்ற ஆலோசனைகளால் அரசன் தனது ஆட்சியையும் தனது புகழையும் இழப்பான். கட்டிய கணவரை மனைவியர் அவமதிப்பதாலும் பேணுதிருப்பதாலும் கொலை யாதிய தீமைகள் வரும். அழிந்துபோகும் உடலை வளர்க்கப் பசுவதை செய்தால் பாவந்தான் வளரும். வஞ்சகங்கொண்ட கெட்டவர்கள் கூடி மதுபானம் உண்டு களித்தால் அங்கு உண்மையென்பது எள்ளளவேனும் நிலை நில்லாது மறைந்து போய்விடும். கபட நெஞ்சுடன் வார்த்தையாடினுல் உணவில் லாமல் அலைய நேரிடும் என்று பெரியோர்கள் சொல்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 34 கடைகெட்ட நரகத்திற்குஉரியோர்.

அடைக்கலம தாகப் புகுந்தவர்களைச் சிறிதும்
ஆதரிக் காமல் விடுவோர்
அலகையைப் போற்றியே சிவபூசை செய்யாது
அதர்மத் திலீடு படுவோர்
படைக்கலங் கண்டஞ்சிப் பின்வாங்கி ஓடுவோர்
பக்தரைத் தானி கழ்ந்தோர்
பகலவன் காணவே அரிவையைக் கூடுவோர்
பரமா தரைப்பு ணர்வோர்
சடையுற்ற முனிவரைச் சார்ந்தோரைத் தூற்றுவோர்
சலமதில் நஞ்சை யிடுவோர்
சாதியை ஒழித்துமொழி பேசியே தன்பெருமை
சாற்றிப் புகழ்ந்து திரிவோர்
கடைகெட்ட நரகத்தில் இவர்களே சேரமறை
கட்டினது மெய்ய தன்றோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

**உரைநடை:** பத்துக்குமேற்பட்ட யானைகள் ஆலவட்டம் குடை ஆதிய வரிசைகளுடனும் முகத்திரை முதுகுப் படாகம் முத்தணி வாற்குஞ்சம் காற்தண்டை முதலிய அணிகளுடனும் அசைந்து அசைந்து பவனிவர உற்சவம் நடக்கும் கதிரைமலைப்பதியே முற்சொன்ன நரகத்தில் இடப்படுவோர்களுடன் மேலும் பலரதில் அடங்குவர்.அவர்களின் விபரங்களைச் சற்றுச் செவிமடுப்பாயாக.. 1.அபயங் கேட்டு அண்டி வந்த அபலைகளை ஆதரிக்காமல் விடுபவர்கள். 2.நிதமும் இறைவனைப் பூசியாது பேய்பிசாசுகளை வணங்கி மறச் செயல்களில் ஈடுபடுபவர்கள். (அலகை - பேய்பிசாசுகள்) 3.படைகண்டு பதுங்குங் கோழைகள். .4. இறையடியாரை இகழ்பவர்கள். 5.மற்றவர்களுடைய மனதில் ஆசாபாசங்களையும் காம உந்துதலையும் எழுப்பத்தக்க வாறு வெளிச்சமுள்ள வெளியில் உடலுறவு கொள்பவர்கள். 6. சடாமுடி கொண்ட முனிவர்களையும் அவரது அடியார்களையும் பழித்து எள்ளுபவர்கள். 7 உயிர்கள் அருந்தும் குடிநீரில் விசம் ஆதியவற்றைக் கலப்பவர்கள். 8. இடாதார் இழிகுலத்தார் என்பதை மறைத்து தனது கொடைகள்பற்றிப் புகழ்ந்து திரியும் எழிய கஞ்சர்கள் என்பவர்களேஅவர்களாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 35 கடவுளுக்கு உகந்தவர்கள்.

அடுத்துக் கெடுப்போர்கள் தன்னில்ல மேகிடார்
அறமெலாஞ் செய்து வருவோர்
அன்னையைத் தந்தையைத் தெய்வமாய்ப் பேணுவோர்
ஆசார வார்த்தை யுடையோர்
தொடுத்தசமர் தன்னையுஞ் சமரசஞ் செய்வோர்கள்
துட்டரைத் தள்ளி வாழ்வோர்
சூதுகொலை வஞ்சகம் குருநிந்தை பொய்களவு
துணைகொண்டு உலகில் வாழார்
கொடுத்ததைச் சொல்லாது மனதிலே வைப்போர்கள்
கொற்றவர்க் கருக ராவர்
குற்றமது தான்செய்யில் ஒப்பிட்டு வாழுவோர்
குரவர்சொல் தட்டி நடவார்
கடுத்துமொழி கூறிடார் இவைகளிற் தேறுவோர்
கடவுள்பதி யடைவ ரன்றோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

***உரைநடை:*** நம்மைப் படைத்த அப்பனுடைய பார்வையில் விருப்பை உண்டாக்குபவர்களை இங்கு அட்டவணைப் படுத்தித் தருகின்றேன். அப்படித் தகுதியற்றவர்களிற் சிலர் தமது கடந்த காலப் பாவச் செயல்களுக்காகத் தம்மைத் தாம் கசையாலுஞ் சாட்டையாலும் அடித்துத் துன்புறுத்தி உம்முன்னால் தம்மைக் காட்டிக்கொண்டு வரும் அற்புதக் காட்சிக்குரிய கதிரைமலைப் பதியே இதனையுங் கண்கொண்டு பார்ப்பாயாக. 1.மற்றவர்களுடன் நட்பாயிருந்து கெடுகின்ற நயவஞ்சகர்களுடன் உறவு வையாதிருப்பது மட்டுமல்ல அத்தகையோரின் வீடுகளுக்கே போகாதவர்கள். 2.தரும தானம் செய்து வருபவர்கள். 3.பெற்றோரைக் கண்கண்ட கடவுளாகப் பேணுபவர்கள். 3.கனிவுங் கண்ணியமுமான நல்ல வார்த்தை பேசுபவர்கள். 4.சண்டையிலும் பார்க்கச் சமாதானத்தை விரும்புபவர்கள், 5.துட்டரைக் கண்டாற் தூர விலகுவோர். 6.பஞ்சமா பாதகங்களைச் செய்யாது வாழ்பவர்கள். 7.வலது கரத்தாற் கொடுத்த கொடை இடது கரத்திற்குத் தெரியாது வழங்குபவர்கள் 8.நல்லாட்சி செய்யும் மன்னவனை அண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வோர். 9.தமது குற்றங்களைச் சீர்தூக்கி ஒப்பீடு செய்து வாழ்பவர்கள். குரு வார்த்தை தட்டாது இனியவார்த்தை பேசுபவர்கள் என்போர் அதில்அடங்குவர்.

## 36 வட்டிஎனும்சுட்டயால் வருத்துவோர்.

வட்டிப் பணத்திற்கு மன்றுமனை கட்டியே
மக்களுக் கென்று மகிழ்வாய்
மமதையைப் பெரிதென்று எண்ணியே ஏழைகள்
வைத்தபொருள் வார்த்தை யழகால்
தட்டிப் பறித்ததனை ஆபரண மாக்கியே
தன்மனைவி அணிய வைத்தும்
சார்ந்து வறியோர்களைக் கொண்டடிமை யாக்கியே
சாலிவயல் தோப்புத் துரவு
பட்டிப் பெருக்கமும் அவர்களாற் பெற்றுமே
பாரிலே பெருமை யெழவே
பரிவினொடு மணமங்கை புகழுறு சுவையுடன்
பாங்காய்ப் புசித்து மகிழ்வார்
கட்டிக் கரும்புமொழி பேசுவார் பின்னரகு
கண்டடைந் திடுவ ரன்றோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

**உரைநடை:** தமிழகத்தவர்கள் திருப்பதி சென்று தமது முடிகளைக் களைகின்றார்கள். அதுபோல ஈழத்தில் உள்ள பல ஆண்களும் பெண்களுஞ் சென்று நேர்த்திக்காகத் தமது முடிகளைக் களைந்துவிடும் பெருமைமிக்க கதிரையம்பதியே. உலகத்திற் பிறந்தவர்களுள் அநேகர் உலக பந்தங்களுள் சிக்கி பாவகாரியங்களையே செய்ய வேண்டியுள்ளது. இதனால் நரகத்திற் கிடப்படும் நமனை வெல்லாதவர்களாகி விடுவதுண்டு.. அத்தகையோரில் இன்னுஞ் சிலர் யாவெரென இங்கு எடுத்து உரைப்பேன் கேட்குக. பணத்தை வட்டிக்குக் கொடுத்து ஏழைகளிடமிருந்து ஒற்றைக்கு இரட்டை பெற்று அதனால் தமது குடும்பத்திற்கு என்று வீடுகட்டி வாழ்பவர்கள். அவர்களின் பொருட்களை வார்த்தையழகால் மயக்கிப்பெற்று ஆபரணஞ் செய்வித்துத் தமது மனைவியருக்கு அலங்காரம் செய்பவர்கள். மேலும் அவர்களை அடிமையாக்கி அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயர்வை சிந்துதலால் வயல் தோப்புத் துரவு மாடாடு மந்தைகள் என்பவற்றைப் பெருக்கி உலக சுகங்களாகிய மது மாது அறுசுவையுணவு ஆனந்த வாழ்க்கை ஆடல் பாடல் என்பவற்றைப் பெறுபவர்கள். (அறுசுவையுணவு: தித்திப்பு புளிப்பு உர்ப்பு துவர்ப்பு காரம் கைப்பு )

## 37 கொடுமை என்றுமே வாழ்ந்ததில்லை.

வண்டுதனை ஏவியே சிறிராம மூர்த்தியும்
வாலியைக் கொல்ல வில்லையா

மகிடமுக சூரனைக் காளி யுருவாகியே
மார்பைப் பிளக்க வில்லையா
துண்டித்துக் கஞ்சனை நரகனொடு காளியன்
துடுக்குக ளடக்க வில்லையா
தும்பியென நரசிம்ம மானதொரு விரணியன்
துரிதம தடக்க வில்லையா
பன்றியுரு வாகியே பாரினடி தேடியும்
பாதலஞ் செல்ல வில்லையா
பந்தயங் கொண்டுகை மண்தட்டி முசுகுந்தன்
பட்டிடச் செய்ய வில்லையா
கண்ணிடத் தரக்கர்கரு வற்றதும் நாரணன்
கையா லழிந்த தன்றோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

**உரைநடை:** கந்தப்பெருமாள் அசுரர்களின் கொடுமையை அழித்த நினைவாகவும் அதற்காக தான்கொண்ட அவதாரத்தின் பொருளை விளக்கு முகமாகவும் கார்த்திகைத் திருநாளை திருவண்ணாமலையிற் கொண்டாடுவதுபோல சின்னத் திருவண்ணாமலையாக எண்ணிக் கைகூப்பி வணங்கும் தலமான கதிரையம்பதியே. கொடுஞ் செயல்கள் நீடித்து வாழ்வதில்லை. அதனை உறுதிப் படுத்துவதற்காகப் பாகவத வரலாறுகளை இங்கு எடுத்துக்கூறுவேன். கண்ணபரமாத்மா அப்படிப்பட்ட தீமைகளை ஒழித்தழிக்க பத்து அவதாரங்கள் எடுத்தார். அவற்றுள் இராம அவதாரத்தில் வண்டுகளைப் பாணமாக்கி வாலியைக் கொன்றார். மற்றும் அவதாரங்களில் இரணியனை நரசிங்கனாகி மார்பைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழந்து மடித்தார். மாமனாகிய கஞ்சனை மாய்த்தார். காளிய நடனமாடியே காளிங்கனை அழித்தார் . மகிடாமுக சூரனைப் பத்திரகாளி வேடத்தால் மாய்த்தார். முசுகுந்தனை முடித்தார் இவ்வாறு தீமையையும் கொடுமைகளையும் அவற்றைப் புரிந்த அரக்கமனம் படைத்தவர்களையும் உலகத்திலிருந்து கருவோடு ஒழித்தார்.

## 38 மாதர்தம் மனவாழம் மண்ணில் அறிந்ததார்.

அத்திமலர் தன்னையும் காக்கையின் வெண்மையும்
ஆழியின் நீள மதையும்
அண்டத்தி னுயர்வையும் மண்டலத் தடியையும்
அலகையின் ருப மதையும்
நித்தியத் துடலையும் புத்திதன் அளவையும்
நிமலனின் செயலதனையும்
நிழலதின் உயிரையும் காற்றதின் உருவையும்
நெறியதின் குறிய தனையும்
முத்தின் நகரையும் சித்தின் திருவையும்
முனிவரின் புனித மதையும்
முரகத்தின் மணியையும் மூர்க்கரின் பொறுமையும்
முயலதின் கோடதனையும்
கத்துகடல் கயல்பாதம் கண்டாலும் அரிவைதன்
கருத்தறிய லாவ துண்டோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

**உரைநடை:** ஈழத்துப் புண்ணிய தலங்களில் அதியுயர்வுடையதென சிங்களவர் தமிழர் எனும் இரு இனத்தவராலும் மதிக்கப்படும் கதிரையம்பதியே. உலகத்தில் என்றுமே இல்லை என்று சொல்லுகின்ற அத்ததிமலரையும் வெள்ளக் காக்கையையும் கடலின் நீளத்தையும் பிரபஞ்சத்தின் உயரத்தையும் ஆகாய மண்டலத்தின் விரிவையும் பேயின் உருவத்தையும் அழியாது என்றும் நிலைக்கும் தேகத்தையும் அறிவின் அளவையும் எப்படியோ முயன்று ஒருவேளை கண்டிபிடித்து விட்டாலும் விடலாம். அதேபோல ஆண்டவனின் செயல்களையும் நிழலில் மறைந்துள்ள உயிர்த்தன்மையையும் காற்றின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவத்தையும் ஒழுங்குகளின் அடையாளங்களையும் சுவர்க்கத்தையும் இலட்சுமியின் செல்வத்தின் அளவையும் முனிவர்களின் தூய மனத்தையும் அரவின் நாக மணியையும் முரடர்களின் பொறுமைத் தன்மையையும் முயற்கொம்பையும் மீனின் காலையும் ஒருபோது கண்டாலும் கண்டுவிடலாம் ஆனால் இல்லை எனுமளவிற்குச் சிற்றிடை அமைந்த பெண்களின் மனதில் உள்ள கருத்தை அறியவே முடியாது.

## 39 வேல்முருகனின் வீரச்செயல்கள்.

அந்தரத் தோர்களும் இந்திரன் முனிவரும்
அட்ட பாலக ரெட்டுடன்
அரிமுகன் கயமுகன் பத்துமா சூரற்கு
அடிமைப் பட்டச் சமுறவே
சுந்தரக் கைலையங் கிரியரசு புரியரன்
தோன்றி யறுமுக வடிவாய்
சொக்கர் மீனாட்சிதன் மிக்கமக னாகவே
துரிதமெழு சூரர் கருவைச்
சிந்தத் தொலைத்தண்டர் சிறைமீட்டு இந்திரன்
செல்வியை மணந்து உலகில்
தேடரிய பழனியில் தெய்வானை யம்மையொடு
சேர்ந்து றைந்திடு வேளையில்
கந்தவேள் வள்ளியைக் கைப்பிடித் திடுதறகாய்
கதிரைநகர் வந்தே யமர்ந்தாய்
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

***உரைநடை*** கந்தப்பெருமானின் மகாத்மியங்களைக் கூறும் கச்சியப்ப சிவாச்சாரியாரின் கந்தப்புராணத்தின் கருத்துக்கள் அத்தனையும் பிரதிபலிக்கும் கதிரையம்பதியே. வேலன் மண்ணவர்களும் விண்ணவர்களும் மாயம்புரிந்து துன்புறுத்தி வந்த அரக்கர்களை அழித்தொழித்த வரலாறுகளைத் தெரிந்து கொள்வாயாக. ஒருபோது தேவேந்திரன் முதலான முக்கோடி தேவர்களும் வசிட்டர் முதலான கோடிக்கணக்கான முனிவர்களும் கிழக்கு முதலாக ஆரம்பிக்கும் எட்டுத் திசைகளின் துவாரபாலகராகிய இந்திரன் அக்கினி இயமன் நிருதி வருணன் வாயு குபேரன் ஈசானன் எனும் எட்டுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்குப் பாலகர்களுங்கூட கயமுகாசூரன் சிங்கமுகாசூரன் என்பவர்களின் பெயரைக் கேட்டாலே நடுக்கமுறும் அளவிற்கு அச்சுறுத்தி வந்த தீமைகளை வேரோடறுக்கப் பார்வதிக்கு அறுமுகவனாக அவதாரமெடுத்துப் போரிட்டு அழித்ததார். இதற்குப் பரிசாகத் தேவேந்திரன் தனது செல்ல மகள் தெய்வானையை மணஞ்செய்து கொடுத்தார். சூரர்களை வென்ற வீராதி வீரன் திருமுருகன் பழனிமலைப் பதியிற் தெய்வானை சமேதராக அருள்பாலித்து வருகிறார்.

## 40 வள்ளி திருமண வரலாறு

**மாயவன்** தன்மனைவி சிதேவி தன்னோடு
மானுரு வெடுத்து மருவ
வடிவனைய வள்ளியின் கதிரைமலைச் சாரலில்
வள்ளிக் கொடியருகில் உதித்த
சேயழக் கண்டெயினர் கொண்டாடி ஏந்தியே
சிற்றூரில் வைத்து மகிழ்வாய்
செவிலிக்கு மகளாய் வளர்ந்து புனமதிலே
தினைக்காவல் கொண்டு கிளியை
ஆயால லோல வென்றிடு குரலருந்தவர்
அறிந்து முருகே சரிடமே
அணுகியுன் மனைவி சிற்றூரதி லிருக்கின்றாள்
என்று நாரதரு மகலக்
காயமொடு காயமாய் இருவரொரு உருவதாய்க்
கடுகிவாழ் கதிரை யன்றோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

***உரைநடை:*** இரண்டு பெண்டாட்டிக்காரர் படும் அவத்தை எப்படிப்பட்டது என்பதை எடுத்துக்காட்டும் வண்ணம் ஆடிமாதந் தோறும் நிகழும் உற்சவத்தில் அதை மாந்தருக்கு நடாத்திக் காட்டி அருள்பாலிக்கும் கதிரையம்பதியே. கந்தர்க்கு வள்ளி என்றொரு வனப்பெண் கிடைத்ததையுங் கூறுவேன் கேட்குக.. ஒருபோது திருமால் தனது மனையாள் இலக்கு மியுடன் மான் நிலைப் புணர்ச்சி செய்தார். அதன்பேறாக வள்ளி பிறந்தாள். அந்தப் பெண்குழந்தையை அவர்கள் உனது சாரலில் ஒரு வள்ளிக்கொடி யருகில் விட்டுச் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டனர்.அதைக்கண்டெடுத்த வேடர்கள் அன்புடன் சீராட்டித் தாராட்டிப் பேர்சூட்டித் தார்சூட்டிச் செல்வமாய் வளர்த்தனர். உரிய பருவம் வந்ததும் தினைப்புனக் காவலிற்கு அனுப்பினர். அங்கு அவள் ஆயலோட்டும்போது வழிதவறி வந்த கலகக்கார நாரதருடன் தருக்குற்றுப் பேசினாள்.அதற்கு அவர் பழிக்குப் பழியாகக் கந்தரிடம் சென்று அவளின் அழகையும் இனிய குணத்தையும் சொல்லி ஆசையை மூட்டினார்.அதனால் உந்தப்பட்ட கந்தப்பெருமான் வந்து மணந்து ஈருடல் ஓருடலாகி உனது பதியிலே அருள் பாலிக்கின்றார்..

## 41: கந்தனின் கருணையே கருணை

அடிகளாய் ஆயிரம் கோடிநரர் கதிரையில்
அமர்ந்திடிற் கருணை யுறுமோ
அருந்தவர்கள் பத்தாயிரங் கோடி அமரினும்
அருள்தங்கி வினைய கலுமோ
நடிகரெண் ணாயிரங் கோடி பேராடினும்
நற்கதி கள்பெற லாகுமோ
நாகரீக மானமட மாளிகைகள்கட்டினும்
நமனையும் வெல்ல லாகுமோ
துடிகள்தவில் குழல்வீணை மீட்டியே தோத்திரம்
செய்திடிற் துன்ப மறுமோ
சொல்லரிய யாகாதி தானங்கள் செய்யினும்
சூழ்வினை கள்மா றுதொரு
கடிகையிற் கந்தவேள் எதிர்வந்து தோன்றிடில்
கதிபெற்று வாழ்வ ரன்றோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

***உரைநடை:*** இன்றும் பண்டை மரபுகளை மாற்றாது வாயிற் சீலைகளைக் கட்டியவாறு பூசகர்கள் ஆராதனை செய்யும் இடங்களில் ஒன்றான கதிரையம்பதியே உன்பதியில் கோடிக் கணக்கான பக்தர்கள் வருவார்கள். வரும்பக்தர்களிற் பலர் பெரிய மாட மாளிகையில் வசிக்கவுங்கூடும். உடலை வருத்தி உள்ளத்தை ஒறுக்கும் அரிய தவங்களைச் செய்யும். பலகோடி அடியார்கள் வந்து தங்கியிருப்பார்கள். பக்தர்களைப் போலப் பாசாங்கு காட்டி நடிப்பவர்கள் மேலும் பல ஆயிரக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்கானவர்கள் வருவார்கள்.வந்த அடியார்கள் உடுக்கை தம்பட்டம் மத்தளமாதிய தோற்கருவிகளேயும் புல்லாங் குழாதிய துளேக்கருவிகளேயும் வீணையாதிய நரம்புக் கருவி களேயுஞ் சல்லாரி கைத்தட்டு ஆதிய கஞ்சக் கருவிகளேயும் இசைத்து கனிவுதரும் பலவித தோத்திரப் பாடல்களேப் பாடுவார்கள். இன்னுஞ் சிலர் அரியபெரிய தான தருமங்களேச் செய்வார்கள். .இப்படி எல்லாம் ஆண்டுக்கோர் முறை ஆடிக்கோர் முறை வந்து செய்வதால் அவர்களுக்கு மரணபயம் என்பது ஒருபோதுந் தீர்ந்துபோய் விடாது பிறவித் துன்பங்களும் பாவவினேகளும் இல்லாதுபோய் விடாது. ஆயினும் எவரொருவர் நித்தியமும் தூய முருகனடியாராக செயலிலுஞ் சொல்லிலும் வாழ்ந்து வருகின்ருரோ அவர்க ளுக்கே கந்தன் முன்னிலேப்பட்டு இரட்சிப்பைத் தருவார். அருளுங் கிட்டும் மாய்மாலர் அல்லாத அடியார்களே வரவேற்று ஆசி நல்கும் பதியல்லவா நீ.

## 42 ஆணவம் அவர்தம் உற்ருரிஞல் அழிப்பர்.

தசகண்ட இராவணன் கிளேகளும் வீரமுந்
தம்பியாற் கெட்ட ழிந்தார்
தங்கை தேவகியிஞற் கஞ்சனும் மாண்டனன்
இரணியன் தனது புதல்வன்
அசைவற்ற பக்தியாற் தன்னுயிரை இழந்தனன்
அருளூற்ற பாண்டி யனுமே
அழகுசெறி குழவியாற் கண்ணுயிர் இழந்தனன்
அஞ்ஞான வாழ்க்கை யதஞல்
வசைபட்ட சூதிஞல் சிந்துபதி மாண்டனன்
மனேவியால் ரதனி றந்தான்
வலிமைபெறு நரகனும் புகழ்பெற்ற வாழ்க்கையில்
அன்னேயால் மாண்ட ழிந்தான்
கசகரண மாடினும் முன்வினேகள் மாறுமோ
கர்வம் நிலேப்ப துண்டோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

**உரைநடை:** தமது உற்ருர் உறவினருடன் உன்பதியை நாடி வருபவர்கள் தரிசனம் முடிந்து தமது இல்லத்திற்குத் திரும்பிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகுமளவும் தமக்குள்ள பந்த பாசங்களைக் காட்டிக்கொள்ள மாட்டார்கள். கட்டிய மனைவியானாலுஞ் சுவாமியே என்றுதான் அழைப்பர்கள்.அத்தகைய திண்மையுள்ள கதிரமலைப் பதியே கேட்பாயாக. உலகத்தில் ஆணவம் கர்வங் கொண்டு வாழ்ந்து நிலைத்தவர்கள் எவருமே யில்லை. இத்தகைய குணங்கள் அவரது முற்பிறப்பிற் செய்த பாவ வினையாக வந்து முடிவதுண்டு. அதுவும் தனது குலத்தவராகிய இரத்த பந்தமுள்ளவராலேயே அழிவதுண்டு.உதாரணமாக ஒரு சிலவற்றைக் கூறுகின்றேன். பத்துத்தலை இராவணவனும் இலங்கேசுவரனின் கர்வம் அவனது தம்பி விபூசணனால் அழிந்தது. கஞ்சனின் ஆணவம் தனது சகோதரி தேவகியினால் வீழ்ந்தது. இரணியனின் மமதை தன் மகன் பிரகலாதனனால் மறைந்தது. பாண்டியனின் அகங்காரம் தனது மகள் கண்ணகியால் ஒழிந்தது. (சிந்துபதியின் கர்வம் தனது சூதினால் அழிந்தது. தசரதன் தனது மனைவி கைகேயியினால் மாண்டான்) நரகாசூரனின் ஆணவம் தனது தாயினால் அழிந்தது.

## 43 தொழிலாளியின் வெயர்வை வற்றமுதல் ஊதியத்தைக் கொடுத்தல்

வண்ணார்க ளுளியம் செய்திட்ட கூலியும்
மயிர்வினை செய்வோன் கூலியும்
மருத்துவஞ் செய்திடும் மாதர்கள் கூலியும்
வழிகாட் டுவோனின் கூலியும்
பெண்ணடிமை யாக்கியே வைத்திட்ட கூலியும்
பிள்ளைகளை வளர்த்த கூலியும்
பேசரிய உபாத்தியாயர் கூலியும் வைத்தியர்கள்
பிணித விர்த்திடு கூலியும்
அண்ணாவி நாட்டியங் காட்டிடுங் கூலியும்
ஆறுகரை சேர்த்த கூலியும்
அதட்டிக் கெடாதபடி ஏமாற்றி விடுவோர்க்
கரும்பிணிகள் வந்து சேரும்
கண்ணாயிரத் துடைய இந்திரன் பார்க்கிலும்
கருமநோய் விலகு மாமோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரைநடை:** வரண்ட காடுகளின் மத்தியில் திரண்ட பாலை மரங்களின் மஞ்சட் பழுக்குலைகளும் திரண்டு நெடிதோங்கிய வீர மரங்களின் சிவத்தக் கனிகளும் அங்கு வரும் முருகனடியார்கள் தரிக்கும் காவியுடையை அணிந்ததுபோல அழகுற வளர்ந்து நிற்கும் கதிரையம்பதியே. நமக்காகப் பாடு பட்டுழைப்பவர்கள் எவராய் இருந்தாலும் அவர்களுக்கு உரிய கூலியை உடனே கொடுத்து விடவேண்டியது நமது தலையாய கடமையாகும். இதிலிருந்து தவறியவர்களுக்கு ஆயிரங் கண்கள் படைத்த இந்திரானுற்கூடக் கருணைப்பார்வையால் கடாட்சிக்க முடியாது. எனவே சலவைக்காரர் சிகையலங்காரஞ் செய்வோர் மருத்துவப் பெண்கள் வழிகாட்டிகள் வேலைக்காரப் பெண்கள் பிள்ளைகளைப் பேணுவோர்கள் மற்றும் கல்வி கற்பிப்பவர்கள் மருத்துவர்கள் அண்ணாவிமார் ஆற்றுத் துறையைக் கடந்து செல்லப் படகு வைத்துத் தொழில் செய்வோர் ஆதியவர்களினதும் அவர்களைப் போன்ற பல தொழிலாளர்களினதும் கூலியை உடனுக்குடனே கொடுத்துவிட வேண்டும்.

## 44 பணமின்றேற் பிணம்

வடவால் பழுத்திடில் பட்சி சாலங்களும்
வந்துதன் சொந்த மெனவே
வாயார வாழ்த்தியே கனியுண்டு மகிழ்வதும்
வளைத்துப் பறைந்து றைவதும்
நடமாடி வருவேளை காய்கனிக ளோய்ந்திடில்
நாடா மலோடி யகலும்
நல்லறிவ ராயினும் பணபண்ட மற்றிடில்
நாடுவா ரொருவ ரில்லை
மடமாதரிற் றனது மனைவியுந் தூற்றியே
வாய்க்கு வாய்பேசி இகழ்வள்
மாதிற் சிதைந்தபர தாசிமனை சென்றிடில்
மறைந்துநின் றேடு மென்பாள்
கடவுளார் தானன்றி வறியவர்க் குபகாரி
காசினியில் யாரு முண்டோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***உரைநடை:*** விக்கிரகம் இல்லாத மூலத்தானத்தைக் கொண்ட ஆலயத்துள் கண்ணுக்குக்காணுத காட்சியுடன் நிதரிசனமாக வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்தரும் பால சுப்பிரமணியக் கடவுளின் பதியான கதிர்காமமே. உலகத்தில் உன்னருளே பெரிதென்று எண்ணுபவர்கள் யாருமே இல்லே. அவர்களுக்குப் பணமே பிரதானம். அந்தப் பணம் உள்ளவரை வடக்குப் பக்கத்தில் உள்ள பரந்துவளர்ந்த ஆலமரங் கனிக்கும் காலத்தில் பறவையினங்கள் வந்து உண்டு பாடிக்களித்து உறங்குவதுபோல உற்றவர்களும் நண்பர்களும் பிறருந் தேடி வந்து நட்புரிமை பாராட்டுவார். பழக்காலம் முடிந்ததும் எப்பறவையுமே அப்பக்கம் வராததுபோல ஏழையாகிவிட்டால் அவர்கள் மேலான அறிவுடையவராய் இருந்தாற்கூட ஒருவருமே அவர்களை நாடி வரமாட்டார்கள். கட்டிய மனைவிகூட எதிர்த்துப் பேசுவாள். பெண்களுளுட் சீர்கெட்ட வேசைகள்கூட கண்டதும் மறைந்து நின்று இங்கே வராதே ஓடு என்று முகங்கொடாது சொல்வாள். இவ்வாறுன நிலேயில் கடவுள்தான் வறியவர்களுக்கு இரங்க வேண்டுமே தவிர மனிதர்கள் இரங்கமாட்டார்கள்..

## 45. கடவுளருகிற் செல்லுந் தகைத்தோர்கள்

நிந்தமுஞ் சிவபூசை செய்துவரு வோர்களும்
நின்னே யும்அறிந் தோர்களும்
நிழல்தா வரங்கள்வழி தன்னிலே வைப்போர்கள்
நீதிநெறி தவறி நடவார்
உத்தமர்க் குபசரணை செய்துவரு வோர்களும்
உடல்தனிற் றூச றுப்போர்
ஊழிமுடி பாயினும் உறுதிமொழி தவறிடார்
உண்மையைத் தள்ளி நடவார்
சித்தமதிலே குற்ற மில்லாமல் வாழ்பவர்கள்
தீதுசெய் திட்டு வாழார்
சிலேவலிமை யோடுபண வாக்குரிமை யாயினும்
சிறியோர்க ளாக வாழ்வோர்
கர்த்தனரு காயிவர்கள் சேர்வதற் கேதுதடை
கருமவினே சாரு மோதான்
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***உரைநடை:*** தமிழர்களின் படையெடுப்புகளுக்கு அஞ்சி அனுரதபுரி புலத்தியர்புரம் ஆதியவிடங்களில் வாழ்ந்த சிங்கள மன்னர்களுங் குடிகளுந் தெற்கு நோக்கி வந்து உறுகுணையைத் தங்கள் வாசமாக்கிக் கொண்ட காலையில் அங்கு சிங்கள மக்களின் சிறப்பான சமயத் தலமாக மிளிர்ந்த கதிர்காமப் பதியே, கடவுளுடைய அருகில் சேரத்தக்கவர்களான அருகதை இருப்பதற்குப் பல காரியங்களைச் செய்ய வேண்டும். அவற்றுட் சில: 1.தினமும் சிவபூசை செய்தல். 2. இறைவனின் அருளை நன்கு உணர்தல் 3. வழிநடப்போர்க்கு ஆறுதலளிக்க நிழல்தரும் விருட்சங்களை நடுதல். 4.உலக நீதியும் கடவுள் நீதியும் தவறாது வாழ்தல். 5. சான்றோர்களை உபசரித்தல் 6. உடல் உள்ளக் குற்றங்களைஅகற்றி வாழ்தல். 7.யுகமுடிவுதான் வந்தாலும் தாம் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுதல் .8. உண்மைக்குள் அடங்கி நடத்தல். 9.மனச் சுத்தியோடு இருத்தல். 10.தீமையைக் கனவிற்கூட நினையாதிருத்தல் 11.ஆயுத வலிமை பண வலிமை நா வலிமை இருந்தாலும் ஆணவங்கொண்டு வாழாதிருத்தல் ஆகியவையும் பிறவுமாம்.

## 46 பிறவிக் குணத்தை மாற்ற முடியாது

மட்டித் தனத்துடைய மக்கட்கு ஆயிரம்
மதிகூறில் நிலைமை வருமோ
வசைப்பட்ட மாதர்க்கு நெய்கொண்டு கழுவினும்
மரியாதை வந்த ணுகுமோ
எட்டிக்கு இனியதேன் விட்டதை எழுப்பினும்
இடுகைப்பு மாறி விடுமோ
இழிவுமொழி கேட்போர்கள் பால்கொண்டு மூழ்கிலும்
ஏளனம் விட்ட கலுமோ
குட்டிப் புலிக்குநற் கனிவர்க்க மூட்டினும்
கொலைக்குணம் மாறி விடுமோ
குரங்கதற்கே மலர்மா லையைச் சூட்டினும்
குலையாமல் வைத்து விடுமோ
கட்டிக் கரும்புபோற் தீதற்கு நற்செயல்கள்
காட்டிடிற் கருணை யுறுமோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரைநடை:** கதிரையிற் பிறக்க மோட்சம் என்பார்கள் அப்பேறு கிடையாத பக்தர்கள் தங்கள் மனதில் உள்ள மாசுகளை கந்தப்பெருமானின் திருக்கோலக் காட்சியைக் கண்டு அகற்றியும் உடல்மாசுகளை மாணிக்க கங்கையில் தீர்த்தமாடி அகற்றியும் தமக்குள்ளே மறுபிறவி எடுக்க வரும் பக்தர்களால் முழுமையுறும் கதிரையம்பதியே. உலகத்திற் பிறக்கும்போதே பழைய கன்ம வினையாற் பெற்ற பிறவிக்கேற்ற குணத்தை மாற்றுவதரிது. அப்படியானுல் மடையர்களுக்குச் சொல்லும் புத்திமதிகள் வேண்டிய பயனைத் தருமே. கற்பிழந்த மாதர்களை நெய்யபிசேகஞ் செய்தால் வசையகன்று கௌரவம் வந்து விடுமே. காஞ்சுரைக் கன்றுக்கு தேன்வார்த்து வளர்த்தால் அதன் கைப்புத் தன்மை இல்லாது ஒழிந்து இனியதாகிவிடுமே. மதிப்பை இழந்தவர்களுக்குப் பாலாபிசேகஞ் செய்தால் மதிப்பு ஏற்படுமே. புலிக்குட்டிக்கு பழவகைகளை உணவாகக் கொடுத்து வந்தால் அது கொலைத் தொழிலை முற்றாய் மறக்கவேண்டுமே. குரங்கிற்கு மலர்மாலை அணிவித்தால் அதனைக் கசக்கி யெறியாது இருக்க வேண்டுமே கெட்டவர்களுக்கு கரும்பின் சுவையைப்போலப் பல நற்செயல்களைச் செய்தால் அவர்கள் திருந்தி நல்லவர்களாக வேண்டுமே. அப்படி எப்போதுமே நடக்கமாட்டாது. காரணம் பிறவிக் குணமென்றுதான் சொல்ல வேண்டும்

## 47 பேயாகப் பிறப்பவர்கள்

மணவாசை யில்லாத மங்கையைச் சேர்வோர்கள்
மலரல ராமுன் ளுய்ந்தவர்
வழியதிற் படுகுழியில் முள்ளிட்டு வைத்தவர்கள்
மதபேத மோதி வாழ்ந்தோர்
குணமான பசுவினது கன்றதைக் கொன்றவர்கள்
கூவலை அழித்து விடுவோர்
குலசார மற்றுவிப சாரங்கள் செய்வோர்கள்
கூடிச் சதித்து விடுவோர்
துணையாய இருப்பவர்கள் தன்னைக் கலைத்தவர்கள்
தொண்ட ரைக்கண் டித்தபேர்
தொல்லுலகில் இவர்களும் அல்லோல மாகியே
தூலவுடல் அற்று அலகை
கணமாய்ப் பிறந்துபிண வாடையது உண்டுபேய்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA 9-1- LIBRARY

கலைகளோடு வாழ்பவ ரன்றோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

***உரைநடை:*** செல்வக் கதிர்காமம் எனும் ஒரு சைவப்பதியை அருகிற் துணையாகக் கொண்டு பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் கதிரையம்பதியே சிலர் பேய்களாக மறுபிறவி எடுப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் எப்படி இருப்பார்கள் என்பதைச் செப்புகின்றேன் செவி மடுப்பாயாக. 1.காம இச்சையெழாத பருவமுறாத இளங் கன்னிப் பெண்களைப் புணர்ந்து விருப்பத்திற்கு மாறாக வருத்தி உடலுறவு கொள்ளுங் காமுகர் 2. மலராத மொட்டுகளை ஆய்பவர்கள். 3.செல்லும் வழியிற் படுகுழிகளும் முள்ளும் இட்டு அவ்வழியே செல்வோர்களைத் துன்புறுத்துவோர்கள். 4.மதபேதத்தை மக்களிடையே எடுத்துக் கூறி மதத் துவேசத்தை உண்டாக்குபவர்கள். 5. பசுக் கன்றைக் கொல்பவர்கள்.6. நீர் கிடைக்கும் இடங்களைத் தூர்த்து அழித்து விடுபவர்கள் 7. உலகில்வாழ் மனித இனத்துக்குரிய மனித நேயச் செயல்களைச் செய்யாதவர்கள். 8..ஒழுங்கற்று வேசித்தனத்தைப் புரிபவர்கள்.அதனாலே மகிழ்வு அடைபவர்கள். 9. கூடியிருந்து குழியைப் பறிப்பவர்கள் 10. ஒருவருக்கு உதவி செய்யும் மற்ற ஒருவரை இல்லாத பொல்லாத சொல்லிக் கலைத்து விடுபவர்கள். இப்படியானவர்களும் இவர்களை ஒத்தவர்களும் போன்ற பிறரும் மறுபிறப்பில் உடலற்றவர்களாக சுடு காட்டில் பிணங்களை உண்டு பேயினங்களோடு பேயாக வாழ்வார்கள்.

## 48. உயிரைக்கொடுத்தாவது அடைக்கலந் தந்தவர்களைக் காப்பாற்றும் உத்தமர்கள்

வனவேட னொருதினம் மலைமீதி லொருபுரு
வந்துறைந் திட்டு அகல
மறுநாளதிற் கண்ணி வைத்தவன் நிற்கையில்
வான்புறுப் பட்டு அழவே
மனதார மகிழ்வினொடு சென்றங்கு வேட்டுவன்
மாய்ந்தி டாமுன் விடுக்க
வடிவினுயர் பறவையும் எயினனின் கைதப்பி
வலுவாய்ப் பறந்து செல்ல
சினமோ டெழுந்தவன் பின்தொடர்ந் தேகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிபிச்சக் கரவர்த்தி மடியில்
சேர்ந்தென்னைக் காரென்ன எயினனும் சென்றனன்
தேக மதறுத் தவர்க்கு
கனமாக வீந்துதன் அபயமிடு பறவையைக்
காப்பாற்றி விட்ட தன்றோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

***உரைநடை:*** கானகத்தில் வாழும் வேடர்குல மகளைக் கண்டு மோகங் கொண்டு தேடிவந்து இறைசுதன் கந்தவேல் அந்த வள்ளியை திருமணஞ் செய்த கதிர்காமப்பதியே அபயம் என்று வந்தவர்களை ஆதரித்து தன்னுயிரைக் கொடுத்தாவது காக்க வேண்டியது ஒவ்வொருவரதுந் தலையாய கடமை.. அவ்வாறு செய்தவர்களின் புகழ் சிபிச் சக்கரவர்த்தியின் புகழ்போல யுகம் யுகமாக புவியில் நீடூழி காலம் நிலைக்கும் அச்சக்கரவத்தியின் வரலாற்றைக் கேட்பாயாக. ஒருநாள் பசியுற்றவோர் வேடன் வலைவிரித்துப் புரு வேட்டையாடினன். அதில் ஒரே ஒரு புரு அகப்பட்டது. அதனைச்சென்று அவன் எடுக்கும்போது தப்பிப் பறந்து விட்டது. ஆத்திரத்துடன் அதைத் துரந்து சென்றவன் அப்புரு சிபிச் சக்கரவர்த்தியின் மடியில் அடைக்கலம் பெற்று இருப்பதைக் கண்டு அது தனதாகையாற் தனக்குத் தருமாறும் தனது பசியைத் தீர்த்தல் அவரது கடமையென்றுங் கேட்டான். சிபிச் சக்கரவர்த்தியோ நான் அடைக்கலங் கொடுத்துவிட்டேன் ஆதலால் இந்தப் புருவைக் காக்க வேண்டியது என்பொறுப்பென்று சொல்லி அதைத் என்னாற் தரமுடியாதென்றும் உனக்கு உண்ண மாமிசந்தானே தேவையெனக் கூறித் தனது தொடையிலிருந்து புருவின் நிறைக்குத் தக்க சதையை சமனாய் அறுத்துக் கொடுத்துப் அப் புருவைக் காப்பாற்றினர்.

## 49. வேண்டாதனவற்றால் விளையும் பயனென்ன

தருணமதிலே உதவி செய்யாச் சிநேகரொடு
சார்பா யிருந்து மென்ன
தன்பசிக்கில்லாத உணவது இருந்தென்ன
சாலிக ளளிந்த பின்பு
வருணண்வெகு வேகமாய் மழையது பொழிந்தென்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலடிமனே கட்டி யென்ன
வாசனே யில்லாதமலர் பூத்துச் சொரிந்தென்ன
வான்கோழி ஆடி யென்ன
இரணகள மேகுவோர் பின்வாங்கி நின்றென்ன
இருமனேவி கட்டி யென்ன
இசையற்ற கவிகளேப் பாடிப் படித்தென்ன
இரகசியங் கற்று மென்ன
கருணேயில் லாச்செயல்கள் இவையெலாம் புவியதில்
காண்கில் நலமாகு மன்றே
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

***உரைநடை:*** ஆயிரக்கணக்கான அடியார்கள் முருகனேப் பணிய வரும்போது காவலாகக் கரத்திற் கொண்டுவரும் வேலாயுதங்களே ஒத்த வெள்ளிமுட் காடுகளின் மத்தியில் அருள் பாலிக்கும் கதிரையம்பதியே உலகத்தில் சில தக்க தருணத்தில் கிடையாது விட்டால் அவற்றாற் பயனேதும் கிடைப்பதில்லே. மேலும் சிலருக்குச் சிலவற்ருல் ஏதும் பயன்கள் கிடைப்பதுமில்லே. அவற்றிற் சிலவற்றை இயம்புகின்றேன் கேட்குக. ஆபத்தில் உதவாத சிநேகிதரும் பசிதீர்க்காத உணவும் வேழாண்மை வரண்டழிந்தபின் பெய்யும் மழையும் மேலும் மலடி வீடு கட்டுதல் மணமற்ற மலர்கள் பூத்துச் சொரிதல் வான்கோழி ஆட்டம் ஆடுதல் போருக்குச் சென்றபின் பின்தங்குதல் யாப்பும் பண்ணுமில்லாத பாடல்களேப் பாடல் இரண்டு தாரம் முடித்தல் இரகசியங்களேக் கற்றறிதல் என்பனவுமாம்.

## 50 பிறவுயிர்மேல் அன்பில்லாத கல்நெஞ்சர்

பணிவோர் தனேக்கண்டு மதியா திருப்போர்கள்
பசியறிந் தன்ன மீயார்
பால்காய்ச்சி வெண்ணேயை எடுத்துமோ ராக்குவோர்
பறிவைத்து மீன்பி டிப்போர்
பிணிநாடி அறியாத பிடகராய் வாழ்வோர்கள்
பேத மையகற் ருதவர்
பிடிவாத மில்லாத விரதம் பிடிப்பவர்கள்
பிதுர்பூ சைசெய் யாதபேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியாடு மாலயந் தனிலெச்சில் விடுவோர்கள்
மயிலாட வெய்து கொல்வோர்
வான்குருவி செய்திட்ட கூட்டைப் பிரிப்பவர்கள்
மாதம திதுதி யாதபேர்
கணிகையொடு சேர்பவர்கள் இவர்களும் புவியதில்
கடையேறி வாழ்வதுண்டோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

**உரைநடை:** வேலனைக் கண்டமயில்கள் ஆடும். தங்குல வள்ளியைக் கண்ட மான்கள் துள்ளி ஓடும். கரிமுகவனருள் பெற மதயானைகள் வரிசையாகச் செல்லும். இவைகள் இயமனின் வாகனங்களோவென்று அச்சமுறுமளவுக்கு எருமைகள்செல்லும். சீதையைத் தேடுவதுபோல குரங்குகள் மரத்திற்கு மரந்தாவும். இத்தகைய காட்டின் மத்தியில் இலங்கும் கதிரையம்பதியே மற்றப் பிராணிகளிடம் அன்பு வையாதவர்கள் சிலருள்ளனர். அவர்களைஅட்டவணைப் படுத்தித் தருகின்றேன். இவர்கள் யாவரும் இந்தப் பூவுலகத் துன்பிலிருந்து கடைத்தேறவே மாட்டார்கள். அவர்கள்; 1. தம்மை மதித்து கீழ்ப்படிபவர்களை அவமதிப்பவர்கள். 2.வாடுமுகம் பார்த்து பசிக்கு உணவு கொடாதவர்கள் 3. கன்றுக்குப் பால் கொடாது அதனை எடுத்து தயிர்மோர் வெண்ணெய் உண்டாக்கி வாழ்பவர்கள். 4.நோய்நாடி அறியாது பிணியாளரைப் பெரும்பாடு படுத்தும் போலி வைத்தியர்கள் 5.மற்றவர்களின் அச்சம் அறிவீனத்தை அகற்றாது அந்தப் பெலயீனங்களைத் தமக்குச் சாதகமாக்கி வாழ்பவர்கள். 6.சரிவர நோக்கம் வைராக்கியமற்று நோன்பு பிடிப்பவர்கள் .7. பரமபதமடைந்த தமது முன்னோரை நினைத்து மதியாதவர்கள். 8. தேவாலயம் போன்ற பரிசுத்த இடங்களில் உமிழ்வோர் ஆடும் மயிலை எய்து கொல்பவர்கள். 9. குருவிக் கூடுகளைப் பிய்த்தெறிபவர்கள். 10 பெற்றாரை வணங்காதவர்கள். 11.வேசைகளுடன் கலவி செய்பவர்கள் என்பவர்களாகும்.

## 51 அருமை பெருமை அறியாதவர்கள்

கிள்ளையின் அருமையைப் பூனைதா னறியுயேமா
பசுவருமை புலிய றியுமோ
கீதத்தி னருமையை நாய்நரிக ளறியுமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமை கெடுவிட ரறிவரோ
பிள்ளைதன் அருமையை மலடிதா னறிவளோ
பேசரிய கற்பி னருமை
பித்தம் பிடித்திட்ட கொடியவர்க ளறிவரோ
பிரமகுல மக்க ளருமை
கொள்ளையிடு வோர்களும் அறிவரோ மலரருமை
குரங்கினந் தான றியுமோ
கொற்றவர்க ளருமையை வனவிலங் கறியுமோ
குமரவேள் தன்னருமையைக்
கள்ளையுண் டிடுகெடுவர் அறிவரோ இவையெலாம்
கண்டறிந் திடுவ தன்றோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

உரைநடை: கிளியின் அருமையைப் பூனை அறியாது. பசுவின் அருமையைப் புலி அறியாது. அவைகளுக்கு வேண்டிய தெல்லாம் தமது பசியைத் தீர்க்கும் ஊன்தான். இசையின் பெருமை குரைக்கும் நாய்க்கும் ஊளையிடும் நரிக்குந் தெரியாது.மானம் மதிப்புப்பற்றிய அருயைபற்றிக் கேடுகெட்ட துட்டர்களுக்குத் தெரியாது. மலடிக்குப் பிள்ளையின் அருமையும் கற்பின் அருமை பெண்ணாசை மிக்க காமுகர் களுக்குந் தெரியாது. நற்குண நற்பண்புள்ளவர்களின் அருமை கொள்ளையிடுங் கள்ளர்களுக்குத் தெரியாது குரங்குக்கு மலரருமை தெரியாது. .மன்னர்களின் அருமையை காட்டு விலங்குகள் அறியாது அதுமட்டுமல்ல கதிர்காமப் பதியே உன் திவ்விய தலத்தில் எழுந்தருளியிருக்கும் குமரப்பெருமாளின் அருமை கட்குடியர்களுக்குத் தெரியவே தெரியாது.

## 52. சுடுகாட்டிற் கொண்டு நிறுத்துங் கர்வம்

கூடாத கூட்டங்கள் கூடியே பெரியோர்கள்
குணமதைத் தானி கழ்ந்து
குதித்துத் துடித்தவர்கள் மாமிச மருந்தியே
கொள்ளைகள் அடித்து மகிழ்வர்
பாடாத பாவினிசை போலவர்கள் பேசியே
பழித்துக் கழித்து மொழிவர்
பஞ்சவினை யறியாமல் மதுவேட்டை யாடியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரியொடு வாழ்ந்து புகழாய்
தேடாத வினைகளைத் தேடியே வாடுவோர்
தீந ரகுபின் னேகவே
செப்பரிய சற்குரு வினுந்தேச முறையிலும்
சேராது கொடிய நிறையில்
காடான சுடலைக்கு ஏகுகின்ற தருணத்திலே
கர்வ மதுநிலை நிற்குமோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

***உரைநடை:*** வரட்சிக் காலத்தில் மாணிக்கை கங்கைக்கு வற்று வளமுட்ட மருங்கில் வீரவேவாக் குளம் அமைந்து இருப்பதால் செழிப்புறும் கதிரைமலையம்பதியே அதனால் உன்னுடைய பதியை அண்டிவரும் அனலின் ஆணவம் முற்றாக அற்றுப் போகின்றது. அதுபோலவே உலகில் தீயவர்களோடு நட்புடன் உறவாடி பெரியவர்களை அவமதித்து மேட்டிமையாக வாழ்ந்த வர்கள். மது அருந்தி மாமிசம் உண்டு கொள்ளையடித்து மகிழ்ந்தவர்கள். இனிமையாகப் பாடும் பாட்டினைப் போலக் கனிவாகப் பேசி மற்றவர்களை எள்ளி மகிழ்பவர்கள். மற்றவர்களுடைய பசி பட்டினி என்பதைச் சற்றுஞ் சிந்தியாது தானுந் தனது குடும்பமும் மதுக்குடித்தும் வேட்டையாடி அதனுனை உண்டும் வாழ்கிறவர்கள். அநியாயமான காரியங்களைச் செய்து குரு உபதேசங்களை விட்டு வாழ்பவர்கள். உலக வழக்கை மீறி வாழ்பவர்கள் என்போர் இறந்து சுடு காட்டிற்குப் போகுந் தருணம் வந்தால் தமது ஆணவங்களையும் பெருமைகளையும் வீசி விட்டுக் கதறுவர்.

## 53.வலிமைக்கு நிகர் வலிமைதான்

குஞ்சரந் தானது பெருத்தஉட லானதால்
குட்டியரி அஞ்சி விடுமோ
குக்குடங் கூடியே கூவினுல் இராசாளி
கூசியே துஞ்சி விடுமோ
தஞ்சமுறு ஆவினம் வால்வீசி நிற்பதால்
தருவேங் கைகண்ட கலுமோ
சர்ப்பமது படமெடுத் தாடியே காட்டினுல்
சார்நகுலம் தாள்ப ணியுமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சவடி வானகிளி பண்சுரமே பாடினுற்
பயந்துதான் பூனை செலுமோ
பறவையின் மின்மினிப் பூச்சியது வீசினுல்
பருதியொளி மங்கி விடுமோ
கஞ்சமலர் தன்னில்வாழ் கலைமகள் கருணையால்
கலைவாணர் பாட லன்ருே
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

உரைநடை: கதிர்காமத்தம்மானை ( இந்த நூலாசிரியரின் மற்ெருரு படைப்பு) எனும் நூலில் வள்ளியம்மனின் திருமண வரலாறு கூறப்பட்டுள்ளது. உன்னுடைய தலத்தில் நடைபெறும் வைபவத்தின் சிறப்புகளை எடுத்துக் கூறுவதாகவே அந்த நூல் யாக்கப்பட்டுள்ளது. அத்தகைய பெருமையுஞ் சிறப்பும் வாய்ந்த கதிர்காமப்பதியே வலிமை என்றுமே வலிமைதான். உயர்வு என்றுமே உயர்வுதான். பெரிய யானையைக் கண்டு சிங்கக்குட்டி பயப்படாது. பல கோழிகளின் கூவலுக்கு ஒரு இராசாளி பயந்து விடாது. பசுவின் வாலாட்டுதலைக் கண்டு புலி பயந்துவிடாது. பாம்பின் சீற்றத்திற்குக் கீரிப்பிள்ளை பதுங்கி ஒதுங்கிவிடாது, கிளிமொழிக்குப் பூனை கிஞ்சித்தும் அஞ்சாது. பறந்து செல்லும் மின்மினிப் பூச்சியின் ஒளிகண்டு சூரியனின் ஒளி குன்றிவிடாது. இவையெலாம் வெண்டாமரை மலராசனத்தாளின் அருள்பெற்ற கவிவாணரின் கருத்துக்கள் அல்லவோ.

## 54 நாகரீக வாழ்க்கையுங் கற்பு நிலையும்

தங்கத்தில் நித்திலம் ரெத்தின மிழைத்தநகை
தையல ரணிந்த வுடனே
சரசரதி போலாகி ஆடவர்க் கின்பவுரு
சார்புற்று மாயை அதனுல்
சங்கை கேடானபர புருஷர்நினை வாகியே
ததிகெட் டேமெய் வாடவும்
சாற்றரிய நற்புத்தி கேளாமலே காமத்
தாகமது மேற்கொண் டதனுல்
பங்கமது கெட்டு மரியாதைக் கேடாகியே
பாரில் வெகுதுன்ப முற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவையர்க ளாண்மக்க ளாலலேவதே யொழிய
பந்தவி னேவே றேதுமோ
கங்கணங் கட்டினும் நாகரீக வாழ்க்கையால்
கற்பழித லாகு மன்றோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

***உரைநடை:*** ஈழத்திலே அதிக வரட்சியான நில வலயங்கள் இரண்டு உள்ளன. . அவற்றுள்ளே ஒன்று மன்னூர் வலயம் அடுத்தது அம்பாந்தோட்டை வலயம். இவற்றில் மழைகுறைவும் வரட்சி அதிகரிப்பும் அதிகம் பாதிப்பை ஏற்படுத்துவதாக இருந்தாலும் இவ்விரண்டு வலயத்திலும் முக்கிய சமய தலங்கள் இருக்கின்றன. அவற்றில் அம்பாந்தோட்டை வரட்சி வலயத்துள் அமர்ந்துள்ள கதிரையம்பதியே வரட்சியிலுங் குளிர்ச்சியை வாரி வழங்கும் உனது தெய்வீகத்திற்கு எதை நிகராகச் சொல்வேன். இது இவ்வாறிருக்க குளிர்ச்சியின் பிறப்பிடமாக இருக்க வேண்டிய சில இடங்களில் வரட்சி நிலவுகின்றது என்பதையும் எவ்வாறு எடுத்துச் சொல்வேன். பெண்களின் கரங்களே இவ்வுலகத்தைப் பராமரிக்கின்றது. தாயின் வடிவிலும் தாரத்தின் வடிவிலும் அது தயாளத்தைத் தந்து தாரணியை வளர்க்கின்றது. என்றாலும் இதற்கு மாறாகச் சில பெண்கள் நாகரீக வாழ்க்கையில் ஈடுபட்டு இந்தப் பெருமைக்குக் களங்கமாக வாழ்கின்றார்கள். இவ் வாழ்க்கை எவ்வாறானதென்று பார்த்தால்: தங்கத்தில் நவரெத்தின மணிகளைப் பதித்த ஆபரணங்களையும் தமது உடலை அரைகுறையாக மறைக்கும் ஆடைகளையும் வாசனைத் திரவியங்களையும் அணிந்து கலவி விளையாட்டிற் கைவந்த ரதியைப்போல ஆடவர்களை மயக்கும் வடிவத்தைப் பூண்டு பிற ஆண்களின் வசப்பட்டு உடலின்ப உணர்ச்சியால் மிகமிக உந்தப்பட்டு வாழ்ந்து கற்பிழந்து விடுகின்றார்கள். இந்தப் பெண்-பெலயீனத்தைத் தங்கள் பெலனுகக் கொண்டு ஆண்கள் இவர்களை அடுத்து பகடைக்காய்களாகவும் விளையாட்டுப் பொருளாயும் வியாபார மூலதனமாகவுங் கொண்டு சீரழித்து விடுகின்றார்கள். நாகரீக மோகம் இவ்வாறு மானக்கேட்டையும் உடற்தளர்வையும் எல்லாவற்றுள் மேலாகப் பெண்ணுக்குரிய கற்பெனுந் திண்மையையும் அழித்து முற்றாக விடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 55 அதர்மத்தின் இறுதிப்பயன் அழிவுதான்.

முடிகொண்ட துரியோ தனன்தனது செல்வமும்
முசுகுந் தனின்த குதியும்
மூர்க்கமுறு மிரணியன் கர்வமும் கைடவன்
மூச்சிலெழு கெடும திகளும்
இடிகொண்ட சூரர்தம் வீரமுங் கஞ்சனின்
எடுபாட் டுத்திட சித்தமும்
இரவிதன் கன்னனின் தீரமுந் தேவர்கோன்
இந்திர சித்த னுரமும்
சடுத்திட ராவணண் வலிமையும் வாணனின்
தளராத ஆண்மை யதுவும்
தக்கனது யாகதவ மகிமையும் நரகனின்
நடினதிற துரித மதுவும்
கடுநெஞ்சு கொண்டவிவர் அதர்மத்தி னுலழிவுக்
காலமது வான தன்றே
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

***உரைநடை:*** சாதியிற் குறைந்த குறத்தி வள்ளியம்மையும் கோத்திரத்தில் உயர்ந்த விண்குல தெய்வானை யம்மையும் இருதாரமாகக் கொண்டு ஒரே தலத்தில் அவர்களுக்கு வேறு வேறு ஆலயங்களை அமைத்து அங்கே எழுந்தருளிப் பண்ணி பக்தர்கட்கு சமேதராக அருள் பாலிக்கக் கந்தவேற் கடவுள் சுப்பிரமணியன் எனும் மறு நாமத்துடன் எழுந்தருளி இருக்கும் கதிர்காமப்பதியே. உலகத்தில் கர்வம் கூடாவே கூடாது. துரியோதனனின் முடிவையும் முசுகுந்தன் இரணியன் கைதவன் பகாசூரன் சிங்கமுகாசூரன் ஆதியவர்களின் முடிவையும் கஞ்சன் கன்னன் இந்திரசித்து இராவணண் மகாபலிவாணன் தக்கன் நரகாசூரன் என்பவர்கள் உலகிற் புரிந்து வந்த ஆணவமும் அதர்மங்களும் எவ்வாறு அடியோடு அழிந்து ஒழிந்தன என்பதையும் ஆய்ந்து பார்த்தால் ஆணவ வாழ்க்கை உலகில் அழிவைத்தான் இறுதியிற் தரும் என்பது வெள்ளிடைமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 56 கருவிலுருவான குணத்தை மாற்றமுடியாது

நெருப்பினி லிருக்கலாம் நஞ்சதனை உண்ணலாம்
நீர்மேல் நடந்து வரலாம்
நித்திரையை மாற்றலாம் மூச்சதை அடக்கலாம்
நிரியா ணமதை வெல்லலாம்
உருத்தெரி யாதபடி உலகத் துலாவலாம்
ஊமையைப் பாட விடலாம்
ஊணற்று வாழலாம் உயரண்ட மேகலாம்
உண்மை யைப்பொய் யாக்கலாம்
இருப்பதை வளைக்கலாம் மறுகூடு பாலாம்
இயமனை யும்வச மாக்கலாம்
இடர்கள்தரு புலிகரடி கரிசிங்க மேறலாம்
அரவி னைஎடுத் தாட்டலாம்
கருப்பையில் அசடுற்ற கயவர்குணம் மாற்றவுங்
காசினியில் யாரு முண்டோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

**உரைநடை:** முருகனின் அடியார்களாகிய பல கவிவாணர்கள் யாத்த காவடிச் சிந்துகளையும் வழிநடைப் பதிகங்களையும் இசைத்துக்கொண்டே கொடிய விலங்குகள் வாழுங் கடிய கானகத்தில் உள்ள ஒற்றையடிப் பாதைகளினூல் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலுமிருந்து நவீனப் பயண வசதிகள் உள்ள இந்தக் காலத்திலும் கால்நடையாக அடியார்கள்வந்து கூடும் கதிரையம்பதியே. என்றோ ஓர் நாள் நெருப்பின்மேல் இருந்து விடலாம். நீரின்மேல் நடக்கலாம். துயிலாது இருந்து விடலாம். இவற்றிலும் அரியபல காரியங்களைச் செய்யலாம் (நிரியாணம்) எனப்படும் மரணம்) எவருக்கும் நித்தியமான மரணத்தையும் வென்றுவிடலாம். பிறரின் கண்களுக்கு எம்முருவந் தெரியாமல் உலாவி வரலாம். ஒருவேளை ஊமையும் பாடலாம். உண்ணுமல் வாழ்ந்தும் விடலாம். பிரபஞ்சத்தில் எங்கும் போய்வரலாம். இரும்பை வளைத்து விடலாம். உடல்விட்டு உடல்மாறிப் புகுந்து வாழலாம். இயமனைக்கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது வசமாக்கிக் கொள்ளலாம். சிங்கம் புலி கரடி யானை ஆதியவற்றைப் பழக்கி அவற்றின்மேற் சவாரி செய்யலாம். பாம்பையும் அடக்கி விடலாம். இவற்றிற் சில இன்று முடியுங் காரியங்களாக இருக்கின்றன. சிலபல காரியங்கள் முடியாக் காரியமாக இருந்தாலும் எதிர்காலத்தில் என்றோ ஒருநாள் இயலுவதாகும். ஆனால் மனிதரில் கருவிலே உண்டானகயமைத் தனத்தை எவலாலும் எப்படியும் என்றுமே மாற்ற முடியாது.

## 57.காசிக்குப் போக முத்தி.

மாசறுத்திடு தீர்த்த நதியெலா மாடினும்
மலர்தோப்பு வைத்து விடினும்
வறுமையுறு மங்கைக்கு மணமகன் சேர்ப்பினும்
மாதானம் செய்து வரினும்
பாசத்தை நீக்கியே யோகநிலை யாயினும்
பரமனைப் போற்றி வரினும்
பாரிடந் தன்னுலுயர் கோயிலது கட்டியே
பண்டுவினை மாற்றி வரினும்
தேசத்திலே சென்று ஏழை தளராதபடி
திரவியம் ஈந்து வரினும்
செங்கண்நெடு மாலுக்கு அடிமையாய் வாழினும்
திருநீற்றுக் காப்ப ணியினும்
காசிநதி யாடாமல் பாவவினை மாறுமோ
பகீரதன் கருணை யன்றோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தருறை கதிர்காமமே

உரைநடை: பகீரதன் தவமிருந்து உலகிற்குப் பரம சிவனருளாற் கொண்டு வந்தது கங்கை. இது காசித் தலத்திற் பெருகிப் பிரவாகித்துப் பாய்கின்றது. அங்கே காசி விசுவநாதர் அருட்கருணை பக்தர்க்குப் பாலிக்கின்றார் ஆதலால் இத்தீர்த்தம் உலகிலுள்ள தீர்ததங்களுள் முக்கியமானது. உலகத்தில் உள்ள வேறுபல தீர்த்தத்தலங்களைத் தரிசித்தல், நந்தவனங்களை உண்டாக்கல், வறிய பெண்களுக்கு மணவினை செய்வித்து வைத்திடுதல் மாதானம் முதலிய தானங்களைச் செய்தல், உலக பந்தத்தைத் துறந்து யோகஞ் செய்தல், எப்போதும் பரமனையே நிதம் நினைத்து வாழல். ஆலயங்களை அமைத்தல், தேசமெங்குஞ் சென்றுதான தருமஞ் செய்தல். திருமாலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியவனுய் வாழ்தல், விபூதி அணிதல் என்னும் பல நல்ல காரியங்களைச் செய்தாலும் கங்கையில் நீராடிக் காசி விசுவநாதனை வழிபடுவது முக்திக்குரிய வழிபாடாகும். ஆயினும் இவ்வசதி எல்லாருக்குங் கிடைப்பதில்லை. பலருக்கே எட்டாக் கனியாக இருப்பதால் காசி விசுவ நாதனைத் தரிசிக்க முடியா தவர்கள் அவரது மகன் முருகன் இருக்கும் பதியாகிய உன்னி டத்தில் வந்து நீராடிப் பணிந்து வழிபாடு செய்கிறுர்கள்.

## 58. மாணிக்க கங்கையின் பெருமை.

மாணிக்கக் கற்கள்பல விளைவுறுங் கதிரையில்
வனவேலன் நம்பியரசன்
மகிடந் தரித்தரசு புரிகின்ற வேளையில்
மலைவே டர்தற் சூழவே
ஆணிப் பொன்ளுலே அமைத்திட்ட இல்லமும்
அரும்பிளைத் திட்ட மதிலும்
அழகா யியற்றியே அரசாட்சி செய்கையில்
அரியவன் புதல்வி அமர
தூணிற் கலந்ததிரு மால்மருகர் வள்ளியொடு
சோதி பெற்றுயர் பதியிலே
சுரரேவல் செய்யமலை மீதினி லிருக்கவே
துதித்திட வெழுந்து நம்பி
காணிக்கை கட்டிநற் கங்கை நீராடிடுங்
கருணைபெறு தலமி தன்றோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** மலையிற் பிறந்து காட்டிற் தவழ்ந்து வந்தாலும் உனது பதியை அடைந்ததும் மாணிக்க கங்கை ஒரு புண்ணிய தலமாக மாறுவதுபோல எப்பாவஞ் செய்து எங்கிருந்து வரினும் நின்னடியார்கள் உன்பதியை அடைந்ததும் முருகனின் அடியார் என்ற மதிப்பைப் பெறுகிறுர்கள்.அதற்கு காரணமாக இருக்கும் மாணிக்கை கங்கையின் பெருமையை யாரால் எடுத்துரைக்க முடியும். அதில் விளையும் மாணிக்கக் கற்களினுல் அப்பெயரை அந்த நதி பெற்றது. அதுமட்டுமல்ல கதிரை மலையில் வாழ்ந்த வேடர்குல நம்பியிராசன் என்பவன் வேடர்களின் தலைவனுக முடிசூடி ஆணிப் பொன்னுற் செய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாளிகையும் முத்துக்கள் இழைத்த அரண்களும் கட்டி உயர்வாய் வாழ்ந்தான். இத்தருணத்தில் தூணிலும் இருக்கும் திருமாலின் மகளான வள்ளி அவர்க்கு வளர்ப்பு மகளாக வந்து கந்தனைக் கரம்பிடித்துக் கதிரைமலையில் எழுந்தருளி இருக்கையில் அவளின் தந்தையான நம்பியரசனே காணிக்கைகள் இட்டு மாணிக்கை கங்கையில் நீராடி கருணை பெற்றனன். இதனாலும் மாணிக்க கங்கை மதிப்புற்றது.

## 59 விலைமாதரின் சாகசம்.

ஆடவர்கள் வந்திடிற் கதவதனில் மறைகுவள்
ஆபரண மாடை யணிவள்
அன்னையைக் கண்காட்டி வந்தவ ரிடத்திலே
ஆசாரம் பேச விடுவள்
மாடமது விட்டு வெளிவாசல் வந்துபின்
மையல் வரக்கதை பிணைப்பள்
மன்னனே எனதுமனை தன்னிலே உம்மையும்
மருவநான் செய்த தவமே
தேடரிய உனைவிட்டு உய்வனோ தங்களுயிர்
சிதைந்திடில் நானு மழிவேன்
செப்பியிதழ் கொஞ்சியே சேர்ந்து புணர்ந்துபொருள்
வாங்கிச் சிரித்த கலுவாள்
காடகம் பெற்றகரி முகவனே விலைமாதர்
கபட மிதாகு மன்றோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

**உரைநடை:** இப்பதியில் உள்ளவர்கள் எவருமே மச்ச மாமிசம் உண்ண மாட்டார்கள். மேலும் யாவரும் கொல்லாமை விரதம் பூண்டவர்கள். ஆதலால் புல்வெளிகளில் புள்ளி மான்கள் துள்ளி விளையாடும். மானிக்க கங்கையில் மீன்களும் மெள்ளத் தாவி நீந்தி விளையாடும். பறவையினங்கள் பயமற்று பக்தர்கள் இடும் பருப்மையும் தானியத்தையும் உண்டு வளரும். மாமிச உணவு உண்ணும் காக்கை பருந்து முதலிய பறவைகள் கூட சாகச பட்சணங்களையே உண்டு தமது வயிற்றுப் பசியை நன்கு தீர்த்துக் கொள்ளும். இத்தகைய பாவமறுக்கும் புகழ் படைத்த கதிரையம்பதியே மாதர் மயக்கில் மயங்கிபரத்தைபாற் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணமும் உடல் நலமும் மானமும் இழந்த அநேகர் தமது பாவ வினைகளைத் தீர்ப்பதற்கு உன்னை நாடி வருவார்கள். அவர்களை இந்த இழிந்த நிலைக்குக் கொண்டு வந்த அந்த தாசித் தொழில் புரியும் மானமற்ற மாதரைப் பற்றி சில சொல்கின்றேன் கேட்குக. காம நோய் விழைவால் கணிகையரை நாடி வரும் ஆண்கள் தங்களது மனைக்கு வருவதை ஆடை அணி களபம் பூண்ட அவள் கண்டதும் கதவில் தன்னை மறைத்துத் தாய்க்குக் கண் சாடை காட்டி அவள் மூலஞ் சுகநலம் விசாரிப்பாள். பின்பு வெளியில் வந்து ஆசை மூட்டும் காதல் மொழிகளைப் பேசுவாள். எனது வீட்டிற்கு நீங்கள் வந்தது எனது தவப் பயன் என்றும் உங்களைப் பிரிந்தால் கணமும் வாழ முடியாது நானும் இறந்து விடுவேன் என்றும் பகட்டு மொழி பகர்வாள். இதற்குப் பரிசாகவுங் கூலியாகவும் கையில் உள்ள பொருட்களை எல்லாம் சிரித்துச் சிரித்துக் கரைத்து எடுத்து விடுவாள்.கடைசியில் வறுமையையும் உடலுறவு நோய்களையும் பதிலாகத் தந்து அப்புறப் படுத்தி விடுவாள். காட்டை இல்லமாகக் கொண்டு வாழும் யானை முகத்து விநாயகனே இதை நீயுங் கேட்பாயாக.

## 60 திருமகள் வாழும் திறல் நகரம்.

நாற்காத வகலமும் நீளஞ் சதுக்கமாய்
நறுமலர்த் தோப்புக ளோடே
நதிவாவி மாட மாளிகை கூடங்கள்
நாட்டியம் ஆடல் பாடல்
மார்க்கமெழு ஆலயம் கோபுரம் நாற்படை
மன்னர் மந்திரி பிரசைகள்
மணியொலித் திடுவீதி மறையோர்கள் நிறைசோலை
வயல்கமு குபலா கூவிளம்
திர்க்கமுறு கரியொட்டை பசுமேதி சுரவீணை
தீபமது சேர்ந்து உயர்வாய்த்
திருமகள் கடாட்சமென வாழ்கின்ற நகரிவைகள்
செப்பரிய செகத்தின் சிரசே
காற்கடிகை யாயினும் இந்நகர மதனையே
காணவெகு காட்சி யாமே
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரைநடை:** ஒரு காலத்தில் நம்பி ராசனும் அதன் பின்பு சிங்கள மன்னர்களும் அரணமைத்து ஆட்சி செய்ததிற்கு சரித்திரச் சான்றுள்ள கதிரையம்பதியே. ஒரு நல்ல நகரம் எவ்வாறு அமைப்புள்ளதாய் இருக்க வேண்டும் என்பதற்கு முன்மாதிரியாகச் சிறப்புடன் இருந்தாய் அச் சிறப்புகளிற் சிலவற்றைக் கூறுகின்றேன். நாலுபேர் நின்று கூவும் அளவுக்கு சற்சதுரமான பரப்புடையது. நந்த வனம் மலை நதி வாவி மாடங்கள் மாளிகைகள் ஆடற் பாடற் கூடங்கள் கோபுரங்கள் என்பவற்றைக் கொண்டது.. சங்கங்களையும் ஆலயங்களையும் கச ரத துரக பதாதி எனும் நான்குவிதப் படைத் தளங்களையும் உடையது. மணியோசை மிகும் வீதிகளும் தவஞ் செய்வோரின் பஞ்சவடிகளும் வயல்களும் தெங்கு கமுகாதிய தாலங்களும் மா பலா வாழை யாதிய தருக்களும் நிறைந்தது. யானைகளும் ஒட்டைகளும் ஆவினங்களும் பூரித்து வாழுமிடம். எங்குந் தீபம் ஒளிரவும் வீணை இசை பண்கள் தப்பாது ஒலிக்கவும் இலக்குமி உறைகினற தலம்போன்றது. அதிக காவல் மிக்க இடமாக இருந்தாலும் இப்படிப் பட்ட நல்ல நகரத்தைப் பார்ப்பது கண் கொள்ளாக் காட்சி என்றே சொல்லலாம்.

## 61 கல்வியெனும் அழியாச் செல்வம்.

வையகத் துற்றபொருள் தன்னிலே குறைவறுக்
கல்வியே வளர்பொ ருளதாம்
மன்னரா லழியாது மண்ணீர் கரைக்காது
வன்நெருப் பாலு ருகிடாது
ஐயமெழு அலகையின் பார்வையா லகலாது
பரமாதர் பறிக்க முடியா
அதர்மத்தி லீடுற்ற கரவருந் திருடொணு
ததிக செலவாகி விடுமேல்
பையதி லெடுக்கொணு தாய்தந்தை சேட்டர்க்குப்
பண்டமாய் ஈயொ ணுது
பாரதனி லிப்பொருள் அழியாத மெய்ப்பொருள்
பாதுகாத் திடுதல் எழிது
கையகப் பொருளிதைக் கல்லாத நிர்மூடர்
காசினியி லுயர்வ துண்டோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***உரைநடை:*** கதிர்காமப் பதியே உந்தன் பேரிலும் உனது தலத்தில் எழுந்தருளி இருக்கும் கந்தன் மீதும் கணக்கற்ற வழி நடைப் பாக்களும் தோத்திரப் பாக்களும் துதி மாலைகளும் திருப்புகழ்களும் தேவார மாலைகளும் தல விசேட வரலாறுகளும் பதிகங்களும் ஏசல்களும் கும்மிகளும் தெம்மாங் குகளும் காவடிச் சிந்துகளும் நாடகங்களும் இசைக் கீர்த்தனைகளும் தமிழகத்திலும் ஈழத்திலும் வாழ்ந்த பல பக்திப் பாவாணர்களாற் யாக்கப்பட்டு உள்ளன. அந்தத் தமிழ்ப் பாவாணர்களிடம் இருந்த செல்வம் யாவுங் கல்விச் செல்வமே. அச்செல்வத்தைப் பற்றியுஞ் சிறிது பகர்கின்றேன் கேட்பாயாக. அள்ள அள்ளக் குறையாது வளர்ந்து கொண்டே செல்லுஞ் செல்வம். பகை மன்னரின் படையெடுப்பாலோ நீர்ப் பெருக்காலோ நெருப்பாலோ அழிந்து விடாது. சந்தேக மென்னும் பேயினாலும் ஒருகாலுந் தேயாதது. வேசைகளாலும் கள்வர்களாலும் கவர்ந்து களவாடப்பட முடியாதது. செலவாகி விட்டால் கற்று வைத்த மனப் பை வெறுமையாகி விடாது. பெற்றோருக்கும் சகோதர்க்கும் உறவினர்கும் பண்டமாற்றுப் பொருளாக வழங்க முடியாது. உலகத்திலே என்றும் அழியாத மெய்ப் பொருள் கல்வி ஒன்றுதான். இதைப் பாதுகாத்திட அரணோ மதிலோ ஆயுதப் படையோ அவசியம் அற்றது. கையில் என்றும் நிலைத்திருக்கும் இந்தக் கல்விச் செல்வத்தை அடையக் கல்லாத மூடர்கள் உலகத்தில் உய்வும் உயர்வும் பெறார்கள்.

## 62. நல்ல வைத்தியர்கள்.

வீரத்தி லுற்றதொழில் காலத்து ஊண்சுவைகள்
மிக்க வுடல்லெட் சணங்கள்
விஞ்ஞான பார்வையாற் கண்டவுடனே நாடி
மெய்ஞ்ஞான அறிவு நெறியாய்
தீரப் பரிந்துகுரு நாடியும் அறிந்துபின்
சித்தர் வாகட மதனிலே
செப்பிய படிக்கிவைகள் செய்துபிணி தீர்ப்பவரே
செகம்புகழும் மருத்துவர் களாவர்
தூரத்துக் கானலைக் கண்டமான் போல்நோயின்
தொடர்பு கண்டறி யாதபேர்
சூடுகுளிர் என்றுதூள் குளிகைகளை ஈந்திடில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூலநோய்ப் பட்டு நரக
காரத்திலே விழுவ ரென்றுமுனி வோர்களும்
கழறினர் கலைகள் பலவே
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** ஈழத்துக்கு இரு முனைகள் உள்ளன. வடக்கில் பருத்தித்துறை எனும் முனை. தெற்கில் தெய்வெந்திர முனை எனும் தெவுந்துறை. இந்த இரண்டு முனைகட்கும் இடைப்பட்ட ஈழ மக்களுக்கும் அருள் தந்து விளங்குங் கதிரைவேலன் உறையும் புண்ணியப் பதியாங் கதிரமலையே. இந்த உலகத்திற் பிறந்த யாவர்க்கும் இரண்டு பிணிகள் உள்ளன. அவற்றை இம்மை மறுமைப் பிணிகள் எனறு உரைப்பர். இம்மைப் பிணியில் உடற்பிணி பவப் பிணியென இரண்டு உட்பிணிகள் உள்ளன. இப்பிணிகள் யாவும் உனதருளான் பகலவனைக் கண்ட பனிபோல அகன்று விடும். அவற்றுள்ளும் உலகிற் பவப்பிணி தீர்க்கும் மருந்து நீயேதான். உடற்பிணி தீர்க்க பலவித ஔடதங்களையும் பதார்த்தப் பொருட்களையும் மூலிகைகளையும் இந்தப் பூவுலகத்தில் நிறையத் தந்துள்ளாய். அவற்றைச் சரியான முறையிற் சேர்த்து நோயருக்கு அளிக்க மருத்துவக் கலையையும் மருத்தவர்களையுந் தந்துள்ளாய். இதனை உணராத போலி மருத்துவர்கள் தமது வயிற்றுப் பசிக்காக வருந்தும் நோயரை வருத்திச் செய்யும் பாவச்செயல்களுக்கு நரகந்தான் மறுமையிற் கிடைக்கும். ஒரு நல்ல வைத்தியன் காலனுடன் போராடும் வீரனுக, உணவு சுவைகள் உடலமைப்புகள் விஞ்ஞான அறிவுகள், நோயரைப் பார்த்தும் அவர்தம் நாடியைத் தொட்டும் நோயறியும் வன்மை என்பன உள்ளவனுக இருப்பான். குரு நாடி முதலானவற்றின் துடிப் பால் நோய்க் குறிகளை அறிந்து பழைய அனுபவஸ்தர்கள் ஆகிய சிததர்கள் தந்து சென்ற வாகடங்களை ஆராய்ந்து அதற்கேற்ற குளிகை தூள் எண்ணெய் கசாயம் நசியம் முழுக்கு மருந்து முதலியவற்றைத் தேர்ந்து கொடுப்பவனுக இருப்பான். போலி வைத்தியன் இவற்றிற்குப் புறம்பானவன். கானலை நீரென்று நினைக்கும் மான்போல தவறுதலாக நோய்களை நிதானிப்பவன். தவறுதலான மருந்துகளைக் கொடுத்து நோயாளிகளை மேலும் பிணியாளராக்கி கொலை செய்து நமனுலகிற்கு அனுப்பி விடுவார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 63 பாவையரிற் சிறந்த பத்மினிப்பெண்

கூவிளங் கொங்கையாள் செண்பக நிறத்தினுள்
 கொடுமை பொய்சொல் லாதவள்
கொவ்வைக்கனி வாயினுள் பாரிசாத மலரின்
 குலவு வாச முடையாள்
மாவிலைத் தேகியாள் மாபெரியோர் சுரரை
 வாழ்த்திப் பணிந்து மகிழ்வாள்
மாதிரிய கனியென்ப வெட்பூ நாசியாள்
 மல்குரா மலர் நேரினுள்
பூவிதழ் நாவினுள் புள்ளிமான் பார்வையாள்
 புகழ்துடி யிடையு முடையாள்
பூதலந் தன்னிலிப் புனிதவுரு அமைந்திடில்
 பூவையிற் பதுமினிப் பெண்ணும்
காவலர்க் குற்றமனை யாளிவர்கள் தானின்றி
 கரவருக் கேற்ற தாமோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
 கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** இலல்லறம் நல்லறமாய் அமைவதற்கு நல்ல இல்லத்தரசி அவசியம். ஒரு நல்ல மனைவியைக் கண்டடை பவன் சொர்க்கத்திலேயே வசிக்கின்றான் என்று சொல் வார்கள். அவ்வித இல்லத் தரசிகள் நால்வகைப் படுவர் அவற்றுள் மிக உத்தமமானவள் அவள் உன்பதியிற் பிறந்து வளர்ந்து முருகக் கடவுளுடன் நகமுஞ் சதையும்போல இணைந்து வாழ்ந்து வரும் வள்ளியம்மை. அந்தப் பிராட்டியின் இலட்சணங்களுக்கு ஒப்பான இலட்சணங்கள் உடையவள். அத்தகைய இலட்சணங்களை எடுத்துச் சொல்வேன் கேட்பாயாக. அவளது கொங்கையோ கூவிளம் போன்றது. .நிறமோ செண்பகப் பூப்போன்றது. கொடுமை பொய் சொல்லாத கொவ்வை வாயிதழாள். பாரிசாத மலர் வாசனையை இயல்பாய் உடையவள். மாந்துளிரன்ன மென்மையுடைய உடலினள்.பெரியவர்கள் தேவர்கள் மூவர்கள் என்பரைப் போற் றுவதிலும் புகழ்ந்து பணிவதிலும் மனநிறைவு காண்பவள்.. விவேகம் நிறைந்தவள் எள்ளின் பூப்போன்ற நாசியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையவள் குரா மலரைப் போன்ற நேர்மையினள். செந்தாமரைப் பூவின் இதழை ஒத்த நாவை உடையவள். மானைப் போன்ற பார்வையும் உடுக்கு போன்ற இடையும் அமைந்தவள். இத்தகைய பெண்ணே பெண்களிற் சிறந்த பத்மினிப் பெண்ணாவாள்.

## 64 சித்தினிப் பெண்ணின் சிறப்பு

நலந்தரும் வாயினிதழ் கொவ்வைநேர் கனியினுள்
நளினதுடி வார்த்தை யுடையாள்
நாவினூ றிரசமது வாயினுள் போகமது
நாடியொரு சாம மணைவாள்
பெலன்தரும் அற்புவூண் சங்கீத மதினிலே
பெருமைசேர் பிரிய முடையாள்
பிணியற்ற தேகியாள் மனைதூ சகற்றுவாள்
பிறைவடிவு நுதலு முடையாள்
நிலந்தனிற் பாவையாள் கணவனைத் தெய்வமாய்
நினைந்துபணி செய்து வருவாள்
நித்தியங் கற்பதன் சத்தியந் தவறிடாள்
நிறைமதியின் வதன முடையாள்
கலந்தரும் சித்தினிப் பெண்குணம தாகுமே
கடல்சூழ்ந் தபுவியி லன்றோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** சிங்களமுந் செந்தமிழும் சேர்ந்து ஒலிக்கும் உனது பதியில் கற்பூர மணங் **கமழும்.** காவியுடை எங்கும் பரந்து திகழும். பக்தர்கள் ஏந்தி வரும் வெற்றிவேல் ஆயுதங்கள் ஒளிவிட்டு மிளிரும். அத்தகையப் பெருமை மிக்க கதிரையம் பதியே பத்மினியிலும் அடுத்த படியில் உள்ள நல்மங்கையின் இயல்புகளையுங் கேட்பாயாக. அவளின் பெயர் சித்தினி. கொவ்வை வாயிதளாள்.நளினமுந் துடிப்பும் உள்ள வார்த்தை பேசுபவள். சுவைமிக்க அதர அமுதினள். ஒரு சாமப் புணர்ச்சி நாட்டம் உடையவள். அதிக உணவு உண்ணுதவள். இசையில் வெகுவிருப்பு உள்ளவள் நோயற்ற சுகநலம் மிக்க உடலத்தவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தத்தையே விரும்புபவள். பிறைபோன்ற நெற்றியள்.நிலம் பார்த்து நடப்பவள். கணவனே தெய்வமெனக் கருதுபவள். கல்வி கற்பதில் பிரியம் உடையவள் தாமரை வதனத்தாள்.

## 65. சங்கினிச் சாதிப் பெண்ணிலக்கணம்

பெருகாது குறுகாது சமனுருவ தேகியாள்
பெண்க ழுதைபோற் கூவுவாள்
பிடிவாத மாய்மூன்று சாமமது புணருவாள்
பிசகிலாப் பொய்மை மொழிவாள்
இருகாது அகலமும் கீழுதடு நீளமும்
இருகரத் தும்விரல் நீண்டவள்
இன்ப மற்றிடு கோரமிகு கோபமும்
இலட்சுமி கடாட்ச மில்லாள்
உருகாச் சிவந்தமலர் ஆடைமேல் அன்பினுல்
உளந்துறழ் களிப்பு முடையாள்
உயர்கொங்கை யனையகெடு தியமன முடையாள்
உறுதேக வெம்மை யுடையாள்
கருதரிய சங்கினிப் பெண்ணிவர்க ளாமென்று
காசினியி லறிவ ரன்றே
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** அடுத்தாகச் மத்திம சாதிச் சங்கினிப் பெண்ணின் இலட்சணங்களைக் கேட்குக. தேகத்திற் சமனுருவா னவள். கழுதைக் குரலினள். பிடிவாதக் காரி. தினமும் மூன்று சாம உடலுறுவு வேண்டுபவள். பொய் சொல்பவள். காதுகள் கீழுதடு அகலமான அமைப்பு உடையவள். கைவிரல்கள் நீளமானவள். கோரமான கோபமும் செஞ்செழிப்பு இல்லாத முகமும் உடையவள். சிவப்பு நிற ஆடைமேல் பிரியம் உடையவள். தீயமனத்தள். உயர்ந்த தனங்களை உடையவள். அளவுக்கு அதிகமான தேகச் சூட்டை உடையவள்.

## 66 அத்தினிப் பெண்ணின் இயல்புகள்

மேனியது குறுகிடா உயரமும் பெரியதாய்
வேக முடனே நடப்பள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்கதூலத் தழகிலாள் மேற்காது வாய்களோ
விரிவுதரு துவார மதுவாய்
மானினது காலினுள் கற்றளை நாறுமுடல்
வளர்தூசி லிச்சை யுடையாள்
வருகொங்கை நாடையின் காயினள் ஊணதிகம்
புசிப்பதில் வேட்கை யுடையாள்
வானினது விற்புருவ விளியினள் காமநீர்
வழிகையில் நாற்ற முடையாள்
வருணனிடிமொழியினள் காமவெறி கொள்பவள்
பாதம தில்விரல் நீண்டவள்
கானில்வளர் யானையென அத்தினிப் பெண்ணியல்பு
கண்டு தேர்ந்திடுக வின்றே
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** கடை நிலையினளான அத்தினிப் பெண்ணினிது அங்க அமைப்புக் குணநலன்களையும் இங்கே எடுத்துக் கூறுகிறேன் கேட்குக. உயரமான பெரிய உடலுருவம் படைத்தவள். பூமியதிர நடப்பாள் உடலழகு சற்றும் இல்லாதவள்.. வாய் பெருத்தவள். மானின் கால்களைப் போன்ற விலகிய காலமைப்பு உடையவள் கற்றளையின் நாற்றமுள்ள உடம்பு உடையவள். அசுத்தத்தையே மிக விரும்பி நாடுபவள். .நாடையெனுஞ் சுரக்காயைப் போன்ற பெருத்த கனமுள்ள முலையினள்.அதிகமாக உண்பதில் அவா உடையவள்.வானவிற் போன்ற புருவங்களும் காம உணர்வின்போது கழியும் நாற்றம் மிக்க சுரத நீரும் உடையவள், இடிபோன்று பேசுபவள். காமவெறியும் விரக தாபமும் மிகுந்தவள். காலின் விரல்கள் நீளமானவள். இவள் காட்டானைக்கு ஒப்பானவள் என்று கற்றோர்கள் கூறுவர்.

## 67 ஆடவரின் அங்க இலக்கணங்கள்

முண்டக மெனக்கண்ண ளுகிலிவனே நித்தியன்
முதுமனுக் கண்ண னெனிலே
மூதேவி அணுகாத லெட்சுமி கடாட்சவான்
முதிர்கழனிக் கண்ணு டையவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டர்புகழ் ராமனும் மலருலவு விழியினுன்
அதிகநூற் புலவ னுகும்
அரிகங்கை கரிசங்கு சாகரம் சாமரம்
அருங்கொடி கரம்ப தியவே
மண்டலத் தரசனும் கஞ்சமது நான்குகயல்
வளருமிரு பிடரி அமைய
மாறுரித் தலைவனும் முதுகினி லிருந்திடில்
செல்வமெழும் வயது நூறும்
கண்டிடும் சாமுத்திரிக லெட்சண மிதாகுமே
கணிக்கநற் குறிகள் அன்றே
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** நல்ல சாமுத்திரிகா இலக்கணங்கள் உள்ளவர்கள் எங்கு எச்சாதியிலும் பிறப்பினும் அதற்காம் அங்க அடையாள இலக்கணங்களுக்கு உரிய அந்தஸ்த்தைப் பெறுவது உறுதி. அதற்கு அடையாளமாக வேடர் குலக் கன்னி வள்ளி தெய்வ நிலையைப் பெற்றதால் மதிப்புற்ற ஈழத்துக் கதிரை மலையே. முற்பாடல்களில் நான்கு வகைப் பெண்களினதும் இயல்புகளை எடுத்துக் கூறினேன். அதைப் போலவே ஆண்களிலும் நான்கு வகையினர் உளர் அவர்களின் பொது இயல்பை அவரது கண்கள் கைரேகைகள் உடலில் உள்ள மச்சங்கள் என்பற்றைக் கொண்டு எடுத்துனக்குச் சொல்வேன். தாமரை மலர்போன்ற கண்ணிருந்தால் கடவுளைப்போல நீடித்த ஆயுசும் மதிப்பும் பெறலாம்.. இதய மலர்போற் கண்கள் இருந்தால் இலட்சுமி அருள் பெறுவான். கழனி மலர்போன்ற கண்களுக்கு உரியவன் இராம பிரானுக்குச் சமதையான வாழ்வுடையவன். பூவின் வடிவுள்ள விழிகளை உடையவன் அறிவுமிக்க புலவனுவான். கரத்தில் அரி கங்கை சங்கு கொடி ஆதிய ரேகைகள் இருந்தால் அரசனுகுவான். தாமரைபோல் நான்கு மச்சங்கள் இடது பிடரியில் இருப்பின் அவனது குணநலன் ஆதிய சிவபெருமானைப் போன்றதாக அமையும். அதுவே முதுகில் இருந்தால் நூருண்டு வாழ்வான்.

## 68. காசேதான் கடவுள்

தனவந்த ராகியோர் தங்களுக் கேபுகழ்
தரும தானங்க ளுமுண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரணியி லுள்ளோரெலாங் கண்ட வுடனேதலை
சாய்ந்து துதிசெய்து மகிழ்வார்
தினமும் பணிந்துசிறை யேவலது புரிந்து
செகத்தின் குபேர னென்பார்
திறல்வேந்தர் தன்னோ டிருந்துசக வாசமும்
செய்துபுகழ் பெற்று வருவார்
இனபந்து எல்லோரும் வந்துபணி செய்துமே
இஷ்டங் கொடுத் தகலுவார்
எத்தேச மகிபரும் தங்கள்குல மாமென்று
இனிதாய்க் கலந்து மகிழ்வர்
கனமெனும் பொருளுடைய மனிதனே தெய்வமாங்
கடவுள் வேறு குமன்றோ
கனகநவ ரெத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** பக்தி வாழ்க்கைக்கு காசி எனுந் தலம் எவ்வளவு முக்கியமோ உலக வாழ்க்கைக்குக் காசு எனும் பொருள் மிக மிக அவசியம். என்பதை உணர்ந்த காசினியோர் (காசு இனியோர்) அதன் அநித்தியத்தை உணர்ந்து தங்களது இறை பக்தியில் எழுச்சியுற பல இன்னல்கள் அடைந்து ஒரு சில நாட்களுக்காவது எழையாக வாழ்வதற்குக் காவி தரித்து இரந்துண்டு வெயிலும் குளிரிலும் நடந்து ஆயிரக் கணக்காக வந்து கந்தனருள் பெறும் கதிரைமலையே. இவ்வுலக வாழ்க்கைக்கு பணம் பொருள் மிக அவசியமானவை. பலவேளைகளில் இது பரமனாகவும் மதிப்புப் பெறுகின்றது. பணக்காரர்களுக்கே எல்லாப் புகழ்களும் உண்டு. தான தருமங்களைச் செய்யவும் அவர்களாற்தான் முடியும். அவர்களைக் கண்டு விலகிக் கைகூப்பித் தலைவணங்கி யாவரும் கண்ணியப் படுத்துவார்கள். மற்றும் அடிமைகள்போலப் பணிந்து இட்ட பணியைச் சிரமேற் கொண்டு செய்வர். குபேரன் என்று வாழ்த்துவார்கள் ஆட்சி புரிபவர்களுடன் சமதையாக அமரும் அருகதையும் பெறுவார்கள். தமது உற்றார் உறவினர்கள் வந்து வேண்டிய உதவிகளும் பணிகளுஞ் செய்து கையுறை தருவார்கள் எல்லா நாட்டு மன்னர்களும் மக்களும் தமது குலத்தவன் என்று போற்றுவார்கள். இதெல்லாம் பணத்தின் பெருமை அல்லாது குணத்தின் பெருமை இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹோமர் மகாகவியின் கிரேக்க காவியங்கள் தமிழாக்கம்

1. ஒடிசி
2. இலியட்

## வாழ்க்கைப் பருவ நூல்கள்

1. இளமைப்பருவச் சிந்தனை
2. ஒரு இளமாசிரியனின் எதிர்பார்ப்பு
3. மறக்கமுடியாத நினைவுகள்
4. முதுமைப் பெயர்ச்சி நான்மணிமாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 69 பணமற்றவன் ஒரு நடைப்பிணம்

பணமற்ற பேர்களுக் கருளேது புகழேது
பாரிலுயர் தரும மேது
பந்தவினை தீர்த்திடக் கிரகபகை செபமேது
பரிகரி களேற்ற மேது
மணமுற்ற தாசியர்க ளணைவேது சுகமேது
வருட கொண்டாட்ட மேது
வஸ்திரா பரணமும் வெள்ளிபொன் வெண்கலத்
தழகேது மனையு மேது
குணமிக்க நடையேது குணமேது நலமேது
குருவேது அருக ரேது
கொற்றவர்கள் பட்டமுந் தீர்த்தநதி யாட்டமுங்
கோயில் துதிதானு மேது
கணமதனில் வறுமைகே டுற்றவர்கள் புவிதனிற்
கவலைபெற் றுழல்வா ரன்றோ
கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரை நடை:*** கிறித்துவுக்கு முன்னர் 300ம் ஆண்டில் மகாநாகன் என்னுஞ் சிங்கள மன்னன் கதிர்காம ஆலயத்தின் அருகில் கிரி விகாரை எனும் தாது கோபத்தைக் கட்டினன் என்று மகாவம்சம் என்னும் இலங்கை பண்டைய வரலாற்று ஏடு பகரும். அத்தகைய பழமையும் பெருமையும் மிக்க கதிர்காமப் பதியே உலகத்திலே பணமென்னும் மதிப்புமிக்க செல்வம் ஒருவனிடம் இல்லையானல் அவனுக்கு எந்த வகைச் சந்தோச வாழ்வு என்பதுமே கிடையாது . அதற்குப் பதிலாக என்றும் துன்பமுந் துயரமுமே அவனுடன் கூடப் பிறந்த துணையாகச் சேர்ந்து கஷ்டப்படுத்தும். அப்படிப்பட்டோரின் வாழ்க்கையைச் சற்று வருணிக்கின்றேன் கேட்பாயாக. என்றும் அவர்களுக்கு மனிதரின் தயவோ இறையின் இரக்கமோ கிடையாது. இகழ்ச்சியே அன்றிப் புகழ்ச்சி சற்றேனுங் கிடையாது. தருமஞ் செய்யவோ கன்மவினையைத் தீர்க்கக் நவக்கிரக தோச நிவாரணங்களோ செபதவங்களோ செய்வதற்கும் நிதி வசதியில்லை. பரத்தையர் ஆதரவும் இல்லை. வருடத்திற்கு ஒரு முறை நிகழும் விழாக்களும் கிடையாது. வீடில்லை. ஆடையணி இல்லை. பொன் தங்க மில்லை. குறைந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்கல உலகமேனும் இல்லை. நல்ல குணம் படைத்து வாழ்வதும் முடியாத கருமம். குருவும் அவர்களுக்குக் கிடைப்பதரிது. மற்றும் சகோதரர்கள் உற்றார் உறவினர்களும் இல்லை, ஆட்சியாளரின் மதிப்பும் தீர்த்த தலங்களைத் தரிசிக்கும் பாக்கியமும் ஆலய வணக்கமும் அவர்களுக்கு இல்லை.

## 70 நன்னிமித்தங்களும் தீயநிமித்தங்களும்

வானரங் கூகையும் கெருடனுங் கீரியும்
வனப்புலி நன்மா னினங்கள்
வான்கரடி நாய்பன்றி கமடமுஞ் சிற்ருந்தை
வான்கரடி சிட்டு முயலும்
தானிவைகள் வலமிருந் திடமாகிலே வெற்றி
தரநல்ல சகுன மிதுவாம்
சார்ந்துவழி போகையில் ஓர்தும்மல் காலிடறல்
தாழ்கூரை மனைப்படி யடித்தல்
ஈனரொடு விறகுசுமை , மறையோன் வருகையும்
எரிசட்டி சாரை கயிறு
இச்சகுனம் நேர்ந்திடின் நற்சகுன மில்லையென
இரகுநூல் தனிலெ ழுதினர்
கானமதி லேகுசிறி ராமருந் துணைவரும்
கண்டலைந் திட்ட திதுவே
கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** இராமாயணக் காலத்திருந்தே உனது புகழ் பெற்ற தலம் மிகவும் பெருமை கொண்டு பரத கண்டத்திலும் பரவியிருந்தது என்பதை வால்மீகி முனிவரின் இராமாயணம் உறுதிப்படுத்தும். அதில் இராம தூதனாகிய அனுமன் சீதா பிராட்டியைத் தேடி இலங்காபுரி வந்தபோது உன்னை அடைந்து வடிவேலனை வணங்கிச் சென்றதாக ஒரு செய்தி உண்டு. அத்தகைய வேலாயுதனின் உறைவிடமாய்ப் புகழுற்ற கதிரையம் பதியே மனிதருக்கு இறைவனின் தீர்க்க முன்னுரையாகவும் தத்தமது உள்ளங்களில் உள்ள உள்ளுணர்ச்சியின் முன்னெச்சரிக்கையாகவுஞ் சில அதிசயப் புறத்து நிகழ்வுகள் நிகழ்வதுண்டு. அவற்றைச் சகுனங்கள் என்று சொல்வார்க்ள், அத்தகைய சகுனங்களில் நல்ல விளைவுகளை உண்டாக்குஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகுனங்களை நற்சகுனம் என்றும் மற்றவைகளைத் துர்ச் சகுனம் என்றும் அழைப்பர். கானக வாசம் செய்வதற்குப் புறப்பட்ட இராமரும் அவருடன் சென்றவர்களாகிய சீதை இலட்சுமணன் என்பவர்களுக்கும் இத்தகைய தீய சகுனங்கள் விளைந்தன. இந்த ஆதாரத்தைக் கொண்டு இரகு நூல் ஆக்கப்பட்டது. அதிற் சொல்லப்பட்ட பலவற்றிற் சிலவற்றை இங்கு தருகின்றேன். குரங்கு கூகை கருடன் கீரி புலி மான் கரடி நாய் பன்றி ஆமை (கமடம்) ஆந்தை காடை சிட்டுக் குருவி முயல் என்பவைகள் வலப் பக்கத்தில் இருந்து இடது பக்கமாகச் குறுக்கறுத்துச் சென்றால் நன்மை உண்டாகும். தும்முவது, கால் இடறுவது வீட்டின் கூரை அல்லது வாசற்படி தலையிலுங் காலிலுந் தட்டுதல் கெட்டவர்களும் விறகு சுமந்து வருபவர்களும் தனிப் பிராமணனும் முன்னால் வருதல். தீபச்சட்டி சாரைப் பாம்பு கயிறு என்னும் பொருட்கள் முன்னாற் தென்படல் என்பன கெட்ட சகுனம் என்றும் சொல்வார்கள்.

## 71 வாழ்நாளைப் பெருக்கும் வழி

திங்களிரு தினமதிற் பூவையைச் சேர்வதும்
வருஷமிரு தினவே ளையில்
செமியாமை கண்டிடில் விரேசனஞ் செய்வதும்
வார மிருதின மெண்ணெயும்
மங்கையை மணந்திடில் தனதுவயதுக் கிளைய
மாதரைப் புல்கல் நலமாம்
வற்றிநீர் காய்ச்சிபால் வடிதயி ருருக்குநோய்
மனமாய்ப் புசிக்க நலமாம்
அங்கிவைக ளுண்டபின் முப்பழ மருந்திடின்
ஐயமும் பித்த வாதம்
அரும்பொரு ளதைப்போ லுடம்பதை வளர்த்திடில்
ஆயுளது நீள முறுமாம்
கங்காள ரூபசிவ பரனு ருரைத்ததிவை
கடமையென் றறிவ தன்றோ
கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு ரைகதிர் காமமே

*உரைநடை:* இந்தியாவில் ஆட்சி செய்த அசோக மன்னன் பவுத்த மதத்தைக் கடல்கடந்த பிறவயல் நாடுகளுக்குப் பரப்ப விரும்பினன். இலங்கையில் அதனைப் பரப்பத் தனது மகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கமித்திரை என்பவளை அனுப்பினர். அவள் போதி சத்துவர் நிர்வாணம் அடைந்த அரச மரத்தின் இரண்டு கிளைகளையுந் தன்னுடன் கொண்டு வந்தாள். அக்காலத்தில் இலங்கை அரசனுக இருந்த தேவநம்பிய தீசன் அதில் ஒரு கிளையை தான் அரசு செய்து கொண்டிருந்த அனுரதபுரி நகரிலும் மற்ற போதிக் கிளையை கதிர்காமப் பிரபு என்பவர் மூலங் கதிர்காமத் திலும் நட்டதாகவும் மகாவம்சங் கூறுகின்றது. அத்தகைய பண்டைப் புகழ் பெற்ற கதிரையம்பதியே அரிதரிது மானுடப் பிறவி. அதுவும் உடல் ஊனமின்றி பிறப்பது அரிது. அதிலும் நோய்நொடி இல்லாது நீண்ட ஆயுளோடு வாழ்வது அரிது. அப்படி ஓரளவாவது வாழ வேண்டுமானுல் சில காரியங்களைக் கைக்கொண்டு நடக்க வேண்டும். அத்தகைய கடமைகளிற் சிலவற்றைக் கூறுகின்றேன். ஒரு மாதத்தில் இரு தடவை உடலுறவு வைத்தல். வருடத்திறுகு இரு முறை வயிற்றுச் சுத்தஞ் செய்தல். கிழமைக்கு இரு தடவைகள் எண்ணெய் வைத்து நீராடல். தன்னிலும் பார்க்க வயதிற் குறைந்த பெண்ணுடன் கலவி செய்வதை விலக்கல். சுட்டாறியநீர் குடித்தலும் பால் தயிர் நெய் புசித்தலும். உணவுண்டபின் மா பலா வாழை ஆதிய முக்கனிகளை உண்ணலும் வாதம் பித்தம் சிலேத்துமம் என்னும் மூன்று உடல் நிலைகளையும் சரிவரப் பேணிக் காத்துவரலும் வாழ்நாளைஅதிகரிக்கும். இது சுடலை நடமாடி சிவபெருமான் முனிவர்களுக்கு உரைத்த ஞானமாகும்.

## 72 குணத்திலும் பண்பிலும் முன்மாதிரியானோர்

பொறுமையிற் தருமர் நிருபரிற் தசரதன்
புத்தியதில் வீம ஞவான்
புகழிலே பற்குணண் கர்வத்தில் ராவணன்
புதல்வ ரிற்சிறி ராமரும்
திறமையில் அனுமனுந் தம்பியிற் பரதனும்
செல்வனில் வைவ சுதனும்
திடமதில் வாலியும் கொடையதிற் கன்னனும்
தீரத்தில் இந்திர சித்தும்
அறமதிற் பகிரதன் பெருமையிற் சோழனும்
உண்மை யில்அரிச் சந்திரனும்
அன்னையிற் சந்தரமதி கற்பினி லருந்ததி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சரிற் சத்திய கீர்த்தி
கருமவினை இவர்கள்கரு வணுகாமலே பிறவி
காசினி லுயர்ந்தோ ரன்றோ
கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

**உரைநடை:** தற்போது உனது புண்ணிய பதியில் உள்ள பால தண்டாயுதபாணியின் ஆலயம் கிறித்துவுக்குப் பின் பதினாறும் அல்லது பதினேழாம் நூற்றாண்டு அளவில் முதலாம் அல்லது இரண்டாம் இராசசிங்கன் என்பவனாற் கட்டப்பட்டது. என எண்ணப்படுகின்ற போதிலும் உனது பதியோ பண்டைக்காலப் பெருமை வாய்ந்தது என்பதை மறுக்க முடியாது. அத்தகைப் புகழ்பெற்ற கந்தன் கருணைபுரியும் கதிரமலையே உலகத்தில் மனிதர் வாழும்பொழுது சிலபல காரியங்களுக்குச் சிலருடைய முன்மாதிரிகளைப் பின்பற்றி நடப்பது அவசியமாகும். அவற்றுள் பொறுமையாய் இருப்பதற்குப் பாண்டவர்களில் மூத்தவரான தருமனையும் ஆட்சி பரிபாலனஞ் செய்வதில் தசரதச் சக்கரவர்த்தியையும் புத்திக் கூர்மையில் வீமனையும் புகழில் வல்ல (பற்குணன்) அருச்சுனனையும் தற்பெருமையில் இராவணனையும் மக்களில் இராமனையும் கெட்டித்தனத்தில் அநுமனையும் தம்பியிற் பரதனையும் செல்வத்தில் வைவசுதனையும் திடமிக்க உறுதியில் அநுமானையும் கொடையில் கன்னனையும் அஞ்சா தீரச் செயலில் இராவணனின் மகன் இந்திரசித்தையும் தரும சிந்தையிற் பகீரதனையும் பெருமைக்குச் மூவேந்தரில் ஒருவனை சோழனையும் சத்தியம் பேசுவதில் அரிச்சந்திரனையும் கற்பில் அருந்ததியையும் நல்ல அமைச்சனாய் ஆலொசனை வழங்கச் சத்தியகீர்த்தியையும் தாய்மைக்குத் சந்திரமதியையும் கற்புக்கு அருந்ததியையும் பின்பற்றுதல் நன்மை தருவதுடன் உலக வாழ்வில் கடைத் தேறவும் உதவியாயிருக்கும்.

## 73.உலக வாழ்வின் பேறடைதல்

முப்பழம் பாலுடன் அன்னம் புசிக்கினும்
முதுமொழி அறிந்து உண்ணில்
முன்னோர்கள் நிதியமும் தனதுகைப் பொருள்களும்
முதன்மைபெற் றுலகில் வளரும்
செப்பரிய சிவபதம் மறவா திருந்திடில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வமே நின்று பெருகும்
திங்கள்தனில் வருநோன்பு அனுட்டித்து வந்திடில்
தீவினை யகன்று விலகும்
தப்பிதம் பாவவினை செய்யா திருந்திடில்
தளராது தேக மென்றும்
சதிகார ரோடுறவு சாராது இருந்திடில்
தருமமே வந்து சேரும்
கைப்பொருள் களாயிதனை மறவாது இருப்போர்கள்
கடவுள்பத மடைவ ரன்றோ
கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** குகன் ஆறுமுகன் குமரன் சேய் கார்த்திகேயன் அரன்மகன் கங்கைமைந்தன் வேலன் ஆண்டலைக் கொடியோன் சரவணபவன் கடம்பன் எனப் பலபெயர்களால் அழைக்கபபட்ட கந்தப் பெருமாள் உவந்து எழுந்தருளி இருக்கும் கதிரை மலையே முக்கனிகள் சர்க்கரை பாலமுதம் அறுசுவை உண்டி என்பவற்றோடு அன்னம் உண்பதிலும் பார்க்க கற்றறிந்த அறிஞர்களின் ஞானமான வார்த்தைகளை அறிந்து அவற்றை அறிவுக்கு உணவாகக் கைக்கொள்ள வேண்டும். அப்போதுதான் பெற்றோர்வழிப் பெற்ற செல்வமும் கையில் உள்ள பொருட்களும் நிலைத்து மேலும் வளரும். சிவபதத்தை நெஞ்சிற் கொண்டவர்களுக்கு வறுமை ஒருபோதும் அண்டாது. திங்கட் கிழமைகளில் தவறாது நோன்பு நோற்றால் தீவினைகள் வந்து அணுகாது. அதுபோலத் தவறுகளும் குற்றங்களும் ஆகிய பாவங்களைச் ஒரு போதுஞ் செய்யாது இருந்தால் உடலிற் பிணிகள் ஏற்பட்டுத் தளர்ச்சி உறாது..சதிகாரர் சண்டாளர் ஆதியவரொடு சேராதிருந்தால் தரும காரியங்கள் வந்து சேரும். .இவைதான் மனிதரின் கையில் உள்ள அரிய பெரிய செல்வம். இவற்றைப் பாதுகாத்து வந்தால் உலகில் நாங்கள் பிறந்த பிறவியின் இம்மைப் பயனை அனுபவிக்கலாம்.

## 74 உலகில் நடவாத காரியங்கள்.

நாய்வா லதைக்கொண்டு தீட்டினுற் தமிழெழுத
நல்லெழுத் தாணி யாமோ
நாகத்தின் குட்டிக்குப் பாலது புகட்டினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சது கலந்து விடுமோ
பேய்கள்வாழ் சுடலையிற் தீபங்க ளேற்றினும்
பெருமை யுறுவீ டாகுமோ
பிள்ளைதா னிளமையிற் கல்லா திருந்திடில்
பேசரிய கலைய மையுமோ
தாய்மொழிகள் கேளாத புதல்வரும் புவியதில்
தான்பெரு மைபெற லாகுமோ
தரணிதனி லிவையெலாங் கண்டு வாழாதபேர்
தகுதியது பெறுவ ராமோ
காய்கனிகள் தேனுலவு தாவரம் வாழ்கதிரை
தங்குமுரு கேச ருறையும்
கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** முன்கூறிய நாமங்களுடன் கோழிக் கொடியோன் குறிஞ்சி வேந்தன் வேலினுக்கிறை விசாகன் செவ்வேள் சிலம்பன் மயில்வாகனன் எனப்பொருள் தரும் மஞ்ஞையூர்தி வள்ளி மணவாளன் குமரன் அறுபடைவீடன் பழனியாண்டி பழனிவேல் சூரசங்காரன் என்ற நாமங்களுடனும் இன்னும் பல புகழ்மிகு நாமங்களுடனும் பக்தர்களுக்கு அருள்புரிந்து வரும் கதிரமலையோன் உறையுங் கதிரையம் பதியே• இயல்பான உனது கனிவளமும் நறுந்தேன் வளமும் தாவர வளமும் எவ்வரட்சி வந்தாலும் ஒருபோதும் தண்ணிளி மாறவேமாறாது. அதுபோல உலகத்தில் நாய்வாலை எவ்வாறு முயன்றும் நிமிர்த்தவே முடியாது. பாம்புக் குட்டிக்குப் பால்வார்த்தாலும் அதனிடம் உள்ள கொடிய நஞ்சை அகற்றவே முடியாது. மயானத்தைத் துப்பரவாக்கி பல ஒளிவிடுந் தீபங்களை ஏற்றி வைத்தாலும் அது மக்கள் வசிக்கும் மனையாகி விடாது அதுபோல ஒரு பிள்ளை கல்வி கற்கத் தவறில் அதற்கு கலை ஞான விருத்தி ஏற்படாது. தாய்சொல் தட்டி நடக்கும் பிள்ளைகள் ஒருநாளும் உலகிற் புகழுடைய முடியாது. இவற்றை எல்லாம் கண்டும் உணராதவர்கள் உலகில் வாழுந் தகுதி பெறுவார்களோ

## 75 நமது உள்ளத்தே உள்ளான் இறைவன்

உருவாய் அமைந்திட்ட கல்லதைத் தெய்வமாய்
உளமொன்றி யோகமே செய்யினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தம பூசையது செய்திடவே நினைத்து
ஓமமுந் தீபமும் இயற்றித்
திருவான மந்திரம் பிராணயம் தோத்திரம்
செப்பரிய வாண வெடிகள்
தித்திதவில் நாதசுரம் நல்லிசை நடனங்கள்
திரளமுது மலர்க ளுடனே
குருவா யொருத்தர்சிவ பணிசெய்ய மறுபேர்கள்
கும்பிட்டுத் துதிபு ரியினும்
கோதையுமை பாகனருள் பெறுவரோ அவர்கலைகள்
கூறில்நம துடல தனிலே
கருவா யமைந்துவெம துருவிலொழி யல்லாது
கல்லதி லிருப்ப துண்டோ
கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** தலத்தின் மூர்த்தியான முருகனுக்கு என்று உனது ஆலயத்தின் உட்பிரகாரத்திலும் மூலத்தானத்திலும் எந்த விதச் சிலைகளோ விக்கிரகங்களே அமைக்கப்படாத ஆலயம் என்ற சிறப்புடைய கதிரை மலையே. இந்த இயல்பினால் எங்களுக்கு ஒரு உண்மையைச் சொல்லாமற் சொல்லிச் செயலிற் காட்டி தெய்வீக அருளின் தத்துவத்தைப் போதித்து விடுகின்றாய். அதனை நான் புரிந்துகொண்ட அளவில் கூறுகிறேன் .கேட்குக. கல்லாலான விக்கிரகத்தை அபிடேகஞ் செய்து இருத்தி வைத்து அதனைத் தெய்வமென்று சிந்தித்து யோகமுறையாகவும் ஓமகுண்டம் வளர்த்தும் தீப ஆராதனை காட்டியும் மந்திரம் பிராணமயம் தோத்திரம் என்பவற்றைச் செய்தும் பெரிய ஆடம்பரமாக வாணவெடிகள் விட்டும் பலவித வாத்தியங்களை முழங்கியும் துதிகள் பாடி ஆடியும் அமுது படைத்தும் மலர் சார்த்தியும் ஒருவர் குருக்களாக நின்று ஆராதனையைச் செய்ய அதைப் பலர் பார்த்துங் கேட்டுங் கும்பிட்டு வணங்கினாலும் எங்களது உள்ளத்திலே உருவாக்கி ஒளியாக்கி அத்தெய்வத்தை ஏற்றி வையாதிருந்தால் எப்பயனுமே ஏற்படாது என்பதாகும்.

## 76: உடலும் உயிரும் பற்றிய தத்துவம்

அடல்பூத மைந்ததாம் ஞான விந்திரியமும்
ஐம்பொறி கள்புல னைந்ததாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகுந் தொழிற்குரிய விந்திரிய மைந்ததாம்
அருமைபெறு கரணம் நாலாம்
மடமான தாதுவேழ் விகாரமது எட்டதாம்
மலம்மூன் றுகுணம் மூன்றதாம்
வருகுதச வாய்வுபத்து மண்டலங்கள் மூன்று
வழிவாசல் ஒன்ப ததுவாய்
நடமா மவத்தையும் ஐந்துடன் தாரமறு
நாடி ஈரைந்து உடனே
நற்கோச மைந்துபிணி மூன்றோடு விகாரமறு
நளினவுடல் தனிலு றையவே
கடலதனில் உலவுதிரை யவைகளென வளர்தலது
கருவி தொண்ணூற் றுறதே
கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** மூர்த்தி தலம் தீர்த்தமாக முறையே முருகப் பெருமானையும் கதிரையம்பதியையும் மாணிக்க கங்கையையும் தல விருட்சமாக நொக்கட்டி எனும் மரத்தையும் உடைய கதிரமலையே உனது பதி இத்தகைய அமைப்பாற் சிறப்புறுவது போல பல இயல்புகளும் அமைப்புகளும் மனிதன் எனும் ஒரு சீவனை ஆக்குவதற்கு உதவுகின்றன. **அவையாவன:** ஆணவம் முதலிய மும்மலம் - சத்துவம் ஆதிய முக்குணம் - அக்கினி முதலாய மூன்று மண்டலம் - வாதம் ஆதிய மூன்று பிணி மேலும் மனமாதிய நான்கு கரணம் என்பனவும் நிலம்முதலிய ஐந்து பூதங்கள், உற்றுணர்தல் ஆதிய ஐந்து ஞானவிந்திரியம் கருமம் முதலிய ஐந்து தொழில் இந்திரியம் - கண் ஆதிய பொறிகள் ஐந்து, சுவை முதலான புலன்கள் ஐந்து. மேலும் அன்னமயம் முதலிய கோசங்கள் ஐந்து, என்பனவும் இரத்தம் ஆதிய ஏழு தாதுக்களும் காமம் ஆதிய எட்டு விகாரங்களும் வாய் ஆதிய ஒன்பது வழிவாசல்களும் பிராணன் முதலான பத்துவித வாயுக்களும் சுழிமுனை முதலிய பத்து வித நாடிகள் என்பனவுஞ் சேர்ந்த தொண்ணூற்றுறு கருவிகளுமாம்.

## 77. பகைக்கு விலகி நடத்தல்

தம்பியொடு அண்ணனும் தாயினொடு தந்தையும்
சாதியொடு சந்த திகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்துருப் போலவர்கள் அருகராய் வாழ்ந்திடிற்
தலைவா சல்மிதி யாமலே
வெம்பா திருந்துதன் காரியம் பார்ப்போர்கள்
மேன்மைபெற் றுலகி லுய்வர்
விறலட்ட லெட்சுமி கடாட்சமுங் கிரகபகை
மேவாத தெய்வ செயலும்
அம்புவிழி மங்கையர்கள் கூட்டமொடு நாட்டமும்
ஆதி பரனுர் கருணையும்
அருந்தவர்க ளோடாசார் அருளதும் பெரியோர்கள்
ஆதரித் திடுகி ருபையும்
கம்பிதமதா யிவைகள் சேருவது திண்ணமெனக்
கண்டுல கிற்களி கொள்ளுமே
கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** பகைகொண்ட மாய சூரனை வேல்கொண்டு தாக்கி வெற்றி பெற்ற சேவற் கொடியோன் வேலாயுதன் எழுந்தருளி இருக்கும் கதிரையம்பதியே. இம்மை நல்வாழ்வு மாந்தர்க்குக் கிட்டுவதற்கு அவர்கள் சில வாழ்க்கை ஒழுங்கு முறைகளைக் கைக்கொள்ள வேண்டும். முரண்பட்ட சகோதரர்கள் தாய் தந்தை. சாதிகள் சந்ததிகள் உற்றார் உறவினர்கள் தம்முட் பகைவர்களைப் போல வாழ்ந்தால் அவர்களைச் ஒன்றுபடுத்த முயற்சி எடுத்துத் தோல்வி அடைய நேரிடின் அவர்களை விட்டு அவர்களது [illegible] மாறமட்டும் அவர்கள் எவருடனும் நட்புப் பாராட்டாமலும் பகையாமலும் இருப்போர்களுடன் இலட்சுமி உறைந்து வாழ்ந்து உயர்வைத் தருவாள்.அதனுல் அட்ட லெட்சுமிகளும் அருள் புரிவர். கிரகபகைகள் அகலும். இந்தக் கடாட்சத்தால் தெய்வ காரியங்கள் பல சித்திக்கும் பெண்களின் தயைஅன்பு கிட்டும். கடவுளின் கருணை பெருகும். தவஞானியர்களின் நல்ல ஆசியும் ஆட்சியாளரின் நன்மையிம் பெரியோர்களின் அன்புங் கிட்டும்.

## 78 மூதேவி வந்துறையும் இடங்கள்

ஊணதிக மாகவே உண்போ ரிடத்திலும்
உரப்பு மொழிகூ றிடத்தும்
உண்மையில் லாமலே கொடியதொரு வாய்மொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
9-1-1992
LIBRARY



உரைத்தோர் கள்தம் மிடத்தும்
நாணமற வேதுகி லழுக்கற வுடுத்துவெளி
நாடி ேனார்தம் மிடத்தும்
நாயெனச் சீறியே யாரையுங் கோபிக்கும்
நங்கையர் களில்ல மதிலும்
பாணமுனை தன்னிலும் சேட்டையின் இடையிலும்
பன்றிதன் நுதல தனிலும்
பாரவிருள் தன்னிலும் பிணவதன மதிலும்
பரிவுகெடு கலதி உறைவள்
காணரிய கடவு ளடியாரிடத் தேமுகடி
கருதி வந்தே யணுகிடாள்
கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** இதுபோல மூதேவி வந்து உட்கார்ந்து கொள்ளும் இடங்களும் அதிக முண்டு. அவற்றிற் சிலவற்றை எடுத்துச் சொல்வேன் கேட்குக. அதிக உணவு உண்பவர்கள் இடத்திலும் கடூரமான ஒலியுடன் கொடும் வார்த்தைகளையும் பொய் மொழிகளையுங் கூசாது பேசுகின்றவர்கள் நாவிலும் வெட்கமற்று அழுக்கு உடைகளை அணிந்து வெளியிற் திரிவோர்கள் இடத்தும் எதற்குங் கடுகடுத்து நாய்போல குரைத்து விழும் பெண்களிடத்திலும் அம்பின் நுனியிலும் மற்று வேசையின் இடையிலும் பன்றியின் நெற்றியிலும் கடுமையான இருளிலும் பிணத்திலும் எனவும் இவைபோன்ற இன்னும் பலவற்றிலும் என்று சொல்லலாம். ஆனால் என்றுங் கடவுளருள் பெற்றவர்களை மூதேவி அணுக மாட்டாள்.( கலதி முகடி என்பன மூதேவியின் பெயர்).

## 79 இலட்சுமி வாசஞ் செய்யும் இடங்கள்

பரிமுகந் தன்னிலே நிருபரி னிடத்திலே
பண்புபெறும் அகம தனிலே
பங்கயப் பூவிலே கூவிள மரத்திலே
பசுந்துளவ மணிய தனிலே
அரிவையர்கள் கற்பிலே அகத்தது அழகிலே
ஆளி தன்னுரு வதனிலே
ஆடவர்க் குரியமண வறையிலே சங்கிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவியாஞ் செந்நெலின் விளைவதிலே
துரிதமெழு பெரியோர்கள் வாக்கிலே தீபமணி
சுடரிலே பூந்தோப் பதனிலே
தூங்களதன் சிரசிலே பொய்யிலார் வாயிலே
பாற்குடத் திடைய தனிலே
கரியதிருமால் மனைவி சீதேவி இவரிடம்
கலையா திருப்ப ளன்றே
கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** குறமகள் என்றும் மால்மகள் என்றும் கொடிச்சி என்றும் அழைக்கப்படும் உன்பதியின் தேவியான வள்ளிப் பிராட்டியின் தாய் இலட்சுமியாவள். . அவளின் ஒரு மகள் உந்தன் பதியில் உறைவதால் அவளின் கிருபாகடாட்சமும் உனக்குண்டு. அதுபோலவே அவளுடைய கிருபை முதலான ( கூவிளம் - வில்வமரம்) அழகிய பஞ்ச கல்யாணிக் குதிரையின் முகத்திலும் மன்னர்களிடத்திலும் நல்லவர்களின் உள்ளத்திலும் தாமரைப் பூவிலும் வில்வ மரத்திலும் பைந்துளசி மாலையிலும் திண்மையுள்ள கற்பிலும் அவர்தம் அகத்தழகிலும் யாழியின் உருவத்திலும் மணவறையிலும் வலம்புரிச் சங்கிலும் செந்நெல் விளைவிலும் பெரியாரின் வார்த்தையிலும் தீபத்தின் சுடரிலும் மணியின் நாதத்திலும் அழகிய நந்த வனத்திலும் பொய் இல்லாதவர்களின் நாவிலும் துங்கவனின் மணி முடியிலும் பாற்குடத்திலும் சீதேவியாகிய மாலின் மனைவி வாசமாய் இருப்பாள்.

## 80 கதிரையம்பதிச் சிறப்பு

வாரியெழு சூழுலகு தன்னிலுய ரீழமதில்
வன்னநவ மணிபுன் னைமா
மந்தாரை கஞ்சமலர் வில்லையொடு முல்லையும்
மருது வால்வம் மியுடனே
சாரியது சாரியெனத் தாபரம் பூச்செடிகள்
தருக்களொடு சோலை கமுகு
தளிர்கதலி தேனிருல் மானாட்டம் மயிலாட்டம்
தந்தியரி நாக முடனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏரிவாழ் கயல்களும் குயில்புரு நங்கணம்
இலவு காத்திடுங் கிளிகளும்
இரவிமதி ஒளிகளும் துகினமது துளிகளும்
எண்ண ரியவற் புதமாய்
காரியிரு ளகலமலை மங்கைகலை வள்ளியுடன்
காட்சிதர வாழ்ந்த பதியே
கனககநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** கதிரையம்பதியே உனது மகிமை சொல்லுந் தரமின்று காரி எனுங் சனிபகவான் யாரையாவது பீடித்து வருத்தும்போது உன்னிடம் வந்தால் அதனைத் தீர்த்து மீட்புத் தரும் வல்லமை வெறெங்கு உண்டு. அபபடிப்பட்ட தெய்வீக அருள் சுரக்கும் நீ ஏழு கடல்களாற் சூழப்பட்ட உலகத்திற் சிறந்த ஈழமென்னும் இலங்கைத் தீவின் தென்பகுதியில் அமைந்துளாய்.அங்கு நவரெத்தினங்கள் விளைகின்றன.புன்னை மா மந்தாரை வில்வம் முல்லை மருது ஆல் வம்பி எனும் மலர் தருஞ் செடிகளும் கனியும் நிழலுந் தரும் தருக்களும் தெங்கு கமுகு என்னும் தாலங்களும் தாமரை மலரும் நிறைந்துள்ளன. ஒருபால் முக்கனியின் ரசமுந் தேனும் சொரியும் மற்றோருபால் மான்கள் துள்ளிவிளையாடும். இன்னொரு பக்கம் மயில்கள் தனது தோகையை விரித்தாடும். கொம்பன் யானைகள் பாலர்களை ஒத்து அசைந்து செல்லும். நாகங்கள் கூச்சமுற்ற மாதர்போல் நெழிந்து ஓடும். மீனினம் மங்கையர் விழியெனத் துள்ளிப் பாயும். குயில் கூவும். புறா தூது செல்லும். பூவை பாடும். கிளிகள் பேசும். சூரியனின் ஒளிமிகுங் கதிர்களும் சந்திரனின் கிரணங்களும் பனியின் துளிகளும் உன்பதியை பகலிலும் இரவிலும் ஒளிசெய்து தண்ணளி செய்யும். குறத்தி எனத் ஒதுக்கித்தள்ளி வைக்கப்பட்ட குலத்தில் உதித்த வள்ளியோ உயர்ந்த தெய்வமாக மதிப்புப் பெறுவள் இத்தகைய சிறப்புகள் கொண்டவள்நீ.

## 81எல்லாம் ஆகிய ஏகனே முருகா

மால்மருக னாகியும் கங்கை மகனாகியும்
மறைநான் குமுக னாகியும்
மண்விண் ணதாகியும் மலையெட்டு ஆகியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாமே ருமலை யாகியும்
வெல்பெறுவோ ராகியும் நீர்நெருப் பாகியும்
வேட னுருதா னகியும்
வில்லி முகனகியும் கைலைமலை யதனிலே
வேந்த னுருதா னகியும்
பால்உதிர மாகியும் சுக்கில சுரோணிதப்
பையி லொளிதா னகியும்
பருதிமதி யாகியும் நட்சேத்திர மாகியும்
பதினன் குலோக மசையும்
காலாயு மிவைகள் வேல்முருக னுருவாகிக்
காட்சிதருங் கடவு ளல்லவோ
கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** எங்கும பரந்திருப்பதே கடவுட்தன்மை. வளியிலா விடத்தும் அதுபுக வழியிலாவிடத்தும் அளவற்ற சக்தியாய்ப் பரந்து நிற்கும் அந்தப் பரம்பொருளை நாம் பலபல வடிவிற் காணலாம்.பேசலாம். துதிக்கலாம். இவைகள் எப்படியாயினும் பரம்பொருள் ஒன்றே ஒன்றுதான். அதை பக்தியுடன் வணங்கும் நோக்கமும் ஒன்றுதான். அத்தகைய ஆறுமுகன் என்று அருணகிரி நாதராற் திருப்புகழ் பெற்ற முருகன் வள்ளியை மணம் புணர வந்த முகத்துடன் உன்பதியிற் அருள்தரத் தங்குவதால் கதிரு என்று சிங்களவர்கள் அழைக்கும் கொடிய நச்சு மரங்கள் கூட தல விருட்சங்களாகி அமுதைச் சொரிகின்றன. இதனல் கதிரு மலை என்னும் இடங் கதிர்மலையாகிற்று. அத்தகைய கதிரையம்பதியே கேட்பாயாக. உன்பதியில் உயர் தெய்வத்திற்கு அறுமுகங்கள் செயலிலும் அவதாரத்திலும் அருளிலும் இருந்தாலும் எங்கும் பரந்து ஏகமாயிருக்கும் நிலையில் திருமாலுக்கு மருகனகி இருக்கிறார். கங்கைக்கு மகனகவும் நான்கு வேதங்களுக்கும் தலைவனகவும் மண் விண் என்னும் ஐம்பூத பிரபஞ்ச நாயகனகவும் இமயம் மந்தரம் கைலை விந்தம் நிடதம் ஏமகூடம் நீலம் கந்தமாதனம் என்கின்ற எட்டு மலைகளாயும் சிறப்பான மேரு மலையாகியும் ஒளிர்கின்றார். அழித்தற்கு வேலாயுதந் தாங்குபவராகியும் நீரும் நெருப்பாகியும் வில் தாங்குகித துயர்தீர் வேடனும் கைலை வேந்தனும் மற்றுஅன்னையின் பாலமுதமாகியும் அதனல் உண்டாகும் இரத்தமும் அதன் உயிர் மாற்றத்துக் கருவான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்கருவுயிர் பெண்கருவுயிர்கள் ஆகியும் அதைத் தாங்கும் கருப்பையின் உற்பவ உயிராகவுந் திகழ்கின்றார். அதுமட்டுமல்ல பதினான்கு உலகங்களும் அவற்றை இயக்கும் வாயுவாகவும் சந்திர சூரியராகவும் விண்ணின் நட்சேத்திரக் கூட்டமாயும் வெளிப்படுகின்றார். இத்தகைய தெய்வீகத் தன்மை மிக்கவர் வேல்முருகன்.

## 82 கலைமகள் கடாட்சம்

வெண்சலச முற்றுளின ருளதும் பூச்சிநூல்
வெண்பட்டு ஆடை நூலும்
விருதுசெய் பாக்கியும் சுகமான போகமும்
வித்தையும் புதல்வர் வளமும்
பண்பினொடு கல்வியும் மெஞ்ஞான தருமமும்
பதிமேன்மை பெறுவ துறவும்
பகையற்ற கீர்த்தியும் பகலிரா மகிழ்ச்சியும்
பந்தவி னையக வாயுளும்
விண்மேவு மதிவதன அழகதும் மன்மதன்
வீரமும் ரதிம னைவியும்
வேந்தரரு கானதுதி வாய்த்திடுங் கருணையும்
மேதி ஆவின் கழனியும்
கண்கொண்ட விந்திரன் போலவிவர் செல்வமுங்
காசினியில் பெருமை யன்றோ
கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** அபிடேகம் பெற்ற பூசகர்கள் அல்லாத சாதாரண மக்கள் ஆராதனை செய்யும்போது தமது வாய்க்கு வாய்ச்சீலை கட்டிக்கொள்வது வழக்கம்.அத்தகைய சாதாரண மனிதர்களின் அர்ச்சனைக்கு இரங்கி அருள்பாலிக்கும் கந்தனுறையும் பதியே. கலைமகளின் கிருபை கிட்டுமேல் வெண்பட்டு ஆடையும் எண்ணற்ற விருதுகளும் அரசாங்கம் மனைவி மக்கள் சுற்றம் பொன் மணி நெல் வாகனம் அடிமைகள் என்னும் எட்டுவிதப் பாக்கியமும் சுகம் மிகுந்த வாழ்க்கை பயன்களும் கலையறிவும் மக்களின செழுமையும் பண்பும் தெய்வ அறிவும் கொடைகளும் ஆட்சியாளரின் அனுசரிப்பும் பகை பொறாமையற்ற மதிப்பும் எக்கணமும் குறையாத களிப்பும் நோயற்ற நீடித்த ஆயுளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிபோன்ற மலர்ச்சியான முகமும் காமனும் ரதியும் போன்ற அன்பு வாழ்க்கையும் மன்னவர்களின் மதிப்பும் எருமை பசு வயலாதிய செல்வமும் உண்டாகும்.

## 83 வாலையைப் பூசை செய்தல்

வாலையைப் பூசிக்க எண்ணிஞ்ஞூ றாயிரம்
மந்திரம் கற்க வேண்டும்
வழிவகை யறிந்திடிற் சற்குரு வினுபதேசம்
வாங்கித் துதித்த பின்பு
வேலையிற் சென்றுவட தாபரத் தடியினில்
வீற்றி ருந்தொரு மண்டலம்
விட்டுணு கடாட்சமது பெற்றபின் சிவயோக
விரதம தியற்ற வேண்டும்
பாலையொரு போதுண்டு அறுதிங்கள் வரையிலும்
பசிதுயி லறுக்க வேண்டும்
பரம காயத்திரி நூற்றெட்டு அதனுடன்
பண்ணவர் களரி அயன்றன்
காலையொரு கோடிகா யாத்திரி செபமது
கருவிலுரு வாக்க வருவாள்
கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** முட்பற்றைகளும் திக்குத் தெரியாத காடும் சூழ்ந்த உன்பதியில் திக்கற்றவர்களின் தெய்வமாகத் திகழும் கந்தப்-பெருமானின் மற்றொரு சிற்றன்னையான வாலை எனும் பெயராள் சரஸ்வதித் தேவியின் அருளைப் பெறுவதற்காக ஒருவர் அநேக காரியங்களைச் செய்து முடிக்க வேண்டும். அவற்றைக் கூறுவேன் கேட்பாயாக. 1. பல்லாயிரக் கணக்கான அறிவுரைகளைக் கற்க வேண்டும் 2. அழியாத கல்வியெனுஞ் மகா செல்வத்தைப் பெறத்தக்கதான வழிவகைகளைக் கற்று அறிவதற்கு தகுந்த ஒரு நல்லாசிரியரைக் குருவாகத் தேடிக் கொள்ள வேண்டும். 3. பின்பு வடபாலுள்ள ஆலமரத்தடியிற் தனியாகஅமர்ந்திருந்து இறைவனைத் துதிக்க வேண்டும். பின்பு 4. அதனை அடுத்து உலக ஆசைகள் பாசங்கள் அதிகமாக வந்து உபத்திரவந் தராது வாழத்தக்கதான ஒறுப்புகளை நோற்க வேண்டும் 5. பாலாகாரத்தை மட்டும் புசித்து பசி நித்திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றின் பயங்கரக் கொடுமைகளை வெல்ல வேண்டும் 6.பரம்பொருளைப் பற்றிய நூற்றியெட்டு மறைமொழிகளையும் ஏனைய கோடிக்கணக்கான அறிவுக்கலை மொழிகளையும் வித்தை நுட்பங்களையும் நன்கு அறிந்து அவற்றை ஐயந்திரிபறக் கற்க வேண்டும். கற்றபின் அதற்குத் தக நடக்கவேண்டும்.

## 84 தேவர்களின் திருவிளையாடற் திறமை

அராவானை வெட்டிக் களப்பலி கொடுத்ததால்
ஐவர்கள் தமக்கு மழகோ
அண்ட ரமுதுண்ணவே அரனும் நஞ்சதை
அருந்திய தவர்க்கு மழகோ
பராபரம் பிள்ளையைக் கறியாக்க உண்டதால்
பார்வதி தனக்கு மழகோ
பரராசர் ஆற்றிலே மாதைப் புணர்ந்ததால்
படிகடந் தோர்க்கு மழகோ
சராசந்தனைக் கலச லோசனன் கொன்றதால்
சதுர்முகன் தனக்கு மழகோ
சாவித்திரி யமனிடங் கணவனுயிர் பெற்றதால்
சதுர்முகன் தனக்கு மழகோ
கராவினது வாய்பிழந் தானையை விடுதல்திரு
கண்ணபர மாத்துமாக் கழகோ
கனககுவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

**உரைநடை:** முருகு என்பதற்கு அழகு என்பது பொருள். அவ்வழகு குறிஞ்சி எனும் மலையும் மலையைச் சார்ந்த முதல் இடத்திலும் எங்கும் அள்ளித் தெளித்தாற்போலக் காட்சிதரும். எனவேதான் அருள்புரியும் முருகனின் இருப்பிடம் மலைகளாக அமைந்துள்ளன. அத்துடன் குறிஞ்சிக் குமரன் என்ற பெயரும் அமைந்து விட்டது. அத்தகைய குன்றக் குமரன் எழுந்து அடியார்க்கு அருளழகு பாலிக்கும் கதிரையம்பதியே. அந்த அழகு எனும் சொல்லை "ஏற்குமோ," என்ற பொருளிற் பாவித்துச் சில வரலாறுகளை இன்று எடுத்துச் சொல்கின்றேன் கேட்குக. பாரதப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வீமனுடைய மகன் அரவானைப் பஞ்சபாண்டவர்கள் களப்பலி கொடுத்தார்கள். தேவர்களுக்கு ஆயுள் அமுதை அளிப்பதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் ஆதிசேடனை நாணாகவும் உயர்ந்த மேருமலையை மத்தாகவுங் கொண்டு பாற்கடலைக் கடைந்தபோது ஆதிசேடன் வலிதாங்காது கக்கிய விசத்தை உண்டு வயிற்றினுட் செல்ல விடாமல் கண்டத்திலேயே நிறுத்திக் காலகண்டன் எனும் பெயரைக் கொண்டார். சிவபெருமான் ஒரு தடவை. பக்தன் சிறுத்தொண்ட நாயனுர் எனமற்றவர்களால் அழைக்கப்பெற்ற பரஞ்சோதியாரின் சிவபக்தியைச் சோதிக்கக் கருதி அவரின் மகனைக் கறியாக உண்டார். பரிசுத்தமான பராசர முனிவர் வேதவியாசரைப் பெறுவதற்காக அசுத்த உடலுள்ள மச்சகந்தி எனும் படகோட்டும் பெண்ணை நடுநிசியில் கலவி செய்தார். சராசந்தனைச் சலசலோசனன் பிரமனின் அருளாற் கொன்று தீர்த்தான்.சாவித்திரி தனது கணவன் சத்தியவானின் உயிரை இயமனைத் திக்குமுக்காட வைத்துத் திரும்பப் பெற்ருள். தனது உணவுக்காக யானையைப் பற்றிய முதலையிடம் இருந்து ஆதிமூலமே என்ற யானையின் அபயக் குரலைக் கேண்டுக் கண்ண பரமாத்மா அதனை விடுவித்தார். இவைகளை எல்லாம் பார்க்கும்போது பஞ்சமா பாதகங்கள்கூட நல்ல காரியங்களுக் காகச் செய்வது அழகோ என்ற கேள்விதான் எழுகின்றது..

## 85. கற்றவர்க்குக் வள்ளல் தரும்மதிப்பு

புலவரென வருபவர்க் கேமகுட மேந்திடும்
புரவலன் செய்மு றையதாம்
புனிதமலரால் தொடைகள் தோரணங் கொடிகுடைகள்
பொற்கு வரிபூம் பந்தலும்
சலமருவு சங்குதொனி நிறைகும்பம் எரிதீபம்
சரசமங் கையர் களாடத்
தம்புரு பல் தாளமொடு மேழமெழ வேகியெதிர்
சந்தித் தழைத்து வரசன்
நலமான பட்டிட்ட ஆசன மிருத்தியே
நறுமலர் சொரிந்த பின்பு
நற்கவிகள் பாடவே ரெத்ன மணியீந்து
நடந்து ஏழடி யினின்று
கலரெனும் நரர்போற் றிரும்புவது கல்வியின்
கலைவாணர் பெருமை யன்ருே
கனககநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரைநடை:** கற்றவர்க்கு எங்குச் சிறப்பு என்பதைத் தனது தந்தைக்கே உபதேசஞ் செய்து காட்டி உறுதி செய்த பழனியப்பன் வந்து உறையும் கதிர்காமப் பதியே•கற்றவர்களை வள்ளல்களும் ஆட்சியிலுள்ளவர்களும் கௌரவிப்பது கல்வியை கௌரவிப்பது போன்றது. .அப்படி அவர்களுக்கு உரிய மதிப்பளிக்கும் போது செய்ய வேண்டிய சில காரியங்களை எடுத்துச் சொல்கின்றேன். தூய நறுமண மலர் மாலைகளை அணிவித்தல். அலங்கார வாசல் முகப்புகளை அமைத்தல்.கொடி குடைகளுடன் எதிர்சென்று அழைத்து வரல். சாமரை வீசுதல். பூம்பந்தலிட்டு அமரச் செய்தல். சாமரம் நிறைகுடம் கண்ணாடி தோட்டி முரசு விளக்கு கொடி இணைக்கயல் ஆதிய எட்டு மங்கலப் பொருட்களால் வரவேற்றல். நாட்டிய மாதர்கள் ஆட மேள தாளமாதிய ஐவகை இசைக் கருவிகள் இசைக்க அழைத்து வந்து பட்டாலான ஆசனத்தில் அமரச் செய்து மலர் தூவியபின் அமைதியாக அவரின் இனிய கவிகளைக் கேட்டிருந்து பின்னர் பலவிதமான பொன்னும் பொருளும் ஈந்து பின்னால் ஏழு அடிகள் திரும்பாது வந்து மதிப்பளித்தல் என்பனவாகும்.

## 86 நல்லவர்களின் பிறப்பின்போது கிரகநிலை

இடபமது உதயமாய் மந்திரியு மேழதாய்
　　இரவி நாலதிற் குருதியும்
　எழிராறிற் காரிப னொன்றினில் இருந்திடப்
　　புவியதிற் சிசுவு திக்க
திடவீர பாஸ்கர யோகமது வேயுலகு
　　சென்றிட் டதன்று முதலாய்
　தீயசெ லானகொலை பாதகம் வஞ்சனைகள்
　　திருடுபொய் காம வேட்கை
நடனமிடு மதர்மமும் கெடுமுறைகள் முற்றிலும்
　　நல்லிரவி முன்னி ரிளதாய்
　நடுங்கியிச் சுதனுக்கு விட்டகலு மளவாய்
　　நன்னிலை யதுவ ருகுமாம்
கடகமுறு மலவனின் ஆட்சியது போலுலகு
　　கதிபெற்று உயர்வ தன்றோ
　கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
　　கந்தரு றைகதிர் காமமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரைநடை:**சரவணப் பொய்கையில் அவதரித்ததால் சரவணன் என்றுங் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்ட படியாற் கார்த்திகேயன் என்றும் உனது பதியில் அருள் பாலிப்பதால் கதிரமலையோன் என்றும் அழைக்கப்படும் திருமுருகனின் ஆலயம் அழகாய் அமைந்துள்ள புண்ணிய தலமே. உலகத்தில் ஒவ்வொருவரும் தமது முற்பிறப்பிற் செய்த புண்ணிய பாவச் செயல்களுக்கு ஏற்ப இம்மண்ணுலகில் வாழப் பிறக்கின்றார்கள் அவ்வாறு அவர்கள் பிறக்கும்போது நாளுங் கோளும் நட்சேத்திரமுந் திதியும் அவர்களின் பிறவிப் பயனுக்கு ஏற்ப அமைந்து விடுவதுண்டு. அவற்றுட் சிலவற்றைக் கேட்பாயாக. நல்ல பாஸ்கர யோகத்திற் பிறந்து திடமுந் திறலும் பல சுகபோகங்களும் தான தருமஞ் செய்யும் நற்குணங்களும் அமைவதற்கு இடப இலக்கினம் உதிக்கின்ற வேளையில் ஏழாம் இடத்தில் வியாழனும் நாலாம் இடத்தில் சூரியனும் ஏழாம் இடத்தில் செவ்வாயும் ஆறில் சனியும் ஒன்றி இருக்கவேண்டும். இத்தருணத்தில் சிசு பிறந்தால் அவனை துட்ட குணமும் பஞ்சமாபாதகங்களும் செய்யுந் தீய குணங்களும் ஒருபோதும் அண்டாது.( குருதி - செவ்வாய்)

## 87.புலவரை மதியாத மன்னனின் நிலை

விற்பன்னர் பாவதை யிசைத்துமே மன்னர்சபை
மேவிடக் கண்ட வரசன்
வெட்க முற்றவர்போலச் சென்னி குனிவாகியே
விருதது கொடாது விடிலோ
சற்பவிச மதுபோற் சினந்துகவி அரசனின்
தருபே ரெடுத்து இசையில்
சாற்றியவர் பேரூரை இன்னொருவர் தலையிலே
சாரவைத் தெழுதி மொழிய
பொற்பணி களாடையொடு மாட மாளிகைகளும்
புரவலர்க் குற்ற நிருபம்
பொரிமெழுகு போலவே யாகுமிவர் செயலெலாம்
புலவர் பரிசி யாததால்
கற்பகக் கானகஞ்சூழ் கதிரை யுயர்திவ்ய
கலைவாணர் பெருமை யன்றோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு ளுறைகதிர் காமமே

*உரைநடை:* தெய்வ நிலைகளில் மானுட அம்சங்களைப் புகுத்தி இறைவனுடன் தாமும் ஒன்று கலக்கும் பக்தி முறை ஒன்றுண்டு. இது எல்லாத் தேசங்களிலும் எல்லா இனங்களிலும் பண்டு தொட்டுப் பரவணியாகப் பயின்று வரும் பழக்கம். ஆயினும் அதன் அமைப்பிற் சற்று உயர்வான மரபுகளைக் கைக்கொண்டு வழிபாடு செய்யப்படுந் தலமாகிய கதிரைமலை. அவற்றில் ஒன்று. உற்சவ ஊர்வலத்தின்போது தெய்வானை அம்மன் தேவாலயத்திற்குள் சற்று நேரந் தரித்து பின்னர் தொடர்ந்து விரைவு விரைவாக வள்ளியம்மன் ஆலயத்தில் நுழைந்து வெகு நேரம் ஆறுதலாய் இருக்கும் வழக்கமாம். இத்தகைய மரபு தவறாத கதிர்காமப் பதியே புலவர்கள் மன்னர்களைப் புகழ்ந்து பாடி அரசவைக்குள் சென்றால் வந்த அவர்களைக் கண்டுங் காணாதவர்போல நாணிய பெண்ணைப் தமது முகத்தைத் தொங்கவிட்டு வேண்டிய மதிப்பும் பரிசும் விருதுங் கொடாது அரசர்கள் அவமதித்தால் அப்புலவர்கள் பாம்பின் விசம் ஏறுவதுபோல உடனே கோபித்து அரசனின் பேர் ஊரை மாத்திரம் எடுத்து கவி அமைத்து வேறு ஒருவரின் பேரில் பாடுவதுபோலப் பாவகஞ் செய்தால் அந்த அரசனுக்குரிய எல்லா வரிசைகளும் சுகபோக வாழ்க்கைகளும் அரண்மனை மாட்சி ஆதியனவும் எரியில் மெழுகு உருகுவபோல இல்லாது அழிந்து விடும்.

## 88 பிரபஞ்ச உற்பத்தியின் விபரம்

எண்பத்து நான்கு நூறுயிரம் யோனியும்
ஈரேழு லோக மதையும்
எரிவிழிகள் நுதலதி லிலங்கப் பரப்பொருள்
தனதுட லிலெழு கலைகளில்
விண்பற்றி வளரிரவி மதிஒளிக ளதனோடு
விரவிக் கலந்து கரவாய்
விவேகவித செனனமாய்ப் பூதலத் தன்னிலே
விமலன் படைத்து மகிழ்வாய்
பண்புற் றிலங்குபுவி தன்னிலெழு வற்கமால்
பாரி லுற்பத்தி யதுவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிவொ டமைத்தனர் அரியயன் கிருபையும்
பதிய வருளீந்து பரமன்
கண்வெட்டி மூடாமல் அன்றின்று மேசிவன்
கார்த்து ரெட்சிப்ப தன்றோ
கனகநவ ரத்ன படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

உரைநடை: சைவ மதம் புலால் உண்பதை ஒரு புனிதச் செயலாகக் கொள்வதில்லை. அதே போல பௌத்த மதமும் கொல்லாமையை முக்கிய நெறியாகக் கொள்வது. ஆனால் இரு மதத்தவர்களும் வழிபடும் உனது புண்ணியபதியில் எழுந்தருளி இருக்கும் கந்தப் பெருமானுக்கு வருடாந்த உற்சவ முடிவில் திருவேட்டை யாடிக் கொன்று வந்த மானின் இறைச்சியை நிவேதனமாகப் படைத்து ஆராதித்து இன்னும் ஒருபடி தெய்வத்தன்மைக்குள் அன்பாம் மனுசத் தன்மையைக் கலந்து பக்திகொள்ளும் மரபுள்ள கதிரையம்பதியே. இந்த உலகம் பெரியது. தம்மினத்தைப் பெருக்கும் எண்பத்து நான்கு கோடிகள் உயிர்கள் வாழ்கின்றன. கீழும் மேலும் பதினான்கு வேறுபட்ட பகுதி உலகங்கள் உள்ளன. அவற்றினை எல்லாம் படைத்த பரப்பொருள் அக்கினியைத் தனது நெற்றிக் கண்ணாகவும் ஏழு கலைகளையுஞ் சந்திர சூரியர்களையும் தனது உருவிலே கொண்டு செனனமாக்கிய இந்தப் புவியை அயனும் பிரமனை படைப்புத் தொழிலைத் தொடரவும் நாரணனை அழிக்கவும் நியமித்து என்றுங் கண்மூடாது பேணிக் காத்து வருஞ் சிவன் எனும் பரம் பொருளே இந்தப் பிரபஞ்ச வடிவாக இருக்கின்றார்.

## 89 முருகனை நம்பினார் முத்திப் பேறடைவர்

வேலேந்திச் சூரரை அழித்த முருகேசனின்
விந்தமதை நோக்குவோர்கள்
மெய்யுரு வகற்றி மேலுற்ற தூலத்தை
வெந்து தழலாக விரதம்
நாலைந்து திங்கள்முன் பிடிவாத மாகவே
நாடி யேதுதித் திருந்து
நல்லறங் குருபூசை செய்தன்ன தானமும்
நற்கூந்தர் மகிழ வீந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலவன் திருமருகன் என்றேல மிட்டுவொரு
மனமா யகத்தை விட்டு
வருவழியி லமுது அடியவர்க் கிட்டுண்டு
வாழ்கதிரை வந்த பேர்க்கு
காலனின் ஓலையது சேருமோ மனுமக்கள்
கன்மவினை யகலு மன்றோ
கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** கதிரமலையே உனது புண்ணிய தலத்துட் புகுந்து தமது பாவஅழுக்குகளை உடனே கழுவி முருகனின் அருளைப் பெறுவது என்பது முடியாத காரியம். நெருக்கடியான பாவவினைகள் சூழ்ந்த இந்த உலகில் வாழ்வதற்காகப் பாவ புண்ணியங்களின் வித்தியாசந் தெரியாத மாய வாழ்விற் சிக்கி உழலும் மக்கள் இறுதியில் உனதருளையும் அபயத்தையும் நினைந்து வருவதற்கு முன்னர் சில கடமைகளைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறீர்கள். அதை எடுத்துக் கூறுவேன் கேட்பாயாக. அங்கு வருமுன் இருபது வாரங்கள் உடலை வருத்தி எரித்து நோன்பிருந்து உனதருள்மிகு பாதங்களையே பற்றியவர்களாக நல்ல தரும தானங்களும் குரு பூசையும் செய்து மால்மருகா முருகா என்று தம்வினைகளை நினைத்து அழுது புலம்பி மனமயக்கத்தை விட்டு விலகி உன்னைக் கண்டு தரிசித்து நல்லருள் பெறுவதே நோக்கமாக உள்ளத்திற் கொண்டு வீட்டை விட்டு எல்லா உலக பந்தங்களையுந் துறந்து யாத்திரை செய்யும் வழியில் முருகனடியார்க்கு அமுது படைத்து வரவேண்டும். இப்படிப் பட்டவர்களுக்கு காலன் விடுக்குங் கடைசித் தூதுகூட சுவர்க்க வாழ்விற்கு விடுக்கும் அழைப்பின் இனிமைச் செய்தியாகத்தான் இருக்கும்.

## 90 ஒவ்வாதனவற்றை ஒறுத்தல் நன்று

நேசமிலாக் கணவனொடு வாழ்ந்து பணிசெய்வதில்
நீடாழி வீழ்தல் நலமாம்
நித்தமும் பாரியொடு வீண்பிணக் காவதில்
நிருவாண யோகம் நலமாம்
தூசுபடு வாழ்மனையில் உண்டுதுயில் கொள்வதில்
சுடலையிற் தூங்கல் நலமாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்ப்புத்தி மந்திரியை வைத்து அரசாள்வதில்
துருவை மேய்த்திடுதல் நலமாம்
பூசைவிதி யில்லாத வாலயஞ் சேர்வதில்
புலிகளொடு வாழ்தல் நலமாம்
புத்தி கேளாத தன்பிள்ளை வளர்ப்பதில்
பொதிமாடு மேய்த்தல் நலமாம்
காசி காண்டத்திலிவை ஆராய்ந்து பார்த்திடிற்
காணலாம் கருணை யன்றோ
கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

உரைநடை: மயில்வாகனனின் ஊர்தி மயில் .. ஆதலால் மயிலை மாத்திரமல்ல மயிற் தோகையையும் உனது புனித சின்னமாக மதிப்பவர்கள் உனது பதிக்கு வரும் மெய்யடியார்கள். எனவே மயிற்தோகை வரித்த காவடி ஆட்டங்களை ஆடிக்கொண்டு பக்தர்கள் அங்கு வருவதால் எங்கும் குமரன் முருகனின் ஊர்தி பறப்பதுபோன்ற ஒரு அரிய காட்சியைத் தருவார்கள்.. அத்தகைய பதியிலே பல சடாமுடியும் நெடுந் தாடியும் வளர்த்து இல்லறத்தைத் துறந்த தவ ஞானியர் தவம் புரிவர். அவர்கள் கண்மூடி நிட்டையில இருப்பது. அங்கு வரும் இல்லற பந்தத்தில் இருக்கும் மக்களைப் பார்த்து பரிவுடன் : பெண்ணே அன்பில்லாத கணவனுடன் வாழ்வதிலும் பார்க்க கடலில் வீழ்ந்திறப்பது நலம். ஆடவனே மனைவியுடன் தினமுஞ் சண்டை சச்சரவிடுவதிலும் பார்க்கப் பிச்சாண்டியாகி யோகஞ் செய்வது நலம். தூசு பிடித்த அழுக்கு மனையில் உண்டு உறங்குவதிலும் பார்க்க மயானம் நலம். கெட்ட ஆலோசகர்களுடை வழி நடப்பதிலும் பார்கக (துரிவை) செம்மறியாடு மேய்ப்பது நலமான காரியமாகும். சரியான வழிபாடில்லாத கோயிலிலும் பார்க்கப் புலிவாழும் குகை நல்லது. தனது புத்திமதியைக் கேட்டு நடவாத பிள்ளைகளை வளர்ப்பதிலும் பார்க்க பொதி சுமக்கின்ற பல மாடுகளை வளர்ப்பது பயனைத் தரும் என்று சொல்வதுபோல இருக்கும்.

## 91. இட்டுண்டு வாழ்வோர் பெரியர்

விலங்கின மதற்கெலாஞ் சிங்கமே அரசனும்
மீனின மதற்கு அரசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடில்சுரு செழித்திடுந் தாபரந் தன்னிலே
சந்தன மரமே வேந்தன்
இலங்கிடும் மேலோர்கள் தன்னிலெவ ராயினும்
இந்திரன் தான ரசனும்
எண்ணரிய பறவை இனத்திலே கருடனும்
ஊர்வன மநேக வகையில்
குலங்கள் நலநாக மேநிருபன் மக்களிற்
குணநலன்கள் மிக்க வாழ்விற்
குவலயந் தன்னிலே கொடுத்துண்டு வாழ்வார்கள்
குலத்துள்ளே பெரிய ராவர்
கலங்கரைத் தாசர்கள் புவிவாழ்வை விட்டிடில்
கவலையற் றுயர்வ ரன்றோ
கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** மிருகங்களுக்குள் அரசனைச் சிங்கம் விளங்கும். மீனினத்திற்கு அரசனாக சுரு மீனே விளங்கும் ..தாவரங்களுட் தலையாயது சந்தனமரமாகும். தேவாதி தேவர்களுக்கு இராசன் இந்திரன் அல்லாது வேறு ஒருவருமே இன்று. பறவைகளுட் கருடனும் ஊர்வனவற்றுள் அரசன் நாகமும் என்று உலகிற் கற்றறிந்தவர்கள் எடுத்துக்கூறுவர். ஆனால் மக்களுட் சிறந்தவர் யாரென்று பார்த்தால் இட்டுண்டு வாழ்பவர்களே உயர் குலத்தவர்களாவர். என்பதை மாந்தர்க்குக் உரைத்துக்கற்பிக்குங் கதிரையம்பதியே உனது பக்தர்களின் காவியுடையுங் கழுத்திற் தொங்கி உள்ளத்தைத் தொடும்படி ஊசலாடித் தூயதான எண்ணங்களை உண்டாக்கும் முருக பக்தர்களின் சின்னமாம் உருத்தராக்க மாலையின் அழகுக் கோலமுங் கண்கொள்ளாக் காட்சியேதான்.இவர்கள் உலக வாழ்வை நீத்தால் உள்ளத்திற் கவலையற்ற வாழ்வுடையவர்களாகவே வாழ்வார்கள் என்பது உறுதி

## 92 கதிரைமலையின் உற்பத்தி

மேருகிரி தன்னோடு தென்றலு மெதிர்த்துவெகு
வேகமாய் அமர்கள் புரிய
விண்ணோடு மண்ணசைய ஆயிரத் திருநாலு
வெற்பு முடியற்று அவனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாருலகு தன்னிலே தென்திசைப் புணரியில்
பரந்தது விழுந்து திடலாய்
பஞ்ச லோகங்களும் நவரெத்ன மணிகளும்
பாங்காய் அமைந்தி ருக்க
மாருதி யினுலிந்த அவனிவள மென்றுநர
மன்னன் குபேர னுக்கு
மகுடந் தரித்துவிள மகிபனென வாழ்த்தியே
வானவர் மகிழ்ந்து மறைய
காரகன்றிடு மிலங்கா புரிய தாமீழக்
கதிரைகிரி யான தன்றோ
கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** பளிங்குபோன்ற தெள்ளிய நீர் தெறித்து ஓடும் மாணிக்க கங்கை சூழ்ந்த இப்பதியிலேதான் கந்த சுவாமி சூரசங்காரம் செய்தார் என்பதற்கு இங்குள்ள சூரன்மலே ஒரு சான்ருக விளங்குகின்றது. உனது புண்ணிய தலத்தைத் தரிசிக்க வருவோர் இதனையுந் தரிசித்தே செல்வது வழக்கம். இத்தகைய சிறப்புறுபுகழ் உனக்கு எவ்வாறு ஏற்பட்டது என்பதை எடுத்து இயம்புவேன் கேட்குக ஒரு தருணம் மேரு மலேக்கும் வாயு பகவானுக்கும் கடும் போர் மூண்டது. போரின் உக்கிரகத்தில் ஆயிரத்தெட்டு மலேகளின் சிகரங்களுந் தெற்குக் கடலிற் சிதறிப் பரந்து வீழ்ந்தன. அதனுல் அங்கு பரந்த கடல் இருந்த இடம் மறைந்து நவரெத்தின மணிகளும் வெள்ளி பொன் இரும்பு ஈயம் பித்தளையாதிய ஐந்து உலோகங்களும் படிந்த ஒரு திடல் உண்டாயிற்று. இவ்வெற்றியால் அகமகிழ்ந்த வாயு தேவன் (மாருதி - மாருதம்) குபேரனுக்கு அவ்வழகிய இலங்காதீவு எனும் ஈழத்தைக் கொடுத்து அதற்கு அரசனுக்கி வைத்தான் அப்பதியே நீயாகினுய்.

## 93. தேவர் கணத்து மனிதப்பிறவி

பாருலகிலே தேவ ஆலயங் கட்டுவோர்
பஞ்சாட் சரத்தைப் பூசுவோர்
பரமசிவனே சிவாவென் றுதுதி பண்ணியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாங்காய்த் துதித்து வருவோர்
தாருலவு மக்கமணி ருத்தராக்க மணிபவர்கள்
சந்ததிகள் தாப ரிப்போர்
சத்திரங் கட்டியே அடியார் தரித்திரர்க்
கன்ன தானங் கொடுப்போர்
சீருலவு பூவனத் தோப்புகள் வகுப்பவர்கள்
சிவதவஞ் செய்து வருவோர்
தினவேளையுந் தரும நினைப்பா யிருப்பவர்கள்
செய்நன்றி குன்றி டாதபேர்
காருகந்திடு மாழி சூழுலகிலே தேவர்
கருவா யுதித்தோ ரன்றோ
கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

**உரைநடை:** புல்லாகிப் பூண்டாய் புழுவாய் என்று மனிதப் பிறவிகளை நாற்பத்தொன்பது பிறவிகளாக வகுப்பர். இந்த ஏழேழு பிறவிகளைத் தேவர் கணம் மனுக் கணம் என்ற உயர்திணைப் பிறவிகளாகவும் விலங்குக் கணம் பறவைக் கணம் ஊருங் கணம் மச்சகணம் தாவரகணம் என்று அஃறிணைப் பிறவிகளாகவும் பேயினம் பூதம் அரக்கர் அவுணர் இராக்கதர் என்று நரகர்கள் எனும் மனிதத் தன்மையற்ற வேறுபட்ட உயர்திணைப் பிறவிகளாகவும் பிரிப்பர். அப்படிப் பிறவி எடுப்பவர்கள் எவ்வாறு தமது பழைய பிறவித் தன்மைகளுடன் இவ்வுலகில் வாழுவர் என்பதையும் எடுத்துக் கூறுகின்றேன் கேட்குக. இங்கு சொல்லப்படுபவைகள் தவிர சொல்லப்படாத குணமுள்ள பிறவிகள் யாவரும் நரக கணங்களாவர். தேவர்கள் உகந்து வாழும் பேறுடைய கதிரையம்பதியே தேவர்கள் மானுடப் பிறவி எடுத்தால் ஆலயங்களை அமைப்பார்கள். நமசிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை உச்சரித்து விபூதி அணிவார்கள். பரம சிவனே ஒருதனி முதல்வன் என்று துதித்து வருவார்கள். மற்று உருத்திராட்சம் முதலிய சிவசின்னங்களை அணிவார்கள். தமது உற்றார் உறவினரை ஆதரிப்பதுடன் நில்லாது சத்திரங்களையும் மடங்களையுங் கட்டி அவற்றில் இறைவனின் பரம அடியார்களுக்கும் ஏழைகளுக்குந் தங்குமிடந் தந்து அன்னதானமாதிய தானங்களை இடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்த வனங்களையும் தங்க நிழலும் வாழ்க்கைப் பயனுந் தரும் பல மரத்தோப்புகளையும் வைப்பார்கள். இறைவனை நினைத்து யோகம் செபந்தவஞ் செய்து வருவார்கள்.எந்த வேளையுந் தரும சிந்தனையாய் இருப்பார்கள். செய்நன்றி மறவார்கள். என்பவராவர்..

## 94 மனிதக் கணத்து மனிதப் பிறவி

வட்டமது சூழவனி தன்னிலே மனிதர்மனு
வாகப் பிறந்த மகிபன்
வன்பசி யறிந்தமுது தானளித் திடுவனும்
வைத்தயத் தறிவு வாய்ந்தோன்
சட்டநெறி தவரு வழக்கறிந் தோதுவன்
சந்ததியை உபச ரிப்போன்
சாந்தகுண மோடுகலை வலிமையிற் பண்டிதன்
மந்திரந் தந்திர மறிவோன்
இட்டமாய்ப் பரிசுத்த ஊணது ஊண்பவன்
எள்ளள வேனும்பொய் யுரையான்
எவ்வுயிர்கள் தன்னையும் தன்னுயிர தாகவே
எண்ணியே புவியில் வாழ்பவன்
கட்டழகு சேருட லெடுத்தவனி சேர்பவர்கள்
மனுமனிதர் ஆவ ரன்றே
கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** கிட்டத்தட்ட நான்கு அடிகள் ஆழமும் பத்தடி அகலமும் இருபது அடிகள் நீளமுங்கொண்ட தரையில் அமைத்த குளியில் வைரமான பாலை வீரை முதலிய மரங்களின் விறகுகளை இட்டு எரித்து உண்டாக்கிய உலோகங்கள் உருகத் தக்க வெப்பமுள்ள தீக்குளித் தழல்மேல் அடியார்கள் தமது பக்திப் பரவசத்தை கந்தப் பெருமாளிடங் காட்டி அவரது மீட்சி கலந்த அருளைப் பெறுவதற்காகத் தீமேல் நடந்து திப்பாயும் மரபுடைய அழகிய கதிரையம்பதியே. முற்பிறப்பில் மனிதர்களாகப் பிறவி எடுத்தோர் மரித்து மீண்டும் இப்புவியில் மனிதப் பிறவியை எடுக்க நேரிட்டால் அவர்களின் இயல்புகள் எவ்வாறிருக்கும் என்பதை எடுத்துக் கூறுகின்றேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவி மடுப்பாயாக. அவன் பசியறிந்து உணவிடுவான். வைத்தியக் கலைகளிலே வல்லவனாய் இருப்பான் .நீதி நியாயங்களின்படி மற்றவர்களின் பிணக்குகளை விசாரித்து ஒருபக்கஞ் சாராது நடுச் சொல்வான். இனசனத்தவர்களை ஆதரிப்பான். மிகவுஞ் சாந்த குணமுள்ளவனாய் இருப்பான். அறுபத்து நான்குவித கலைகளிற் சிறப்புடைய பண்டிதனாக விளங்குவான்.. மந்திரந் தந்திரம் என்பதில் வல்லவனாய் விளங்குவான்.. தூயதான தாபர உணவுகளை உண்பான். எள்ளளவேனும் பொய்மொழி பேசான். அயலாரைத் தன்னைப் போல நேசிப்பதுடன் பிறவுயிர்களிடத்தும் மிக்க சீவகாருண்யம் உள்ளவன். கட்டழகுள்ள உறுதித் தேகியாக இருப்பான்.

## 95 விலங்குக் கணத்து மனிதப் பிறவி

விலங்கினந் தன்னிலே மனுவாய்ப் பிறப்போர்கள்
மிகுந்தவுன் நித்திரை யதனில்
மேனியுறு காலதை முடக்கிக் குறட்டையும்
வேகமாய் விட்டு விடுவர்
மலங்கா தெடுத்திடுங், காரணந் தோற்போர்கள்
மன்னுயிர் தனக்கி ரங்கார்
மறைநான்கு முறையதும் சான்றோர்கள் நிலையதும்
மனதிற் பதித்து வாழார்
இலங்கியொளி தங்குவாய்ப் பல்லது கடிப்பரிழி
துன்மார்க் கநடை நடப்பர்
எவரொருவர் செய்நன்றி குன்றிக் கெடுப்பவர்கள்
இயல்பு சற்குருவை இகழ்வர்
கலங்காத மிருகங்கள் மனுவா யுதித்திடும்
காரண மிதாகு மன்றோ
கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** கொடிய விலங்குகளாக இருந்தும் உனது பக்தர்களுக்கு எவ்விதத் தீமையும் புரியாத யானை புலி சிறுத்தை நரி கரடி முதலிய பிராணிகள் வாழும் யாழை வனம் எனும் சரணாலயத்துக்கு அருகில் அமைந்துள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதியே பண்டைப் பிறவி விலங்குகளாக இருந்து புவியில் மனிதர்களாகப் பிறவி எடுத்தவர்களின் குணநலன்களைக் கூறுவேன் கேட்குக..துயிலும் வேளையில் கால்களை மடக்கி வயிறுடன்வளைத்து உடம்பைக் குறுக்கி பெருத்த குறட்டை விடுவர். என்றும் தாமெடுத்துச் சொல்லும் எக்காரணமும் மற்றவர்களால் ஏற்றுக் கொள்ளத் தக்கவையாக இருக்க மாட்டாது. மற்றவர்க்குச் சற்றும் இரக்கமே காட்டார்கள். பற்களைக் கடித்துப் பேசுவார்கள். கெட்ட நடைத்தைகளையே செய்து வாழ்வார். மற்றவர்கள் தமக்குச் செய்த நன்றியை மறப்பார்கள். தமது ஆசிரியனை மதியாது இகழ்வார்கள்.

## 96 பறவைக் கணத்து மனிதப் பிறவி

புள்ளுவகை தன்னிலே நரராய் உதித்தவர்கள்
புண்ணியஞ் செய்ய நினையார்
பொன்பண மழித்துவெகு புகழதைத் தேடிடார்
புத்தியில் மந்தை யாவார்
தெள்ளுதமிழ் உபதேசஞ் செவியதிற் கேட்டிடார்
சிந்தையிற் கவலை யுடையார்
செல்வர்பெரி யோர்குரவர் அருகராய் வாழ்ந்திடார்
தெய்வவழி பாடு செய்யார்
முள்ளிரிய கானகம் வாழ்மனது உள்ளவர்கள்
முணுமு ணுத்தே நடப்பார்
முனிவரொடு மூத்தோர்கள் தம்மைத் துதித்திடார்
முப்பழ மருந்தி மகிழ்வர்
கள்ளினது மலருலவு பறவைமனு வாயிவர்கள்
காசினியில் உதித்தா ரன்றே
கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** விட்டுணு எழுந்திருக்கும் திருப்பதியில் அவரது ஊர்தியான கருடன் வாழ்வதுபோல் உன்பதியில் எழுந்தருளும் அறுமுகக் கடவுளின் ஊர்தியான மயிலும் கொடியில் உள்ள கோழிச் சேவலும் கூட்டங் கூட்டமாக வாழுஞ் சிறப்புமிக்க கதிரைமலையே. இங்கு மனிதப் பிறவி எடுக்கமுதல் பறவையாக இருந்தவர்களின் தன்மைகளை எடுத்துச் சொல்வேன் கேட்குக. அவர்கள் புண்ணிய காரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெதுவுஞ் செய்யார்கள். தமது பொருட் செல்வத்தையே பெரிதாக நினைப்பதன்றிப் புகழை ஓர்காலும் பொருட்டாய் விரும்பார்கள். கற்ருேர் செந்தமிழிற் செப்புகின்ற நன்மொழிகளை என்றுஞ் செவி மடுக்கமாட்டார்கள். எப்போதுங் கவலையுடனே இருப்பார்கள். மற்றவர்களை அண்டி உறவாடி வாழார்கள் .காட்டில் தனித்து ஒதுங்கி வாழவே மனதுள்ளவர்களாக இருப்பார்கள் எந்த வேலையும் தம்முள் முணுமுணுத்தவாறே நடப்பார்கள். தம்மிலும் முதிய பெரியவர்களையும் அறிஞர்களையும் தவ சிரேட்டர்களையும் மதியார்கள். பழவகைகளில் நாட்டம் உள்ளவர்கள். ஆதிய பறவைக் குணவியல்பு உடையவர்களாய் விளங்குவார்கள்..

## 97.மச்ச கணத்து மனிதப் பிறவிகள்

சாதி பேதங்களில் வெகுளியாய்ப் பேசுவோர்
சண்டையிற் தோல்வி யடைவார்
சமரிலே தைரியம் கெட்டழிந் தேகுவார்
தாளாண்மை விட்ட கலுவார்
வீதியிற் சந்தியில் மற்கட்டி வீழுவோர்
வெட்கமுற் ருேடி யகல்வர்
வேதமுதல் சோதிடம் பார்த்துப் படித்திடார்
வீண்மொழி பகர்ந்து திரிவார்
நீதிநெறி யாயுலகு வாழ்ந்திட விரும்பிடார்
நிகரற்ற குருவை நினையார்
நீடுற வியற்றிடும் நூல்களை இகழுவார்
நீரிலே யஞ்சி நடவார்
காதிலே நற்செயல்கள் கேட்டிடார் கயலினம்
கருவாய்ப் பிறந்தா ரன்ருே
கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** வாழ்நாள் முழுவதும் மச்ச மாமிச உணவுகளையே உண்டு ஓர் சில காலமாவது மரக்கறி வகைகளை உண்பதற்கு உறுதி கொண்டு வந்திருக்கும் உனது முருக பக்தர்களின மனதிற் சபல சஞ்சலத்தை ஏற்படுத்திப் புடஞ் செய்வதற்காக உனது மாணிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கையில் துள்ளியோடும் வெள்ளி மீன்களைப் பெருக்கிச் சுதந்தரமாக நீந்த விட்டிருக்கும் கதிரையம்பதியே. இப்படி மீன்களாக இப்பிறவி எடுத்தவர்கள் அடுத்த பிறவியில் மனிதர்களானல் எத்தகையவர்களாக இருப்பார்கள் என்பதை எடுத்துச் சொல்கின்றேன். இனபேதம் குலபேதங் காட்டுவர். சண்டையிட்டு என்றுந் தோல்வி அடைவார். போரிற் தைரியம் இல்லாது பின்னிடுவர். முயற்சி ஊக்கம் இல்லாது வாழ்வார். கண்டகண்ட இடங்களிற் பிறருடன் முரண்டு பிடித்து மல்லுக் கட்டிப் பொருதுவார்கள் நான்கு மறைகளைப் படிக்காதார். சோதிடத்தை மதிக்காதவர்கள். பதிலாகத் தேவையற்ற வார்த்தைகளைப் பேசித் திரிபவார். எவரும் நல்ல நீதி நியாயத்துடன் வாழ்வதை எப்போதுமே விரும்பார். தனது குருவை மறப்பதுடன் மதிக்கவும் மாட்டார். நல்ல நலல பனுவல்களைத் தேடி கல்லாது அவற்றை இகழ்வார். நீருக்குப் பயப்படார். இத்தகைய குணத்தோர் அத்தகையோர் என்க

## 98.ஊருங் கணத்து மனிதப் பிறவிகள்

கூர்விழி சிறுத்துமே துயிலற்று வாழுவோர்
கொண்டபழி காத்தே எடுப்போர்
கொடியதொரு தீயபகை புரிகுவோர் பெரியோரைக்
குற்றமாய்ப் பேசி யிகழ்வோர்
நீர்நிலைக ளாகவே பின்காட்டி யோடுவோர்
நிறைகளவு செய்து வருவோர்
நீதிநெறி சாத்திரங் கலையதுகள் கற்றிடார்
குருவினருள் சிதறி விடுவோர்
பேர்பெறுந் திரவியந் தேடிடார் நல்லமனை
பேணியே கட்டி வாழார்
பேருலகி லிச்செயல்கள் ஆகுமே ஊர்வன
பேசரிய மனுவர்க்க மாக
கார்கொண்ட கடல்சூழ்ந்த காசினியி லுதித்திட்ட
காரண மிதாகு மன்றே
கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** நாலா திசையிலிருந்துங் கூட்டங் கூட்டமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலனின் அடியார்கள் திரண்டு எறும்புத் திரளாய் ஊர்ந்து கால் நடையாக நாடிவரும் கதிரையம்பதியே. முற்பிறவியில் பல்லியாதிய ஊர்வனமாக வாழ்ந்த பின்னர் இப்பிறவியில் அரிய மனிதப் பிறவி எடுத்தவர்களின் இலக்கணத்தை இயம்புகின்றேன் கேட்குக. கண்.விழி சிறுத்தவர்கள். நித்திரையற்றவர்கள். மறவாது பழிக்குப் பழி எடுக்குங் குணம் உடையவர்கள். மற்றவர்களுடன் பகையாக வாழ்வதையே எக்காலத்தும் விரும்புபவர்கள். மதிப்புக்குரியார்மேல் வீணுன குற்றஞ் சுமத்தி இகழ் . பவர்கள். தண்ணீர் தடங்களைக் கண்டால் ஒதுங்கி ஓடுபவர்கள். களவு கொலை என்பனவற்றை செய்பவர்கள். நீதிசாத்திரங்களைக் கல்லாதவர்கள். குருவின் கருணையைச் சிதறவிட்டு விடுவோர்கள். பாடுபட்டு உழைக்காதவர்கள். தமக்கென ஒரு வீட்டைக் கட்டி அதில் வாழாதவர்கள். என்பவர்களாவர்.

## 99தாபர கணப் பிறவிகள்

நற்கனிகள் தன்னைருசி கண்டுண்ணர் நீர்தோயில்
நலமென்று கூறி மகிழ்வர்
நாகரீக வாழ்க்கையிற் கூடிடார் சற்குருவை
ஞமனென்று பேசி யிகழ்வர்
மற்கட்டி வருகினும் வெற்றியே பெறுவராம்
மதபே தமில் லாதவர்
வசையதைக் கூறினும் ஏனென்று கேட்டிடார்
வழியில் நிழல் வைத்து வருவர்
பற்கிட்டியே மொழிகள் பகருவர் கூர்க்கருவி
பாயினுந் தளர்ச்சி யடையார்
பனிமழைகள் தன்னிலே நனையவெகு பிரியராம்
பந்துகள் சூழ வாழ்வார்
கற்படியா தாருலகிற் தாபரம் மனுவாக
கருவினி லுதிப்பா ரன்றே
கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** குற வள்ளியை மணம் புணரவந்து வேடர்கள் வந்துற்ற காலை வேங்கை மரமாகத் தனது உருவத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றி முருகன் நின்ற கதிரையம்பதியே. முற்பிறவியிலே பாசி புல் பூண்டு செடி கொடி தாலம் மரம் விருட்சமாக வாழ்ந்தவர்கள் இப்பிறப்பில் மனிதப் பிறப்பெடுத்தால் அவர்களுடைய வாழ்க்கையில் நல்ல இனிய பழங்களைச் சாப்பிட மாட்டார்கள். தம்மில் தண்ணீர் படுவதை விரும்புவார்கள். மாறி வருகின்ற புதிய வாழ்க்கை முறையில் இருந்து ஒதுங்கியே வாழ்வார்கள். குருவை இயமனுகக் கொள்வார்கள் சமருக்குச் சென்றால் வெற்றியே பெறுவார்கள். எவர் எதை எடுத்துச் சொல்லினுங் கவலையற்று மரத்து நிற்பார்கள். .பாதை அருகில் நிழற் தருக்களை வைத்துப் பேணி வளர்ப்பார்கள். தமது.பற்களைக் கிட்டித்தே பேசுவார்கள். எவ்வித ஆயுதங்கள் தம்மைத் தாக்கினுலும் தளரமாட்டார்கள். பனி மழையில் நனைய வெகு பிரியமுளளவர்கள். இனசனத்துடன் சேர்ந்து வாழ்வர்.

## 100 கந்தனே கண்கண்ட தெய்வம்

மன்மதன்கிருபையால் அண்டர்தன் துன்பமும்
மானி லத்தவர் துயரமும்
வடிவேலதைக் கொண்டு மாற்றியே அம்மைதெய்
வானையை மணந்து லகிலே
துன்பறு வேடர்தவ மகிமையால் மானீன்ற
தோகைமுன் காட்டு மொளியும்
சுருதியிற் கயலாகி அன்னையர்க் கேகிருபை
ஈந்தசிவ சோதி உருவம்
புன்முறுவல் கொண்டுஅரி வதனமுறு சூரனுயிர்
போக்கி நின்றிடு தோற்றமும்
புல்லியர்க் கருள்கொடுத் தாழுமொரு வடிவமும்
பூலோக தெய்வ கலையும்
கன்மவினை மாற்றிடுங் கருணையும் நீயலால்
கடவுள் வெறெவரு முண்டோ
கனகநவ ரத்னமணி படிகமெழு கங்கைசூழ்
கந்தரு றைகதிர் காமமே

***உரைநடை:*** கதிரையம்பதியே உந்தனது பதியில் எழுந்தருளி இருக்கும் மூர்த்தி தேவர்களின் துயரத்தைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடைத்து தெய்வானை அம்மையை மணம் முடித்தார். வேடர்களின் தவப் பெருமைக்குக் கனிந்து அருள் சுரந்து வள்ளியம்மையை திருமணஞ் செய்தார். நால்வேதத்தின் பொருளாகிப் பெற்றவர்களுக்கு ஞானப்பொருளின் நல்லுபதேசஞ் செய்தார். சிங்கமுகா சூரனுடைய மாய உயிரை வதைத்தார். பாவிகளுக்கு அருள் பாலித்தார். அத்தகைய கந்தப் பெருமானை விடக் கருணையுள்ள கடவுள் இங்கு வேறு யாருளர் சொல்வாயாக.

ஈழம் மட்டக்களப்பு செட்டிபாளையம்
இ.வ.கணபதிப் பிள்ளைப் புலவரின்
கதிர்காம சதகமும்
ஈழத்துப் பூராடனாரின் உரைநடையும்

முற்றிற்று

————0106) சனி 0 காலே(1990————

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# முன்னுரை

"கதிர்காம சதகம்" எனப் பெயரிய இச்சிறு நூலானது ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமான் கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் தெட்சண கைலாசமென மக்களாற் போற்றப்படும் திருப்பதியாகிய கதிர்காமத்தின் மீது பாடப்பட்ட நூறு விருத்தப் பாக்களாலாயது.

பெருமானின் திருவருட் பேற்றைப் பெறுவான் வேண்டி இந்நூலை ஆக்கஞ் செய்யத்துணிந்தும் பல வசதியீனங்கள் காரணமாக நோக்கத்தை நிறைவேற்ற முடியாதவனாய் இருந்த எனக்குச் சில பெரியோர்கள் இந்நூலை இயற்றவேண்டும் என என்னைப் பல முறைகளில் ஊக்கப்படுத்திய செயலே இது நிறைவேறக் காரணமாயிற்று, ஆதலின் இதனைக் கண்ணுறும் சான்றோர் பலரும் இதன் கண்ணமைந்துள்ள குற்றங்களை நீக்கியும் குணங்களை எடுத்தும் இந்நூலை நன்கு மதிப்பர் என்னும் ஊக்கங் கொண்டே வெளியிடுகின்றேன். அன்றியும் இதன் கண் இன்றியமையாத வேண்டப்படுவதாய திருத்தங்களுண்டேல் அவற்றையும் அறிவிக்கும்படி வேண்டுகின்றேன்.

இப்புத்தகத்தை வெளியிடற்கு வேண்டிய பொருளுதவி செய்த தனவான்களின் அன்பு எம்மால் ஒருபொழுதும் மறக்கற்பாலதன்று.

இங்ஙனம்
இ. வ. கணபதிப்பிள்ளை

செட்டிபாளையம்,
12-1-48.

இது கதிர்காம சதகத்தின் முதற்பதிப்பான 1947ம் ஆண்டில் வெளியிட்ட நூலின் ஒருபக்கத்தின் புகைப்படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரட்டுரை இரண்டு

ஈழ நாட்டின் செட்டிபாளையம் இ.வ.கணபதிப்பிள்ளைப் புலவர் பாடிய மாணிக்க கங்கைக் காவியம் என்னும் நூல் இத்திரட்டின் இரண்டாவது நூலாக இடம் பெறுகின்றது .இக்காவியம் பற்றிய ஒரு வரலாறு உண்டு. கதிர்காமத்தில் 1950ம் ஆண்டில் கடும் வரட்சி ஏற்பட்டது. இது பல மாதங்கள தொடர்ந்து இருந்தபடியாலும் அவ்வருடத்தில் மாரி வளங் குன்றியதாலும் வரட்சியின் கொடுமை மிகமிக மோசமானதாகவே இருந்தது.

இதனுல் மாணிக்க கங்கையில் நீர் ஓட்டம் மிகக் குறைவாக இருந்தது. இக்கங்கை ஆடிமாத உற்சவத்திற்குப் பக்தர்களுக்குத் தீர்த்தமாக இருப்பது மட்டுமல்ல வேறு தேவைகளுக்கு வேண்டிய நீரை வாரிவழங்கும். இந்த வற்ருத வளங்கொண்ட நதி வரட்சியுற்று நீர்ப் பெருக்குக் குறைந்ததால் வருடாந்த உற்சவம் தடைப்பட்டு விடுமோ என்றுகூட ஆலய நிர்வாகிகட்கும் அங்கு பொதுச் சுகாதார வசதிகளைக் கவனித்து வரும் சுகாதார உத்தியோகத்தர்கள் பலருக்கும் கவலை ஏற்பட்டு விட்டது. தொற்று நோய்கள் பரவி விடுமோ என்ற பயத்துடன் அரசும் பக்தர்களுக்கு வேண்டிய அருள்பெறுந் தீர்த்தத்தைப் பெற்றுக் கொடுக்க முடியாதே என்று ஆலய நிர்வாகிகளும் கவலையுற்றுக் கொண்டிருந்தனர். பக்தர்களுஞ் சாரி சாரியாக வரத் தொடங்கி விட்டனர். அவர்களைத் தடுத்துநிறுத்துவதற்கும் இயலாத நிலையும் ஏற்பட்டு விட்டது.

வருடந் தோறுந் தவருது கதிர்காம யாத்திரை செய்யும் கணபதிப்பிள்ளைப் புலவரும் வழக்கம்போலக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காமஞ் செல்லும் வழியில் மாணிக்க கங்கையில் வரட்சி ஏற்பட்டதை பிறர் சொல்லக் கேட்டறிந்தார்.

இதற்கான காரணம் மழையின்மைதான் என்பது அவருக்குத் தெரியும். அப்படி மழையில்லாது போனதிற்குக் காரணம் எது என்பதுதான் அவருக்குப புரியவில்லை. கொடுங்கோலால் ஆட்சி கெடும். மக்களிடையே தீமை தலையெடுக்கும்போது இயற்கை பிறழும் என்பதுதான் அவருக்கு உதயமான ஞானம். உலகத்தில் இன்று நடைபெறுங் பாவ காரியங்களைச் சிந்தித்துப் பார்த்தார். அவருக்கு இரண்டு காரியங்கள் தெற்றெனப் புலனாயிற்று ஒன்று உலகில் தீமை பரந்து தலை விரித்தாடுகின்றது. .இரண்டாவது இங்கு வரும் முருகனடியார்களின் மனதில் ஆத்தும அவாவுக்குப் பதிலாக உலக இன்ப வாஞ்சைகள் அதிகரிக்கத் தொடங்கி விட்டன. இதனால் ஏற்பட்ட தேவ கோபம் என்பதாகும்.

எனவே இந்தத் துயரைப் போக்குவதற்கு மனமுருகிப் பக்தர்கள் வேண்டுவதுதான் தகுந்த வழியெனக் கண்டார். இதற்காக இக்காவியத்தை இயற்றி அவர் பாடக் கூட நடந்துவரும் பக்தர்கள் அவருடன் சேர்ந்து பாட இந்த நூல் உருவாயிற்று. பின்பு வரட்சியுற்ற கங்கைக் கரையில் நின்று பக்தர்களும் அவருஞ் சேர்ந்து மனமுருகிப் பாடினார்கள் ஆயினும் உடனே கங்கையில் நீர்சுரந்து வந்தபாடாக இல்லை. நிர்வாகிகளும் அவ்வருட ஆடிமாத உற்சவத்தை பக்தர்கள் வந்து தரிசித்த உடனே போய்விட வேண்டுமென்று ஒழுங்கு செய்யலாயினர். தண்ணீர்ப் பற்றுக் குறையை ஓரளவு ஈடு செய்யும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டாலும் அது யானைப் பசிக்குச் சோழம் பொரிபோலவே இருந்தது. நாட்கள் சில கடந்தன.ஆயினும் பக்தர்கள் கங்கைக் கரையில் நின்று காவியம் பாடிக் கதறி அழுவதை நிறுத்தினர் அல்லர்

பக்தர்களின் உள்ளம் உருகுதலைப் பரமனார் மைந்தன் செவிமடுத்துக் கருணை பெழிந்தான்போலும். கங்கையில் சிறிது சிறிதாக நீர்பெருகத் தொடங்கிற்று. உற்சவத்திற்கு வரும் பக்தர்களுக்குப் போதிய அளவு நீர்ப் பெருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கையில் உண்டாயிற்று கந்தன் கருணையால் கவலைகள் தீர்ந்தன வருடாந்த ஆடி மாத உற்சவம் அமர்க்களமும் மயில்வாகனனின் அருளும் நிறைந்ததாக நிறைவேறிற்று.

அத்தகைய பெருமைமிக்கது இக்காவியம். பதினெட்டு விருத்தப் பாக்களினால் இது அந்தாதி உருவில் இயற்றப்பட்டுள்ளது. சிலப்பதிகாரக் கானல்வரியின் அமைப்பையொத்த வருணனைகளுடனும் தீமை தலையெடுத்தால் உலகில் ஏற்படுந் கொடிய தீங்குகளைப் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இதனின் பக்தி வைராக்ய இயல்பைக் கண்ட கதிர்காம ஆலயப் பரிபாலகர்களே தமது பொருட் செலவில் இதனை நூலுருவில் அச்சிட்டு வழங்கினர்.

மேலும் இதனை மாணிக்க கங்கை மழைக் காவியம் என்றொரு பெயராலும் அழைப்பர் மாரி குன்றி வரட்சியும் வெம்மையும்மிக்க காலங்களில் இக்காவியத்தை மக்கள் பாடிப்படித்து வருண பகவானைத் தோத்தரிப்பதால் இப்பெயருண்டாயிற்று

=====0=====

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

ஈழத்து மட்டக்களப்புச் செட்டிபாளையம்

## இ.வ.கணபதிப்பிள்ளைப் புலவர் அவர்களின்

# மாணிக்க கங்கைக் காவியம்

—000—

## காவியம்:

உடுக்கடித்து உருவெழுப்பி உள்ளத்தின் இறைபக்தியின் உள்ளுணர்வைக் கிழப்பச் சந்தத்துடன் பாடும் ஒருவகை தோத்திர இசைப்பாடல். .இது ஈழத்தின் கிழக்கு மாகாணத்தில் தேவி வழிபாடு செய்யும் ஆலயங்களிலும் .இல்லம் வயல்களாதிய தனி இடங்களிற் வழிபடும் இடங்களிலும் ஆராதனையின்போது பாடப்படும். இதன் துள்ளற்பண் நடை இசையும் கற்பூரம் சாம்பிராணியின் மணமும் கமுகம்பாளை வேப்பிலை என்பவற்றின் தடவலும் படையலின் அழகிய மஞ்சள் விபூதி என்பவற்றின் நன்மணமும் உடுக்கின் துரிதஒலியும் பாட்டின் விரைவான இசை நடையும் சேர்ந்து ஒரு வித பரவசத்தை இயல்பாகவே கிளர்ச்சி செய்து விடும். இதன்வாய்ப்பட்டவர்கள் சாமியாடுவதும் வாக்குச் சொல்வதும் தொன்று தொட்டு வரும் பழக்கம். இத்தகைய மாரியம்மான் காவியம் பத்தரகாளியம்மன் காவியம் கண்ணகையம்மன் காவியம் வீரபத்திரன் காவியம் வயிரவன் காவியம் பேச்சியம்மன் காவியம் வதனமார் காவியம் என்று பல காவியங்கள் வழக்கிலுள்ளன. இவைகளின் அடிச்சுவட்டின் போக்கிற் சற்று மாறி கதிர்காம தலத்தின் தீர்த்தமான மாணிக்க கங்கையை ஆற்றுப்படுத்தி அதன் மூர்த்தியான கந்தவேளைப் பணியும் முகமாக காவியப் போக்கில் ஒரு புதிய உத்தியில் புலவர் இக்காவியத்தைச் செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பு

1. திருமருவு சிவனு மரியயனு முமையுயவளும்
திரிபதகை சிதேவி சிவையும் பாரதியும்
உருமருவு குகனும் வாசவனு மாதாங்கி
உம்பரொடு பன்னிருவர் பாதமலர் போற்றி
மருமருவு கதிர்காம மாணிக்கக் கங்கைமேல்
மதுரமுறு காவியம் பாட வென்னுவிற்
கருமருவு வடிவமொடு நடமாடும் ஐங்கரக்
கடவுளடி ஒருபொழுதுங் கனவில்மறவேனே

***உரைநடை:*** ( சிவை - மலைமகள். பாரதி- கலைமகள். திரிபதகை - கங்கை. மாதாங்கி - பத்தரகாளி. வாசவன் - இந்திரன் உம்பர் - தேவர்கள் பன்னிருவர்--ஆண்டாதித்தர்கள்) மண்ணிலும் விண்ணிலும் சீர்மிக்க முத்தேவர்களும் அவர்தம் பாரியாரும் மற்றும் முருகனும் முப்பத்து முக்கோடி தேவர்களும் அவர்களுக்குத் தலையாய இந்திரனும் பனிரெண்டு அண்டங்களின் ஆதித்தர்களும் என்பவர்தம் பாதங்களைப் போற்றிப் பாடி கதிரையம்பதியின் தல தீர்த்தமான மாணிக்கை கங்கையைப் பற்றி ஒரு காவிய இசைப் பாடல் ' பாடுவதற்கு விநாயகக் கடவுளை கனவிலும் நனவிலும் வணங்குகின்றேன்.

## நூல்

2. கனகநவ ரெத்னமணி தவள வலைதிரள
கழனிவள மெழவழகு கயல்கள் குதிபாய
வனசகுயில் கூவமயி லாட வரிபாட
வன்னிமொளி தாவ மாமலர் பூத்திலங்க
எனதுபதி எனவிருது எயின ரரசார்ப்ப
ஈசனடி தன்னிலெழு கங்கை செயல்பூக்க
தனதுபதி என்றுவேள் தெய்வானை வள்ளி
தங்கிவளர் மாணிக்க கங்கை மாதாவே

***உரைநடை:*** ( வன்னி - நெருப்பு சூரியன்.. வனசம் - கானகம்.. எயினர் - வேடர்.) மாணிக்க கங்கைத் தாயே உனது அழகு சொல்லுந்தரமோ.. ஒன்பது விதமான இரத்தின மணிகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலோகமும் உன்படுக்கையிற் தவழ்கின்றன. எழும் அலேகளாற் பெருகும் நீர் வயல்களைச் செழிக்கச் செய்கின்றன அதனிடை அழகான கயல் மீனினங்கள் துள்ளிப் பாய்கின்றன. கானகத்துக் குயில்கள் பாட அதற்கேற்ப வண்டினங்கள் இசைக்க மயில்கள் நடனமாடுகின்றன.. சூரியனைக் கண்டதும் தாமரை மலர்ந்து திகழ்கின்றன. இது எங்களுடைய தலம் என்று வேட அரசர்கள் கிளர்ந்து உரிமை கொண்டாடி ஓசையிட ; இது எங்களிக்கு உகந்த இடமென்று வடிவேலன் வள்ளி தெய்வானை சமேதராய் எழுந்தருளி இருக்கச் சிவபெருமானின் சடாமுடியில் சுரந்து அடியிற் பரந்து ஓடிவரும் பாக்கியம் பெற்றவள் நீயே.

3. கங்கையே யுனேவேண்டி மானு டர்வருந்த
கங்காள னீழமா நகரத்தி லிறங்கி
மங்கையே வானேறி முட்டுவரை தன்னில்
வரநதிவா வென்றரன் நின்றுபத மூன்ற
செங்கண்மால் தங்கையே திரிபதகை யாளே
சிந்தைகழி கொண்டெழுந் தேழு நதியானுய்
திங்களணி சங்கரன் கண்டுமனம் மகிழச்
செம்மணிகள் தங்கிவழர் கங்கை மாதாவே

**உரைநடை:** மாணிக்க கங்கையே நீ கதிர்காமப் பதிக்கு வந்த வரலாற்றை அறிகுக. கங்கை நதியாக இருந்த உனது அருளைப் பெறுவதற்காகப் பூலோகத்து மாந்தர்கள் வருந்தித் தவமிருக்க அதற்கு மனமிரங்கிய சிவபெருமான் ஈழத்திற்கு வந்து இங்குள்ள வானளாவிய மலேயில் நின்று தனது பாதத்தை வைத்துப் பதிக்க சிவந்த கண்களையுடய திருமாலின் சகோதரியான நீ பலவித நவரெத்தின மணிகள் விளையும் ஏழு நதிகளாக ஊற்றெடுத்துப் பிரவாகித்தாய். அதனைக் கண்டு சிவபெருமான் மகிழ்வுற்றார். (திரிபதகை - கங்கைநதி)

4. மாதா வரநதியே கதிரைமா நகரில்
மாணிக்கைக் கங்கையெனும் நாமமது பூண்டு
வேதாதி அந்தமே கந்தவேள் வாழ்த்த
மேவியெப் போதுமே மாருத மடையாய்
வாதாக ஓடவெகு திரையது கொழிக்க
மங்குலுந் துகினமுந் திவலேகள் தெளிக்க
சூதாக யிப்போது எங்கொளித் தாயோ
சுரந்திடுக மாணிக்க கங்கைமா தாவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரைநடை:** சூரியனின் கதிர்களின் ஒளி உலகத்தின் இருளை அகற்றுவதுபோல உன்னுடைய நால்வேத ஞானங்களும் எங்கள் அஞ்ஞானத்தை அகற்றுகின்றன. அவ்வித மறையின் வடிவான மாணிக்க கங்கை என்னும் அன்னையே. நீர்சிந்தும் புனல்களால் உலகத்தைக் காத்தளிக்கின்ற அடிமுடி இல்லாதவள் நீ. இந்த உலகில் உன் அருட்பெருக்கு இல்லாது போனதால் மக்கள்படும் துயரத்தைப் பார்ப்பாயாக. இந்த வேளையில் அலைகள் எழுந்து ஆரவாரிக்கவும் நவமணிகள் ஆதியன அதனுற் துன்பமுற்றுச் சினந்து எழவும் சிவபெருமானை வலமாக வரும் நீ இங்குள்ள அடியார்களின் துயரந் தீரவும் கற்புள்ள மங்கையர்கள் உனது அருள் வெள்ளத்தில் மகிழ்ந்து நீராடவும் உலாவருவாயாக.

7. தாயற்ற கன்றுபோல் மனுமக்கள் வாடி
    தரணியுறு தூசிதலை உடலதி லணிந்து
வாய்விட்டு விம்மியழ வைத்ததே னம்மா
    மறங்கூடிக் கூத்தாடி மகிழ்வத தனுலோ
சேய்கண்ட தாய்போல மனமது யிரங்கி
    செப்பரிய கடலாய்த் திரண்டுவா வம்மா
நோய்கொண்டு மானிடர்க ளிறவாது காக்க
    நொடியில்வா கமலமணிக் கங்கை மாதாவே

**உரைநடை:** தாய்ப் பசுக்கள் இல்லாத கன்றுகளைப்போல மக்கள் துன்பமுற்றுத் தளர்ந்து உலர்ந்து வாடி விட்டார்கள். நீ மறைந்து விட்டதால் உண்டான வரட்சியால் இந்த உலகம் வெந்துவிட்டது. அதனுல் எழும் தூசி பட்டு மக்களின் உடல் திருநீறு அணிந்த சிரசும் உடலும் போலாகி விட்டது. யாவரும் வாய்விட்டுப் புலம்புகிருர்கள். இதற்குரிய காரணம் என்ன. அதர்மமெல்லாந் திரண்டு கூத்தாடி களிப்புறுவதனுலா. அது எப்படி இருந்தாலும் குழந்தையைக் கண்ட தாய்போல உள்ளம் இரங்கி மக்கள் நீரில்லாமற் படும் பல பிணிகளை அகற்றி அவர்தம் உயிர்களைக் காப்பாற்ற கடல்போலத் திரண்டு விரைவில் வருக.

8. கமலம்நீ புட்கரஞ் சிந்துபுனல் வாரி
    காரறல் மாரிநீ கனவிரதம் நீயே
விமலனருள் பெற்றுநீ மேதினியில் வந்து
    வேலர்பதி கதிர்காம மோடி விளையாடி
குமிழ்செறி நிறையவெழு குமரிவடி வாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூச்சலிட் டோடிவருஞ் சமயமிது தாயே
அமலனருள் வளரவுன் பதிபெருகி வருவாய்
அறலெனு மாணிக்கக் கங்கை மாதாவே

**உரைநடை:** வருணனின் கொடையைப் பெற்று நல்குபவளாக இருக்கின்றாய் (கமலம்-நீர். புட்கரம்- தீர்த்தத் தலம்.) கதிர்காமப் பதியின் தீர்த்தமாக விளங்குகின்றாய். நீர்த்திவலைகள் சிந்தி வெப்பத்தைத் தணிக்கும் தண்புனலாக இருக்கின்றாய். கடலில் இருந்து எழும் மழையாகத் துலங்குகின்றாய். சிவபெருமானின் அருட்கொடையாக உலகத்தில் பாய்ந்து வந்து முருகன் பள்ளி கொண்டிருக்கும் இப்பதியில் ஓடி விளையாடித் தனங்களையொத்த குமிழிகளை நீரிலே உண்டாக்கி மகிழும் கன்னிப் பெண்ணாகவும் இருக்கின்றாய். இந்தத் தருணமே உன்வருகைக்கு உகந்த வேளை. தருமத்தின் ஓடையே பரமனின் அருள் பெருக இரைச்சலிட்டு நீ வரவேண்டிய சமயம் இதுவே யாகும்.

9 அறங்குன்றி மடமாதர் கற்பழித லாலோ
ஆகிமுறை தவறிமது விற்பதுவுங் கண்டோ
மறம்நின்று குழலவிழ ஆடுவது என்றோ
மாமிசந் தின்றுண்டு பாடுவது கண்டோ
திறங்கொண்ட கேடெல்லா முன்னு லழிந்து
தீய்ப்பட்ட பஞ்சுபோ லாகாதோ வம்மா
புறங்கொண்டு நில்லாதுன் பதிபெருகி வருவாய்
புவனமே செம்மணிக் கங்கை மாதாவே

**உரைநடை:** இந்த உலகத்தில் தருமச் செயல்கள் மிகக் குறைந்து விட்டதா. அன்றி தாய்மைக்குரிய பெண்மையின் திண்மையாகிய கற்பு என்னும் பொற்பு அழிந்து விட்டதா. ஒழுங்கு நெறி தவறி மக்கள் வாழ்கின்றாரா. மற்று மதுபானத்தை ஒரு தின்பண்டமாக விற்பதினாலா. இல்லை அதர்மப் பிசாசு சடைவிரித்துப் பேயாட்டம் ஆடுவதாலா. வேறு மச்சம் மாமிசம் புசித்து சீவ காருண்யமென் பதற்றுப் போனதினாலா. இவ்வாறு நீ எங்களை வெறுத்தொதுக்கும் நிலை ஏற்பட்டுளளது. காரணம் எதுவென்று நாம் அறியோம். எதுவாக இருந்தாலும் இவையெல்லாம் உனது நல்லருளால் தீப்பட்ட பஞ்சுபோல அழிந்துவிடுமே. ஆகவே எங்களை விட்டு வேறுபக்கம் நில்லாது ( புவனம் - நீர்) உலகின் உயிர் காக்கும் நீரின் வடிவாகிய மாசற்ற மாணிக்க கங்கையே பெருகி வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்.

கதிர்காமம்

# மாணிக்கக் கங்கைக் காவியம்.

இதை

இயற்றியவர்

இ. வ. கணபதிப்பிள்ளைப் புலவர்

செட்டிபாளையம்.

1951.

(இது முதற்பதிப்பின் முகப்பின் புகைப்படம்)

1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைநடை: (வரநதி- கங்கை) அவ்வாறு வந்த கங்கை மாதாவே கதிரைமலைக்கு வந்ததும் மாணிக்க கங்கையெனப் பெயருற்றுய். வேதத்தின் முடிபான முருகப் பெருமாள் உனகு ஆசிர்வாதம் நல்க ஒரு நாளும் வற்றுத ஆற்றுப் படுக்கையாக ( வாதம் - காற்று) காற்றைப்போலக் கடுகிப் பரந்து செல்ல அலைகள் எழுந்தன. அதில் பனிப் புகார்களும் நீர்த் திவலைகளும் உண்டாயின. அத்தகைய உனதருளைப் பெறுதற்காக நான் வந்தபோது எங்குநீ மறைந்து விட்டாய் எனக்குக் காட்சியளித்து உன்னருளை எனக்குச் சுரந்திடுக.

5. மாணிக்க கங்கையென மதியாமல் மானிடர்கள்
வாயெச்சிற் படுத்தியே துப்புவதி ஞலோ
காணிக்கை கட்டியே போற்றுத தாலோ
கர்மவினை மக்கள் வந்தாடுவ திஞலோ
நாணிக்கை யில்லாமல் ஆடவர்கள்கூடி
நாரியர்க ளோடுநின் ருடுவ திஞலோ
பாணிக்கி எக்குற்ற மெல்லாமே பொறுத்துப்
பவனிவா மாணிக்கக் கங்கை மாதாவே

உரைநடை: (பாணித்தல் - தாமதித்தல்) அத்தகைய தெய்வீகத் தன்மைவாய்ந்த தீர்த்தமென்று பலர் அறியாமல் உன்னை உமிழ்தலாதிய அசுத்தக் கருமங்களால் எச்சிற் படுத்துவதாலோ பக்தியுடன் காணிக்கையிட்டுப் பரிசுத்தமாக ஆடாததிஞலோ, வெட்கமற்று ஆண்களும் பெண்களும் ஒன்றுகூடி நீராடிக் களிப்பதஞலோ இவ்வாறு உன்னருளைச் சுரக்காது விடுகின்றுய். அடியேன் உன்னண்டை பணிந்து வந்து நிற்கின்றேன். இன்னுந் தாமதியாது உலா வந்து காட்சி தந்து அருள்தருக.

6.. பவனியிது சமயமுன தடிக ளீடேறப்
பரிதியொளி தருகிரண சுருதி யுருவாளே
அவனியுறு நரர்கள்துயர் அகலவருள் புரிவாய்
அலைகள்பல திரளநவ மணிகளது வெகுள
சிவனேவல மாகவரு வேளையிது அம்மா
சிந்துபுனல் கார்புவன மந்தமில் லாளே
மவுனமுறு கற்புமட மங்கையர்க ளாட
மாணிக்கை கங்கையென வந்துதவு தாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY LIBRARY 9-1-1992



எங்கள் துயர் தீர்க்குக.

10. செம்மணிகள் திரளநவ ரெத்தினங்க ளுருளச்
 சேல்பாய வளையூரத் தேரைகவி பாட
வம்மிமரு தடிசாய வாரியென ஒப்ப
 வரையில்மறை யாதுவா வடிவேலர் மகிழ்
அம்மையே உன்னடியில் ஆடுமா னிடர்செய்
 ஆயிரம் பாவமும் அகன்றழிந் திடுமே
பொம்மையு முயிர்பெறு முன்கருணை யாலே
 புவியிலுயர் மாணிக்கக் கங்கை மாதாவே

**உரைநடை:** சிவந்த பவளக் கற்கள் திரண்டு கரைகளில் ஒதுங்கி வருகின்றன. ஒன்பதுவித உயர்ந்த மணிகளும் உனது வேகத்தால் உருண்டு ஒளி பரப்பி வருகின்றன. இவற்றிற்குப் பயந்த கயல் மீன்கள் துள்ளிப் பாய்கின்றன. தமக்கேற்ற உணவென நினைத்து நண்டுகள் கரையில் ஊர்கின்றன. தேரையினம் கந்தன்மேற் கவி பாடுகின்றன. இத்தகைய வனப்புமிக்க கங்கையே அருகில் உள்ள உயர்ந்து பருத்த வம்மி மருது என்னும் மரத்தின் அடிகள் வேரோடு சரிந்து விழப் பெருங் கடலாகப் பெருகி மலையிலேயே மறைந்து நின்று விடாது இங்கு எழுந்தருளியிருக்கும் வடிவேலன் மகிழ விரைந்து வருக. அவ்வாறு நீ வந்தால் அதில் நீராடுகின்ற மானிடர்களின் ஆயிரக் கணக்கான பாவவினைகளும் அகன்று போய்விடும். அது மட்டுமல்ல உயிரற்ற பொம்மைகூட உனது தீர்த்தமாடில் சுரக்கும் இரக்கத்தால் உயிர்பெறும். அத்தகைய சிறப்புள்ள மாணிக்க கங்கையே வருக

11. மணியாட மாவாடக் காவடிக ளாட
 மதயானை அசைந்தாட மாதர்நின் றுாட
அணியாகக் கற்பூர தீபமது நாட
 ஆயிரம் பாவாணர் நின்றுகவி பாட
தணியாத சின்னமொடு தாரைதவி லார்ப்ப
 தளிர்கிரண திருவிழா வரவு எதிர்காண
பணியாளர் கப்புகற்காய் மனமிரங்கி நீயும்
 பரந்துவா மாணிக்கைக் கங்கை மாதரசே

**உரைநடை:** மாணிக்க மாதாவே. அதோ மணிகளின் நாதம் ஒலிக்கின்றன. ஒருபால் மாவிளக்கேந்தி பக்தர்கள் நிரையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றனர். மறுபால் பாற்காவடி ஆதிய பலவிதக் காவடிகளை எடுத்து பக்திப் பண்ணும் பரவசத் தாளமும் இணைய ஆடி வருகின்றார்கள். இன்னொருபால் மதம் பொருந்திய கொம்பன் யானைகள் உனதருளுக்குப் பணிந்து தமது பெருத்த உடற் பாரத்தைக்கூடக் கவனியாது. அசைந்ததசைந்தாடி வருகின்றன. வேறு ஒருபால் கற்பூர ஆலாத்தி எடுத்து மாதர்கள் உனது பதியை நாடி வருகின்றார்கள். அதன் இரு மருங்கிலும் பல பாவலர் பக்தியுடன் நின்று பாமாலை சூட்டுகின்றார்கள். பல பல பக்கங்களிலும் உனது தலத்திற்கே உரிய தாரை தவில் எனுந் தாளக் கருவிகள் ஓசையிடுகின்றன. இத்தகைய ஒளிமிக்க உனது ஊர்வலத்தை பக்தியுடன் அடியார்களுக்கு நடத்தி வைக்கின்ற கப்புறுளைகள் எனும் பதிப் பூசகர்க்காக இரங்கிப் பெருக்கெடுத்து வருக.

12. அரசர்சரி நீதியது செய்யாத தாலோ
அநியாய கொலைகளவு அதர்மத்தி ஞலோ
சரசமது தலைவிரித் தாடுவதி ஞலோ
தருமநிலை யில்லாத சதிவாழ்வி ஞலோ
பரமதுதி யில்லாத பாவத்தி ஞலோ
பகிரதி நீகதிரை நகர்பாயா திருந்த
கிரகமது பகைகொண்ட போதிலு மிரங்கி
கெதியிலெழு மாணிக்க கங்கை மாதாவே

*உரைநடை:* பகீரத கங்கையின் ஒரு கிளையாகிச் சுரந்து என்றும் பெருக்கெடுத்து இனியவளந் தருகின்ற நீ இன்று இவ்வாறு பாராமுகமாகப் பாயாது இருப்பதற்கு என்னதான் காரணமோ அறியோம். ஆட்சியாளர்கள் நடுநிலை தவறிய பரிபாலனமோ கொலை களவாதிய பஞ்சமா பாதகங்கள் மிஞ்சயதாலோ காமக் களியாட்டம் அதிகரித்து விட்டதினுலோ தரும நெறியற்ற இல்லற வாழ்க்கை முறையாலோ இறைவனைத் துதியாது பாராமுகமாக வாழாதிருப்பதினுலோ என்ன காரணமோ தெரியோம் இல்லை உன்னையும் அந்த இரக்கமற்ற சனிபகவான் பீடித்து விட்டதாலோ எதுவென்று நாங்கள் அறியோம். இவற்றையெலாம் மன்னித்து விரைவிற் பெருகி வருக.

13. கெதியிலெழு தருணமிது பரதநட மாடிக்
கெக்களிகள் கொட்டிவா மக்கள்துய ரோட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதியிலுறு கந்தவேள் மாணிக்கப் பிள்ளை
பரமசிவ னோடுவுமை வள்ளிதெய் வானை
கதிபெற்று வாழ்முத்து லிங்கரொடு தேவர்
கருணையொடு மகிழவா கமலவுரு மாதே
நதியெனவே கடலோடு உறவாட வருவாய்
நாரியே மாணிக்கக் கங்கை மாதாவே

**உரைநடை:** நதிப் பெண்ணே உனது கடற் காதலனுடன் அளவ ளாவித் தழுவி ஆசைமொழி பேசிக் கலந்து ஆனந்தம் அடைய வருகின்ற நீ இப்போது உனது பாதையை மறந்து விட்டாய். மாணிக்க கங்கை மகளே வேல்முருகன் முத்துலிங்கன் மற்றும் பரமசிவன் பார்வதி வள்ளி தெய்வானை மாணிக்கப் பிள்ளையார் என்பவர்கள் நீ ஆனந்தமுற்று கெக்களித்து நடனமாடி வந்தால் எவ்வளவு களிப்படைவார்கள் தெரியுமா. இன்னுந் தாமதியாதே விரைவில் வருக

14: நாரியே ஆடிமதி திருவோணப் பறுவம்
நரர்பாவ வினைதீர்க்க நல்லதின மென்று
பாரிலெழு மேடுமடு காடிருளைத் தாண்டி
பத்தியொடு வருவேளை மாறிநீ மறைந்தாய்
மாரிவள மற்றதென மனுமக்கள் ஏங்கி
வாடியே தேடுறார் வந்துபெரு கம்மா
தாரிலொளி கொண்டன்று போலோடி வருவாய்
தையலே மாணிக்கக் கங்கை மாதாவே

**உரைநடை:** மாணிக்க கங்கை மங்கையாளே ஆடிமாதத்தில் திருவோண நட்சேத்திரங்கூடி வருகின்ற முழுமதி நாளை இவ்வுல கத்தில் வாழ்கின்ற மானுடர்களின் பாவந் தீர்க்கும் நாளாகக் கந்தவேள் கணித்துள்ளதை நீயறிவாய். அதனை அறிந்த மக்கள் திசைதோறும் இருந்து மலையேறி மடுதாவி காடுகளைக் கடந்து இருளில் நடந்து பக்தியோடு இப்பதிக்கு வந்து உன்னில் நீராட வந்துள்ளனர். இந்தத் தருணத்தில் எங்கோ மறைந்து ஒழிந்து கொண்டாய். அவர்களும் மழைவளங் குறைந்து போனதே எப்படி உனது புண்ணிய தீர்த்தத்தை அத்தினத்தில் ஆடலாம் என்று ஏக்கமுற்றுக் கலங்கி தளர்ந்து போனார்கள். பூமியில் ஒளி பரவுவதுபோலப் பெருக்கெடுத்துப் பரவி வருக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. தையலே மானிடர்கள் வருவேளை புழுதி
தாவநுதல் வெண்ணீறு தானணிய வேர்வை
மெய்வழிந் தோடயிடை ஆடையுடை தோய
வேலரருள் காணவரு வேளையிதி லம்மா
ஐயமொடு மாறவனல் வீசமணி காய
அன்னையே அப்புவடி வாயோடி வருக
வையமனு உய்யவடி வேலர்செயல் பெய்ய
வந்துதவு மாணிக்கக் கங்கை மாதாவே

***உரைநடை:*** நதித் தையலே உனது வருகை தடைப்பட்டதால் இங்கு நடைபெறுங் காரியங்களைப் பார்ப்பாயாக வரட்சியால் எழுந்த தூசி மக்களின் நெற்றியிற் பட்டு வெண்ணீறு அணிந்தது போலாயிற்று. வெயர்வை உடலில் வழிந்து ஆடைகளை நனைத்து விட்டது. இத்தகைய துயர மத்தியிலும் அடியார்கள் வேலாயுதக் கடவுளின் நல்லருளைப் பெறுவதற்காக மனத்தளர்வு இல்லாது வந்து கொண்டிருக்கிறார்கள். ( ஐயம்- சிறுபொழுது. காயம் - உடல் அப்பு-நீர்) நேரமாகவாக வெப்பம் மிக அதிகரிக்கின்றது. தேகம் வரள்கின்றது. ஆதலால் நீருருக் கொண்டு கந்தனருள் உலகத்தவர்க்குக் கிடைக்கத் தக்கதாகப் பெருகி வருக. .

16. வந்துதவு இந்துதமிழ் உந்தனருள் பொய்யோ
மாமணிகள் பூத்துவிளை வாகுவதும் பொய்யோ
பந்தவினை தீரநரர் ஆடுவதும் பொய்யோ
பரமனடி தனிலெழுந் தோடுவதும் பொய்யோ
விந்தைசெறி கதிர்காமம் வந்ததினி பொய்யோ
வேலர்திரு வோணநீ ராடுவதும் பொய்யோ
சந்தோசமா யலைதிரளச் சலதியென வருக
தளிர் துளிர்கொள் மாணிக்க கங்கை மாதாவே

***உரைநடை:*** (இந்து - சந்திரன்.) அன்னையே. மாணிக்க கங்கையே. மதிபோன்ற குளிர்ந்த தமிழ்மொழி உனதருளினூற் கிடைத்தது என்பது பொய்யா. நீ பெருக்கெடுத்து ஓடும் இடத்தில் பலவித மணிகள் விளையும் என்பது பொய்யா. உன்னில் நீராடுபவர்களின் பிறவிப் பிணி தீர்ந்துபோம் என்பது தவறு. பரம சிவனின் பாதத்திலிருந்து பாய்ந்து பரந்து வந்து கதிர்காமத்திற் பாய்ந்து திருவோண முழுமதி நாளில் அடியார்களின் பவவினை தீர்க்கிறாய் என்பதெல்லாம் உண்மை இல்லையா.. சந்தோச அலைகள் எழுந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சந்தேக அலைகள் அகலப் பரந்து வருக

17. தளிரழகு உடலழுகு வரிநோய் ஈரல்
 தாகமனல் பெருவயிறு வாய்நோய்கள் குட்டம்
விழிமறைவு பேதிசுரம் வாய்வுகுடல் படுவன்
 வெடிசூலை கெடுகிருமி கசரோக மெல்லாம்
அழியுமே உன்மேனி பட்டவுட னம்மா
 அநியாய கொலைபாவ மன்றோடு அகலும்
வளிமாறு மடையாகப் பெருகிவா தாயே
 மாணிக்கக் கங்கையென வாளும் மாதாவே.

உரைநடை: மாணிக்க கங்கைத் தாயே தளிர்போன்ற அழகுமிக்க உடல் அழுகவும் வெப்புநோய் ஈரல் தீராத் தாகவிடாய் வயிற்றுக் கட்டி வாய்நோய்கள் என்பன வருத்தவும் குருடு பேதி காய்ச்சல் வாய்வு குடலழுகல் என்னும் பிணிகள் தொடரவும் எரிநோய் வெட்டைகள் கசரோகம் மற்றுப் பலவித நச்சுக் கிருமிகளின் உபத்திரவம் பெருகவும் பாவவினைகள் பாதிக்கவுந் துயருறுகின்ற மாந்தர்மேல் உனது தீர்த்தம் பட்டதும் அவைகள் யாவும் உடனே அகன்று விடும். எனவே நீ இதுவரை தொன்றுதொட்டு வந்த சொந்தப் பாதையை விட்டு விலகாது கதிரைப் பதியின் மாணிக்க கங்கையாகவே ஓடி வருக. வாழ்வு தருக

## வாழி.

18. வாழிய வரனோடு அரியயனும் வாழ்க
 வடிவேலர் மாணிக்கப் பிள்ளையார் வாழ்க
ஆளுநர பதிதெய்வ யானையும் வாழ்க
 அந்தணர் சுரர்முத்தி லிங்கமானவர் வாழ்க்
சூழுமெழு மலைமுனிவர் சுடர்கதிரை வாழ்க
 தொல்லுலகு மனுமாதர் கற்புநிலை வாழ்க
ஏழுதலை முறையிதனைப் பாடினோர் வாழ்க
 என்றென்றும் மாணிக்க கங்கை மாதாவே

முற்றிற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஸ்ரீ சங்கமன் கண்டிப் பிள்ளையார் பதிகம்.

இது ஸ்ரீ சங்கமன் கண்டிப் பிள்ளையார் பதிகத்தின் 17அங்குலம் நீளமும் எட்டு அங்குலஅகலமுமான மூலப்பிரதியின் புகைப்படப் பிரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றிரட்டுரை 3.

கதிர்காமத் தலத்தை வழிபட யாத்திரை செய்பவர்கள் எத்தகைய வசதி படைத்தவர்களாக இருந்தாலும் தம்மை மிகவுந் தாழ்த்திக்கொள்வர். பலகாதம் கால்நடையாக மிக துன்பங்களை அனுபவித்துத் தம்மை வருத்திக்கொண்டு வழிநடப்பர். காவியாடையும் உருத்திராக்கமும் அணிந்து விபூதியை நுதலிலும் உடலில் வேறு இடங்களிலுந் தரித்து சந்தனப் பொட்டும் அதன்மேல் குங்குமமும் அணிந்து வேல் அல்லது மயிலிறகுக் கற்றையைக் கையிற் பிடித்து தமக்கு வழிநடைக்குரிய பொருட்களைக் கொண்ட சிறிய பொதிகளைத் தமது சிரசிலுந் தோழிலுஞ் சுமந்து செல்வர். இவற்றை அவர்கள் ஒரு நோன்பாகக் கொள்வர்.

அப்படிச் செல்லும்போது இடையிடையே உள்ள பல புண்ணிய தலங்களையுந் தரிசித்து வழிபட்டுச் செல்வது வழக்கம். வழியில் யானை முதலிய வனவிலங்குகள் தென்படும் போதெலாம் கூட்டமாகச் செல்லும் பக்தர்கள் ஒருங்கிணைந்து அரோகராப் போடுவதும் பக்திப்பாமாலை களைப் பாடுவதும் உண்டு.

அப்படிச் செல்லும் வழியில் சங்கமன்கண்டி என்றொரு வழிபாட்டுத் தலம் உண்டு. இது அக்காலத்தில் மனித சஞ்சாரமற்ற கானகத்துள் ஒரு மரத்தடியில் வைத்த முக்கோணக்கல் வடிவில் உள்ள பிள்ளையாரின் ஆலயமாக இருந்தது. இவ்விடத்திற்குக் கதிர்காம யாத்திரை செல்லும் பக்தர்கள் வந்ததும் கானகத்து விலங்குகளை காணத் தொடங்குவர். ஆகவே இங்கு வந்ததுந் தரித்து தம்மைப் பாதுகாக்கும் படியும் முருகனைத் தரிசிக்க முன்பு அவரின் மூத்தோனை தரிசித்துச் செல்வதே சிறப்பு என்றும் உள்ளத்தி லெண்ணியும் உருகி வணங்குவர்.

இத்தகைய பக்தர்கள் வணங்கி வாழ்த்துவதற்காக வருடந்தோறுந் தவறுது கதிர்காம யாத்திரை செய்யும் வழக்கமுடைய இப் புலவர் இவற்றை யாத்துள்ளார். உயிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்து வரிசையில் தொடர்ந்து பாடுதற்குரிய பாவிணைப்பு முறையில் பாடப்பட்டுள்ள இதில் அகர எழுத்திற்கு இரு பாட்டுகளும் ஏனைய 11 உயிர் எழுத்துக்களுக்கு ஒவ்வொரு பாட்டாகப் பதினொரு பாட்டுக்களும் ஆயுத எழுத்திற்கு ஒரு பாட்டுமாக பதினான்கு பாட்டுகள் உள்ளன.

பிள்ளையார் எனப்படும் விநாயகப் பெருமானின் புகழையும் பெருமையையும் எடுத்துக் கூறி அடியார்கள் தமது பாவச் செயல்களை பச்சாதாபப்பட்டு அறிக்கையிடும் அமைப்பில் இப்பதிகம் அமைக்கப்பட்டுள்ளமை தலவழி பாடு செய்பவர்களின் மனதில் ஒரு கனிவையும் இம்மை வாழ்வை ஒறுத்து வாழும் பக்குவத்தையும் ஏற்படுத்தும் என்பதே இவரது எண்ணமாகும்.

மட்டக்களப்பிலில் இருந்து புறப்படும் பக்தர்களும் யாழ்குடாநாடு வன்னிப்பற்று முல்லைத்தீவு திருகோணமலை மன்னார் எனும் இடங்களிலிருருந்து கிழக்குக் கரையோ ரமாக நடந்து வரும் கதிர்காம யாத்திரிகர்களும் கூட்டங் கூட்டமாக ஒவ்வொரு தலங்களிலும் தங்கி இளைப்பாறி வணங்கிச் செல்லும்போது அவ்விடத்திற்குரிய மூர்த்திமேற் பாடப்பட்ட பதிகம் தோத்திரம் என்பவற்றைப் பாடிப் பாராயணஞ் செய்வதுடன் அவர்கள் பயணஞ் செய்யும் போது நடைவழிப் பாக்களாகப் பாடுவதும் உண்டு. இத்தகைய பதிகள் பலவற்றிற்கு இவர் பதிகம் தோத்திரம் என்பன பாடியுள்ளார். அதில் இந்தச் ஸ்ரீ சங்கமக் கண்டிப் பிள்ளையாரின் பதிகமும் ஒன்றாகும். ஏனையவற்றை அடுத்த இரண்டாந் திரட்டிற் காணலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து மட்டக்களப்பு செட்டிபாளையம்

## இ. வ.கணபதிப்பிள்ளைப் புலவர்

அவர்களது

# ஶ்ரீ சங்கமன்கண்டிப் பிள்ளையார் பதிகம்

1. அரிஅயனும் இந்திரனுந் தேவர் தாமும்
   ஆயிரத் தெட்டண்டந் தேடிக் காண
கரிமுகனே கற்பகமே முப்பு வியைத்தான்
   கடந்துநின்று கதிரைசெலும் மக்கட் காக
வரிவேங்கை காட்டானை கரடி பன்றி
   மாநாகம் நரிமுதலை ஐவா யெல்லாம்
பொரிபடவே சங்கமன் கண்டி வாழும்
   புரந்தகனே கணபதியே போற்றி போற்றி

2. அண்டபிண்ட மொன்ருகிக் கடலே ழாகி
   அட்டகிரி தாஞகி மேரு வாகி
கொண்டல் வண்ணன் அயஞகிக் குமரஞகி
   கூறரிய இரவிமதி மறையு மாகி
வண்டுருங் குழலுமையாள் புதல்வ ஞகி
   வாழ்வுதரும் எண்பத்துநான் குலெட்சம் யோனி
பொன்றியுயர் சங்கமன் கண்டி வாழும்
   புரந்தகனே கணபதியே போற்றி போற்றி

3. ஆதவஞர் ஒளிசெழித்த பூவ னைத்தும்
   அனலசுரன் சிந்தூரன் அதர்மங் கண்டு
காதகரை வேரறுத்துக் கடந்து நின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசினியில் மானிடர்க்குக் கருணை பெய்ய
ஓதரிய பொங்கலிட்டுன் பாதம் போற்ற
ஒருகுறையும் வாராமல் ஒளியைக் காட்டி
பூதமறும் சங்கமன் கண்டி வாழும்
புரந்தகனே கணபதியே போற்றி போற்றி

4. இந்திரனும் தேவர்களும் மனுக்கள் மற்றும்
எட்டட்ட பாலகரும் இருஷி முக்தர்
கந்தருபர் கணநாதர் முனிவர் தானுங்
கருணைகண்டு கற்பகமே களிறே என்று
விந்தையவல் மோதகமெள் கனிபால் தேன்பூ
விதம்விதமாய்ப் பொங்கலிட்டு விழைந்து நேர்ந்தோம்
புந்திவாழ் சங்கமன் கண்டி வாழும்
புரந்தகனே கணபதியே போற்றி போற்றி

5. ஈட்டிவில் அம்புகொண்டு வள்ளி யர்தான்
ஈடேற வேலருரு மாற்றி வேடக்
காட்டிலுள்ள குறும்பனைப்போல் மானென் றெய்தேன்
கண்டீரோ என்றுவள்ளி காதல் கொள்ள
சாட்டியுனை நினைக்கமத வேள மாகிச்
சார்த்தவளை ததிகெடவே கந்தர் பாகம்
பூட்டியபின் சங்கமன் கண்டி வாழும்
புரந்தகனே கணபதியே போற்றி போற்றி

6 உன்னருளைக் கொண்டடியார் கதிரை செல்ல
ஒருகுறையும் வாராமற் காத்து யீசன்
தன்னருளை முன்னேவி விலங்கு பாம்பு
சதிசெய்யா தகன்ருேடத் தானே பெற்ற
அன்னையைப்போல் அடியாரைக் காக்க விந்த
அரியவனந் தன்னிலுயர் அடவிக் குன்றில்
புன்னகையாய் சங்கமன் கண்டி வாழும்
புரந்தகனே கணபதியே போற்றி போற்றி

7 ஊதுவெப்புக் காமாலை கன்னக் குத்து
உட்டணநோய் குட்டவகை குரைநோய் காய்ச்சல்
வாதபித்த சிலேட்டுமத்தின் தொந்த மீளை
வலிகுன்மம் வயிற்றுவலி அண்ட வாய்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதநோய் கிருணிநஞ்சு இவைகள் எல்லாஞ்
சேராமல் அடியாரை இரட்சித் தாளப்
போதகஞ்சூழ் சங்கமன் கண்டி வாழும்
புரந்தகனே கணபதியே போற்றி போற்றி

8 எலியதனில் ஏறியுல கெல்லாஞ் சுற்றி
ஏழையடி யார்துயரை நீக்கிக் காத்து
கலிமிகுந்தால் பிடித்தடித்து மிதித்துத் தூற்றி
கயமுகத்து உருவெடுத்துக் கருணை தங்க
பொலிவெழுந்த மனுக்களிடு பூசை பொங்கல்
பூரிக்க வுண்டுகந்து பூவிற் தங்கும்
புலிநிறைந்த சங்கமன் கண்டி வாழும்
புரந்தகனே கணபதியே போற்றி போற்றி

9. ஏக்கமுற்று யானலைந்து திரிந்து வாட
ஏனென்றுங் கேளாமல் இருப்ப தென்ன
நோக்க மென்று கனவிலுந்தான் கூறுரெண் ணுதோ
நூதனமோ என்மீதிற் பகைதா னுண்டோ
வீக்கியென்னைச் சிறையிலிடாச் சென்ம மாக்கி
வினையிருந்த போதிலதை விலக்கிக் காரும்
பூக்கமழும் சங்கமன் கண்டி வாழும்
புரந்தகனே கணபதியே போற்றி போற்றி

10. ஐயனேநான் வறுமையுற்று அடியேன் வாடி
அலைந்தலைந்து கவலைகொண்டு திரிந்தா லெந்தன்
மெய்தளர்ந்து வெட்கமுடன் துயிலூ ணற்று
மேதினியோர் தான்பழிக்கச் சிறியோ னுகித்
தையலர்க்கும் இனிமையற்றுத் தவியா வண்ணம்
தந்திமுகத் தைந்துகையா தற்கார் மெய்யா
பொய்கைவளர் சங்கமன் கண்டி வாழும்
புரந்தகனே கணபதியே போற்றி போற்றி

11. ஒத்துடனே தாரைதவில் மேள மார்க்க
ஒலிகுரவை வாணவெடி சொலித்துப் பூக்க
பத்தரெலாம் துதிபாடிப் பரிந்து போற்றிப்
பணிகள்செய் இடமெங்கும் அருள்காட் டாமல்
இத்தலத்தில் கதிர்காமத் தடியார்க் காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்துயிடை யூறகற்றி இருண்ட கானம்
புத்தர்மகிழ் சங்கமன் கண்டி வாழும்
புரந்தகனே கணபதியே போற்றி போற்றி

12\. ஓதரிய உன்பெருமை கூறி லெட்டு
ஊழிசென்ற போதிலுந்தான் உரைக்க லாமோ
பாதகர்க ளானாலுங் கதிகொ டுத்துப்
பண்டுவினை என்றென்றும் பறக்கச் செய்வாய்
ஏதுபிழை யான்செய்த போது மிரங்கி
எந்தனையே இவ்வேளை இரட்சித் தாளும்
பூதலத்தில் சங்கமன் கண்டி வாழும்
புரந்தகனே கணபதியே போற்றி போற்றி

13\. ஔவையார்தமிழ்ப் பாவிசைக்க முன்னு னுன்னை
அடிமுதலாய் மங்கலச்சொல் லாக்கி வைத்து
கொவ்வையிதழ் வாயதனுல் பாடிப் பாடிக்
குவலயத்தில் அஞ்ஞானக் கொடுமை போக்க
மௌவுலவு மொய்குழலாள் வலவை தன்னை
மணந்துவரன் புதல்விகளைப் பக்கம் வைத்து
புவ்வளஞ்சேர் சங்கமன் கண்டி வாழும்
புரந்தகனே கணபதியே போற்றி போற்றி

14\. அக்கரவை அணிந்தாடும் அரனூர் பாலா
ஆதியுமை மகனுரே அடியேன் நானும்
சிக்கினேன் பிரபஞ்சத் திரையி லிப்போ
சிவசிவா இத்திமை திரு முலக
மக்களொடு மனைவிசுற்றம் மற்றுச் சீவன்
மகிழ்ந்திடவே உந்தனருள் வரத்தைத் தாதா
பொக்கிசமாய்ச் சங்கமன் கண்டி வாழும்
புரந்தகனே கணபதியே போற்றி போற்றி

---

இது மட்டக்களப்பு கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பட்டது

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்துக் கணபதிப்பிள்ளைப் புலவரின்

### நூற்திரட்டுச் செய்யுள்களின்

# செய்யுள் அகரவரிசை


| | |
|---|---|
| அக்கரவை | |
| அணிந்தாடும் | 124 |
| அடல்பூத மைந்த | 78 |
| அடிகளாய் ஆயி | 42 |
| அடுத்துக் கெடுப் | 36 |
| அடைக்கலம தா | 35 |
| அண்டபிண்ட | 121 |
| அத்திமலர் தன் | 39 |
| அதிபரென ஊரி | 3 |
| அந்தரத் தோர்க | 40 |
| அரசர்சரி நீதிய | 114 |
| அரவானை வெட் | 87 |
| அரிக்குநிகர் என் | 1 |
| அரியயனும் இந் | 121 |
| அரிவைதன் கற்பு | 15 |
| அறங்குன்றி ம | 112 |
| அன்றிற்கு நடை | 31 |
| அன்னைதந்தை | 30 |
| ஆசைக்கு நெறி | 11 |
| ஆடவர்கள் வ | 61 |
| ஆதவனுர் ஒளி | 121 |
| இந்திரனுத் தே | 122 |
| இடபமது உதய | 89 |
| ஈட்டிவில் அம்பு | 122 |
| உருவாய் அ | 77 |
| உன்னருளைக் | 122 |
| ஊணதிக மாக | 80 |
| ஊதுவெப்புக் கா | 122 |
| எண்பத்து நான் | 91 |
| எலியதனில் ஏறி | 123 |
| ஏக்கமுற்று யான | 123 |
| ஏரிநீர் பாய்கின் | 22 |
| ஐயனேநான் வ | 123 |
| ஒத்துடனே தா | 123 |
| ஓதரிய உன்பெரு | 124 |
| ஔவையார் தமி | 123 |
| கங்கை புடை | 1 |
| கங்கையே உனை | 110 |
| கமலம்நீ புட்க | 111 |
| கனகநவ ரெத்ன | 109 |
| கிள்ளையின் அரு | 52 |
| கூடாத கூட்டங் | 53 |
| கூர்விழி சிறுத்து | 102 |
| கூவிளங் கொங் | 66 |
| கெதியிலெழு | 114 |
| கொற்றவர்செய் | 7 |
| சங்குதவில் இல் | 6 |
| சதிகள்செய் புத் | 4 |
| சாதி பேதங்களி | 101 |
| சற்குருவை நிந் | 25 |
| சீதையின் கற்பு | 10 |
| செம்மணிகள் தி | 113 |
| தங்கத்தில் நித் | 55 |
| தசகண்ட இராவ | 43 |
| தஞ்சமென் றவர் | 19 |
| தம்பியொடு அ | 79 |
| தருணமதிலே | 50 |
| தளிரழகு உடல | 117 |
| தனவந்த ராகி | 70 |
| திடசித்த மில் | 4 |
| தாய்தந்தை நோ | 5 |
| தாயற்ற கன்று | 111 |
| தாவரந் தன்னி | 21 |
| தானங் கொடுப் | 9 |
| திங்களிரு தின | 73 |
| திருமருவு சிவனு | 109 |
| தீபமில்லாத | 33 |
| தையலே மானி | 116 |
| நலந்தரும் வாயி | 67 |
| நற்கனிகள் தன் | 103 |
| நன்மையில் லா | 8 |
| நாய்வா லதைக் | 76 |
| நாரியே ஆடிமதி | 115 |
| நாற்காத அகல | 62 |
| நித்தமுஞ் சிவபூ | 46 |
| நிருபரைச் சமரி | 26 |
| நெருப்பினில் | 58 |
| நேசமிலாக் கண | 93 |
| படைமுனையில் | 5 |
| பணமற்ற பேர்க | 69 |
| பணிவோர் தனை | 51 |
| பரிதியொடு சந் | 12 |
| பரிமுகந் தன்னி | 81 |
| பரிவற்ற பித்தனை | 2 |
| பவனியிது சமய | 114 |
| பழமை யகலாத | 16 |
| பாண்டவரில் | 29 |
| பாருலகிலே தே | 96 |
| புலவரென வருப | 88 |
| புள்ளுவகை தன் | 100 |
| பெருகாது குறுக | 68 |
| பேயோடு ஆடு | 20 |
| பொறுமையிற் த | 74 |
| மட்டித் தனத்து | 47 |
| மணவாசை யில் | 48 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியாட மாவ 113
மன்மதன் குரு 104
மன்றலது இரு 18
மாசறுத்திடு தீர் 59
மாடுமான் மரை 13
மாணிக்கக் கற் 60
மாணிக்க கங்கை 114
மாதர்பூத் திட்ட 23
மாதா வரநதியே 110
மாயவன் தன்ம 41
மாரியது குன்றி 34
மால்மருக ஞகி 83
முடிகொண்ட தி 57
முண்டக மெ 69
முப்பழம் பாலு 75
மேருகிரி தன்
மேனியது குறுகி 68
வஞ்சகம் பொய் 17
வட்டமது சூழவ 98
வட்டிப் பணத்தி 37
வடவால் பழுத்தி 45
வண்டுதலை ஏவி 38
வண்ணூர்க ளுளி 44
வந்துதவு இந்து 116
வம்பர்க்கு ஆயி 32
வலிமைபெறு வ 28
வனவேட ளெரு 49
வாரியெழு சூழு 82
வாலையைப் பூசிக் 86
வான்கோழி கூவி 27
வானரங் கூகை 72
-------------------------
வானரங் கூகை 72
வாலையைப் பூசிக் 86
வான்கோழி கூவி 27
வானரங் கூகை 72
வாழிய வரனோடு 117
விட்டிலது தீபத் 22
விலங்கினந்தனி 99
விலங்கின மதற் 94
விற்பன்னர் பாவ 90
வீரத்தி லுற்ற 64
வெண்சலச முற் 85
வெள்ளானை மீ 14
வேதங்கள் ஆயிர 2
வேலேந்திச் சூர 92
வையகத் துற்ற 63
-------------------------


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரைநடை ஆசிரியரின் வரலாறு

----------------

உலகிலேயே தமிழ் மொழியில் அச்சிடுதலிலும் அச்சமைப்பிலும் நூல் வெளியீட்டிலும் ஒரு புரட்சியாக மறுமலர்ச்சியாக புதுமையாக முதன் முதலாக மின்கணனித் தமிழ் அச்சமைப்புத் துறையில் கால் எடுத்து வைத்து கால்பதித்து நிற்பவர்கள் கனடா தொரன்ரோவில் உள்ள றிப்ளக்ஸ் அச்சகத்தார்.

தங்களின் தாயகத்தில் இவர்களுடைய பாட்டனுர் அமரர் நா .சாமுவேல். கதிர்காமத்தம்பி அவர்களும் அவரின் மறைவின் பின்னர் தந்தையார் திரு. க. செல்வராசகோபால் ஆசிரியர் என்பவரும் கால்நூற்று ஆண்டுக் காலமாக நடாத்தி வந்த மனேகரா அச்சகத்தின் பிரதிபலிப்பாய் அமைந்த அச்சகத்தைக் கடல்கடந்த கனடா நாட்டில் நிறுவினுர்கள். பிரதிபலிப்பு என்றும் பொருளுடைய றிப்ளக்ஸ் எனும் பெயரை (REFLEX PRINTING) தங்கள் தாபனத்திற்கு இட்டுள்ளனர். இதனெரு பகுதியான ஜீவா பதிப்பகமும் நிழல் பத்திரிகைத் துறையும் கடல்கடந்து வாழுந் தமிழர்களுக்கு 1985ம் ஆண்டிலிருந்து தமிழ்ப் பணி செய்து வருகின்றது.

இத்தாபனங்கள் வெளியிட்ட நூல்கள் பல அவற்றுள் ஒருவரே படைப்பாளியாக நின்று வெளியிடப்பட்டு வரும் நூல்கள் பலப்பல. அவற்றினைப் பின்வருமாறு வகுக்கலாம்

### 1. தமிழ் எழுத்து உறுப்பு இலக்கண நூல்கள்.

(அ). தமிழ் எழுத்து உறுப்பு இலக்கணமென்னும் "எழுத்து நூல்" உரையுடன் கூடிய சூத்திரச் செய்யுளடிகள் 744 (பக்கங்கள் XXXIV + 131- பதிப்பு1977)

(ஆ) "தமிழ் எழுத்துச் சீர்திருத்தச் சிந்தனைகள்" (பக்: VII+ 58 - பதிப்பு 1981)

(இ) மின்கணனித் தமிழும் எழுத்துச் சீர்திருத்தமும் (பக்: XVIII + 96 - பதி: 96

(ஈ) "மின்கணனிக்கு தமிழ் எழுத்துச் சீரமைப்புத் தேவைதானு" (பக் 12 பதி: 1988)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. கிறித்தவ நூல்கள்

(அ) "பெத்தலேகங் கலம்பகம்" (இந்த நூலே மின்கணனி என்னும் ( Computer Immage Printer) அச்சமைப்பில் வெளிவந்த முதற் தமிழ் நூல்) இது 108 செய்யுள்களும் உரைநடை ஆதிய வுங்கொண்ட பிரபந்த இலக்கியம். (பக்: XXVII + 8- பதி: 1986)

(ஆ) " மிசனரிமாரின் சமுதாய வளர்ச்சித் தூதுப்பணி" (பக்: XXVI + 116 பதி: 1985)

(இ) "இரட்சகர் இயேசு மும்மணிக்கோவை" 36செய்யுட்கள் கொண்ட பிரபந்த இலக்கியம் (பக்: VI + 21- பதி: 1984)

(ஈ) " இயேசு புராணம்" இதுவே துல்லிய (Lasser Printer) லேசர்க்கதிரச்சு மின்கணனி அச்சமைப்பில் வெளி வந்த முதற் தமிழ்நூல் 1602 செய்யுட்கள் ( பக்: XXXII + 412 பதி: 1986)

(உ) "வேதாகமத்திற் தாவரங்கள்" (பக்: XVI + 160 பதி: 1989)

(ஊ) " பக்தி அருவி" சுமை தாங்கியிற் பிரசுரமான பல கட்டுரைகளின் தொகுப்பு.(பக்: XXXVI + 88 பதி: 1985)

(எ) "பக்தி வனம்" சுமை தாங்கியிற் பிரசுரமான பல கட்டுரைகளின் தொகுப்பு. (பக்: XXXVI + 88 பதி: 1985)

(ஏ) "தாவீதின் கீதங்கள்" அச்சில்.

### 3. மட்டக்களப்புத் தமிழகத் தமிழியல்

(அ) " மட்டக்களப்புப் பிரதேசத்தின் வழக்கு மரபுச் சொற்கள் சொற்றொடர்களினதும் அகராதி (பக்: XVI + 57 பதி: 1984)

(ஆ)"மட்டக்களப்புமாநிலப் பழமொழிகளின் அகரவரிசை" (பக்: 16 பதி: 1984)

(இ): "நீரரர் நிகண்டு" 92 செய்யுட்களும் உரையுங் கொண்டது (பக்: XX + 34 பதி: 1984)

(ஈ) "மட்டக்களப்புச் சொல்வெட்டு" (பக்: VI + 38 பதி:1984)

(உ) " மட்டக்களப்புச் சொல்நூல்" (பக்: XX + 33 பதி: 1984)

(எ) " மட்டக்களப்பு மாநில உபகதைகள்" ( பக்: V + 64 பதி:82)

(ஏ) "சீவ புராணம்" நெடுங்கதை. (பக்: VII+ 171 பதி: 1979)

(ஐ) "மட்டக்களப்பு மக்களின் மகிழ்வுப் புதையல்கள்" ஸ்ரீ லங்கா பத்திரிகையில் வெளிவந்த 12 கட்டுரைகளின் தொகுப்பு (பக்: X+ 160 பதி 1978))

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஓ) "மட்டக்களப்புப் பழையோலைச் சுவடிகள்" (பக்: X + 1980)

## 4. பரணிப் பிரபந்தங்கள்

(அ) "புயற் பரணி" 625 செய்யுட்கள் கொண்ட பரணிப் பிரபந்தம் (பக்: VII + 200 பதி: 1982)

(ஆ) "ஈழத்துப் போர்ப்பரணி" 525 செய்யுட்கள் கொண்ட பரணிப் பிரபந்தம் (பக்: XVI + 128 பதி: 1987)

(இ) "வறுமைப்போர்ப் பரணி" (அச்சில்)

## 5. புதுக்கவிதைகள்

(அ) "சிந்தனைச் சரம்". .200 செய்யுட்கள் கொண்ட கவிதை நூலும் விமர்சனக் கலைநூலும் இணைந்தது .(பக்: XX + 84 பதி: 81)

(ஆ) "பாலர் பாச்சரம்" (பக்: VII + • 30 பதி 1979)

## 6. கவிதை வசனக் கதை

(அ) "மல்லிகைப் பந்தல்" 3922 பாவரிகளைக் கொண்ட கவிதைக் கதை. (பக்: VII +• 160 பதி: 1988)

(ஆ) "கைக்கிளையம்" (அச்சில்)

## 7. சாரணீயம்

1949ம் ஆண்டில் இலங்கையின் தென்பகுதி சாரணிய சபையினால் அச்சிடப்பட்ட 324 பக்கங்கள் 'ர கொண்ட நூல். இது பால சாரணீய ஆங்கில நூல்களின் சாரத் தமிழாக்கம் இதுவே ஆசிரியரின் முதல் நூல்.

## 8. பெரியார்களின் வரலாறுகள்

(அ) "விபுலானந்தர் பிள்ளைத் தமிழ்" 100 செய்யுட்களைக் கொண்ட விபுலானந்த அடிகளின் வரலாற்றுப் பிரபந்தம்
(பக்: VI + 112 பதி: 1984

(ஆ) "ஈழத்து இரட்டையர் இரட்டைமணி மாலை" 18 செய்யுட்களைக் கொண்ட ஈழநாட்டு இ. வ. கணபதிப்பிள்ளைப் புலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னவப்புலவர் என்பவர்களின் வரலாறுகள் (பக்: XX + 30 பதி: 84)

(இ) "இரும்பு அரசன்" (பக்:: VIII + 62 பதி: 1966)

(ஈ) "புலவர்மணிக் கோவை" இதுஈழத்துப் புலவர்மணி பண்டிதர் ஏ. பெரியதம்பிப் பிள்ளையைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட அகப்பொருட் கோவைப் பிரபந்தம் 425 செய்யுள் ( பக்: X + 78 பதி: 1984)

## 9 அகத்திணை புறத்திணை (இருதிணை) நூல்கள்.

(அ) "புதுப் புறப் பொருள் நூற்றொன்று" (பக்: XXVI +160 பதி: 1989)

(ஆ) "புது அகப்பொருள் நூற்றிரெண்டு " (பக்: XXVI + 109 பதி: 1990)

(இ) "புதிய அகப்பொருள் வெண்பா" ( ஆக்கம் முடிந்து அச்சில்)

(ஈ) "புதிய புறப்பொருள் விருத்தம்"( ஆக்கம் முடிந்து அச்சமைப்பில்)

(உ) "அகத்திணை வாழ்க்கை -காப்பியம் " ( ஆக்கம் முடிந்து அச்சமைப்பில்)

## 10. தமிழ் இலக்கண நூல்கள்

(அ)"கவிதை படைப்போமா" -யாப்பிலக்கணம் (அசமைப்பு முடிந்து அச்சில்

(ஆ) "பேனாமுனை" எழுத்துத் துறை இலக்கணம் (பக் XXIV + 160 பதி: 1988)

(இ) "தமிழிலக்கணச் சிந்தனைகள்" (ஆக்கம் முடிந்து அச்சில்)

## 11.இசைப்பாடல்கள்

(அ) "வெற்றிலை" (பக்: XX + 80 பதி:1989)

## 12. நாடகத் தமிழ் நூல்கள் - நாடக இலக்கணம்

(அ) "கூத்துநூல் விருத்தம்" "விபுலானந்தவியம்" 320 செய்யுள் கொண்ட இது மதங்கசூளாமணியின் மறுபதிப்பும் ஆய்வும் என்பதின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பகுதி (பக்: XXIV + 97 பதி: 1989)

(ஆ) "கூத்தர் வெண்பா" 821 செய்யுட்கள் கொண்ட இந்த நூல் விபுலானந்தரின் மதங்க சூளாமணி ஆய்வின் முதற் பகுதியுடன் கூடியது. (பக்: XXVII + 353 பதி: 1989)

(இ) "கூத்தர் அகவல்" (அச்சமைப்பு முடிந்து அச்சில்)

(உ) "நாடகத் தமிழ்" (ஆக்கம் முடிந்து அச்சமைப்பில்)

(ஊ) தென்மோடி வடமோடி நாடகங்கள் அரங்கேறுகின்றன (ஆக்கம் முடிந்து அச்சமைப்பில்)

## 13.நாடகத் தமிழ் நூல்கள் - இலக்கியம்

(அ) "முப்பது வெள்ளிக் காசுகள்" (பக்: VII + 160 பதி 1977)

(ஆ) "சிலம்பு" வடமோடி முழு இரவு நாடகம். ஆக்கம் முடிந்து அச்சமைப்பில்)

(இ) " மணிமேகலை: தென்மோடி முழு இரவு நாடகம். ஆக்கம் முடிந்து அச்சமைப்பில்

பிற மொழி நாடகங்களின் தமிழாக்க விபரத்திற்கு வேறு தலையங்கத்தைப் பார்க்கவும்.

## 14. "தமிழழகி" ஒன்பது காண்டங்கள்

"தமிழ் அழகி"காப்பியம் 12000 செய்யுட்களும் ஒவ்வொரு காண்டத்திலும் 300 பக்கங்களுங் கொண்ட தமிழரின் மொழி கலை பண்பு இனம் வரலாறு இலக்கணம் இலக்கியம் பற்றிய ஒன்பது காண்டங்களும் அனுபந்தத் தொகுதியுங் கொண்ட தமிழ்க் கலைக் களஞ்சிய இலக்கியம் இதன் 1ம் 2ம் 3ந் தொகுதிகள் வெளிவந்து விட்டன ஏனைய ஆறு தொகுதிகளும் அவற்றின் அனுபந்தத் தொகுதியும் ஆக்க வேலைகள்முடிந்து அச்சமைப்பில் இருக்கின்றன.

## 15. கிரேக்க ஆதி நூல்களின் தமிழாக்கம்

(பின்வருவன கிரேக்க மூலத்தின் ஆங்கில மொழி பெயர்ப்புகள் பலவற்றின் திரட்டான தமிழாக்கங்கள்)

(அ) ஹோமர் மகாகவியின் "ஒடிஸ்சி" 2400 விருத்தப் பாக்களால் ஆனது கிரேக்க காவியத்தின் சமதையான பாவரிகளைக் கொண்டது (பக்: XL + 423 பதி:1990)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) ஹோமர் மகாகவியின் "இலியட்" எனும் காவியத்தின் தமிழாக்கம். 2400 வெண்பாக்களால் ஆனது (பக்: 500 பதி: 1990)

(ஈ) சொபிகொலசின் மூன்று நாடகங்கள் முதலாந் தொகுதி செய்யுள் நாடகம். (பக்: XXXII + 202 பதி: 1990)

(ஈ) சொபிகொலசின் ஏழு நாடகங்கள் இரண்டாந் தொகுதி செய்யுள் நாடகம். (பக்: XXXII + 202 பதி: 1990)

(உ) அயிலிசியசின் நாடகங்கள் முதலாந் தொகுதி ஆக்கம் முடிந்து அச்சில்

(ஊ) அயிலிசியசின் நாடகங்கள் இரண்டாந் தொகுதி ஆக்கம் முடிந்து அச்சமைப்பில்)

## 16.வரலாறும் வரலாற்று நெடுங்கதையும்

(அ) "யாரிந்த வேடர்" (பக்: XXVI + 88 பதி: 1965)

(ஆ) "ஈழத்தின் வரலாறு (பக்: XX + 160 பதி 1986)

## 17. சித்திரக்கலை நூற்கள்

(அ) "முதலாம் இரண்டாம் வகுப்புகளிற் சித்திரங் கற்பித்தல் முறைகள்" (பக்: X + 66 பதி: 1969)

(ஆ) பறவைகளை வரைவதெப்படி (பக் 60 பதி 1963)

(இ) மனித உருவங்களை வரைவதெப்படி (பக் 60 பதி 1963)

(ஈ) விலங்குகளை வரைவதெப்படி (பக்: 60 பதி: 1964)

(உ) மலர்களைவரைவதெப்படி ( பக்: 60 பதி: 1964)

(ஊ) தாவரங்களை வரைவதெப்படி (பக்: 60 பதி: 1964)

(எ) உலக ஓவியக் கலை வரலாறு (பக்: 160 பதி: 1965)

## 18.உரைநடை எழுதிய நூல்கள்

(அ) வித்துவான் பூபாலபிள்ளை அவர்களின் சீமந்தனி புராணம் ( பக்: XL + 224 - பதி: 1989)

(ஆ) இ.வ கணபதிப்பிள்ளைப் புலவரின் கதிர்காம சதகமாகிய மூன்று நூற்களின் திரட்டு (பக்: XXX + 112 பதி: 1990)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19 அச்சுருவாக்கிய பனையோலைச் சுவடிகள்

(அ) கபோத காதை (பக்: XX + 39 பதி: 1970)

(ஆ) இரண்ணிய சம்ஹார அம்மானை' ( பக்: XX = 52 பதி: 66)

## 20 தொகுத்துப் பதிப்பித்த பிற நூல்கள்

(அ) வித்துவான் எவ். எக்ஸ். நடராசா அமரர். ம. சற்குணம் ஆகியவர்களின் 'நாவலர்பெருமானின் வாழ்க்கைக் குறிப்புகள்' (பக்: 40 பதி: 1979)

(ஆ)திரு ச.நவரெத்தினத்தின்''கிழக்கின் பேரொளி புலவர் மணி: (பக் 52 பதி: 1982)

(ஈ) சிவகுமாரன் கதைகள்: பக்: 62 பதி 1983)

(உ) திரு வை கா.சிவப்பிரகாசம் அவர்களின் 'விபுலானந்தரின் கல்விச் சிந்தனைகள்' (பக்: 60 பதி: 1983)

## 21. மனோதத்துவம்.

(அ) 'பிசாசின் புத்திரர்கள்' (பக்: XII + 69 பதி: 1972)

## 22.பயண நூல்கள்

(அ) பனித்தரைச் செலவு (அச்சமைப்பு முடிந்து அச்சில்)

(ஆ) தமிழைத் தேடி (ஆக்கம் முடிந்து அச்சமைப்பில்)

(இ) நிசமும் நிழலும் பயண நினைவுகளும் ( அச்சில்)

## 23.வாழ்க்கைப் பருவ நூல்கள்

(அ) 'வாழ வைக்கும் நினைவுகள்'. முதலாந் தொகுதி 'இளமைப் பருவச் சிந்தனைகள்.' (பக் XIV + 202. பதி: 1990)

(ஆ) 'முதுமைப் பெயர்ச்சி நான்மணி மாலை' (பக்: XVIII + 45 1989) இப்புத்தகம் தமிழ் அச்சமைப்பில் இன்னொரு புதுமையின் பலனாகும். 4000 மைல் தொலைவில் இருந்து மின்கணனி அச்சமைப்புச் செய்து மோடம் எனும் தொலைக் கருவியால் உடனுக்குடன் அனுப்பப்பட்டு அச்சமைப்புச் செய்யப்பட்டது.

## 24. உலகளாவிய தமிழ்ப்பணி நூல்கள்

உலகளாவிய இலக்கியம் தமிழியற் தொடர்புகளை வைத்திருக்கும் இவர் 'உலகளாவிய தமிழ் எனுந் தொடரில் பல ஆக்கங்களை ஆக்கியுள்ளார் அவற்றுள் இப்போது தமிழ்ப் பண்பாட்டியக்கவியல்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( பக்: XX + 104) எனும் நூலையும் வெளியிட்டுள்ளதோடு கடல் கடந்து வாழும் தமிழ்க் குழந்தைகளும் தமிழைக் கற்றுக்கொள்ள விரும்பும் அந்நியர்களும் தமிழை இலகுவாகக் கற்றுக்கொள்ளவும் தமிழர்கள் ஆங்கிலத்தை இலகுவாகக் கற்றுக்கொள்ளவும் ' SPOKEN TAMIL - பேச்சுத் தமிழ்' என்னும் நூலையும் (பக்: XX + 120 பதி: 1988) வெளியிட்டுளளார்.

இவரால் எழுதப் பட்ட சகல நூல்களும் உலகின் பிரபல நூலகங்களிலும் தமிழ்ப் பல்கலைக் கழகங்களிலும் அறிஞர்களிடத்திலும் உள்ளன.

இத்தனை நூல்களையும் ஆக்கிப் படைத்த ஒருவரை அவரது அரிய படைப்புகளைக் கொண்டே அறிமுகப்படுத்த விரும்புகின்றேன். ஈழம் எனுந் திருநாட்டில் கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சார்ந்த செட்டிபாளையம் என்னுமிடத்தில் 1928ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ந் தினத்தில் பிறந்தார். தந்தையாரின் பெயர்: நாகமுத்து சாமுவேல் கதிர்காமத்தம்பி. தாயார் பெயர் வள்ளியம்மை. இவரின் பெயர்: செல்வராசகோபால். (இராசகோபால்) ஆதியில் "கதிர்" கதிர்வள்ளிச் செல்வன்" என்ற புனை பெயரிலும் "கதிரொளிச்செல்வன்" பூராடனார்" என்ற பெயரிலும் தொடர்ந்து "ஈழத்துப்பூராடனார்" என்ற புனைபெயரிலும் இப்போது தனது ஆக்கங்களைப் படைத்து வருகின்றார்

தனது ஆரம்பக் கல்வியை குருக்கள்மடம் மெதடிஸ்த மிசன் தமிழ்ப் பாடசாலையில் ஆரம்பித்து உயர்கல்விகளை மட்டக்களப்பு அரசினர் ஆண்கள் ஆசிரிய பயிற்சிக்கல்லூரி, மருதானை கலைநுட்பக் கல்லூரி. கும்பகோணம்( தமிழகம்) ஹோமியோபதிக் கல்லூரி எனுமிடங்களிற்பயின்றதுடன் பாலபண்டிதம் சித்திர ஆசிரியப்பத்திரம் பெற்றவர் தனது ஆசிரியப் பணியை 35 வருடகாலம் செய்து 1983ம் வருடத்தில் இளைப்பாறியவர் மேலும் 1956ம் ஆண்டிலிருந்து அச்சகத் தொழில் சம்பந்தமான எல்லா மட்டப் பணிகளையுஞ் செய்து அதனை உப தொழிலாகவுங் கொண்டு வாழ்ந்தவர் தனது தந்தையாரின் அச்சகத்தைப் பாரமேற்று நடாத்தியவர்.விடுதலைப் போர்க் காலத்தில் இலங்கை அரசின் இராணுவத்தினதும் பொலிஸ் பகுதியினரதும் கடுமையான கண்கணிப்புக் காரணத்தால் அச்சகத்தை இலக்கிய தாகங் கொண்ட ஒரு எழுத்தாள நண்பரிடம் ஒப்படைத்துவிட்டு கனடாவிற் தமது மக்களுடன் தற்காலீகமாக வாழ்ந்து வரிகின்றார்.

இவர் கொடுத்த அச்சுக்கலைப் பயிற்சியால் இவரது மக்கள் எல்லோரும் ஈர்க்கப்பட்டு இன்று சுயமாக கனடாவில் அச்சகத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்தி வருவதுடன் முன்னர் சொன்ன பல தமிழ்ப் பணிகளையும் செய்து வருகின்றனர். இவரது துணைவியாரும் 35 வருட காலச் சேவையை ஒரே பாடசாலையில் செய்து மூன்று தலைமுறைகளுக்கு ஆசிரியையான சிறப்புப் பூண்டவர். இவரது கணவரின் தமிழ்ப் பணியில் பங்கெடுத்தவர். அவரின் பலநூல்களுக்கு உரை எழுதியவர். 1981ம் ஆண்டில் மதுரையில் நடந்த ஐந்தாவது தமிழாராய்ச்சி மாநாட்டில் பங்குபற்றச் சென்ற தனது கணவனுடன் கூடச் சென்று அதிற் பேராளராகக் கலந்து கொண்டவர். பெயர் வியற்றிஸ் பசுபதி. என்பதாகும்.

இதயராஜ். (கனடா தொரன்ரோ றிப்ளக்ஸ்அச்சகத்தின் தாபகர்) இதயஜீவகருணு (தமிழ் மின்கணனி அச்சமைப்புச் செய்து தமிழ் அச்சுக்கலைக்கு முதல் முதலாக வர்த்தகரீதியில் நடைமுறைப் படுத்தியவர்.) இதயமனோகர் இதயச்சந்திரா ( இவர்கள் இருவரும் (முதன் முதலாக மின்கணனித் தமிழ் அச்சமைப்பால் வெளியிட்ட "நிழல்" பத்திரிகையின் இணைஆசிரியர்கள்) .இதயஜோதி ( அச்சகத் தொழில் இயந்திர நுட்ப அவதானி) இதயஅருள் ( (மின்கணனித் தமிழ் அச்சமைப்பு நுட்பவியலர்) எனும் ஆறு ஆண்மக்களும் இதயராஜினி எனும் மகளும் இவரது மக்கட் செல்வமாகும்.

தமிழகம் இலங்கை ஆகிய நாடுகளின் வாரந்தரிகள் மாசிகைகள் நினைவு மலர்கள் என்பவற்றில் பல கதைகள் கவிதைகள் விமரிசனக் கட்டுரைகள் ஆய்வுக் கட்டுரைகள் என்பவற்றை காலத்திற்குக் காலம் எழுதி வந்ததுடன் இலங்கை வானொலியிலும் பல தரப்பட்ட தொடர் நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்.

ஆசிரியராகக் கற்பித்த காலத்தில் நாடகங்களையும் நாட்டிய நாடகங்களையும் பாங்குக் கூத்துக்களையும் படைத்துப் பாடசாலை மாணவரிடை நாடகத் தமிழ் உணர்வை ஏற்படுத்தியவர். ஆங்காங்கு நாடகக் கலைக் கழகங்களை அமைத்து பலதரப்பட்ட நாடகங்களை அரங்கேற்றியவர் இத்தகைய பல நாடகங்கள் கலைக்கழகங்களின் மூலம் வானொலியில் இடம் பெற்றுள்ளன

இவரது தமிழ் அறிவிற்கும் தமிழ் ஆர்வத்திற்கும் காரணமாய் இருந்த பாட்டனார் இ.வ.கணபதிப்பிள்ளைப் புலவர். பெரிய தந்தையார் வரகவி .சின்னவப்புலவர் என்பவர் இருவரும் மற்றும் தனது உறவினரான புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளைப் பண்டிதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவர்களைத் தமது புலவர்மணிக்கோவை ஈழத்து இரட்டையர் இரட்டை மணிமாலை என்னும் நூல்களால் பூசித்துள்ளார்.

இவர் ஓவியம் ஆசிரிய சேவை ஆசிரிய ஆலோசகம் வர்த்தகம் தட்டெழுதி சுருக்கெழுத்துப் பயிற்சி ஹோமியோபதி வைத்தியம் அச்சுக்கலை என்பவற்றில் உயர்கல்விச் சான்றிதழ்களைப் பெற்ற இவர் தனது ஆசிரியப் பணியை ஒரு உதவி ஆசிரியனாகவே செய்துமுடித்து வந்தார் .இவரது இல்லத்தில் பல்லாயிரக்கணக்கான அரிய நூல்கள் உள்ள ஒரு நூலகம் ஈழத்துத் தமிழறிஞர்களின் கவனத்தை ஈர்த்து வருகின்றது.

தமிழிற் புலமையும் ஆங்கிலம் சிங்களம் ஆதிய மொழிகளிற் தேர்ச்சியும் உள்ள இவர் பல விருதுகளையும் பரிசுகளையும் இவரது 14 வயதிலிருந்து பெற்று வந்தாலும் 1982ம் ஆண்டில் இந்து கலாச்சார அமைச்சால் நாடகச் சேவைக்கு வழங்கப்பட்ட விருது. மட்டக்களப்பு கலாச்சார சபையால் வழஙகப்பட்ட தமிழ் இலக்கிய சேவைக்கான இலக்கியமணி விருது கனடாவில் தனது வாழிடமான பீல் மாநகர வட்டம் இவரது தமிழ்ப் பணிக்காக வழங்கிய பாராட்டுப் பதக்கம் தொரன்ரோ சேக்கத்தினர் தமிழ்ச் சேவைக்காக வழங்கிய கேடயம் எற்பவற்றுடன் மற்று நாற்பத்து ஆறு நாடுகளின் ஒன்றியமான உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தினரின் தமிழ்நெறிப்பாவலர் எனும் விருதுஞ் சான்றிதழும் என்பனவற்றைத் தனது தமிழ்ப் பணியின் சாதனைகளாக நினைக்கின்றார்.

இவர் ஒரு இலைமறை காய். போன்றவர். ஆமைபோல் அடக்கம் உள்ளவர். பல துறைகளில் தேர்ந்த அறிஞன். தற்போது தம்மைக் கொடுமையாக வருத்தி வருகின்ற இருதய நோயினால் தளர்ந்து கொண்டிருந்தாலும் தொடர்ந்து தமிழ்ப்பணி செய்யும் உறுதியான உள்ளத்தை உடையவர் இவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து தமிழ்ப்பணி செய்து வாழ்கவென வாழ்த்துவோமாக.

திரிபுரன் கல்கரி- - கனடா 7.2.1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
9-1-1992
LIBRARY

# தமிழ்மொழி எழுத்துக்களின் தலைவிதி

(ஈழத்துப்பூராடனுர் அவர்களால் எழுதி கனடா - தொரன்ரோ றிப்ளக்ஸ் அச்சகத்தாரின் நிழல் வெளியீடாக 1990 தைத்திங்களில் அச்சிட்டு உலகமெங்கும் பரப்பிய பிரசுரத்தின் மறுபதிப்பு)

இன்று பிரசுரமாகும் எந்தப் பத்திரிகையைப் பார்த்தாலும் புத்தகங்களை விரித்தாலும் ஒருவித புதுமையைக் காண்பீர்கள். "வலையை வீசிச் சினைத்த புருக்களை இணைத்துப் பிடித்து எண்ணுயிரம் ருபாய்க்களுக்கு விற்கக் கனுக் கண்டான்" என்றதொரு தமிழ் வாசகம் " வலையை வீசிச் சினைத்த புறாக்களை இணைத்துப் பிடித்து எண்ணாயிரம் ரூபாய்களுக்கு விற்கக் கனாக் கண்டான்." என்பதைப்போல அச்சிடப்பட்டிருப்பதைக் காண்பீர்கள். இவ்வசனத்தில் எதுவித மாற்றம் இல்லாவிட்டாலும் அதில் உபயோகிக்கப்பட்டுள்ள எழுத்துக்களின் அமைப்புகளில் ஒரு மாற்றம் உண்டல்லவா?

இதைத் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் என்று சொல்கிருர்கள். அப்படிச் செய்வதற்கு உரிய காரணங்களாக எழுத்துக்கள் தெளிவாக இருப்பது. ஒற்றுமையாக இருப்பது, எழுதுவதற்கு இலகுவாக இருப்பது, அவற்றிலும் மேலாக தட்டெழுதி அச்சிடல் என்பவற்றிற்கும் மின்கணனி எனும் நவீன நுட்பப் பொறி மூலந் தமிழ் எழுத்து அச்சமைப்புச் செய்வதற்கும் தொலைத் தொடர்புகளாகிய தொலை எழுதி முதலிய வசதிகளுக்கும் உகந்ததாக இருப்பது என்று பலவீனமான. ஏற்கமுடியாத காரணங்களைக் காட்டுகின்ருர்கள்.

இவையெலாம் நடைமுறையில் செயற்படுத்தப்படும்போது அவர்கள் எண்ணியவாறு எவ்வித நலன்களையும் பயன்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தவில்லை என்புதை நாம் நன்கு உணர்வோம். ஒருவித அச்சத்தினாலும் தாழ்வு மனப்பான்மையாலும் செய்து பார்த்து அனுபவ ரீதியாகத் தொழிற்பட்டு பெறுபேறுகள் பெருததாலும் அவசரம் அவசரமாக 1980ம் ஆண்டளவில் அரசோம்பிய தமிழக அரசு செய்த தேவையற்ற ஒரு சீர்திருத்தமென்றே கூற வேண்டியுள்ளது.

இதுமட்டுமல்ல மேலும் இகர ஈகார உகர ஊகார உயிர் மெய்யெழுத்துக்கள் ஆகிய எழுபத்திரண்டு எழுத்துக்களிலுங் கைவைத்துச் சிதைக்கவோர் அழிவுத்திட்டம் வைத்துள்ளார்கள். அப்படிச் சீர்திருத்தச் சிரைப்புகள் செய்யப்படும்போது தமிழ் மொழி எழுத்துக்கள் பார்ப்பதற்கு விகாரமாய் பயன்படுத்துவ தற்கு அகோரமாய் உருமாறும். எழுதுவதற்குச் சிரமமாகும்.

இவையெலாம் மின்கணனி மூலமாக அச்சமைப்புச் செய்து 1985ம் ஆண்டிலிருந்து தமிழில் அச்சிட்டு வரும் எங்களது சாதனையால் அவசியமற்றதென்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுபற்றிக் காலத்துக்குக் காலம் நாங்கள் பல கட்டுரைகளையும் புத்தகங்களையும் ஆய்வுகளையும் வெளியிட்டு வந்துள்ளோம்.

எனவே தமிழ் எழுத்துக்களில் மேலும் எத்தகைய சீர்திருத்தமுஞ் செய்ய முயல்வோர்களை எதிர்த்து அவற்றை முறியடிக்க வேண்டியது தமிழர்களாகிய ஒவ்வொருவரதுங் கடமையாக இருக்கின்றது.

இந்தத் தமிழ் மொழிச் சிதைவு பிறமொழிச் சொற்களைப் புகுத்துவது போன்ற தொன்றே. இவை இரண்டிற்கும் எவ்வித வேறுபாடுகளும் இன்றென்பதை ஒவ்வொரு தமிழரும் மனதிற் கொள்ள வேண்டும்.

*(மேலதிக விளங்கங்களை நாங்கள் ஆராய்ந்து வெளியிட்டுள்ள 100 பக்கங்கள் கொண்ட*

***மின்கணனித் தமிழும் எழுத்துச் சீர் திருத்தமும்***

*என்ற நூலிற் காணக)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
9-1-1992
★ LIBRARY ★
427596
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
9-1-1992
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து செட்டிபாளையம்
கணபதிப் பிள்ளைப் புலவரின்

## நூற்றிரட்டு முதலாந் தொகுதியில்

1. கதிர்காம சதகம் - உரையுடன்
2. மாணிக்க கங்கைக் காவியம்
3. சங்கமன்கண்டிப் பிள்ளையார் பதிகம்

## நூற்றிரட்டு இரண்டாந் தொகுதியில்

1. கதிர்காமத்தம்மானை
2. புயற் காவியம்
3. தோத்திரப் பாடல்கள்
4. வரலாற்று நிகழ்வுக் கவிகள்

427596

இது ஒரு
நிழல்
வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org